உ

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

## பதிப்புரை

திருவருள் துணைகொண்டு திருவருட்பா ஆறு திருமுறைகளுக்கும் குகத்திரு. இரசபதி அடிகளாரைக் கொண்டு விரிவுரை எழுதி வெளியிட முயன்றோம். அதன் பயனாக இதுவரையில் திருவடிப் புகழ்ச்சி. விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், சிவநேச வெண்பா, மகாதேவ மாலை (முற்பகுதி) இவைகள் ஏழு விரிவுரை நூல்களாக வெளிவந்துள்ளன.

**'ஞானமணிப் பொதுநடஞ்செய் திருவடிகண் டிடவே**
**நடக்கின்றே னந்தோமுன் னடந்தவழி யறிவே**
**ஊனமிகு ஆணவமாம் பாவிஎதிர்ப் படுமோ**
**உடைமையெலாம் பறித்திடுமோ நடைமெலிந்து போமோ**
**ஈனமுறும் அகங்காரப் புலிகுறுக்கே வருமோ**
**இச்சையெனும் இராக்கதப்பேய் எனைப்பிடித்துக் கொளு**
**ஆனமலத் தடைநீக்க அருள்துணைதா னுறுமோ (மோ**
**ஐயர்திரு வுளமெதுவோ யாதுமறிந் திலனே'**

என்பதற்கிணங்கக் குகத்திரு இரசபதி அடிகளார் மகாதேவ மாலை பிற்பகுதியில் 85வது பாடலுக்கு உரை எழுதும்போது வடலூர் சத்திய ஞான சபை அருட்பெருஞ் சோதியைத் தரிசித்தார். தென்னார்க்காடு மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் மாநாட்டிலே கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார். பூச வழிபாடு முடித்துச் சென்னை திரும்பிய அன்றே (17-1-1968) அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனோடு இரண்டறக் கலந்தார். எஞ்சிய 86 முதல் 100 வரையில் உள்ள திருப்பாடல்களுக்கு விரிவுரை எழுதி உதவ உயர்திரு.பேராசிரியர் வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், எம்.ஏ.பி.ஓ.எல்., (தமிழ்த்துறைத் தலைவர், புதுக்கல்லூரி, சென்னை) அவர்களை வேண்டினோம். அவரும் மனமுவந்து எழுதி உதவினார்கள். காலத்தினால் அவர் செய்து அளித்த உதவிக்கு எங்கள் மனங்கனிந்த நன்றி உரியது.

இந்த நூல் குகத்திரு. இரசபதி அடிகளாரின் நினைவு மலராக நல் ஆன்மநேய அன்பர் திரு.நா.மகாலிங்கம், பி.எஸ்ஸி.,எம்.ஐ.இ., அவர்களால் வெளியிடப்படுகிறது. அன்பர்கள் இவ்வுரைப் பணிகளுக்கு ஆக்கம் தருமாறு வேண்டுகிறோம்.

**வேலூர்,**
**28-3-68.**

**ஊ.வ.தட்சணாமூர்த்தி,**
**தலைவர்,**
**வடார்க்காடு மாவட்ட சமரச**
**சுத்த சன்மார்க்க சத்திய**
**சங்கம், வேலூர்.**

# அணிந்துரை

திருவருட்பா முதல் திருமுறையில் நடு நாயகமாக விளங்கும் மகாதேவ மாலையின் இரண்டாம் பகுதியாக இந்நூல் வெளிவருகின்றது. தேவாதி தேவனாகவும். பேரொளிப் பிழம்பினனாகிய மகாதேவனாகவும் விளங்கும் முழுமுதலை நினைந்து போற்றும் இம் மகாதேவமாலை திருவருட்பாவின் சாரமாக விளங்குவதென்றால் மிகையாகாது. 101 விருத்தப் பாக்களில் சமய நுட்பங்களும், சாத்திர நுட்பங்களும் மிளிர இப்பகுதி அமைந்துள்ளது. மகாவித்துவான் சித்தாந்த ரத்னாகரம் அரன்வாயில் வேங்கடசுப்புப் பிள்ளை அவர்கள் எழுதிய அரிய பழைய உரையொன்று இதற்கு உண்டு.

வட ஆர்க்காடு மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினர் காலம்சென்ற பேரறிஞர். குகத்திரு. இரசபதி அடிகளாரைக் கொண்டு திருவருட்பா முழுமைக்கும் உரை எழுதுவிக்க முற்பட்டு, இதுவரையில் 8 புத்தகங்களை வெளியிட்டுள்ளார்கள். அடக்க விலைக்கே உரை நூற்களை விற்று வருவது சங்கத்தின் அரும் பெரும் பணியாகும்.

விரிவுரையாசிரியரான குகத்திரு. இரசபதி அடிகளார், எவரும் எதிர்பாராத வகையில் திடுமென இயற்கை எய்தியது பெருங் கலக்கத்தை ஏற்படுத்தியது. தொடங்கிய திருவருட்பாவினை முற்றுவிப்பது நமது மாறாத கடமை என்பதால் பெரும் புலவரும் பேராசிரியருமான பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்களைக் கொண்டு எஞ்சிய பாடல்களுக்கு உரை எழுதி முடித்துள்ளார்கள்.

‘எனையறியாப் பருவத்தே ஆண்டு கொண்ட என்னரசோ எனும் திருப்பாட்டிற்கு உரை எழுதிய கையொடு அருட்சோதி, இரசபதி அடிகளாரை ஆட்கொண்டார் என்பது நமக்கு வியப்பையே தருகிறது. இராமலிங்கர் பணிமன்றத்தின் சார்பிலும் திருவருட்பாவிற்கு விரிவுரை எழுதி வெளியிடும் திட்டமொன்றுள்ளது.

ஞான நூலாகிய திருவருட்பாவிற்கு விரிவுரை நூல்களை வெளியிட்டுப் பெருந் தொண்டாற்றி வரும் இவ்வடார்க்காடு சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் பணிகள் வெல்க என எல்லாம்வல்ல அருட்பிரகாச வள்ளலாரின் திருவடிகளை வணங்குகிறேன். இத்தகைய நல்ல நூற்களைத் தமிழ்நாட்டு மக்கள் வாங்கிப் பயின்று திருவருள் நலம் பெறுவாராக!

**பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்**
**புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி யோங்கும்**
**கங்குகரை காணாத கடலே! யெங்கும்**
**கண்ணாகக் காண்கின்ற கதியே! அன்பர்**
**தங்கநிழல் பரப்பிமயல் சோடை யெல்லாம்**
**தணிக்கின்ற தருவே! பூந்தடமே! ஞானச்**
**செங்குமுதம் மலரவரு மதியே! எல்லாஞ்**
**செய்யவல்ல கடவுளே! தேவ தேவே!**

1

**-மகாதேவமாலை.**

அருட்பெருஞ்ஜோதி!
தனிப்பெருங்கருணை!!

அன்புள்ள,
நா.மகாலிங்கம்,
தலைவர்,
இராமலிங்கர் பணிமன்றம்.

---

This e-book can be downloaded for free from
http://www.vallalar.org

உ

## திருச்சிற்றம்பலம்

## பாராட்டுரை

அருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய அரும்பெரும் பாடல்களின் தொகுதியே திருவருட்பா என்பதை யாவரும் அறிவர். அருட்பா என்னும் பெயர் அமைப்பே நம் ஐயாவின் திருப்பாடல்களின் சிறப்பைக் காட்டி நிற்கிறது.

திருவருட்பா என்னும் பெயர் பல்வேறு வகையில் பொருள் காணும் முறையில் அமைந்திருப்பினும், சிறப்பு முறையில் அதற்குப் பொருள் காணவேண்டுமாயின், சிவபெருமானின் திருவருளைப் பெறுவதற்குரிய பாடல்களைக் கொண்ட நூல் என்று காணலாம். திரு என்னும் செம்மொழிக்குத் தொல்காப்பியம், திருக்கோவையார் ஆகிய நூல்களுக்கு உரை எழுதிய மாபெரும் புலவர் பேராசிரியர் அவர்கள் "கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்" என்று பொருள் எழுதியுள்ளனர். அப்பொருள் அருட்பா என்னும் சொல்லுக்கு முன் உள்ள திரு என்னும் சொல்லுக்குப் பொருந்தும். இத்துடன் இன்றித் திரு என்பது முத்தியாகிய திரு என்று பொருள் காணுதற்கும் இடம் தருகின்றது. ஆகவே திருவருட்பா என்பதற்கு முத்தித் திருவைப் பெறுதற்கு அருளால் பாடப்பட்ட நூல் என்றும் பொருள் கூறுதலும் பொருத்தம் ஆகும்.

இன்னோரன்ன பொருட்பொலிவுக்கு உறைவிடமாக விளங்கும் திருவருட்பாவில் ஈடும் எடுப்பும் அற்ற மூன்று பகுதிகள் காணப்படுகின்றன. அவையே திருவடிப்புகழ்ச்சி, மகாதேவமாலை, அருட்பெருஞ்சோதி அகவல் என்பன. இவற்றுள் நடுநாயகமாக விளங்குவது மகாதேவமாலை.

இறைவனுக்குப் பல்வேறு வகையான மாலைகள் இருப்பினும் அவனுக்குப் பாமாலையே மிகவும் உகந்ததாகும். இதுதான் உண்மை என்பதைத் தாயுமானவர், "பல்மாலைத் திரள் இருக்கத் தமை உணர்ந்தோர் பாமாலைக்கே நீ தான் பட்சம் எடுத்து மொழிந்துள்ளனர். இதனால்தான் நம் வள்ளலாரும் தேவாதி தேவனும் மகாதேவனுக்கு மாலையாக இந்த நூற்றொரு பாடல்களைப் பாடியுள்ளனர்.

இந்த மகாதேவமாலையில் சிவபெருமானுடைய அருவத்திருமேனியின் அற்புதங்களும், உருவத் திருமேனியின் உண்மைகளும் நன்கு எடுத்து இயம்பப் பட்டுள்ளன. மேலும், இறைவனின் அருட்பண்புகளும் அழகுறப் பேசப்பட்டுள்ளன. நம் ஐயாவின் உள்ளக் கிடக்கையாகிய ஷடாந்தக் குறிப்புகளும் இலை மறை காய்போல ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன.

இத்தகைய கருத்துகளுக்குக் கருவூலமாகத் திகழும் மகாதேவ மாலைக்கு உரை மிகமிக இன்றியமையாததாயிற்று. இந்த நூலுக்கு உரை எழுதுகிறவர்கள் திருமுறைப் பயிற்சியும், சாத்திர அறிவும், வேத வேதாந்த உணர்வும் பெற்றவர்களாக இருக்க வேண்டும். இன்னோரன்ன பல்துறைப் புலமை பெற்றவர் குகத்திரு, இரசபதி அடிகளாரே ஆவார். இத்தகைய அறிஞர் பெருமானார் இந்த மகாதேவமாலைக்கு உரை எழுதி இருப்பது மிகமிகப் பாராட்டற்குரியதாகும். இந்த

நூலின் உரையினைப் பயில்கின்றவர்கள் அடிகளாரின் புலமையினைப் பாராட்டாமல் ஒருபோதும் இரார்.

திருவள்ளுவர் தமது நூலில் "இதனால் இதனை இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்று கூறியுள்ளனர். இந்த வாய்மைக்கு இணங்க வடார்க்காடு மாவட்டம் வேலூர் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் உறுப்பினர்களும் இச்சங்கத்தின் தலைவர் திருக்குறள் நம்பி ஊ.வ.தட்சிணாமூர்த்தி முதலியார் அவர்களும் திருவருட்பாவுக்கு உரை எழுத குகத்திரு.இரசபதி அடிகளாரை வேண்டி எழுத வைத்தது மிக மிகப் பாராட்டற்குரிய தாகும்.

குகத்திரு. இரசபதி அடிகளாரின் உரையுடன் வெளிவரும் இந்த மகாதேவமாலை உரை நூலுக்குக் கொடை வள்ளல், அருட்பா அன்பர் என்.மகாலிங்கம், பி.எஸ்ஸி, எம்.ஐ.இ., அவர்கள் அணிந்துரை எழுதி இருப்பது பொன்னால் செய்யப்பட்ட மலருக்கு மணமும் சேர்ந்தது போன்றது என்று கூறுவது உண்மை. வெறும் புகழ்ச்சி அன்று.

இறை உணர்வு உடைய ஒவ்வொருவரும் இந்தச் சங்கத்தார் வெளியிடும் திருவருட்பா உரை நூல்களை வாங்கிப் படித்து அருட்பெருஞ்சோதித் தனிப்பெருங்கருணை யராம் அம்மை அப்பரின் திருவருளுக்கு உரியவர்களாக விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**இங்ஙனம்**
**பேராசிரியர், பாலூர்-கண்ணப்ப முதலியார்.**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# மகாதேவமாலை

## (இரண்டாம் பகுதி)

-------

**சொல்லொழியப் பொருளொழியக் கரண மெல்லாம்**
**சோர்ந்தொழிய உணர்வொழியத் துவங்கா நின்ற**
**அல்லொழியப் பகலொழிய நடுவே நின்ற**
**ஆநந்த அனுபவமே அதீத வாழ்வே**
**நெல்லொழியப் பதர்கொள்வார் போல இன்ப**
**நிறைவொழியக் குறைகொள்மத நெறியோர் நெஞ்சக்**
**கல்லொழிய மெய்யடியர் இதய மெல்லாம்**
**கலந்துகலந் தினிக்கின்ற கருணைத் தேவே. (40)**

(ப-ரை.) சொல் ஒழிய-(மனனம் செய்த) சொற்கள் எல்லாம் மறந்து போக; பொருள் ஒழிய-(கண் முன் காணும்) தத்துவ உலகம் காணப் பெறாது மறைய; கரணம் எல்லாம் சோர்ந்து ஒழிய-(மனம் புத்தி சித்தம் அகங்காரம் எனும்) அந்தக் கரணங்கள் அனைத்தும் அயர்ந்து அருகிச் செயல் அடங்க; உணர்வு ஒழிய-(இச்சை செயல்) அறிவுகள் இல்லாது கரக்க; துளங்கா நின்ற அல் ஒழிய பகல் ஒழிய-(இடையிடை) எழுந்து விளங்கும் (கேவல சகலம் எனும்) இரவு பகல் (இரண்டும்) அடியொடு கெட; நடுவே நின்ற ஆநந்த அனுபவமே-(இத்தனைக்கும்) நடுவில் இருந்து விளங்கும் இன்ப அநுபூதியே, அதீத வாழ்வே-(பேச்சிற்கும்) எட்டாது பெருகிய வாழ்வே; நெல் ஒழிய பதர் கொள்வார் போல-நெல்லை விட்டுப் பதரைக் கைப்பற்றுபவர்போல்; இன்ப நிறைவு ஒழிய குறைகொள் மத நெறியோர் நெஞ்சக் கல் ஒழிய-நிறைவான இன்பம் நீங்க, (சால்பற்ற) குறைகளையே இறுகப்பற்றிய சமய வழியினர்தம் கல்லான மனத்தில் (உறவு) கலந்து நில்லாமல்; மெய்யடியர் இதயம் எல்லாம் கலந்து கலந்து இனிக்கின்ற கருணைத் தேவே-மெய்ம்மை அன்பர்களின் உள்ளம் முழுதினும் இரண்டறக் கலந்து தித்திக்கும் கருணைத் தெய்வமே, (எ-று.)

(வி-ரை.) ஆதியான வேதம் முதல் இன்று வரை உதித்த எந்த நூற்களும், சொற் பிரபஞ்சம் என்று சொல்லப் பெறும். கற்ற சொற்கள் யாவும் நினைவில் எழும்பி, அறிவில் உருண்டு, வளவள என்று வாய்வழி வந்து, வாழ்நாள் ஒவ்வொன்றும் பாழ்நாளாக வறள்விக்கின்றன.

**“அல்லும் பகலும் அறிவாகி நிற்பவர்க்குச்**
**சொல்லும் பொருளும் சுமைகாண் பராபரமே”**

என்ற தாயுமானார், இதை எண்ணி மனம் கண்ணி உரைப்பது இங்குக் கருதத் தகும்.

மண் முதல் நாதம் ஈறாக உள்ள தத்துவங்கள் தொண்ணூற்றாறும், பொருட் பிரபஞ்சம் என்று புகலப் பெறும். சொல்லும் பொருளுமான நூலறிவும், தத்துவ ஆய்வறிவும், காட்சிக்கும் கருத்திற்கும் புலனாகி, மாபெரும் திருவருளை மறக்கடிக்கின்றன. இவைகளொடு, எம்மைப் பார்! எம்மில் இணைந்திரு என்று வலிந்து ஈர்த்து, பொல்லாத கரணங்கள் குண்டாங் கரணம் போடுகின்றன. அவைகளின் கொட்டமும் ஒழியவேண்டும்.

**"கரணங்கள் எல்லாம் கடந்து நின்ற கறைமிடற்றன்"**

என்பது, திருவாசகத்துத் திருக்கோத்தும்பி

கரணங்களைக் கலக்கும் இச்சை, அதற்கு ஏற்ற செயல், செயற்கு ஏற்ற அறிவு மூன்றும், சோம்பேறி ராட்டினம் போல் சுழன்று வரும். இம் மூன்றின் உணர்வும், முடி சாய்ந்து போக வேண்டும்.

இரவும் பகலும் மாறி மாறி வரும்.

அறிவும், நினைவும், இன்பமும், பிறப்பும் பகல் எனப்பெறும். அறியாமையும், மறதியும், துன்பமும், மரணமும் இரவு எனப்பெறும்; இந்த இரண்டையும் சகலம் கேவலம் என்பது சாத்திர வழக்கம். இந்த இரண்டும், மாறி மாறி வந்து மற்போர் செய்யும். நீளத் தொடரும் இவைகள், அவ்வளவு எளிதில் நீங்குவன அல்ல.

**"இரவு பகலற்ற இன்பவெளி யூடே**
**விரவி விரவிநின் றுந்தீபற"**

என்று, திருவுந்தியார் தெரித்தபடி யுளது திருவருள் தொடர்பு.

**"அராப்புனை வேணியன் சேயருள் வேண்டும்;**
**அவிழ்ந்த அன்பால்**
**குராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டும்;**
**கொடிய ஐவர்**
**பராக்கறல் வேண்டும்; மனமும் பதைப்பறல்**
**வேண்டும் என்றால், இராப்பகல் அற்ற இடத்தே இருக்கை**
**எளிதல்லவே"**

என்பர் அருணை முனிவர்.

சொற் பிரபஞ்ச பொருட் பிரபஞ்சங்கள் முதலிய உள; அவைகளை ஊடுருவி உட்புகுந்தால் கரணப் பிரபஞ்சம்; அதை ஊடுருவினால் உணர்வுப் பிரபஞ்சம்; அதை ஊடுருவினால் சகல கேவல ஜாலப் பிரபஞ்சம்; இத்தனையையும் ஊடுருவி உள் புகுந்தால் நடுவே உளது ஆநந்த அனுபவம். இதனால்தான் மேலோர், இராப்பகலற்ற இடத்தே இருத்தல் எளிதல்ல என்றனர்.

களை பறிப்பார்போல் முறையே நியதி களைந்தார்க்கும் சிறந்த சேவை தரும் இன்பச் சிவம். இவ்வளவு களை எடுக்க. எவரால் ஆகும் என்று ஒதுங்கினால், ஆன்மப் பயிர் நட்டம் அடையும்.

பாடுபட்டு, அழுது கதறி முயன்ற பயனாக, “சிந்தை தனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அந்தமிலா ஆநந்தம் அணிகொள் தில்லை கண்டேனே” என்று திருவாய் மலர்கின்றார் வாதவூரடிகளார்.

அரிசி உள் இருந்தால் நெல்; உமிமட்டும் உளதேல் பதர்; இது சாவிப் பயிர் எனப் பெறும். அவலை நினைத்து உமியிடிப்பார் போல், சத்தான சன்மார்க்கம் சாராது, போலிச் சமயங்கள் போராடும்.

“பாவியேன் இனி என் செய்கேன் பரமனே! பணிந்துன் பாதம் சேவியேன், விழிநீர் மல்கச் சிவசிவ என்று தேம்பி ஆவியே நிறைய வந்த அமுதமே என்னேன்; அந்தோ சாவிபோம் சமயத்தாழ்ந்து சகத்திடை தவிக்கின்றேனே” என்பர் தாயுமானார்.

இளகா மனத்தால் இடம்தேடி வந்து, வாத நோயை மதவாதிகள் வளர்ப்பர். அவர்களது குயுக்திக் குரற்குச் செவி கொடாமல், சார்ந்த சன்மார்க்கத்தில் தோய்ந்து, ‘நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே, புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்’ என்றபடி, மெய்யடியர் உளம் முழுதும் இறைவன் இனிக்கும் உறவாகி யிருக்கின்றான் எனும் பகுதியை ஓதும் பொழுதே புனித மெய்தி உடலம் புளகிக்கின்றதே. (40)

**அலைகடலும் புவிவரையும் அனல்கால் நீரும்**
**அந்தரமும் மற்றைஅகி லாண்டம் யாவும்**
**நிலைகுலையா வண்ணம்அருள் வெளியி னூடு**
**நிரைநிரையா நிறுத்திஉயிர் திகமும் வண்ணம்**
**தலைகுலையாத் தத்துவஞ்செய் திரோதை யென்னும்**
**தனியாணை நடத்திஅருள் தலத்தில் என்றும்**
**மலைவறவீற் றிருந்தருளும் அரசே முத்தி**
**வழித்துணையே விழித்துணையுள் மணியாம் தேவே.** (41)

(ப-ரை.) அலைகடலும் -அலைகளை யுடைய கடலும்; புவி வரையும்-நிலமும் (நிலத்தைத் தாங்கும்) மலைகளும்; அனல் கால் நீரும் - தழலும் காற்றும் தண்ணீரும்; அந்தரமும்-ஆகாயமும்; மற்றை அகில அண்டம் யாவும் -மற்றுமுள பலவான அண்டங்கள் அனைத்தையும்; நிலை குலையா வண்ணம் அருள் வெளியினூடு நிரை நிரையா நிறுத்தி-நிலையாக இருக்கும் தலைமை குலைந்து போகாதபடி, திருவருள் ஆகிய வெளி நடுவில் வரிசைக் கிரமப்படி (அவைகளைக்) காலூன்ற வைத்து; உயிர் நிகமும் வண்ணம் -(என்றும்) உயிர்கள் விளங்கி யிருக்குமாறு; தலை குலையாத் தத்துவம் செய் திரோதை என்னும் தனி ஆணை நடத்தி-தலைமை தளராத (உள்பொருள் வேட்கையை உண்டாக்கும்) திரோதான சக்தி எனப்பெறும் (நலம் சிறந்த) ஒப்பற்ற ஆக்ஞையை நடத்தி; அருள் தலத்தில் என்றும் மலைவு அற வீற்றிருந்தருளும் அரசே-அநுக்கிரக தலத்தில், எந்த நாளிலும் (எய்த இயலுமோ எனும்) மலைப்பு இல்லாதபடி, வீறு பெற விளங்கியிருக்கும் வேந்தே; முத்தி வழித் துணையே-(தூய) வீடு பேற்றின் வழியான (உயிர்த்)

துணைவனே; விழித் துணையுள் மணியாம் தேவே-கண்கட்குள் ஒளிகாட்டும் மணியான கடவுளே, (எ-று.)

(வி-ரை.) விரிந்த அருள் வெளியில் அண்டங்கள் பழங் கலங்கள் போல் அடுக்கப் பெற்றுள. மறைக்கும் செயலுள்ள திரோதான சக்திக்கு ஒரு மாண்புண்டு; தன்னைக் காட்டாதே கன்மத்தை ஊட்டும்; அதே நேரத்தில், ஆன்மப் பக்குவம் கண்டு அருளமுதம் உண்பிக்கும் அற்புதம், அதன் தலைமை குலையாத தத்துவம். மாபெரும் திரோதான மறைப்பு சக்தி, அனுக்கிரக சக்தியாக வெளிப்பட்டு அருளும் காலமும் அணுகலுறும். (விளக்கெண்ணெய் ஊட்டிய கையே பாலூட்டிச் சோறூட்டும் பரிவும் உலகில் பார்த்துளம்; இது இகம்; அது, பரம அர்த்த இகம்.) அவன் ஆணைக்கு, திரோதை எனும் ஒரு அரிய திருப்பெயர் உளது. இவ்வளவும் செய்து, ஒன்றும் அறியான்போல் திருவருள் தலத்தில் எழுந்தருளி யிருந்து அரசு ஓச்சுகின்றான் அந்த அத்தன். அவனே முத்திக்கு வழித்துணை; இகத்திற்கு விழித்துணை; கண்ணுள் மணியிலதேல் காட்சி யில்லை; அவன் அருள் துணையிலதேல், இம்மை மறுமை வீடு எனும் மும்மையும் இல்லை என்று முடித்தபடி.

**“ஆரார் எனக்கு என்ன போதித்தும் என்ன,என்**
**அறிவினை மயக்க வசமோ**
**அண்டகோ டிகள் எலாம் கருப்பஅறை போலவும்**
**அடுக்கு அடுக்கா அமைத்துப்**
**பேராமல் நின்றபர வெளியிலே மனவெளி**
**பிறங்குவது அலாது, ஒன்றினும்**
**பின்னமுற மருவாது; நன்னயத்தால் இனிப்**
**பேரின்ப முத்தி நிலையும்**
**தாராது, தள்ளவும் போகாது உன்னால்; அது**
**தள்ளினும் போகே னியான்;**
**தடையேதும் இல்லை; ஆண்டவன், அடிமை என்னும் இரு**
**தன்மையில் என்வழக்குத்**
**தீராது விடுவதிலை; நடுவான கடவுளே!**
**தேடரிய சத்தாகி, என்**
**சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே**
**தேசோ மயாநந்தமே”**

எனும் தாயுமானார் பாடலும் இங்கு நினைவிற்கு வருகிறது அல்லவா. (41)

**வரம்பழுத்த நெறியேமெய்ந் நெறியில் இன்ப**
**வளம்பழுத்த பெருவாழ்வே வானோர் தங்கள்**
**சிரம்பழுத்த பதப்பொருளே அறிவா நந்தச்**
**சிவம்பழுத்த அநுபவமே சிதாகா சத்தில்**
**பரம்பழுத்த நடத்தரசே கருணை என்னும்**
**பழம்பழுத்த வான்தருவே பரம ஞானத்**
**திரம்பழுத்த யோகியர்தம் யோகத் துள்ளே**
**தினம்பழுத்துக் கனிந்தஅருள் செல்வத் தேவே.**

(ப-ரை.) வரம் பழுத்த நெறியே-வரித்தற்கு உரிய கனிந்த வழியாயினானே; மெய்ந் நெறியில் இன்ப வளம் பழுத்த பெரு வாழ்வே-சன்மார்க்கத்தில் பெருகிய இன்பம் கனிந்த பெருவாழ்வே; வானோர் தங்கள் சிரம் பழுத்த பதப்பொருளே-தேவர்களுடைய சிரத்தில் கனிந்து காணும் (புனிதத்) திருவடிப் பொருளோனே; அறிவு ஆநந்த சிவம் பழுத்த அநுபவமே-அறிவில் இன்பச் சிவம் கனிந்த அனுபவ உண்மையே; சித் ஆகாசத்தில் பரம் பழுத்த நடத்து அரசே-ஞானமான விண்ணில் பரம் பழுத்த வான் தருவே-கருணை எனும் பெயருடைய கனிகள் கனிந்து பெருகிய தேவ கற்பகமே; பரம ஞானத் திரம் பழுத்த யோகியர்தம் யோகத்துள்ளே-மேலான ஞான ஆற்றல் முதிர்ந்த யோகிகளின் யோக சாதனையுள்; தினம் பழுத்து கனிந்த அருள் செல்வத்தேவே-ஒவ்வொரு நாளும் மிகக் கனிந்த திருவருள் செல்வத் தெய்வமே, (எ-று.)

(வி-ரை.) வேண்டுவார் வேண்டுவதை, விரைந்து அருளலை வரம் என்பது வழக்கம்; வரித்தற்கு உரியது வரம்; வரித்தல்-என்னதே இவை என்று ஏன்று கொள்ளல். அசுரர் அரக்கர் ஆதியர், அபிசார வேள்வி முதலிய இயற்றி ஆக்கிரமிக்கும் போது, அருவருத்து வரம் அருள்வது உண்டு; இங்குக் குறித்தவை அஃதன்று. இது கேளாதே தருகின்ற கேண்மை. தக்கார் செல்லும் வழியெலாம் கனிந்து காட்டிய தயை; ஆதலின், ‘வரம் பழுத்த நெறியே’ என்றார்.

அன்னார் செல்லும் வழியெல்லாம் மெய்வழி; அவ்வழி முழுவதும் இறைவன், பேரின்ப வளம் கனிந்த பெருவாழ்வைப் பெருக அருள்கின்றான் ஆதலின், ‘மெய்ந்நெறி.......வாழ்வே’ என்றார்.

தாம் வாழ வானவர், தற்பரன் முன் தலை வணங்குகின்றனர்; முனைப்பழிந்த அவர்கள் திருமுடிமேல், கனிவொடு திருவடிகள் காட்சி யாகின்றன. “உரைப்பார் உரையுகந்து உள்க வல்லார் தங்கள் உச்சியாய்” என்பது, அவிநாசித் தமிழ் மறை.

அறிவு புறம்; இன்பம், அகம்; உயிர் சிவம்; இம் மூன்றுமான திருமேனி, அறிவாநந்த சிவம் என்று அறியப் பெறும். கனிந்த அனுபவமாக இம்மூர்த்தம், தக்கார்க்குத் தரிசனம் ஆதலின், அநுபவமே’ என்றார்.

“ஒரு பொருளினது நாம ரூப குண குற்றங்களை விசாரியாமல், அந்தப் பொருளைக் காணுதல் இந்திரியக்காட்சி, இந்திரிய அறிவு. அதன் நாம ரூபத்தையும் குண குற்றங்களையும் விசாரித்தறிதல் மன அறிவு. அதன் பிரயோஜனத்தை யறிதல் ஜீவ அறிவு. அந்தப் பொருளினது உண்மையை அறிதல் ஆன்ம அறிவு. ஞான சபை யென்பது ஆன்மப் பிரகாசம். அந்தப் பிரகாசத்திற்குள் இருக்கும் பிரகாசம் கடவுள். அந்த உள்ளொளியின் அசைவே நடனம். இவற்றைத்தான் (முறையே) சித்சபை அல்லது ஞான சபை என்றும், நடராஜர் என்றும், நடனம் என்றும் சொல்லுகிறது” என்பது, வள்ளலார் தந்த வசனப் பகுதி.

அப்பகுதி, ‘சிதாகாசத்திற் பரம் பழுத்த நடத்தரசே’ என்பதில் அழகாக அறிவிக்கப் பெற்றது.

அளவிலாக் கருணையன்; எண்ணிய யாவும் எய்த அருள்பவன் என்பதை, ‘கருணை என்னும் பழம் பழுத்த வான் தருவே’ என்று கைகுவித்தார்.

கர்ம யோகர் பலர். அவர்கட்கு அரும்பு மலர் காயாகி அருளும் பரம். ஞான யோக சாதகர்க்கு, தானே கனிந்து தண்ணருள் பாலிக்கத் தாவிவரும் ஆதலின், 'பரமஞான...........கனிந்த அருள் செல்வத் தேவே' எனும் இறுதி யடியை ஓதும் நாவுள் நீர் ஊறும். (42)

**அண்டமெலாம் கண்ணாகக் கொளினும் காண்டற்**
**கணுத்துணையும் கூடாவென் றனந்த வேதம்**
**விண்டலறி ஓலமிட்டுப் புலம்ப மோன**
**வெளிக்குள்வெளி யாய்நிறைந்து விளங்கும் ஒன்றே**
**கண்டவடி வாய்அகண்ட மயமாய் எங்கும்**
**கலந்துநின்ற பெருங்கருணைக் கடவு ளேஎம்**
**சண்டவினைத் தொடக்கறச்சின் மயத்தைக் காட்டும்**
**சற்குருவே சிவகுருவே சாந்தத் தேவே.**

(ப-ரை.) அண்டம் எல்லாம் கண் ஆகக் கொளினும் காண்டற்கு அணுத்துணையும் கூடா என்று-உலகம் அனைத்தையும் (காணும்) கண்களாகக் கொண்டாலும், ஓர் சிற்றளவும் தரிசிக்க இயலா என்று; அநந்த வேதம் விண்டு அலறி ஓலம் இட்டு புலம்ப-அளவிறந்த மறைகள் வாய் திறந்து அலறி அபயக் குரல் எடுத்து அழா நிற்ப; மோன வெளிக்குள் வெளியாய் நிறைந்து விளங்கும் ஒன்றே-மௌன விண்ணுள் (ஞான) ஆகாயமாகி நிறைந்து விளங்குகின்ற ஏகனே; கண்ட வடிவாய் -(காணப் பெறும்) எல்லையிட்ட திருமேனி ஆகி; அகண்ட மயமாய் (காண இயலாதபடி எதனினும் ஊடுருவிய) சொருப வெள்ளமாய்; எங்கும் கலந்து நின்ற பெருங் கருணைக் கடவுளே-எல்லா இடத்தினும் வியாபக பரமாய் இருக்கின்ற பெருங்கருணை யுடைய பெருமானே; எம் சண்ட வினைத் தொடக்கு அற சின்மயத்தைக் காட்டும் சற்குருவே-எமது உக்கிர வேகமான கன்மச் சங்கிலி கட்டறுந்து போகுமாறு ஞான சொரூபத்தைத் தரிசிக்கப் பண்ணும் பரமாசாரியத் திருமேனியனே; சிவ குருவே-சிவாசாரியனே; சாந்தத் தேவே-சாந்த ஒளிமயமான சால்பினனே, (எ-று.)

(வி-ரை.) காண்டற்கு அரியது ககன வெளி; அது அருவம். உரைத்தற்கு அரியது, அதனினும் நுண்மையான பரவெளி; அது அருவுள் அருவம். முன்னுதற்கும் அரியது, பரவெளியுள் பதிந்த மோனவெளி; அது அருவ அருவுள் ஆன அருவம். இங்ஙனம் நுணுகி நுணிகியுள தன்மையனே, 'நுணுகாதே நுண்ணியான்' என்கிறது ஆதியுலா.

அநாதியான சொற்பிரபஞ்ச வேத தேவதை, எல்லையிட்ட தன் அறிவால் இடையறாது முயன்றும், அந்நுட்ப வெளியை அறிய இயலாது அயர்ந்தது. மேலும் மேலும் முயன்று, அறிய முடியவில்லையே என்று அலறுகின்றது; அந்த அலறு சொற்களே அளவிறந்த வேதங்கள் என்று ஆயின. "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என்று, வரதவூரடிகளும் இதை எண்ணி அலறுகிறார். அலறிய வேததேவரை, தன் தோல்வியை எண்ணி, அபய குரல் கொடுத்து அழுகிறது. இதனுடன் இப்பகுதியின் 60, 61 ஆம் பாடல்களும் இங்கு எண்ணத்தக்கன. வேத தேவதையின் கதியே இதுவாயின், நம் நிலையாது என்று, அகமும் புறமும் அதிர்கிறதே!

காண்டல், கருதல், உரையெனும் இம் மூன்றும் கடந்த இடம் மோனம். மானத்தில் நோக்குள்ள மனம், அம் மோனம் பெறும். வியன்மிகு மோனம் வெளிமயம். அவ்வெளியுள் வெளியே சிதாகாயம். இந்நிலையில் உளது ஏகம். அதை 'மோன வெளிக்குள் வெளியாய் நிறைந்து விளங்கும் ஒன்றே' என்பதில் குறிப்பித்தார்.

கண்டவர் கண்ட திருவுருவம் கண்டம்; (கண்டம் -எல்லையிட்ட திருமேனி.) காணாதார் கண்டார் போல், "எஞ்சமய முதலவர் ஏற்றமுளர்; உம் சமய அதிபர் மட்டம்" என வாத நோயை வளர்க்கும்போது, இறைவர் அகண்ட மயமாகி அமைகின்றார். (அகண்டம்-விளக்க முடியாத வியாபகம் வடிவம் - இங்கு உருவம். மயம் என்பது சொரூபம். இவை சிந்தித்தற்குரிய செய்திகள்.)

எதிர்மறை உடன்பாடு இன்றி, அவர் பெருங்கருணை ஊடுருவி எதனிலும் உறவு பூண்டுளது ஆகலின், 'எங்கும் கலந்து நின்ற பெருங்கருணை' என்றார். கடவுதல் செய்வது கடவுள்; "ஓய நடவல் கடவல் ஓச்சல்..........செலுத்தல் ஒரு பொருள்" என்பது பிங்கலந்தை. உயிர்களின் உள்ளக் குகைதொறும் இருந்து, வேட்கை, அறிவு, செயல்களை இயக்கிச் செலுத்தும் உள்ளமாக உள்ள பொருள், கடவுள் என்று கருதப்பெறும். கடவு+உள்=கடவுள்; கடவு-வினைத்தொகை. திருவுளம், இங்கு உள் எனப்பெறுகின்றது.

சண்டம் -விரையும் உக்கிரமான வேகம். அந்தக் கன்ம வேகத்தின் மோதல், எளிதில் விளங்குமாறு இல்லை. பின்னி அவைகள் உயிரில் பிணைந்துள. அப்பிணிப்பு தொடக்கு எனும் பெயரால் அறியப்பெறும்.

சின்மய தரிசனம் சித்தித்தால் அன்றி, வினைத் தொடக்கில் இருந்து விடுதலை இல்லை. அத்தரிசனம் அருளற் பொருட்டே வித்தக சற்குரு ஆகிப் பரம் வெளிப்படும்; எனினும் அது, அநாதியாகவே சிவகுரு எனும் நாமம் கொண்டு சிறந்துளது.

பரம உபகாரம் பல செய்தும், எத் தொடர்பும் இல்லாத சாந்தமே ஆன சால்பு அதனில் இயல்பாயுளது ஆதலின், 'சாந்தத் தேவே' என்றார். (43)

**பேதமுறா மெய்ப்போத வடிவமாகிப்**
**பெருங்கருணை நிறம்பழுத்துச் சாந்தம் பொங்கிச்**
**சீதமிகுந் தருள்கனிந்து கனிந்து மாறாச்**
**சின்மயமாய்ப் நின்மலமே மணந்து நீங்கா**
**ஆதரவோ டியன்மவுனச் சுவைமேன் மேற்கொண்**
**டாநந்த ரசமொழுக்கி அன்பால் என்றும்**
**சேதமுறா தறிஞருளம் தித்தித் தோங்கும்**
**செழும்புனிதக் கொழுங்கனியே தேவ தேவே.**

(ப-ரை.) பேதம் உறா மெய்ப்போத வடிவம் ஆகி-பேதமே தோன்றாத மெய்ஞ்ஞானம் (தன்) மேனியாகி; பெரும் கருணை நிறம் பழுத்து -பேரருள் வண்ணம் பெருகி; சாந்தம் பொங்கி-(புனித) அமைதி பொங்கி; சீதம் மிகுந்து அருள் கனிந்து கனிந்து-தண்மை தழைத்து, கனிவான அருள் பெரிதும் கனிந்து; மாறா சின்மயமாய் நின்மலமே மணந்து-மாறுபாடு இல்லாத ஞான மயமாகி, மலமற்ற

சொரூபமான மணம் கொண்டு; நீங்கா ஆதரவோடு இயல் மவுனச் சுவை மேன் மேல் கொண்டு; நீங்கா ஆதரவோடு இயல் மவுனச் சுவையை அதிகம் கொண்டு; ஆநந்த ரசம் ஒழுக்கி-பேரின்பச் சாறு பெருகப் புரிந்து; அன்பால் என்றும் சேதம் உறாது -அன்பினால் ஒருநாளும் சிதைவுறாமல்; அறிஞர் உளம் தித்தித்து-மெய்ஞ்ஞானிகளின் உள்ளத்தில் (எப்போதும்) இனித்து; ஓங்கும் செழும் புனிதக் கொழுங்கனியே-உயரும் செழுமைப் புனிதமுடைய கொழுமைக் கனியே ஆனவனே; தேவதேவே--,(எ-று.)

(வி-ரை.) "மனிதர்காள் இங்கு வம்மொன்று சொல்லு கேன், கணிதந்தால் கனி யுண்ணவும் வல்லிரே" என்றார் நம் அப்பர். மனோ வேகமான மக்கள், திருவருட் கனியைக் கருதற்கும் நேரமிலர் என்பது அவர் கருத்து.

மருள் வண்ணம் ஆனது மாயை; அருள் வண்ணம் ஆனது இந்த அருங்கனி. கலக நிலையதான கருவி கரணங்கள் காணாத சாந்தமே இக்கனியில் சால்பு. வெம்மையும் இருளும் விரவிய உலகியலில் தண்மையும் அருளும் தழைத்தது இது. பருமைச் சரீரம், நுண்மைத் தேகம், காரண மேனியெனும் மூன்றானும் காண்டற்கு அரிய சின்மயமானது சிவக்கனி. மும்மல நாற்றத்தை மோந்து கொளும் உயிர்கட்குப் புரியாத மலரகிதமே இதன் மணம்.

**"பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்**
**சீவனுக் குள்ளே சிவமணம்"**

என்பது திருமந்திரம். அசாரமான வாழ்க்கையில் சாரமான இது, தெவிட்டுதல் இல்லா இன்ப ரசமாக என்றும் இருப்பது; அழுகுதல் உலகில், என்றும் சேதம் இல்லாமல், அகச்சுவையாகி அமையும் கொழுவிய இக்கனி, அருமை ஞானிகட்கே அகப்படுகின்றது என்று, சோரூப சிவத்தைப் பலபட உருவகித்த பயனான பா இது.

பேதம்-இனபேதம், மதபேதம், குணபேதம் முதலியவைகளைக் குறித்த பெயர். (பேதிப்பது பேதம்.) வடிவம்-சொரூபம். சீதம்-குளிர்ச்சி. நின்மலம்-அழுக்கு இன்மை. ஆதரம் -(அறுசுவைக்கும் மேற்பட்ட) ஏழாவது சுவை, இயல்-இயல்பு. ரசம்-சாறு. செழுமை-புனிதத்திற்கும் கொழுமை கனிக்கும் அடை. செல்வம்-பிரபுத்வம். (44)

**உடல்குளிர உயிர்தழைக்க உணர்ச்சி ஓங்க**
**உளங்கனிய மெய்யன்பர் உள்ளத் தூடே**
**கடலனைய பேரின்பம் துளும்ப நாளும்**
**கருணைமலர்த் தேன்பொழியும் கடவுள் காவே**
**விடலரிய எம்போல்வார் இதயந் தோறும்**
**வேதாந்த மருந்தளிக்கும் விருந்தே வேதம்**
**தொடலரிய வெளிமுழுதும் பரவி ஞானச்**
**சோதிவிரித் தொளிர்கின்ற சோதித் தேவே.**

(ப-ரை.) உடல் குளிர - உடலம் குளிர்ச்சியுற; உயிர் தழைக்க-(குளிர்ச்சி கொண்டு) ஆன்மா குதூகலிக்க; உணர்ச்சி ஓங்க-(புனித) உணர்வு பொங்கியெழ; உளம் கனிய-(கருணை மிகுந்து) மனம் கனிவு கொள்ள; மெய் அன்பர் உள்ளத்து ஊடே கடல் அனைய பேரின்பம் துளும்ப-உண்மை யன்பர்களின் உள்ளத்துள்

(தாவும்) கடல் போன்ற பேரின்பம் ததும்ப; நாளும் கருணைமலர் தேன் மொழியும் கடவுள் காவே-ஒவ்வொரு நாளும் (திருவருள் எனும்) கருணையாகிய மலர்களில் இருந்து (சிவாநந்தத்) தேன் சொரியும் தெய்வக் கற்பகத் தருவே; விடல் அரிய எம்போல்வார் இதயம் தோறும் வேதாந்த மருந்து அளிக்கும் விருந்தே-விடுதற்கு இயலா எம் ஒத்த அன்பர்களின் உள்ளந்தோறும் உபநிடத அமுதை விருந்தாக ஊட்டுபவனே; வேதம் தொடல் அரிய வெளி முழுதும் பரவி-வேத தேவதை தொடுதற்கு முடியாத (துரிய) வெளி முழுதும் வியாபித்து; ஞான சோதி விரித்து ஒளிர்கின்ற சோதி தேவே-(பயன்மிகும்) ஞான ஒளியைப் பரப்பி ஒளிர்கின்ற பரஞ்சோதித் தெய்வமே, (எ-று.)

(வி-ரை.) தொல்லை மும்மலத்தால் உடல் தோன்றியது. இதனில் முக்கியமான நாடிகள் மூன்று.

**"வாதக்கோன் நாளை யென்றான், வையக்கோன் பின்னையென்றான்**
**ஏதக்கோன் யாதேனும் இல்லை யென்றான் - ஓதக்கேள்**
**வாதக்கோன் சொன்னதிலும் வையக்கோன் சொன்னதிலும்**
**ஏதக்கோன் சொல்லே இனிது"**

என்று, குறும்பாக இந் நாடிகளைக் குறித்து ஔவையார் கூறியுளர். (வாதக்கோன் -வாதநாடி. வையக்கோன் - பித்த நாடி. ஏதக்கோன் -சிலேத்தும நாடி.) நாடிகள் மூன்றும் சமமாக நடைபெறல் வேண்டும்; ஒன்றை யொன்று முரணு மேல், எவரும் தம் ஆயுள் குறித்து ஐயுறுவர்.

பாழும் நோய்கள் இவைகளால் படபடக்கும். குமையும் இதனால், உடல் கொதிப்பேறும். வறளும் உடலில் ஆன்மா வாடும். உணர்வும் வரவர ஒடுங்கும் கடுந்துன்பங்களைச் சகித்து சகித்து மனம் கல்லாகிவிடும். இந்நிலையில் இறைவன் திருவருள், அடியார் உளத்தில் கற்பகத் தருவாய்க் காட்சியாகிறது. அதன் பயனாக உடல் குளிர்கிறது. உயிர் தழைக்கிறது உணர்வு உயர்கிறது. உள்ளம் கனிகிறது. உளத்தில் இன்பம் துளும்புகிறது. தெய்வக் கருணைத் தேன் பொழிகின்றது. அவ்வளவுதானா!

ஆரம்பக் காட்சி கற்பகக் கா; அடுத்த காட்சி, அகண்ட நிலையில் ஜோதித்தே.

"சூளதா மறைச் சென்னியும் தொடத் தொடநீண்ட நீளன் நீ" என்றார் பரஞ்சோதி முனிவர். ஆம். வேதம் தொடல் அரியது துரிய நிலம். அந்நில முழுதும் வியாபிக்கிறது ஞானஜோதி; அவ் வொளியை, எங்கும் பரப்பித் திகுதிகு என்று பிரகாசிக்கிறது சோதித் தெய்வம் என்பதை, எண்ணும்போதே அதனில் மனம் லயம் ஆகிறதே!

குளிர, தழைக்க, ஓங்க, கனிய, துளும்ப, தேன் பொழியும் கடவுள் காவே என இயைக்க. கா-கற்பகச் சோலை. கடவுளரான தேவர்கள் உலகத்துக் கற்பகம் வேறு; அது பசு புண்ணியத்தர்க்குப் பயன்படுவது. இது சிவமாகிய கற்பகம்; மேலும் இது, அடியர் இதய நிலத்தில் எழுவது.

“இமையா நெற்றிக்-கண்ணவனே...........கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே” என்று, தம் அனுபவம் கூறுவர் அப்பர் ஸ்வாமிகள்.

தடத்த உருவத் தரிசனத்தில் ஆழ்ந்த உயிரை, சொருபக் காட்சியில் உறவுபடுத்தலின், ‘விருந்து’ என்றார் (விருந்து-புதுப் புது அனுபவம்.)

ஒளி, சுடர், ஜோதி என்று சொல்லளவில் வேதம் சொல்லும். அனுபவ நிலையில் ஓம் ஓம் எனும் நாதத்தை எழுப்பி, பிராணனை ஒருமுகப் படுத்தியதும், புனித பரவெளி புலனாக, தெளிவாகச் சிவபதம் தெரிசனம் ஆகும். அந்த உண்மையை, ‘வேதம் தொடலரிய வெளி’ என்றார். (45)

**கிரியைநெறி அகற்றிமறை முடிவில் நின்று**
**கேளாமல் கேட்கின்ற கேள்வி யேசொற்**
**கரியவறை விடுத்துநவ நிலைக்கு மேலே**
**காணாமற் காண்கின்ற காட்சி யேஉள்**
**அரியநிலை ஒன்றிரண்டின் நடுவே சற்றும்**
**அறியாமல் அறிகின்ற அறிவே என்றும்**
**உரியசதா நிலைநின்ற உணர்ச்சி மேலோர்**
**உன்னாமல் உன்னுகின்ற ஒளியாம் தேவே.**

(ப-ரை.) கிரியை நெறி அகற்றி-(விக்கிரக) வழிபாட்டைக் கைவிட்டு; மறை முடிவில் நின்று-உபநிடத நிலையில் உறுதிபெற இருந்து; கேளாமல் கேட்கின்ற கேள்வியே-வினவாமல் வினவுகின்ற (ஞான) விசாரணையே; சொல் கரியவறை விடுத்து-சொற்கட்குச் சான்றான அந்த வரம்பைக் கைவிட்டு; நவ நிலைக்கு மேலே காணாமல் காண்கின்ற காட்சியே-(அனுபவ ரகசியமான) ஒன்பது நிலைகட்கு மேல், காண வேண்டும் எனும் எண்ணம் இன்றியே காண்கின்ற ஞான சொரூபமே; உள் அரிய நிலை ஒன்று இரண்டின் நடுவே சற்றும் அறியாமல் அறிகின்ற அறிவே-நினைத்தற்கு அரிய நிலையான ஒன்று, இரண்டு எனும் (சமயக்) கொள்கைகளின் நடுவில், ஒரு சிறிதேனும் அறியவேண்டும் எனும் எண்ணம் இன்றியே (சாட்சி மாத்திரமாக எதையும்) அறியும் அறிவு சொருபமே; என்றும் உரிய சதா நிலை நின்ற உணர்ச்சி மேலோர் உன்னாமல் உன்னுகின்ற ஒளியாம் தேவே!-என்றும் உரிமையுடன் நிரந்தரமாக நிலைபெற்ற மெய்ம்மை யுடைய மேதகு ஞானிகள், நினையாதே நினைக்கின்ற பேரொளிப் பிழம்பான பெருமானே, (எ-று.)

(வி-ரை.) பயின்ற மனத்தால் பாவித்தால், தூய வாக்கால் துதித்தல், அருச்சனை யாதிய ஆக்கையால் செய்தல் ஆகியவை, கிரியை நெறி. இவைகளில் பலகாலம் ஈடுபட்டு அயர்ந்த நிலையில், உறங்குவான் கைப் பாக்குப்போல் அவைகள் தாமே ஒதுங்கி விடும். அந்நிலையில், உயர் ஞான போதமான உப நிடத உணர்வு உதிக்கும். அதனால் அருவ உருவ அருவுருவம் கடந்த சொருபத்தில், பண்புபெற்ற ஆன்ம அறிவு படரும். ‘கிரியைநெறி அகற்றி, மறை முடிவில், நின்று’ என்பது, வளர்ந்த வளர்ச்சியை வழிமுறையாக வாய் மலர்ந்த செய்தி.

செவிவழி சிரவணித்து, இதுவரை புந்தியில் தொகுத்த அத்தனையும் பொய்யாக, மறை முடிவில் உணர்வு மன்னினர்க்கு, இயற்கை மயமான சொருப இறை, ஏக காலத்தில் அப்போது அறிவிக்கும் அவைகளே மெய் மெய் மெய். அதனுடன், கேட்கவேண்டும் எனும் எண்ணம் இன்றியே சொருப சிவம் சாட்சி

மாத்திரமாக எதையும், கேட்டுக் கொளும் அருமையும் 'கேளாமல் கேட்கின்ற கேள்வியே' எனக் குறிப்பாக இங்குக் கூறப் பெற்றது.

"சிவன் முத்தர்க்கு, மனமே சாட்சி; ஞான சித்தனுக்கு உரோமத்திற்கு உரோமமே சாட்சி" என்பது வள்ளலாரது வசனப் பகுதி. அது வேறு செய்தி.

நூற்களில் நுவலப் பெறும் சொற்களில், சாட்சி மாத்திரம் ஆனது தெய்வ இயல். கணக்கிறந்த அவைகளைக் கற்றது உண்டு; கேட்டது உண்டு. எனினும், அவைகளில் உள்ள உண்மைச் சொருபம் மட்டும் உணர முடிவது இல்லை. ஆதலின், வளர்ந்த அச்சொற்களின் வரம்பைக் கடந்து, சிந்தை அயர்கிறது சீவன். அந்நிலையில் விந்து, நாதம், பரவிந்து, பரநாதம், திக்கிராந்தம், அதிக்கிராந்தம், சம்மௌனம், சுத்தம், அதீதம் எனும் அனுபவ நவநிலை ஒவ்வொன்றாகத் தரிசனம் ஆகும். இறுதியான அதீதக் காட்சிக்குப் பின், இதுவரை கட்பொறியால் கண்டன யாவும் வெறும் பொய்ம்மாயத் தோற்றம். இப்போது தரிசனம் ஆவதுதான் மெய். இதுவே 'காணாமல் காண்கின்ற' காட்சி; அவ்வளவு தானா செய்தி! காணவேண்டும் எனும் முயல்வு இன்றியே சாட்சி மாத்திரமாய் எதையும் கண்டு கொளும் சிவம், காணாமல் காண்கின்ற காட்சி எனும் இனிய திருநாமத்தை ஏன்றுளது; இதையும் இங்கு அறிந்து கொளல் நலம். இதற்கு மேல் இது குறித்து ஏட்டில் எழுத உரிமை யில்லை. அனுபவத்தால் அகநெகிழ்வது அன்றி, சாமுசித்தர்களும் வார்த்தை உருவில் இது பற்றி இன்று வரை வாய் திறந்திலர்.

**"கரந்திருக்கும் அவரை வெளிப்படுவார்**
**காணாதது எல்லாம் காட்டி நிற்பார்"**

என்பது திருவருட்பாவின் பிறிதொரு பகுதி. மனம் ஊன்றி எதையும் உன்னும் உரிமை யுடையது; எனினும் அது, கண்ட பழைமையைத் திருப்பிக் கருதுவது தான்.

சீவன் வேறு, சிவன் வேறு அல்ல; இரண்டும் ஒன்று தான் எனில், மயங்குகின்றது மனம். சீவன் வேறு, சிவன் வேறு எனில், முன் சொன்னதற்கும் பின் சொன்னதற்கும் முரணாகிறதே என்று, மேலும் குழம்பம் விளைகிறது.

ஏகம் துவிதம் எனும் இவ்வாதத்தின் இடையில், ஒன்று மல்ல இரண்டுமல்ல எனில், இது கேட்டுத் தடுமாறி மனம் தத்தளிக்கின்றது. இது கண்ட அத்வைத அன்பைப் பொருளான சிவம், தன் இயற்கைப் பேரருளால் அறிவிக்க அறியும் அனுபவம், 'அறியாமல் அறிகின்ற அறிவு' என்று ஆகின்றது. அதனுடன், அறிய வேண்டும் எனும் எண்ணம் இன்றியே, உடனாகி எதையும் அறியும் அறிவு சொருபம் சிவம் என்னும் அரிய திருப்பெயரும் பெறுகின்றான் பெருமான்.

**"தன்அறிவு சாட்சிஅலால், சாயுச் சியப் பயனைச்**
**சொன்னபிழை கெட்டேன் தொலைப்பரோ-முன்னே**
**நடவா வழிஒருவன் சொல்ல, நடந்து**
**தடுமாறி நொந்தறியா தார்"**

எனும் கண்ணுடை வள்ளலார் இங்குக் கருத உரியவர்.

நனவினும் கனவினும் ஒரே நாட்டத்தர். சிந்தனையும் செயலும் சிவத்தின்பால் ஆனவர்கள், 'உரிய சதா நிலைநின்ற உணர்ச்சி மேலோர். அவர்கள் உணரவேண்டும் எனும் உணர்வால் உணராமல், மாபெரும் தியான மயம் ஆயினர். அங்ஙன் ஆனபோழ்து, அவர்கட்குள் பேரொளி மயமாகப் பெருமான் பிரகாசித்தலின், 'உன்னாமல் உன்னுகின்ற ஒளியாம் தேவே' என்றார். எங்ஙனம் சொரூபம் இருக்கும் எனும் வினா எழில், அது, 'கேளாமல் கேட்கின்ற கேள்வி; காணாமல் காண்கின்ற காட்சி; அறியாமல் அறிகின்ற அறிவு; உன்னாமல் உன்னுகின்ற ஒளி' என அருமையாக அறிவித்த அற்புதமான பாடல் இது.

**"கேட்டாரும் அறியாதான், கேடொன் றில்லான்**
**கிளையிலான் கேளாதே எல்லாம் கேட்டான்**
**நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே**
**நாயினுக்குத் தவிசிட்டு, நாயி னேற்கே**
**காட்டா தனஎல்லாம் காட்டிப் பின்னும்**
**கேளாதன எல்லாம் கேட்பித் தென்னை**
**மீட்டேயும் பிறவாமல் காத்தாட் கொண்டான்**
**எம்பெருமான் செய்திட்ட வித்தை தானே"**

எனும் திருவாசகமும்,

**"ஓராதே! ஒன்றையும் உற்றுஉன்னாதே! நீ முந்திப்**
**பாராதே! பார்த் ததனைப் பார்"**

எனும் திருவருட் பயனும் இங்கு எண்ணத் தகும். (46)

**சொற்போதற் கரும்பெரிய மறைகள் நாடித்**
**தொடர்ந்து தொடர்ந் தயர்ந்திளைத்துத் துளங்கி ஏங்கிப்**
**பிற்போத விரைந்தன்பர் உளத்தே சென்ற**
**பெருங்கருணைப் பெருவாழ்வே பெயரா தென்றும்**
**தற்போத ஒழிவினிடை நிறைந்து பொங்கித்**
**ததும்பிவழிந் தோங்கியெல்லாந் தானே யாகிச்**
**சிற்போதத் தகம்புறமும் கோத்து நின்ற**
**சிவாநந்தப் பெருக்கேமெய்ச் செல்வத் தேவே.**

(ப-ரை.) சொல் போதற்கு அரும் பெரிய மறைகள் நாடி-(பிற) சொற்கள் புகமுடியாத மாபெரும் (நான்கு) மறைகள், (சிறப்பாகப் பலகாலம்) சிந்தித்து; தொடர்ந்து தொடர்ந்து அயர்ந்து இளைத்து துளங்கி ஏங்கி பின்போத-(பல காலம்) பின் தொடர்ந்து சோர்ந்து மெலிந்து மெய் சிலிர்த்து ஏக்கம் பெருகிப் புறமாக; விரைந்து அன்பர் உளத்தே சென்ற பெரும் கருணைப் பெருவாழ்வே-(அதே நேரத்தில்) மிகு வேகமாக அடியவர் சிந்தையில் குடிபுகுந்த பேரருளை யுடைய பெரு வாழ்வின் சொருபமே; என்றும் பெயராது தற்போத ஒழிவின் இடை-என்றும் நிலை பெயராமல் சீவபோதம் ஒழிந்த இடத்தில்; நிறைந்து பொங்கி ததும்பி வழிந்து ஓங்கி எல்லாம் தானே ஆகி-நிறைவாகிப் பொங்கித் துளும்பி வழிந்து பெருகி, (காணப்பெறும்) பொருள் யாவும் தானாகிக் கலந்து; சித் போதத்து அகம் புறமும் கோத்து நின்ற சிவாநந்தப் பெருக்கே-சிறந்த அருள்

ஞானத்தின் அகத்தும் புறத்தும் பின்னி யிருந்த சிவாநந்த வெள்ளமே; மெய் செல்வத் தேவே-மெய்ப் பொருளான தெய்வமே, (எ-று.)

(வி-ரை.) வியன் மிகுந்த சொற் பிரபஞ்சம் வேதம். அதனுள் வேறு சொல் ஒன்றை எவராலும் நுழைக்க இயலா. நுழைத்தால் மந்திர ஓசை கெடும்; சிறந்த பொருள் சிதைவுறும்; நுழைக்க முயன்றாரும் நொறுங்குவார். (வித்-ஞானம்) அந்த வித் எனும் பகுதிபடியாக விளைந்தது ஆதலின் அது, 'சொற் போதற்கு அரும் மறை' என்று சொல்லப் பெறும். மற்று, இறைவர்க்கு வேதமே கோவணம்; பாதுகை, முந்நூல் முதலிய யாவும் அதன் சொருபம்; ஆதலின், வேதப்புகழ் என்றும் விரயம் ஆனதில்லை. (சொல்-புகழ்மொழி.) இப்படிப் பொருள் கொள்ளவும் இடமுண்டு.

பலவாகி அம்மறைகள் பல்கின; அதிரகஸ்ய அனுபவங்கள் அவைகளில் அடங்கியுள. 'பெரிய மறைகள்' எனப் பேசப் பெறும் அவைகள், சொல்லிற்கும் பொருளிற்கும் அப்பாற்பட்ட அரிய சொருப லட்சணத்தை ஆய்ந்தன. ஆய்வின் எல்லைக்கு அது அடங்குவதாக இல்லை. அதன்பின் தூய நாதரூபமாகித் தொடர்ந்தன. பலகாலம் தொடர்ந்தும் எல்லை காண முடியாமல் எய்த்தன. இன்னும் முயல்வமெனத் தொடர்ந்து இளைத்தன. நாணின; முன்னேற நடுங்கின. மேலும் புறமாகித் தொடர்ந்து போய்க் கொண்டே இருக்கின்றன. இவைகளின் அவதியையும், சொரூபத்தின் ஆக்கத்தையும் உணர்ந்து, "பண்சுமந்த மறை நாடரும் பொருள்" என்று பாடுகின்றார் முனிவர் பரஞ்சோதியார்.

அதே நேரத்தில், அன்பால் உருகி அகம் குழைவார்தம் இன்ப நெஞ்சில் புகுந்து சிவம் இருக்கிறது.

துடிப்புடைய முனைப்பறிவிற்குத் தோன்றாமல், ஈரமான அன்புளத்தில் இருக்கும் இறை என்பது இங்குள குறிப்பு.

"எங்கே மெய் அன்பருளர் அங்கே நலம்தர எழுந்தருளும் வண்மைப் பதம்" என்னும் திருவடிப் புகழ்ச்சி இங்கு எண்ணத் தகும்.

**"மூலப் பழமறைக்கு முன்னேயும் காணலாம்**
**தேடியும் திரிந்தும் காண வல்லதோ? மன்றுள்**
**ஆடிபாதம் என்னெஞ்சுள் இருக்கவே"**

என்று நகைமுகம் காட்டுகிறார் நம் திருநாவுக்கரசர்.

வளரும் கருணை அளவிற்கு உரியது வாழ்வு. பெருங்கருணைப் பெருமான் வாழ்வு பெருவாழ்வு. இவ்வளவு செய்திகளையும், அருமையாக முதலிரண்டு அடிகள் அறிவிக்கின்றன.

மறப்பும் நினைப்பும் மாறி வரும். அறிவும் அறியாமையும் அணுகியுறும். இந்நிலையில் தன் சிறுமையை நினையாது, பொரு பொருத்து வரும் சிவபோதம்.

தருக்கும் இப்போதமே தற்போதம். அடியொடு இம் முனைப்பறிவு அழியும் நாளில், வித்தகச் சிதாகாயம் விளங்கும். கம்பீரமான தேவ கங்கைபோல். அவ்விண்ணில் இருந்து இன்ப வெள்ளம் கரை புரளும். அவ்வெள்ளம்,

அனைத்தையும் தன் மயமே ஆக்கும். மேலும் அது, தெளிந்த அருள் ஞானத்தின் அகத்தும் புறத்தும் கோத்துச் சிவாநந்தமாகிக் குலுங்கும்.

‘சிற்போதத்து அகம் புறமும் கோத்து நின்ற சிவாநந்தப் பெருக்கே’ என்று இவ்வளவு எளிமைப்பட எடுத்துரைக்க, வள்ளலார்க்கு நிகர் வள்ளலார்தான்.

**“தனக்கென ஓர் செயலற்றுத் தான் அதுவாய்” நிற்கில்**
**நாதன் அவன் உடலுயிராய் உண்டுறங்கி நடந்து,**
**நானாபோ கங்களையும் தானாகச் செய்து,**
**பேதமற நின்றிவனைத் தானாக்கி விடுவன்;**
**பெருகுசிவ போகமெனப் பேசுநெறி இதுவே”**

எனும் சீகாழித் தத்துவநாதர் குறிப்பு, இங்குச் சிந்திக்கத் தகும். ‘பெருங் கருணைப் பெருவாழ்வே! சிவாநந்தப் பெருக்கே! மெய்ச் செல்வத் தேவே’ எனும் விளிகள், அருமையினும் அருமையன. (47)

**பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்**
**புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்**
**கங்குகரை காணாத கடலே எங்கும்**
**கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்**
**தங்கநிழல் பரப்பிமயல் சோடை யெல்லாம்**
**தணிக்கின்ற தருவேபூந் தடமே ஞானச்**
**செங்குமுத மலரவரு மதியே எல்லாம்**
**செய்யவல்ல கடவுளே தேவ தேவே.**

(ப-ரை.) பொங்கு பல சமயம் எனும் நதிகள் எல்லாம் புகுந்து கலந்திட நிறைவாய் பொங்கி-எழுச்சியுறும் பல மதங்கள் என்கின்ற யாறுகள் அனைத்தும் புக்குக் கலக்கும் பொலிவு நிறைவொடு பொங்கி; ஓங்கும் கங்கு கரை காணாத கடலே-உயரும் வரம்பு எனும் கரை என்பதே இல்லாத (கருணைக்) கடலே; எங்கும் கண்ணாகக் காண்கின்ற கதியே. அகிலவுலகையும் கண்ணாகக் கொண்டு, (அனைத்தையும்) சாட்சி மாத்திரமாகக் காண்கின்ற அடைக்கல நிலயமே; அன்பர் தங்க நிழல் பரப்பி மயல் சோடை எல்லாம் தணிக்கின்ற தருவே-(தகுதியுடைய) பக்தர்கள் தங்குமாறு நிழலைப் பரப்பி, (தாங்கரிய) மையலாகிய தாபம் முழுதும் தணிவிக்கின்ற (கற்பகத்) தருவே; பூந்தடமே-தாமரை மயமான தடாகமே; ஞானச் செங்குமுதம் மலர வரும் மதியே-ஞானமாகிய செவ்வல்லி மலர உதிக்கும் (தண்ணிய) திங்களே; எல்லாம் செய்ய வல்ல கடவுளே-அனைத்தையும் (இயற்கையாக) ஆக்கவல்ல ஆண்டவனே; தேவ தேவே-தேவர்கட்கு எல்லாம் மகாதேவனே, (எ-று.)

(வி-ரை.) சமயம் என்பது, நன்றாகச் சமைந்தது எனும் பொருளது. பக்குவத்திற்குத் தக்கபடி யமைந்த சமயம் பல. ஒவ்வொன்றும் மேலேற உள்ள படிகள் போல்பவை. ஊன்றி அதை உணர்ந்தவர்கள், வாய்த்த சமய வழி நிற்பர். அங்கங்கு உள்ள அனுட்டானங்களில் ஆழ்வர். உரிய அப்புண்ணியத்தால் உயர்வர். அஃது இல்லாத வாய்வாத ஞானியர், கூர்த்த தம் அறிவால், தமக்கு அயலான சமயங்களைத் தாழ்த்தி யுரைப்பதே தொழிலாவார்.

**"ஒன்றதே பேரூர்; வழிஆறு அதற்குள**
**என்றது போல இருமுச் சமயமும்;**
**நன்றிது தீதிது என்று, உரையாளர்கள்**
**குன்று குரைத்தெழு நாயைஒத் தாரே"**

என்பது திருமந்திரம்.

**"கல்லிடைப் பிறந்து போந்து**
**கடலிடைக் கலந்த நீத்தம்,**
**எல்லையில் மறைகளாலும் இயம்பரும்**
**பொருளீ தென்னத்**
**தொல்லையில் ஒன்றே யாகித்,**
**துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்**
**பல்பெரும் சமயம் சொல்லும்**
**பொருளும்போல் பரந்த தன்றே"**

என்று கம்பர், பால காண்ட ஆற்றுப் படலத்தில், மலைகளில் பிறந்த நதிகள், பல பெயர்களுடன் பல வழிகளில் படர்ந்து பயன் தந்து, கடலில் இறுதியில் கலக்கும். கலந்தபின் அவைகளின் பெயர் கரந்துபடும்; அதுபோல் சமயங்கள் யாவும், எங்கெங்கேயோ தோன்றி, பல நாமம் படைத்து, பயிலும் அனுட்டானம் பல கூறி, உயிர்களை ஒருமுகமாக்கி, அவர்களொடு தாமும் தொடர்ந்து, கருணைக் கடலில் இரண்டறக் கலந்துவிடும் அனைத்தும் தன்னுள் ஐக்கியம் ஆகும் அளவு, உயர்ந்து பொங்கி ஓங்கிக் கங்கு கரையற்ற சொருபத்தை, 'கடலே' என விளித்த அருமை கருதற்கு உரியது, "ஆறு அனைத்தும் புகுங் கடல்போல், சமயகோடு அத்தனையும் தொடர்ந்து புகும் ஆதி நட்பே" என்று தாயுமானாரும் இவ்வுவமையை எண்ணியுளர்.

கடவுள் பெருமான் சொருபம், இல்லாத இடம் இல்லை; எங்கும் கண்ணன்; சிறந்த எங்கும் செவியன்; எப்பொருளிலும் இருந்து சாட்சி மாத்திரமாக எதையும் காணும் கேட்கும் எம்மானை, 'எங்கும் கண்ணாகக் காதியே' என விளித்தார். அப் பொருமானே 'கதி' என்பதை நினையும் பொழுதே நெஞ்சம் நெகிழும்.

**"காணும் கண்ணிற் கலந்த கண்ணே உனைச்**
**சேணும் பாரும் திரிபவர் காண்பரோ?**
**ஆணும் பெண்ணும் அதுஎனும் பான்மையும்**
**பூணும் கோலம் பொருந்தியுள் நிற்கவே"**

என்பது தாயுமானார் உபநிடதம்.

பாச பந்தம் காரணமாக, மாதேவனை ஆன்மா மறக்கிறது. அதன் பயனாக, கொடிய பிறவி வெயிலின் கொதிப்பேறுகிறது. அதன் பின் தன் தவறுகளை நினைத்து தளர்கிறது. சிவத்தை இடையறாது சிந்தித்து, அதன் மயமாகி அமைகிறது. அந்நிலையில் தாபம் தவிர்க்கும் தருவாகி, தருநிழலாகி, பூந்தடமாகி தண்ணருள் பாலிக்கிறது தாணு.

"கோடையிலே நடந்து இளைப்பாறக் கிடைத்த தருநிழலே!...........ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே" என்பது திருவருட்பாவின் ஒரு பகுதி. "பாசாடவிக்குளே செல்லாதவர்க்கு அருள் பழுத்தொழுகு தேவ தருவே" என்பது தாயுமானார் குரல். இந்த உண்மையை, 'தருவே! தடமே' என்பதில் பெற வைத்தார்.

பரிதி கண்டு பங்கயம் மலரும். அதுபோல் மதி உதயத்தில் குமுதம். மலரும். ஞான குமுதம் என்பது உருவகம். தண்ணொளி பரப்பும் தற்பரன், குளிர்மதி உருவில் குலவுகின்றான். அம்மதி உதயம் ஆம் பொழுது, ஞானம் மலரும் சாதகர்க்கு ஆகும் சாத்தியம் இந்நிலை. இந்த அனுபவிகள், தமிழ்நாட்டில் எங்குமுளர். வாழிய அப் பெருமக்கள் என்று, வாழ்த்துவது வாழ்விற்கான வழி.

எல்லாம் வல்ல சித்தன் என்பது, இறை திருநாமங்களுள் ஒன்று. அதற்கு ஏற்ப, 'எல்லாம் செய்யவல்ல கடவுளே" என்றார்.

**"ஓயல் நடவல் கடவல் ஓச்சல்**
**............செலுத்தல் ஒருபொருள்"**

என்பது பிங்கலந்தை, இதன்படி, உயிர்களின் இதய குகைதொறும் இருந்து, இச்சை கிரியை ஞானம் என்பவைகளை இயக்கிச் செலுத்தும் உள்ளமான பிரமத்தை, 'கடவுளே' எனும் விளியைக் கருதும் போது எல்லாம் மனம் கனிகிறதே!

**வான்காணா மறைகாணா மலரோன் காணான்**
**மால்காணான் உருத்திரனும் மதித்துக் காணான்**
**நான்காணா இடத்ததனைக் காண்பேம் என்று**
**நல்லோர்கள் நவில்கின்ற நலமே வேட்கை**
**மான்காணா உளக்கமல மலர்த்தா நின்ற**
**வான்சுடரே ஆநந்த மயமே ஈன்ற**
**ஆன்காணா இளங்கன்றாய் அலமந் தேங்கும்**
**அன்பர்தமைக் கலந்துகொளும் அமலத் தேவே.**

(ப-ரை.) வான் காணா -(தங்க மயமான) விண்ணுலகம் தரிசித்து அறியாத; மறை காணா-(கணக்கில்லாத) வேதங்கள் கண்டறியாத; மலரோன் காணான் -(பங்கய)மலரில் உள்ள பிரமதேவன் பார்த்தறியான்; மால் காணான் -(அடிதேடிய) திருமால் அறிந்திலன்; உருத்திரனும் மதித்து காணான் - உருத்திரனும் தன் மதிப்பால் தருக்கித் தரிசித்திலன்; நான் காணா இடத்து அதனை காண்பேம் என்று நல்லோர்கள் நவில்கின்ற நலமே-நான் எனும் முனைப்பு அறவே இல்லாத அந்த இடத்தில் உள்ள அப்பொருளை (திருவருள் துணையால் ஒருநாள்) தரிசிப்போம் என்று நலம் சிறந்த ஞானிகள் பாடுகின்ற நன்மை சொருபமே; வேட்கை மான் காணா உளக் கமலம் அலர்த்தா நின்ற வான் சுடரே -ஆசை மயமான பிரகிருதி மாயை இன்றுவரை அணுகி அறியாத உள்ளத் தாமரைகளை மலர்விக்கின்ற ஞான ஆகாய சூரியனே; ஆநந்த மயமே-இன்ப மயமான இருப்பே; ஈன்ற ஆன் காணா இளம் கன்றாய் அலமந்து ஏங்கும்-அண்மையில் தன்னை ஈன்ற தாயைக்காணா இளங் கன்றுபோல் மனம் குழம்பி மயங்கும்; அன்பர்தமை கலந்துகொளும் அமலத் தேவே-அன்பர்களை(உடல் பொருள் உயிர் மூன்றினும்) கலந்து தன்மயம் ஆக்கும் களங்கம் இல்லாத கடவுளே. (எ-று.)

(வி-ரை.) வான் -இடவாகு பெயராய், இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியன் முதலினோர் உளப்பட அனைவரையும் உணர்த்தியது. கணக்கற்ற போக சிந்தனை கண்ணை மறைத்தலின். அமரர் பரத்தை அறிந்திலர். ஆதலின், 'வான் காணா' எனப் பெற்றது. மாதவர்க்குப் பொருள் நுட்பம் மறைதலின், வேதம் மறை எனும் பெயரது. நாதரூபம் வேதம்; சிறந்த அந்நாத சீவன் சிவம். ஆக்கை உயிரை அறிந்திலது. அதுபோல் அத்தனை, மறைகள் அறிந்தில; "மாடுறு மறைகள் காணா மன்னும் அம்பலம்" என்பது கோயில் புராணம்.

உரிமையுடன் மறைகளை ஓதுபவன் பிரமன். அதனால் வேதா எனும் பெயருடன் விளங்குபவன். மறைகள் அறியா மாதேவனை, அம் மறைகளை ஓதுவோன் எங்ஙனம் அறிதல் இயலும்?

மால்-மயக்கம்; அதை யுடையவர் திருமால். மாயா தீதனை, மாலானார் அறிதல் இயலா. "ஆலாலம் உண்டவர், அண்ணா மலையார், தம் அன்பர்க்கு அன்றி, மாலானவர்க்கு இரங்கார் இங்ஙனே ஒரு வன்கண்ணரே" என்பது அருணைக் கலம்பகம்.

உயர்ந்த சிவவுரு ஆனவர் உருத்திரர்; அயன், படைக்க அறிந்தவன்; திருமால் ஆக்கவும், காக்கவும் தெரிந்தவர். முத்தொழிலும் வல்ல முதல்வன் யாம் என முனைத்தலின், 'உருத்திரனும் மதித்துக் காணான்' என்றார். தம் மதியை எண்ணித் தருக்கினமையின், அவர்க்கும் அமல சேவை ஆகவில்லை என்பது குறிப்பு. "மூவர்மற் றறிகிலர், யாவர் மற்றறிவார்?" என்பது, திருவாசகத் திருப்பள்ளி யெழுச்சி.

நான் என்பது அகங்காரம். அம் முனைப்பு அற்றவர்க்கே ஜோதிநில தரிசனம்; அது நான் காணா நல்லிடம். மேலான அந்த இடத்தில் உள்ளது மெய்ப்பொருள். 'வான் காணா இடத்து அதனை, மறை காணா இடத்து அதனை, மலரோன் காணா இடத்து அதனை, மால் காணா இடத்து அதனை, உருத்திரனும் மதித்துக் காணா இடத்து அதனை' என முடியும் கடைநிலை விளக்கு இது. (அதனை-அப்பொருளை.)

**"அன்போடு உருகி அகங்குழைவார்க்கு அன்றி**
**என்பொன் மணியினை எய்த ஒண்ணாதே"**

**"ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை;**
**ஈரம் உடையவர் காண்பார் இணையடி"**

என்று அருள்மூலம் தெரிந்த திருமூலர், அன்பர்கள் சிறப்பை அறிவித்துளர்.

நலம் சிறந்த அம் மேலோரை, வள்ளலார் 'நல்லோர்' என்கிறார். "கைவிடமாட்டான்" பெருமான் என்னும் அழுந்திய நம்பிக்கையால், பரம ரகசிய வெளியில் உள்ள பரம் பொருளை, எப்படியும் தரிசிப்போம் என்று, அப் பக்த சிகாமணிகள் பாடுகின்ற பரமே என்பார். 'நல்லோர்கள் நவில்கின்ற நலமே' என்றார். "பாடுகின்ற பனுவலோர்கள் நாடுகின்ற" நலம் என்பதை, உன்னுந்தோறும்

உள்ளம் மகிழ்ந்து துள்ளும். நல்லவர்கள் அன்பர்கள்; அவர்கள் நவில்கின்ற நலம் சிவம். அட்டா! என்ன அருமையான அறிவிப்பு இது.

சாத்துவிகம், இராசசம், தாமதம் எனும் முக்குணங்களையும், குணம் என்று ஒன்றாகக் குறிப்பிடுவது உண்டு. ஊர்த்துவ மாயை, அதோ மாயை எனக் கூறப்படுதலின், மாயை இரண்டு என்பர்; சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என அவைகளை மூன்றாக எண்ணுவதும் உண்டு. ஆயினும் அவைகளை மாயை என ஒன்றாக ஓதுதல் உண்டு. அவ் விதிப்படி, மான் என்பது, மூலப் பிரகிருதியை உணர்த்தும் ஆயினும், அச் சொல் இங்கு மும்மாயைகளையும் எண்ண வைக்கிறது என்பதும் ஒரு வகை. (மூலப் பிரகிருதியில், மும்மலர் எனும் சகலர் உளர்; அசுத்த மாயையில், இருமலர் என்னும் பிரளயாகலர் இருக்கின்றனர். சுத்த மாயையில், ஒரு மலர் எனும் விஞ்ஞானகலர் உளர்.) பிரகிருதி மாயை பிரவேசித் தறியாத இதய புண்டரீகம் என்பது, தகரா காசம் எனும் பெயரது. கூம்பி யிருந்த அத் தாமைரையை வரவர மலர்விக்கும் ஞான சூரியனே, 'வான் சுடரே' எனும் பொழுது, அவ்வோசை செவியுள் பாய்ந்து, சிந்தையிற் புகுந்து, நம் உள்ளக் கமலம் மலர்வது போன்ற உணர்வு பெரிதும் உறுகிறதே! (ஓம் ஓம்.)

**"ஆநந்தமே குகப் பிரமம்" என்றும்,**

"ஆநந்தம் ஆநந்தம் ஆநந்தம் ஆநந்தம் ஆநந்தம் எவ்வுறுப்பும் ஆநந்தம்" என்றும் கூறும் அருள் நூற்களின் அனுபவத்தை, 'ஆநந்த மயமே' என்னும் விளியில் சுருக்கமாக விவரித்தார்.

"சயசய எனும் தொண்டர் இதயமலர் மேவிய சடாமகுடன்" என்பது திருவடிப் புகழ்ச்சி.

**"ஒரு கணம் இருப்பன், தெய்வ உருவினில் ஈசன்தான்; மற்று**
**இருகணம், செங்கோல் ஓச்சும் இறையவர் பாலிருப்பன்;**
**அருமறை யவர்குழாத்துள், அம்புவீழ் அளவு இருப்பன்;**
**துரியயோ கியர் உளத்தில் தூங்குவன் இருந்து எப்போதும்"**

என்னும் பிறர் சமிக்ஞையும் இங்கு எண்ணத் தகும்.

உரியவன் பசுவை ஓட்டிச் சென்றான்; நீராட்டினான்; புல் வெளியில் மேயுமாறு போக்கினான். தன் தாயை நினைக்கும் இளங்கன்று, பார்வை செல்லும் இடந்தோறும் பார்க்கிறது. குமைகிறது; அதன் உள்ளம் குழம்புகிறது. பெருமூச்சுப் பிறக்க, கண்களில் நீர் கலுழ, அம்மா அம்மா! என்று அழைக்கிறது.

இதே நிலையில் அன்பர்கள் மனம், தாயிற் சிறந்த தயாபரனைத் தரிசிக்கக் குதிக்கிறது; அறிவு குமைகிறது. கொதிக்கிறது உடல். கண்ணீர் வெள்ளம் கரைபுரள்கின்றது.

"பாவியேன் இனியேன் செய்வேன் பரமனே! பணிந்துன் பாதம் சேவியேன்! சிவ சிவா என்று தேம்பி, ஆவியே நிறைய வந்த அமுதமே என்னேன்; அந்தோ! சாவிபோம் சமயத்து ஆழ்ந்து சகத்திடை தவிக்கின்றேனே" என்று வாயாரப் பாடி வழுத்துகின்றனர். அது பொறாத ஜோதி மயமான சொருப இறைவா! அவர்களது

ஆக்கையுள் புகுந்தாய்; ஆன்மாவிற் புணர்ந்தாய்; சீவன் சிவன் எனும் இருநிலையின்றி, ஒன்றித்து இருந்தாய் என்பார், ‘கலந்து கொளும் அமலத் தேவே’ என்றார்.

**“தாய்தன்னை அறியாத கன்றில்லை; தன்கன்றை**
**ஆயும் அறியும்; உலகின் தாய் ஆகின் ஐயா!**
**நீயறிதி எப்பொருளும்; அவையுன்னை நிலை யறியா;**
**மாயம் இது என்கொல்லோ? வாராதே வரவல்லாய்”**

எனும் கம்பர் இங்கு நாம் கருதற்குரியவர். (49)

**மெய்ஞ்ஞான விருப்பத்தில் ஏறிக் கேள்வி**
**மிதேறித் தெளிந்திச்சை விடுதல் ஏறி**
**அஞ்ஞானம் அற்றபடி ஏறி உண்மை**
**அறிந்தபடி நிலைஏறி அதுநான் என்னும்**
**கைஞ்ஞானம் கழன்றேறி மற்ற எல்லாம்**
**கடந்தேறி மவுனஇயல் கதியில் ஏறி**
**எஞ்ஞானம் அறத்தெளிந்தோர் கண்டும் காணேம்**
**என்கின்ற அநுபவமே இன்பத் தேவே.**

(ப-ரை.) மெய்ஞ்ஞான விருப்பத்தில் ஏறி-அருள் ஞானம் பெறுவதில் ஆர்வம் பெரிதும் அதிகரித்து; கேள்வி மீது ஏறி-(அதைப் பெறுதற்குரிய) சிரவணத்திலேயே பெரிதும் சிந்தனை செலுத்தி; தெளிந்து-(கற்றல் கேட்டல் சிந்தித்தல் வழியே) தெளிவெய்தி; இச்சை விடுதல் ஏறி-அபிமானத்தை (ஒவ்வொன்றாக) விடும் அகத்துறவு சிறிது சிறிதாக வளர்ந்து; அஞ்ஞானம் அற்றபடி ஏறி-(ஒவ்வொன்றினும் உள்ள) அறியாமை அகன்ற (முதன்மைப்) படிக்கிரமத்தில் முன்னேறி; உண்மை அறிந்தபடி நிலை ஏறி -(இயல்பாக) உள்ள தன்மையை (சாட்சி மாத்திரமாக) அறிந்தபடி; (விட்டும் தொட்டும் இல்லாமல் உரிய) அந்த சிந்தனையில் உயர்ந்து; அது நான் என்னும் கை ஞானம் கழன்று ஏறி-அப் பிரமமே நான் எனும் போலி ஞானம் பொய்த்துப் போக, (உண்மையாகவே அந்த) அனுபவநிலை மேலாகி; மற்ற எல்லாம் கடந்து ஏறி-(பற்றியிருந்த) பிற பற்றனைத்தும் பற்றற வளர்ந்து; மவுன இயல் கதியில் ஏறி-மவுனம் ஆகிய இயல்பான நடையில் மென் மேலும் சென்று; எஞ்ஞானம் அற தெளிந்தோர் கண்டும் காணேம் என்கின்ற அனுபவமே-(சாஸ்திர ஞானம், தத்துவ ஆய்வு முதலிய) எந்த ஞானமும் அடியோடு அழிய, (உயர்ந்து) தெளிந்த உணர்வினர் அனுபவ பூர்வமாக அறிந்தும், பூரண அனுபவம் இன்னும் புரிந்தது இல்லையே என்று புலம்ப இருந்த சொருப அனுபவமே; இன்பத் தேவே. ஆநந்த ஜோதியான ஆண்டவனே, (எ-று.)

(வி-ரை.) “பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் புலையுடம்பும் உடையது பிறவி. இவைகளால், தொல்லைகளே வாழ்க்கையில் தொடர்கின்றன. அல்லல் அகல, உயர்ந்தோரை அடுத்தால் அன்றி உய்ய வழி இல்லை. முன்னைய புண்ணியத்தால், இந்நினைவு மூளும்.

இயல்பாக இதுவரை யிருந்த அறிவு இருட்டறிவு, குருட்டறிவு, முரட்டறிவு, புரட்டறிவு. பொய்யாகும் இவ்வறிவு போய்த் தொலைய, வித்தக மெய்யறிவில் வேட்கை எழும். இங்ஙனம், ‘மெய்ஞ்ஞான விருப்பத்தில் ஏறி; இதன் வழி, அருள்

நூற்களை ஓதும் விழைவு உளதாகும். கற்பதுடன், வித்தகர்கள் இடத்தில் வினவி யறியும் விசாரணையில் விருப்பம் விளையும். இதன் மூலம், ‘கேள்வி மீதேறி’ (கேள்விக்குப் பகுதி-கேள்; கேண்மையோடு கேட்டல் கேள்வி எனப் பெறும்.)

பொழுது போக்குப் பெயரால் கற்றதைக் கேட்டதைப் புறமொதுக்காமல், சிந்தித்தல் என்பது சித்திக்க வேண்டும். சிறக்கப் பெருகும் இச்சிந்தனை, வியன்மிகு தெளிவை விளைவிக்கும். அதனொடு, பற்றிய பற்றனைத்தும் பாழ் என்று, ஒவ்வொன்றினும் இருந்த அபிமானம் முறையே ஒழியும்.

**‘தெளிந்து இச்சை விடுதல் ஏறி’**

இந்த வரிசையில் செய்யும் செயலெல்லாம், நினைக்கும் நினைவெல்லாம், பேசும் பேச்செல்லாம், அறியாமைக்குப் புறமான அறிவு மயம் ஆகும். ‘விஞ்ஞானம் அற்றபடி ஏறி’.

எங்கும் ஆனது இயல்பான மெய்ம்மை, உள்ளங் கொண்டு அதை உணர்பொழுது, மேலான அது உள்ளத்தில் மேவும். உள் மெய் உண்மை யென்று திரியும். உள்ளது உள்ளபடியே உணரும் அந்த உண்மையில் உணர்வு ஒன்றும். ‘உண்மை யறிந்தபடி நிலையேறி’. (படிநிலை-மேல் நிலைக்கு ஏற அமைந்த படிக்கிரமம்.) அவசரப் படாமல் சாதகர்கள், முன்னேறச் சாந்தமாக முயல்வர் என்பது குறிப்பு. கற்றதால், கேட்டதால், பலித்த ஞானம் பாசம். வழிமுறை உணர்த்தும் அவைகள், கைகாட்டி மரம் போல்வன. காட்டும் அவ்வழியில் சென்று எப்பொருளிலும் இச்சையற்று, அறியாமை யகன்று, உள்ளதன் சொருபத்தை உணர்ந்தபின், சிவோகம் பாவனையில் சிந்தனை செல்லும். (சிவம்+அஹம்-சிவோஹம்; சிவம் நான் என்பது பொருள்.) தன்னை மறக்க, யாவற்றையும் துறக்க, வியன்மிகும் இப்பாவனை வேண்டப் பெறும். பாவனை முதிர்ந்து பழுத்தால் பதி ஞானம்; இதை வெறும் சொல்லளவாகச் சொல்லிக் கொண்டிருப்பது பசு ஞானம்; இதை வள்ளலார், ‘அது நான் என்னும் கைஞ்ஞானம்’ என்று இகழ்ச்சியாகச் சிரிக்கிறார். இது எள்ளல் நகை யெனப்பெறும். (கை ஞானம்-இகழத் தக்க அறிவு; கைத்தல்-அருவருத்தல்.)

**“நாம்பிரமம், நமையன்றி ஆம்பிரமம் வேறில்லை,**
**நன்மை தீமைகளும் இல்லை,**
**நவில்கின்ற வாகியாந் தரமிரண் டினுமொன்ற**
**நடுநின்ற தென்று, வீணாள்**
**போம்பிரம நீதிகேட் போர்பிரமை யாகவே**
**போதிப்பர், சாதிப்பர், தாம்**
**புன்மைநெறி கைவிடார், தம்பிரமம் வினைஒன்று**
**போந்திடிற் போக விடுவார்,**
**சாம்பிரமம் ஆமிவர்கள் தாம்பிரமம் எனுமறிவு**
**தாம்புபாம் பெனுமறிவு காண்”**

என்பது தெய்வமணி மாலை.

“தவமொன்றும் இல்லை, ஒரு சாதனையும் இல்லை, சிவம் ஒன்றே உள்ளதெனச் சிந்தை செய்தால் போதுமடா” என்பது, ஆன்றோர்கள் அருளொடு

செய்த அறிவிப்பு. சிவபோக பாக்கியத்திற்குரிய அந்த பாவனையில் அழுந்தாமல் நான் பிரமம் என்று வாய்ப்பறை முழக்கும் அந்தக் கைஞ்ஞானம் அகன்று முன்னேறும் நிலையை, 'கழன்று ஏறி' என்னும் அருமையான சொற்களால் அறிவித்தபடி.

அது நான் என்று வாய் திறந்தால், வாதம் வளரும். "அது என்றால் எது என்று வந்து அடுக்கும் சங்கை". சுட்டியறிய இயலா ஒன்றை, சொல்லால் சுட்டுவது பிழை. கல்லுப்பை அப்பில் இட்டால் கரைந்து விடும். அதுபோல் சிவனும் சீவனும் உணர்வால் ஒன்றாதல் பதிஞானம். இந்தச் சாதனையில், பழைய வாசனைகள் இடையிடை எழுந்து பல்லிளிக்கும். அதை, 'மற்ற எல்லாம் கடந்தேறி' என்றார்.

**"சொல்லால் முழக்கிலோ சுகமில்லை,-**
**மௌனியாய்ச் சும்மா இருக்க அருள்வாய்;**
**சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்**
**ஜோதியே! சுகவாரியே!"**

எனும் பிரார்த்தனை, பரம உணர்வு முழுதும் பரவும். இதனை, 'மௌன இயல் கதியில் ஏறி' என்பதில் பெறவைத்தார். பாச ஞானம், பசு ஞானம், அகன்ற அவர்கள், உள்முகம் ஆம்பொழுது சொருபத்தில் உறவு; பகிர்முகம் ஆம்பொழுது, ஆநந்தமான அந்நிலை யகலும். பதிஞானப் பயில்வினர், அவ்வமயம் அலறுவர்; அழுவர்; பயந்து துடித்துப் பதறுவர்.

'எஞ்ஞானம் அறத் தெளிந்தோர், (கண்டும் காணேம் என்கின்ற அனுபவமே' எனும் குறிப்பு, என்றும் மறக்க முடியாத ஒன்று. இக் கதறலை, அருளாளர் பாடல்கள் அனைத்தினும் அறிந்துளம். (அநுபவம்-உடனாகும் சொருப உறவுறுதல்.) ஆநந்தமே அதன் மயம் ஆதலை, 'இன்பத் தேவே' என்று வியந்து மகிழ்ந்து விளித்தபடி. (50)

**பற்றறியா முத்தர்தமை யெல்லாம் வாழைப்**
**பழம்போல விழுங்குகின்ற பரமே மாசு**
**பெற்றறியாப் பெரும்பதமே பதத்தைக் காட்டும்**
**பெருமானே ஆநந்தப் பேற்றின் வாழ்வே**
**உற்றறியா தின்னுமின்னும் மறைக ளெல்லாம்**
**ஓலமிட்டுத் தேடநின்ற ஒன்றே ஒன்றும்**
**கற்றறியாப் பேதையேன் தனக்கும் இன்பம்**
**கனிந்தளித்த அருட்கடலே கருணைத் தேவே.**

(ப-ரை.) பற்று அறியா முத்தர்தமை எல்லாம் வாழைப்பழம்போல விழுங்குகின்ற பரமே-பந்தம் (என்பது இன்னது என்று) அறியாத சீவன் முத்தர்கள் அனைவரையும், வாழைப்பழம்போல் (எளிதாகத் தன்னுள்) ஐக்கியப் படுத்திக் கொள்கின்ற மேதகையே; மாசு பெற்று அறியா பெரும் பதமே-களங்கம் கண்டறியாத (தத் எனும்) பெருமையை யுடைய பதத்தின் சொரூபமே; பதத்தைக் காட்டும் பெருமானே-(அத்தத்) பதத்தை(த் துவம் எனக்) காட்டுகின்ற பெரியோனே; ஆநந்தப் பேற்றின் வாழ்வே-(அஸி எனும்) இன்பப் பயனின் வாழ்வாக இருப்பவனே; உற்று அறியாது இன்னும் இன்னும் மறைகள் எல்லாம் ஓலம் இட்டுத் தேட நின்ற

ஒன்றே-அனைத்து வேதகங்களும் அணுகி அளவளாவ அறியாமல், இன்றுவரை (முறையோ முறையோ என்று) அபயக் குரல் கொடுத்துத் தேட, (அவைகட்கு அகப்படாது) இருந்த ஏகனே; ஒன்றும் கற்று அறியாப் பேதையேன் தனக்கும் இன்பம் கனிந்து அளித்த அருள் கடலே-ஒன்றையும் ஓதி யறியாத அறிவிலியான எனக்கும், பேரின்பத்தைத் திருவுளம் கனிந்து அருளிய கருணைக் கடலே; கருணைத் தேவே-அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனே, (எ-று.)

**(வி-ரை.) "பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்**
**பிறவார் உறுவது பெரும்பே றின்பம்**
**பற்றின் வருவது முன்னது; பின்னது**
**அற்றோர் உறுவது அறிக"**

என்பர் ஆன்றோர். இதன்படி, வீணான பந்தமே பிறவிக்கு வித்து. அந்த வேட்கை அணு அளவும் இல்லாதார் முத்தர் (முத்தர்-கட்டறுந்தவர்.)

ஒருமலர், இருமலர், மும்மலர் என உயிர்களில் மூவகையினர் உளர். இவர்களில் பிராகிருதர், வைநயிகர், சாமுசித்தர், ஜீவன் முத்தர் எனும் நால்வகையினரை இன்றும் அறவோர் எண்ணிகின்றனர்.

(1) பிராகிருதர்-(பிரகிருதி எனும்) உலகியல்களிலேயே உழன்று, வீடுபேற்று நினைவே இன்றி, அறியாமை மயமாகித் துன்பச் சேற்றில் தோய்பவர்.

(2) வைநயிகர்-விநயம் மிகுந்து, அருள் நூற்களை அவாவி ஓதி, முத்திப் பேற்றில் மோகம் கொள்பவர்.

(3) சாமுசித்தர்-இது, ஸம்சித்தம் எனும் வடமொழித் தத்திதாந்தப் பெயர்; இவர்கள் முற்பிறப்பில் சரியை கிரியை யோகம் ஆதிய தவத்தை முடித்தவர்கள். மறுபிறப்பில் ஓதிய அவ்வுணர்வுடன் உதித்து, வரத இறைவனை வழிபடுபவர்.

(4) சீவன் முத்தர்-இயல்பாகவே விடுதலை உணர்வுடன் விளங்குபவர். இந்த முத்தர்களை, இறைவன் எளிதாகத் தன்னில் இயைவித்துக் கொள்கிறான். பரமனுக்கு இவர்கள் வாழைப்பழம்; அருமையான எடுத்துக் காட்டு இது.

**"யானாகி என்னை விழுங்கி, வெறும்**
**தானாய் நிலை நின்றது தற்பரமே"**

என்பது அருணை முனிவர் அனுபூதி.

**"வாதவூ ராளிதனை வான்கருணை யால்விழுங்கும்**
**போதவூர் ஏறே! நின் பொன்னடியும் காண்பேனோ"**

என்பது தாயுமானார் பாடல்.

மகா வாக்கியம் நான்கு; அவைகளுள் ஒன்று தத்துவ மசி. (தத்-அது; துவம்-நீ; அசி-ஆகிறாய் என்பது இதன் பொருள்.) அது என்பது, (அமல விமல நிமலம் எனும் பெயருடையது.) களங்கம் என்பதே அணுவளவும் காணாதது. இச் செய்தி,

'மாசு பெற்றறியாப் பெரும்பதம்' என்று சிறப்பிக்கப் பெற்றது. அஃது ஒன்றே பெரும் பதம்; மற்றவையாவும் சிறுமையன; மல சம்பந்தம் உடையன என்பது குறிப்பு. அப் பெரும்பதம், குருவாம் திருமேனி கொள்ளும்; தத்துவம் (அது நீ) என்று அறிவிக்கும். அந்த அருமையை, 'பதத்தைக் காட்டும் பெருமானே' என்பதில் பெறவைத்தார். அது நீ என்று அறிந்தபின், அதனில் ஆழ்ந்து, தத்-துவம் எனவுள இரண்டும் தோன்றாது அசி ஆகும். அசி-ஆநந்த மயம் ஆதல். இந்நுட்பத்தை, 'ஆநந்தப் பேற்றின் வாழ்வே' என்பதில் குறித்தார். பதமே(சாயுஜ்ய) பதம் ஆனவனே என்றும், பதத்தைக் காட்டும் பெருமானே-கருணையோடு அப்பேற்றைத் தக்கார்க்குக் காட்டுபவனே எனப் பொருள் கோடலும் ஒருவகை.

ஆதியான வேதங்கள், அநாதியான பெருமானை அணுக முயன்றன; பலகாலம் தேடியும் பயனில்லை. சொற்பதம் கடந்த ஜோதியான பரனை, சொற்பிரபஞ்சம் அறிய இயலுமா? மேலும் மேலும் முயன்றும் அம்மான் அகப்படாமையின், சிவதா! அவிதா! பிராமண்யம்! என்று ஓலிட்டு அழைத்தபடியே இருக்கின்றன. எங்கும் தேடியும் எய்தவில்லையேல், எம் கதி யாது என்று, நம் மனம் இப்பகுதியில் ஏங்கி நிற்கின்றது அல்லவா!

பதிஞான முத்தர்கள் அடைகின்ற பயன்; பாச ஞான மறைகள் அடைகின்ற தோல்வி; இவைகளை நூற்களின் அளவாகக் கற்பது எளிது; அனுட்டானத்திற் கொணராதவர் பேதைகள் என்று எள்ளப் பெறுவர். ஊன்றி இதனை உணர் பொழுது எல்லாம் உள்ளம் பெரிதும் அதிர்கிறதே! தன் சிறுமையை நினைந்து கண்ணீர் வடிப்பாரைக் கண்டு கருணை காட்டுவன் எம்பிரான். அதனை, 'பேதையேன் தனக்கும் இன்பம் இன்பம் கனிந்தளித்த அருட்கடலே' என்பதில் அறிந்து மனம் ஆறுதல் பெறுகிறது. அகதியாகி எச்சார்பும் அற்றவர்க்கே அருட்கடலான பெருமான். திருவுளம் கனிந்து இன்பம் தருகின்றான். ஆம், அவனே அருள் கனிந்த அத்தன் என்பது, இறுதியில் உள்ள குறிப்பு. (51)

**மெய்யுணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த**
**வெளியாக்கிக் கலந்துகொண்ட வெளியே முற்றும்**
**பொய்யுணர்ந்த எமைப்போல்வார் தமக்கும் இன்பம்**
**புரிந்தருளும் கருணைவெள்ளப் பொற்பே அன்பர்**
**கையுறைந்து வளர்நெல்லிக் கனியே உள்ளம்**
**கரைந்துகரைந் துருகஅவர் கருத்தி னூடே**
**உய்யுநெறி ஒளிகாட்டி வெளியும் உள்ளும்**
**ஓங்குகின்ற சுயஞ்சுடரே உண்மைத் தேவே.**

(ப-ரை.) மெய் உணர்ந்த வாதவூர் மலையை சுத்த வெளி ஆக்கி கலந்து கொண்டே வெளியே-(உள் பொருளான) மெய்ப்பொருளை உணர்ந்த திருவாதவூர் (அடிகள் எனும்) மலையை வித்தக ஞான விண்ணாக்கி, (ஊனிற் புகுந்து உணர்வில்) கலந்து, (பரிவொடு தன்மயமாக்கிக்) கொண்ட (பர) வெளியே; முற்றும் பொய் உணர்ந்த எம்போல்வார் தமக்கும் இன்பம் புரிந்தருளும் கருணை வெள்ளப் பொலிவே-முழுதும் உள்ளீடு இல்லாத உலகியல் ஒன்றையே உணர்ந்து இருந்த எம்போன்றவர்க்கும் (தரத்திற்கு ஒத்த) இன்பம் தந்தருளும் (புனித) அருள் வெள்ளப் பொலிவே; அன்பர் கையுறைந்து வளர் நெல்லிக் கனியே-அன்பர்னூஉடைய (உள்ளங்)கை நெல்லிக் கனிபோல் (கண்கட்குப் புறத்திலும்) காட்சியாகின்றவனே; அவர் கருத்தின் ஊடே உய்யும் நெறி ஒளி காட்டி-அவர்களது

உள்ளத்துள் (ஆணவ இருள் அகன்று) உய்யும் வழியை உணருமாறு, (தனியான) ஒளியைத் தரிசிக்கச் செய்து; வெளியும் உள்ளும் ஓங்குகின்ற சுயம் சுடரே-அகத்தும் புறத்தும் (எழுந்து நிமிர்கின்ற) பெரும் வியாபக இயற்கைப் பேரொளியே; உண்மைத் தேவே-தேரும் ஜோதித் தெய்வமே, (எ-று.)

(வி-ரை.) வாயுதேவன் வழிபட்டு, வரம்பெற்ற பதி திருவாதவூர். (வாதம் - காற்றுக் கடவுளின் பல பெயர்களுள் ஒன்று.) அத் தலத்தில் அவதரித்து, அதன் பெயரைத் தம்மது ஆக்கியவர் திருவாதவூர் அடிகள். அவர் பாண்டி நாட்டு அமைச்சர் ஆயினார். புறத்தில் உத்தியோகப் பொலிவு. சித்தத்தில் சதா சிவசிந்தனை.

பரிபாக காலம் பார்த்த பரன், அவரைத் திருப்பெருந்துறைக்கு அழைத்தான். குருந்த மரத்தடியில் குருவாயிருந்தான். வாதவூரர் வந்தார். தரிசித்தார். எம்மான் அருள் நோக்கால் ஈர்த்தான். வார்த்தையால் மேலும் வயப்படுத்தினான. வரத திருக்கரத்தை அவர் சிரமேல் வைத்தான். திகழும் இந்த தீட்சைகளால், மாதவ வாதவூரர் தம்மை மறந்தார். உத்தியோகத்தை உதறினார். உலகைத் துறந்தார். சிறந்த தலங்களைச் சேவித்தார். பரமன் திருமுன் திருவாசகத்தைப் பாடினார். அவர் காலத்தில் நிகழ்ந்த அருளாடல்கள் பல.

மாணிக்கமான அவர் வாசகத்தையும், திருவருட் குறிப்பான திருக்கோவையையும், எம்மான் ஏடும் எழுத்தாணியுமாக இருந்து எழுதி, தில்லையில் இருந்த உத்தம மூவாயிரவரிடம் ஒப்படைத்தான். புனித கோவைக்குப் பொருள் விளங்கவில்லை. வேதியர்கள், மணிவாசகரிடம் வினவினர்.

அந்தணர் பின்வர, வாதவூரர் நம்பன் ஆலயம் நோக்கி நடந்தார். நிமலன் சந்நிதியில் நின்றார். சொல்லப்படுவது சொல்; அனுபவப் படுவது பொருள் என்றார். அவ்வளவில் எவரும் உணரும் இன்ப அருளொளி எழுந்தது. அருட் கண்ணாளர்! வேதப் பண்ணாளா! எனையும் பொருளா யெண்ணினையோ என்று ஏத்தியபடியே, கண்முன் எழுந்த ஒளியிற் கலந்தார். வியந்த அனைவரும் விழுந்து வணங்கினர்.

இடையிடை வள்ளலார், மலை-இயல்பு இந்த சம்பவத்தை நினைந்து நெகிழ்பவர். அதனால், 'மெய்யுணர்ந்த வாதவூர் மலையை, சுத்த வெளியாக்கிக் கலந்த வெளியே' என்று இங்கேயும் எண்ணினார். அசையாமை, வான் நோக்கி வளர்தல், தரணியை வேர்களால் தாங்கல், ஊற்றுச் சுனைகள் உடைமை, வாழ்விக்கும் மூலிகைகள் வளர்தல், அருந்தவச் சாதகர்கட்கு இடம் தருதல் முதலியன மலைகளின் இயல்பு. அதுபோல், உள்ளம் சலனம் உறாமை, மேல் நோக்கு, உயிர்கள் உய்ய உபதேசித்தல், அற்புத சித்திகள் அமைதல், வாழுமாறு அடியார்கட்கு வழிகாட்டல் ஆதிய உடைய அடிகளை, 'வாதவூர் மலை' என்று உருவகித்தார்.

மலை விழுங்கி மாதேவன் என்றொரு பழமொழி இந்நாட்டில் உண்டு. அதற்கு ஏற்ப, மலையா யிருந்தாரை சுத்த வெளியாக்கி மறைத்தான். அவரில் கலந்து, இயற்கைப் பெரு வெளியாக இருக்கின்றான் எம்மான் எனும் அற்புதச் செய்தியை, எண்ணும் போதெல்லாம் இதயம் நெகிழும்.

**"வாரா வழியருளி, வந்தெனக்கு மாறின்றி,**
**ஆரா அமுதாய் அமைந்தன்றே-சீரார்**
**திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய**
**ஒருத்தன் பெருக்கும் ஒளி"**

என்பது திருவாசகம்.

இதுவரை, மெய்யுணர்ந்த மேலோர் அனுபவம். எமக்கோ மெய்ப்பொருளில் நாட்டம்; பொய்ப் பொருளில் கூட்டம்; சாதனையில் ஓட்டம். அட பாவமே! தவிர்க்க முடியா இந் நிலையில் தடுமாறுகின்றோம். உரிய எம் நிலையை உணர்ந்தாய்; இரக்கம் கொண்டாய்; தரத்திற்குத் தக்கபடி, பரம இன்பத்தைப் பாலிக்கின்றாய்; புனித அந்த அருளொடு பொலிபவனே என்பார், 'பொய்யுணர்ந்த எம்போல்வார் தமக்கும் இன்பம் புரிந்தருளும் கருணை வெள்ளப் பொலிவே' என்றார்.

உள்ளங்கை நெல்லிக் கனியை, கனிவொடு எப்போதும் காணலாம். கருதலாம். உண்ணலாம். உய்யலாம். இது எளிய செயல். அதுபோல் அகமுகமான அன்பர்கட்கு, புறத்திலும் அகத்திலும் புலனாகி, அருளைப் புரிபவனே என்பார், 'அன்பர் கையுறைந்து வளர் நெல்லிக் கனியே' என்றார்.

**"கையில் ஆமல கக்கனி போன்றஎன் ஐயனே"**

என்பது திருவாசகம்.

**"மையலாய் மறவாத மாந்தர்க் கொல்லாம்**
**கையில் ஆமல கக்கனி ஒக்குமே"**

என்பது தேவாரம்.

உள்ளம் புகுந்தான். ஒளியா யிருந்தான். அன்பர்கட்கு உய்யும் நெறியை உணர்த்திய படியே இருக்கின்றான். உணர்வார் உள்ளம் எப்போதும் உருகும். கண்ணீர் வெள்ளமாய் அவ்வூற்று சதா கலுழ்ந்த படியே இருக்கும்.

**"யானே, பொய் என்னெஞ்சும் பொய்**
**என் அன்பும் பொய்; ஆனால் வினையேன்**
**அழுதால் உன்னைப் பெறலாமே"**

என்பது திருவாசகம். இங்கு

**"அன்பு சிவமாவது யாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே"**

என்று தெய்வ அனுபவம் கூறுவர் திருமூலர்.

இவைகளை உணர்ந்து, 'உள்ளம் கரைந்து கரைந்து உருக, அவர் கருத்தின் ஊடே உய்யும் நெறி ஒளிகாட்டி, வெளியும் உள்ளும் ஓங்குகின்ற சுயஞ்சுடரே' என விநயம் பெருக விளித்தார்.

"காலும் தீபம் மினல் பந்தம் கடிகூர் விரிசு கதிர்மதி போல் காட்டும் ஒளியாய், இவை யாவும் கடந்தாங்கு அழிவில் பேரொளியாய்" எனவரும் சிதம்பர முனிவர் அனுபவம் இங்கு எண்ணத் தகும்.

இவ்வளவும் செய்யும் எம்மான், எல்லா வகையாலும் உள் பொருளான ஒளிமயன் ஆதலின், 'உண்மைத் தேவே' என்று வீரிட்டு விசும்பி விளித்தபடி.

**"ஒளிவந்தவா, பொய்மனத்து இருள்நீங்க, என்உள்ளவெள்ளம்**
**தெளிவந்தவா, வந்துதித்தவா, சிந்தியாதுஒரு**
**களிவந்தவா, அன்புகை வந்தவா, சடைசார் அமையத்து**
**எளிவந்தவா, நம்கமு வாணர்தம் இன்னருளே"**

எனும் திருவெண்காட்டடிகள் திருவாக்கு இங்கு எண்ணத்தகும். (52)

**ஒலிவடிவு நிறஞ்சுவைகள் நாற்றம் ஊற்றம்**
**உறுதொழில்கள் பயன்பலவே றுளவாய் எங்கும்**
**மலிவகையாய் எவ்வகையும் ஒன்றாய் ஒன்றும்**
**மாட்டாதாய் எல்லாமும் வல்ல தாகிச்**
**சலிவகையில் லாதமுதற் பொருளே எல்லாம்**
**தன்மயமாய் விளங்குகின்ற தனியே ஆண்பெண்**
**அலிவகையல் லாதவகை கடந்து நின்ற**
**அருட்சிவமே சிவபோகத் தமைந்த தேவே.**

(ப-ரை.) வடிவு-(உலகில் உள்ள) உருவங்கள்; ஒலி-(அவைகளில் இருந்து எழும்) ஒலிகள்; நிறம்-(வண்ணம் வண்ணமான) ஒளிகள்; சுவைகள்-(அறுவகையான) சுவைகள்; நாற்றம்-மணங்கள்; ஊற்றம்-(தொடுவதால்) உறுகின்ற உணர்ச்சிகள்; உறு தொழில்கள்-(தொடர்ந்து) விளையும் தொழில்கள்; பயன் பல வேறு உளவாய்-பல வேறுபட்ட பயன்களை உடையதாய்; எங்கும் மலி வகையாய்-எல்லா இடங்களிலும் அளவற்ற வகைகள் ஆகி; எவ்வகையும் ஒன்றாய்-எந்த வகைகளும் தொகுப்பு ஒன்றில் இருந்து தோன்றியதாய்; ஒன்றும் மாட்டாதாய்-(தோன்றிய) ஒன்றினும் தொடர்பு இல்லாதது ஆகி; எல்லாமும் வல்லது ஆகி-எல்லாம் செய்யும் வல்லாண்மை யுடையதாகி; சலி வகை இல்லாத முதல் பொருளே-அயர்வு அடைதல் இல்லாத (பண்புள) முதன்மைப் பதிப்பொருளே; எல்லாம் தன்மயமாய் விளங்குகின்ற தனியே-அனைத்தும் தன் சொருபமாய்த் தன்னந் தனியே மிளிர் நிலையே; ஆண் பெண் அலி வகை அல்லாத வகை கடந்து நின்ற அருள் சிவமே-ஆணாகிப் பெண்ணாகி, அலி வகையாகி, (அவையனைத்தும்) அல்லாத வகைக்கும் அப்பாற்பட்டு அமைந்த சிறந்த அருள் மயமான சிவமே; சிவ போகத்து அமைந்த தேவே-(புனித) சிவ போகமாகப் பொருந்திய தெய்வமே. (எ-று.)

(வி-ரை.) ஓசை, ஒலி, நாதம், அபர நாதம், பர நாதம் எனும் ஒலிகள் பலவகை. அத்தனையும் ஆனவன் ஆதலின், 'ஒலியாய்' என்றார்.

**"ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே"**

**"ஓவாத சத்தத்து ஒலியே போற்றி"**

என்பர் நம் அப்பர்.

நால் வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்தினான்கு லட்சம் யோனி பேதம் எனவுள எல்லாத் தோற்றங்கட்கும் சொருப வித்தாயுளன் ஆதலின், 'வடிவாய்' என்றார். எழு வகை நிறங்கள் இருக்கின்றன. அவைகள் அனைத்தும் ஆயினன் ஆதலின் 'நிறமாய்' என்றார். ஓன் ஏகவர்ணாய நம; ஓம் த்விவர்ணாய நம; ஓம் திரிவர்ணாய நம: ஓம் சதுர்வர்ணாய நம: ஓம் பஞ்சவர்ணாய நம: என்பது அஷ்டோத்தரம்.

**"இருளின் வண்ணமும் ஏழிசை வண்ணமும்**
**சுருளின் வண்ணமும் ஜோதியின் வண்ணமும்**
**மருளும் மாலொடு நான்முகன் வண்ணமும்**
**அருளும் வண்ணமும் ஆவர்ஐ யாறரே"**

என்பது தமிழ் மறை.

கார்ப்பு, புளிப்பு, கைப்பு, இனிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு எனும் அறுவகைச் சுவையும் ஆயினனாதலின், 'சுவைகளாய்' என்றார்.

வாசனை பலவகை; எந்த மணமும் ஆயினானை, 'நாற்றமாய்' என்றார். "பூவினின் நாற்றம் போன்று.........................இன் றெனக்கு எளிவந்தருளி" என்பது திருவாசகம்.

ஊற்றத்திற்குப் பகுதி ஊறு; இதை ஸ்பரிசம் என்பர் வடமொழி வாணர். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் எனும் தன்மாத்திரை மயமான தற்பரன் என்பது குறிப்பு. நிறம் என்பது, ஒளி யெனும் பொருளது. நாற்றம் என்பது மணம்.

உலகில் உள்ள செயல்பாடுகள் யாவும், அவன் இயக்க இயங்கும் இயக்கங்கள். அதன்வழி விளையும் பயன்களிலும் அவன் உளன் ஆதலின், 'உறுதொழிகள் பயன் பல வேறு உளவாய்' என்றார். "காட்ட அனல்போல் உடல் கலந்து உயிரை எல்லாம், ஆட்டும் ஒரு நட்டுவன் எம் அண்ணல்" என்பர் கடவுள் மாமுனிவர்.

**"விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க."**
**"நிற்பதும் செல்வதும் ஆனோன் காண்க"**
**"வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு**
**மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்**

**சோதியுமாய் இருள் ஆயினார்க்குத்**
**துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்**
**பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்**
**பந்தமுமாய் வீடும் ஆயினார்க்கு**
**ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு**
**ஆடப் பொற்கண்ணம் இடித்தும் நாமே”**

எனும் திருவாசகம், இங்கு நம் நினைவில் எழுந்து நிற்கிறது அல்லவா!

இங்ஙனம் இருவினைச் செயல்களில் இருக்கின்றான். அவைகளால் வரும் பல்வேறு இன்ப துன்பப் பயன்கள் ஆயினான். கிரியா சக்தியால் விளையும் இக் கிளர்ச்சிகட்கு இடம் ஆயினான் என்று குறிப்பாக இதுவரை கூறினார்.

அனைத்திலும் உடன்பாடும் எதிர்மறையும் ஆகி, ஒன்றியும் ஒன்றாமலும் உள்ளானை, ‘எவ்வகையும் ஒன்றாய் ஒன்றும் மாட்டாதாய்’ என்றார்.

சங்கற்பப்படி எதையும் சாதித்தலின், ‘எல்லாமும் வல்லதாகி’ என்றார்.

படைத்தல் முதலிய ஐந்தொழிலை இடையறாது நடத்தியும் அயர்வறியானை, ‘சலிவகை யில்லாத முதற்பொருளே’ எனும் அருமையே அருமை. “ஆக்கி அளித்துத் துடைக்கும்-தொழில் அத்தனை வைத்தும் எள்ளத்தனை யேனும்-தாக்கற நிற்கும் சமர்த்தன்” என்று தாயுமானாரும் இந்நிலையை எண்ணியுளர்.

விமல தன் வியாபகத்துள் அனைத்தும் வியாப்பியமாக விளங்குபவனை, ‘எல்லாம் தன்மயமாய் விளங்குகின்ற தனியே’ என்றார்.

உயர்திணை அஃறிணையென இருந்த திணைகள் இரண்டு; அவைகள் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனும் ஐந்துள் அடங்கும். தன்மை, முன்னிலை, படர்க்கை எனும் மூவிடங்களில் அவைகள் தங்கும். உருவமாகி எங்கும் இவைகள் ஊடுருவிஉள. உருவம் அல்லாதது அருவம். அருவும் உருவும் இரண்டினும் ஆகி, அவைகட்கு அப்பாற்பட்டும் அருளே திருமேனி ஆயினானை, ‘ஆண் பெண் அலி வகை அல்லாத வகை கடந்து நின்ற அருட்சிவமே’ என விளித்தார். அலி-ஆணுறுப்பு மிக்குப் பெண்ணுறுப்பு குறைந்த நிலை. (பெண் உறுப்பு மிகுந்து ஆண் தன்மை குறைந்தது அலி என்பது இங்கு எண்ணத் தகும்.)

“ஆணல்லன் பெண்ணல்லன் அலியலன்காண் அம்மானை” என்றார் பிறரும்.

“ஆண்பாலோ பெண்பாலோ அப்பாலோ எப்பாலோ” என்பது கம்பர் காவியம். என்றும் விளைவது; எழுவகை மங்கலமானது; அழியா நலத்தது; ஆன்ம தாபத்தை யகற்றுவது, சிவபோகம்; காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்; அகண்டா காரசிவ போகம் எனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக வுருவாய்க் கிடக்குது ஐயோ! இன்புற்றிடநாம் இனி யெடுத்ததேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாரும் சகத்தீரே” எனும் தாயுமானார் உபநிடதம், இங்கு உணரப் பெறும். (53)

**பேராய அண்டங்கள் பலவும் பிண்ட**
**பேதங்கள் பற்பலவும் பிண்டாண் டத்தின்**
**வாராய பலபொருளும் கடலும் மண்ணும்**
**மலையுளவும் கடலுளவும் மணலும் வானும்**
**ஊராத வான்மீனும் அணுவும் மற்றை**
**உள்ளளவும் அளந்திடலாம் ஓகோ உன்னை**
**ஆராலும் அளப்பரிதென் றனந்த வேதம்**
**அறைந்திளைக்க அதிதூரம் ஆகும் தேவே.**

(ப-ரை.) பேர் ஆய அண்டங்கள் பலவும்-அளவிலாப் பேர் பெற்ற அண்டங்களையும்; பிண்ட பேதங்கள் பற்பலவும்-பல வேறுபட்ட பிண்டங்களையும்; பிண்ட அண்டத்தின் வார் ஆய பல பொருளும்-பிண்டங்களில் அண்டங்களில் உள்ள புனித (தத்துவ தாத்துவிகமான) பல பொருள்களையும்; மலை உளவும்-மலையில் உற்பத்தி யாகின்றவைகளையும்; கடல் உளவும்-கடலில் காணப் பெறுபவைகளையும்; மணலும்-மணல்களையும்; வானும்-ஆகாயத்தையும்; ஊராத வான் மீனும்-இயங்காமல் இருந்த இடத்திலேயே இருக்கும் விண்ணில் மின்னும் மீன்களையும்; அணுவும்-அணுக்களையும்; மற்றை உள்ளனவும் அளந்திடலாம்-(இவை யல்லாத) வேறு உள்ள எந்தப் பொருள்களையும் குறிப்பாக அளவிட்டுக் கூறலாம்; ஓகோ உன்னை யாராலும் அளப்பரிது என்று அநந்த வேதம் அறைந்து இளைக்க அதி தூரம் ஆகும் தேவே-ஓஹோ! உம்மை (எத்தகைய ஆற்றலுடைய) எவராலும் அளந்து கூற இயலாதே என்று, அளவிறந்த மறைகள் (சொல்லிச்) சொல்லிச் சோர்வடையுமாறு, (அவைகட்கும் எவைகட்கும் எட்டாமல்) அதி தூரம் ஆகிய தெய்வமே, (எ-று.)

(வி-ரை.) ஒரு அண்டம் நூறு கோடி யோசனை உயரமும், நூறு கோடி யோசனைப் பரப்பும் உடையது; இங்ஙனம் ஆயிரத்தெட்டு கோடி அண்டங்கள் இருக்கின்றன என்று, அருள் நூற்கள் விரிவாக அறிவிக்கின்றன. ஒவ்வொரு அண்டத்திற்கு ஒவ்வொரு பெயர் உண்டு; இங்ஙனம் 'பேராய அண்டங்கள் பல'. உடல்களும், அவைகளின் உறுப்புகளும் அண்டத்தில் உள்ள பிண்டங்கள். அண்டத்தும் பிண்டத்தும் அடங்கிய தத்துவங்கள் முப்பத்தாறு; தாத்துவிகங்கள் அறுபது. இவைகள், பிண்டாண்டத்தின் வார் ஆய பல பல பொருள்கள். (வார்-நெடுமை, நேர்மை எனும் பொருட் பெயர்.)

அண்டங்களை, பிண்டங்களை, அவைகளில் கூடிய தத்துவக் கூட்டங்களை, நீரை, நிலத்தை, கடல்படு பொருள்கள் மலைபடு பொருள்களை, கடல் மணலை, ககனத்தை, ககன மீன்களை, அணுக்கள் முதலிய அனைத்தையும் எண்ணி அளவிட்டு அறிவிக்கலாம்;

சோதி மணிமுடி சொல்லிறந்த தன்மை; பாதம் இரண்டும் பாதலம் ஏழினுக்கும் அப்பால் எனவுள உமது அமல வியாபகத்தை, ஆஹா! எவராலும் அளக்க முடியாதே என்பது, அலுத்துத் தேடி அயர்ந்த மறைகளின் அறிவிப்பு. தேவே! எவர்க்கும் எவைக்கும் எட்டாத அதிதூரம் ஆனது உமது சொரூபம் என்று விம்மிதம் கொண்டு விளம்பியபடி.

“ஆழாதே ஆழ்ந்தான் அகலாது அகலியான் ஊழால் உயராதே ஓங்கினான்”

**“நுணுகாது நுண்ணியான், யாதும்**
**அணுகாது அணுகியான்”**
**“தேவர் அறியாத தோற்றத்தான்”**

எனும் ஆதியுலா இங்கு அறியத்தகும். (54)

**கற்பங்கள் பலகோடி செல்லத் தீய**
**கனலினடு ஊசியின்மேல் காலை யூன்றிப்**
**பொற்பறமெய் உணவின்றி உறக்க மின்றிப்**
**புலர்ந்தெலும்பு புலப்படாஐம் பொறியை ஓம்பி**
**நிற்பவருக் கொளித்துமறைக் கொளித்து யோக**
**நீள்முனிவர்க் கொளித்தமார்க் கொளித்து மேலாம்**
**சிற்பதத்தில் சின்மயமாய் நிறைந்த ஞானத்**
**திருவாளர் உட்கலந்த தேவ தேவே.**

(ப-ரை.) கற்பங்கள் பலகோடி செல்ல-மிகப் பலவான கற்ப காலங்கள் (ஒன்றன் பின் ஒன்றாய்ப்) போய்க் கொண்டே இருக்க, (அவ்வளவு காலம் வரை,) தீய கனலின் நடு ஊசியின் மேல் காலை ஊன்றி-கனல்கின்ற (ஐந்) நெருப்புகளின் நடுவில் ஊசியின்மேல் காலூன்றி நின்று; பொற்பு அற மெய் உணவு இன்றி உறக்கம் இன்றி- வனப்பான திருமேனி வாடுமாறு உணவு நீத்து உறக்கம் ஒழிந்து; புலர்ந்து எலும்பு புலப்பட-(தசை) வற்றி எலும்புக் கூடாய்த் தோன்றுமாறு; ஐம் பொறியை ஓம்பி நிற்பவருக்கு ஒளித்து-(ஐம்புலன்கள் மேற்செல்லாதபடி காணும்) ஐந்து பொறிகளைக் கட்டுப் படுத்தி, (வைராக்யத்தொடு) இருப்பவர்க்கு அகப்படாமல்; மறைக்கு ஒளித்து-மறைகட்குத் தோன்றாமல் மறைந்து; யோக நீள் முனிவர்க்கு ஒளித்து-(பெருகிய) யோகத்தின் மூலம் பேராயுள் பெற்ற முனிவர்கட்குப் புலப்படாது ஒளிந்து; அமரர்க்கு ஒளித்து-அமுதம் உண்ட இமையவர்க்குக் காணப்படாமல் கரந்து; மேல் ஆம் சித்பதத்தில் சின்மயம் ஆய் நிறைந்த-மேலான ஞானத்துள் ஞான சொருப வியாபகமாகி; ஞானத் திரு ஆளர் உள் கலந்து தேவ தேவே-ஞானத் திருவினை அனுபவிக்கின்ற ஞானிகளுடைய மனத்தில் அளவளாவிய மாதேவனே, (எ-று.)

(வி-ரை.) கல்பம் என்பது, ஒரு காலத்தின் பேரெல்லைப் பெயர் அதனுள் பல யுகங்கள் அடங்கும். இது ஒரு பிரமனது ஆயுள் காலம்.

நாற்புறமும், குமையும் வேள்விக் குண்டம். தலைக்கு மேல், கொதிக்கும் வெய்யிலின் கொடுமை. பஞ்சாக்கினி எனும் இதன் நடுவில் சாதகர் இருப்பர்.

நாசி நுனியே ஊசி முனை. அங்கேயே நாட்டம். நாவை மடிப்பர் நாசித் துவாரத்துள் புகுத்துவர். அவ்வளவுதான். பசி பறக்கும். உறக்கம் ஒழியும். உடல் வாடும், பொலிவு பொன்றும். எலும்புக் கூடாகத் தேகம் இருக்கும். எத்தனை காலம் ஆனாலும் உடல் அழியாது; உயிர் ஒழியாது. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் எனும் புலன்களின் வழியே பொறிகள் செயல்படா. இதனால் எப்பயனும் இல்லை. இவர்கள் இறந்தார்க்குச் சமம். ஊசி முனைபோல், நாசி நுனிவழி சுவாசம் மட்டும் நடக்கும். ஆயுள் எத்தனை காலம் ஆனாலும் அழியாது. தனக்கும் பயனில்லை;

பிறர்க்கும் நலனில்லை; சிறந்த ஆன்ம லாபமும் சித்திப்பது இல்லை. இறைவன் திருவருள் எய்தாமல், எலும்புக் கூடாக இருப்பது, பொருட்காட்சி சாலைக்கு உரியது அன்றிப் புண்ணியம் ஒன்றும் இல்லையே!

“முள்ளு முனையிலே மூன்றுகுளம் வெட்டினேன் இரண்டு குளம் பாழ்-ஒன்றில் தண்ணீரே இல்லை” என்பது, இது குறித்த பழமொழி. (நாசி நுனியில் சுவாசம் மென்மையாக நடப்பதை, முள்ளுமுனை என்று மொறுவுவர். தூல சூக்கும காரண தேகங்களை, மூன்று குளம் என்று முறுவலிப்பர். தூல சூக்கும தேகங்கள் பயனின்றிப் போவதை, இரண்டு குளம் பாழ் என்று ஏளனிப்பர். காரண தேகம் இருந்தும் விரையம் ஆதலை, ஒன்றில் தண்ணீரே இல்லை என்று வள்ளல் சிரிப்பை எழுப்புவர்.) இவர்கள் தவளைச் சாதகர் எனப் பெறுவர். இவ்வளவு செய்திகளையும், ‘கற்பங்கள்’ எனத் துவக்கி, ‘பொறியை ஓம்பி’ என்பது வரை அருமையாக வள்ளலார் அறிவிக்க அறிகிறோம்.

இவர்களைப் போல வரையறை யில்லா ஆயுளை யுடையது நான்மறை.

யோகிகள் பலருளர்; இவர்கள் காய கல்பம் கண்டவர்கள். பேராயுளை இதனால் பெற்றவர்கள் இப் பெருமக்கள்.

அமுதம் உண்டவர் அமரர் எனப் பெறுவர்; பல காலம் இருக்கும் ஆயுள் பலித்தவர்கள் இப் பண்ணவர்கல். நாவின் நுனியை நடுவே சிவிறிடில் சீவனும் ஆங்கே சிவனும் உறைவிடம் மூவரும் முப்பத்து மூவரும் தோன்றுவர் சாவதும் இல்லை சதகோடி யூனே எனும் திருமந்திர சாதகர், கற்ப காலம் கண்ட இவர்கள்.

காலம் பல கண்ட முற்குறித்த தவளைச் சாதகரும், பிற்குறித்த யோகிகளும், அமரர்களும், வேத தேவதைகளும் தன்னைக் காணாதபடி கரந்து விளங்குகின்றார் காலா தீதனான கடவுளர் பெருமான். “துற்றவை துறந்த வெற்றுயிர் ஆக்கை அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும் ஒன்றுண் டில்லை என்றறி வொளித்தும் பண்டே பயில் தொறும் இன்றே பயில்தொறும் ஒளிக்கும் சோரனைக் கண்டனம்” எனும் திருவாசகம் இங்கு எண்ணத் தகும்.

சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம்; ஞானபாதம் எனவுறு நலமுறு பதங்கள் நான்கு; அவைகளுள் தலையாயது ஞான பாதம். அது, ‘மேலாம் சித்பதம்’ என்று சிறப்பிக்கப் பெற்றது. அந்த ஞானத்துள் சாரமான ஞானம், ‘சின்மயம்’ என்று சிந்திக்கம் பெறும். ‘மேலாம் சித்பதத்தில் சின்மயம்’ எங்கும் வியாபகம் ஆனது ஆகலின், ‘நிறைந்து’ எனும் ஒரு பதத்தில் அதை நினைவூட்டினார்.

செல்வம் பலவகை; அவைகள் தோன்றும் இருக்கும் தொலையும்; புறமான அவைகள் போலின்றி அகமயம், அறிவு மயம், அருள்மயம், தெளிவு மயமான செல்லம் ‘ஞானத்திரு’ எனப்பெறும். அதைத் தம் அனுபவத்தில் கொண்டவர்கள் ‘திருவாளர்’ எனும் பெயர் பெறுவர். செல்வம் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே’ என்பது தமிழ் மறை ஆம். அச் செல்வத்திற்கு உரியவர்கள் அடியார்கள்; அவர்களது சம்பந்தியானவன் அமலன். கணுவறக் கலந்த அக் கலப்பை,

**“ஊனாகி உயிராகி அதனுள் நின்ற**

**உணர்வாகிப் பிறஅனைத்தும் நீயா நின்றாய்”**

எனும் அப்பர் தமிழ்மறை யிங்கு அறியத் தகும். (55)

**மட்டகன்ற நெடுங்காலம் மனத்தால் வாக்கால்**
**மதித்திடினும் புலம்பிடினும் வாரா தென்றே**
**கட்டகன்ற மெய்யறிவோர் கரணம் தீக்கிக்**
**கலையகற்றிக் கருவியெலாம் கழற்றி மாயை**
**விட்டகன்று கருமமல போதம் யாவும்**
**விடுத்தொழித்துச் சகசமல வீக்கம் நீக்கிச்**
**சுட்டகன்று நிற்கஅவர் தம்மை முற்றும்**
**சூழ்ந்துகலந் திடுஞ்சிவமே துரியத் தேவே.**

(ப-ரை.) கட்டு அகன்ற மெய் அறிவோர்-பந்தம் அற்ற பரம ஞானிகள்; மட்டு அகன்ற நெடும் காலம் மனத்தால் மதித்திடினும்-அளவிறந்த பல காலமாக மனத்தால் மதித்து ஆய்ந்தாலும்; வாக்கால் புலம்பிடினும் வாராது என்றே-வாய்திறந்து கதறி அழுதாலும் (வாழ்விக்கும் திருவருள்) வாராது என்று அறுதியிட்டு அறிந்து; கரணம் நீக்கி-அந்தக் கரண சேட்டைகளை யகற்றி; கலை அகற்றி-கற்ற நூலறிவைக் கைவிட்டு; கருவி எலாம் கழற்றி-(பொல்லாத) தத்துவங்கள் அனைத்தையும் புறம் ஒதுக்கி, மாயை விட்டு அகன்று-(விரியும்) மாயா விலாசங்களில் இருந்து விலகி ஒதுங்கி; கரும மலபோதம் யாவும் விடுத்து ஒழித்து; கன்ம அழுக்கொடு கலந்த அறிவின் சூழ்நிலை அனைத்தையும் அடியொடு கைவிட்டு; சகச மல வீக்கம் நீக்கி-(ஆன்மாவின்) உடன் உறையும் ஆணவ வியாபக ஆக்கம் போக்கி; சுட்டு அகன்று நிற்க-(தன்மை முன்னிலை படர்க்கை யென்று) சுட்டுதற்கு அப்பாற் பட்டு இருப்ப; அவர் தம்மை முற்றும் சூழ்ந்து கலந்திடும் சிவமே அம் மேலவர்களை முழுதும் முற்றுகை யிட்டு இரண்டறக் கலந்து கொள்ளும் செம்மையின் சொருபமே; துரியத் தேவே-துரிய நிலையில் உள்ள தெய்வமே,(எ-று.)

(வி-ரை.) “உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்” ஆனாலும், எண்பது கோடி எண்ணம் மனத்தில் எழுகிறது. இந்த மனோசலனம் எய்தினர்க்கு, விமல சிவம் என்றும் விளங்குவது இல்லை. இது குறித்து ஆயிரம் சொல்லி அழுதாலும் பயனில்லை. அறவோர் அதை அறிகின்றனர். நீளும் பந்தங்களில் இருந்து, சிறிது சிறிதாக நீங்குகின்றனர்.

அதனால் முன்னிருந்த பொய்யறிவு முடங்கிவிட, மெய்யறிவு அவரிடம் மேவுகின்றது.

நெஞ்சம் எதையும் நினைக்க, புத்தி பொரு பொருத்துப் பொங்கியெழ, சித்தம் எதையும் அர்த்தமற்றுச் சிந்திக்க, அகங்காரம் குதிபோட்டு ஆரவாரிக்க, அவைகளின் செயல்களை மெய்யறிவால் அறிந்து, வேண்டாம் உங்கள் உறவு என்று அம் மேலோர் விலக்கி விடுகின்றனர்.

**“அந்தக் கரணம் அடங்கத் துறப்பதுவே**
**எந்தத் துறவினும் நன்று எந்தாய் பராபரமே”**

என்று தாயுமானார், இப்பேறு அருள் என்று எம்மானை மிகவும் ஏத்தியுளர்.

அருங்கலைகளைக் கற்றுப் பெற்றிருந்த அறிவு, வாழும் வழிகாட்டும் வகையறிவு. என்றும் அவைகளை உருப்போட்டுக் கொண்டு இருப்பதால் யாது பயன்? இவைகளே எண்ணுகின்றனர். சொற்பிரபஞ்சமான கலையறிவையும், பொருட் பிரபஞ்சமான தத்துவ அறிவையும் தள்ளுகின்றனர்.

இவ்வளவு செய்திகளையும், 'மட்டகன்ற' என்று துவக்கி, 'கருவியெலாம் கழற்றி' என்பது வரை அருளொடு அருந் தமிழ்ச் சொற்களால் அறிவித்தார்.

கைவிட்ட இவைகட்கு எல்லாம் காரணமான அனைத்தும், மாயா விலாசம் என்பது, புத்திக்கு அப்போது புரிகிறது. அத்தெளிவின் வழி, மாயை எதனிலும் மயங்காமல், சீறும் கன்மத்தின் வழி செல்லாமல், செல்ல வைக்கும் சீவ நினைவில் சிக்காமல் சிறப் பெய்துகின்றனர்.

**"நம்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்**
**தன்செயல் தானே என்றுந்தீ பற"**

என்பது சாத்திரச் செய்தி. இதனை, 'கருமமல போதம் யாவும் விடுத்தொழித்து' என்றார்.

மேலுரைத்த அனைத்திற்கும் மூலம் மூல மலம். அதன் அழுத்தத்தைச் சிறிது சிறிதாக அகற்றுகின்றனர்.

**"ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்**
**தாணுவினோ டத்துவிதம் சாரும்நாள் எந்நாளோ"**

என்பது தாயுமானார் குரல்.

அதன்பின் நான் எனும் தன்மை, நீ எனும் முன்னிலை, அவன் எனும் படர்க்கை முதலியனவாய், நீளும் சுட்டுத் தன்மை நீங்கிய நிர்விகற்ப சமாதி நிலைக்கிறது. 'சகசமல வீக்கம் நீக்கிச் சுட்டகன்று நிற்க' எனும் பகுதி, ஆழமான செய்தி; அருமையான பகுதி. அவர்களது நிலைகண்டு செம்மை விளைவிக்கும் சிவம், பிறிதுநிலை மீட்டும் பிறவாதபடி, சுற்றிலும் ஒளி பரப்பி அவர்களைச் சூழ்கிறது; அதன் பின் சுத்தாத் வைத நிலை விளங்க, கனிவுடைய அவர்களில் கலந்து கொள்கிறது. 'அவர் தம்மை முற்றும் சூழ்ந்து கலந்திடும் சிவமே' எனும் செய்தியைச் சிந்திக்கும் போழ்தே, சித்தம் பெரிதும் சிலிர்க்கிறதே!

நனவிற்கு அப்பாற்பட்டது கனவு. கனவிற்கு அப்பாற்பட்டது சுழுத்தி. சுழுத்தி கடந்த நான்காவது நிலை துரியம். அத் துரிய நிலையில் பேரொளிப் பிழம்பாய்த் தெய்வம் பிரகாசித்தலின், 'துரியத் தேவே' என்று வீரிட்டு வள்ளலார் விளிக்கும் அருமை மறக்க முடிவது இல்லையே!

**"ஒரு பூதரும் அறியாத் தனிவீட்டில்**
**உரை உணர்வற்று இரு"**
**"உரையற்று, உணர்வற்று உயிரற்று,**
**உபாயம் அற்று,**
**கரையற்று இருளற்று, எனது அற்று**
**இருக்கும் அக்காட்சியதே"**

என அருணை முனிவர், துரிய அனுபவம் குறித்துக் கூறிய செய்திகள் இங்கு நம் நினைவில் புகுந்து நிழலாடுகின்றதே!

**"அண்டபகி ரண்டமும் மாயா விகாரமே**
**அம்மாயை யில்லாமையே**
**யாமெனவும் அறிவுமுண்டு; அப்பாலும் அறிகின்ற**
**அறிவினை அறிந்து பார்க்கின்,**
**எண்திசை விளக்குமொரு தெய்வஅருள் அல்லாமல்**
**இல்லையெனும் நினைவுமுண்டு; இங்**
**கியான்எனது அறத் துரிய நிறைவாகி நிற்பதே**
**இன்பமெனும் அன்பும் உண்டு;**
**கண்டன எலாம் அல்ல என்று கண்டனை செய்து**
**கருவிகர ணங்கள் ஓயக்**
**கண்மூடி ஒருகணம் இருக்க என்றால், பாழ்த்த**
**கர்மங்கள் போராடுதே;**
**பண்டையுள கன்மமே கர்த்தா எனும் பெயர்ப்**
**பட்சம்நான் இச்சிப்பனோ?**
**பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற**
**பரிபூரண ஆநந்தமே"**

எனும் தாயுமானார் பாடலை அடியொற்றிய பா இது. (56)

**உருநான்கும் அருநான்கும் நடுவே நின்ற**
**உருவருவ மொன்றுமிவை உடன்மேல் உற்ற**
**ஒருநான்கும் இவைகடந்த ஒன்று மாய்அவ்**
**வொன்றினடு வாய்நடுவுள் ஒன்றாய் நின்றே**
**இருநான்கும் அமைந்தவரை நான்கி னோடும்**
**எண்ணான்கின் மேலிருந்தும் இறையே மாயைக்**
**கருநான்கும் பொருணான்கும் காட்டு முக்கண்**
**கடவுளே கடவுளர்கள் கருதும் தேவே.**

(ப-ரை.) உரு நான்கும்-பிரமன் திருமால் உருத்திரன் மகேசன் எனப்பெறும்) நான்கு உருவத்திரு மேனிகளும்; அரு நான்கும்-சிவம் சத்தி விந்து நாதம் எனும்) அருவத் திருமேனிகள் நான்கும்! நடுவே நின்ற உரு அருவம் ஒன்றும்-(அருவம் உருவம் எனும் இரண்டன்) இடையில் இருந்த (சதாசிவம் எனும்) அருவுருவத் திருமேனி ஒன்றும்; இவை உடன் மேல் உற்ற ஒரு நான்கும்-இவைகளின் உடனாகி மேலேழுந்த (திக்கிராந்தம், அதிக்கிராந்தம், பரவிந்து பரநாதம் எனும்) ஒப்பற்ற நான்கு நிலைகளும்; இவை கடந்த ஒன்றும் ஆய்-இவைகட்கு எல்லாம்

அப்பாற்பட்ட ஒன்றான திருவருள் நிலையாய்; அவ் ஒன்றின் நடு ஆய்-(நலஞ்சிறந்த) அந்த அருள் நிலையில் நடுவாகி நடுவுள் ஒன்றாய் நின்றே-(அந்த அருள் நிலையின்) நடுவுள் எழுகின்ற பேரொளியாகி யிருந்து; இருநான்கும் அமைந்த வரை-(விருப்பின்மை, வெறுப்பின்மை, மயக்கம் இன்மை, பழியின்மை, மெய்யுணர் வுடைமை, அறவழியைப் பிறர்க்கு அறிவித்தல், கடைப்பட்டாரைக் காக்கும் உணர்வுடைமை, பேரன்பு எனும்) எண்குணம் இயல்பாக உடைய மேலோரை நான்கினோடும் எண்ணான்கின் மேல் இருத்தும் இறையே-தத்துவங்கள் முப்பத்தாறுக்குமேல் தங்கவைக்கும் தற்பரா; மாயைக் கருநான்கும் மாயையில் இருந்து மலரும் (நிலம், கருப்பை, முட்டை, வியர்வை யெனும்) நான்கு கருப்ப இடங்களும்; பொருள் நான்கும் காட்டும் முக்கண் கடவுளே-(உடல், அந்தக்கரணம், உலகம், இன்பதுன்பம் எனும்) நூற்பொருள்களையும் (கருணையொடு உயிர்கட்குக்) (காட்டுகின்ற முக்கண் கொண்ட முதல்வனே; கடவுளர்கள் கருதும் தேவே-தேவர்கள் தியானிக்கும் தெய்வமே, (எ-று.)

(வி-ரை.) படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு நான்கும் நிகழ, உருவத் திருமேனி நான்கானான்; அதன்மேல் பொருளும் அருளும் ஒளியும் ஒலியும் புலனாக அருவத் திருமேனி நான்கானான்; அமைதி பிறக்க, ஒருமை உதிக்க, அருவுருவம் ஆயினான்; அதன்பின், மேல் நிலையான நால்நிலை ஆனான்.

(1) திக்கிராந்தம் - எல்லையிட்ட பரம்;

(2) அதிக்கிராந்தம் - எல்லை கடந்த இறை; புனித ஆன்ம அறிவிற்குப் புலனாக, சிற்சத்தி சந்நிதியில் தோன்றுகின்ற நிட்கள சிவநிலை இது,

(3) பரவிந்து - அருளெய்திய அதிசூட்சும ஒளி நிலை.

(4) பரநாதம் - பேறான அருள் பெற்ற ஆன்மா அனுபவிக்கும் அதிசூக்கும அருள் நாதம்.

அருவுருவ தரிசனத்தின்பின், ஆன்மா மேல் நிலை யெய்த இந்த நான்கும் ஆயினான். அருவம் 4; உருவம் 4; அருவுருவம் 1; திக்கிராந்தம், அதிக்கிராந்தம், பரவிந்து, பரநாதம் 4 எனும் இவைகட்குமேல் திருவருள் நிலை எனத் திகழ்கின்றான்; அதன்பின் தழைத்த அருளின் நடுவில் தான் என்றான்; ஆன்ம முனைப்பழிந்து நான் கெட்டுத் தான் ஆகும் போது, பேரொளிப் பிழம்பு தன் சொருபம் என்று பிரகாசிக்கின்றான். இந்தப் பதினாறு பேறே பரன். இந்த அனுபவத்தை முதல் இரண்டு அடிகள் அருமையாகப் பரிபாகிகட்கு அறிவிக்கின்றன.

இறைவன் எண்குணன்; அவனைச் சார்வாரும் எண்குணர். அக் குணங்களைப் பதவுரையில் அறிந்துளம். உத்தம அப்படிக் கிரமத்தில் உயர்ந்த, தேர்ந்த அனுபூதியில் திளைக்கின்ற ஞானிகளை, உருவான தத்துவங்கட்கு மேலாக தன்னைப் போல் உயர்த்துகின்றான். ‘இரு நான்கும் அமைந்த வரை

நான்கினோடும் எண்ணான்கின் மேல் இருத்தும் இறையே' எனும் பகுதியை, எண்ணும் போதே மெய் சிலிர்க்கின்றதே.

நிலையான இதனை தினையாதார் பலருளர். ஊழிற்குத் தக்கபடி அவர்கட்கு, நீங்கள் தங்கும் இடம் அது என்று, மாயையின் மயமான கரு நிலங்கள் நான்கைக் கட்டுகின்றான்; தன் நன்மைக்குத் தக்கபடி, தாவிச் சென்று ஆன்மாக்கள் அந்த இடங்களில் தங்குகின்றன. அவைகட்கு, தனுகரண புவன போகங்களைத் தருகின்றான். பாடு பல பட்டு; 'படமுடியாது இனித் துயரம் படமுடியாது அரசே! பட்டத்து எல்லாம் போதும் உன்றன் பதத் துணையே பிடித்தேன்' என்று புலம்பிப் போற்றும் உயிர்களை யோக சாதகர் ஆக்க, கண்களான சந்திர சூரியரைக் காட்டுகின்றான்; ஞான சாதகர்க்கு நெற்றிக்கண்ணை நினைவூட்டுகின்றான், எதையும் கடந்து இருந்தே இங்ஙனம் கருணை காட்டுவானை, 'முக்கண் கடவுளே' என்று அன்பொடு உள்ளம் அழைக்கிறது.

பதமுத்தி பெற்ற கடவுளர் பலர் உளர்; தெளிந்த அவர்களால் சதா தியானிக்கப் பெற்ற தெய்வமே என்பார், 'கடவுளர்கள் கருதும் தேவே!' என்பார், 'இறையே காட்டும் கடவுளே! கருதும் தேவே!' எனும் மூன்று விளிகளையும் ஊன்றி உணர்ந்தால், உய்யுமே இந்த உயிர். (57)

**பாங்குளநாம் தெரிதுமெனத் துணிந்து கோடிப்**
**பழமறைகள் தனித்தனியே பாடிப் பாடி**
**ஈங்குளதென் றாங்குளதென் றோடி யோடி**
**இளைத்திளைத்துத் தொடர்ந்துதொடர்ந் தெட்டுந் தோறும்**
**வாங்குபர வெளிமுழுதும் நீண்டு நீண்டு**
**மறைந்துமறைந் தொளிர்கின்ற மணியே எங்கும்**
**தேங்குபர மாநந்த வெள்ள மேசச்**
**சிதாநந்த அருட்சிவமே தேவ தேவே.**

(ப-ரை.) கோடி பழமறைகள்-அளவிறந்த பழமையான அருள் நூற்கள்; பாங்கு உள நாம் தெரிதும் எனத் துணிந்து-அளவிறந்த நாங்கள் ஆய்ந்து அறிந்து கொள்வம் என்ற துணிவுடன்; தனித் தனியே பாடிப் பாடி-(ஒவ்வொன்றும்) தனித்தனியாக(ப் பரமன் புகழ்களைப்) பெரிதும் பாடி; ஈங்கு உளது ஆங்கு உளது என்று ஓடி ஓடி-(மெய்ப்பொருள்) இங்கே இருக்கிறது அங்கேயும் இருக்கிறது என்று (ஒன்றன் பின் ஒன்றாய்) (இடையறாது) ஓடி; இளைத்து இளைத்து-பேரயர்வு பெருகி; தொடர்ந்து தொடர்ந்து எட்டுந் தோறும் -(அந்நிலையிலும்) விடாது தொடர்ந்து எட்டிப் பிடிக்கலாம்படி அணுகுந் தோறும்; வாங்கு பரவெளி முழுதும் நீண்டு நீண்டு-(எங்கும்) சூழ்ந்துள்ள பரமான வெளி முழுதும் எட்டாதபடி நிமிர்ந்து நிமிர்ந்து; மறைந்து மறைந்து ஒளிக்கின்ற மணியே-(மாபெரும் சொருபம்) தோன்றாமல் கரது கரந்து மின்னுகின்ற மாணிக்கமே; எங்கும் தேங்கு பரம ஆநந்த வெள்ளமே-எல்லா இடத்தினும் ததும்பி வழிகின்ற மேலான இன்ப வெள்ளமே; சத் சித் ஆநந்தமே அருள் சிவமே-மெய்யறிவு இன்ப மயமான தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி ஆண்டவனே; தேவ தேவே. தேவர்க்கெல்லாம் தலைமையான தெய்வமே, (எ-று.)

(வி-ரை.) மறைந்து மறைந்து ஒளிக்கின்ற மணியே என்றும் பாடபேதம் உளது. பாங்கு-பக்குவம் எனினுமாம். நாதத்து உயிர்நாடி நாதன். நாதத்தில்

இருந்து வேதம் பிறந்தது. ஒரு வேதம் விரிந்து விரிந்து ஒரு கோடியாயது. பாச அறிவு மயமான அப் பழமறைகள், எல்லா வகையாலும் நாதனுக்கு அணுக்கர் நாம், பரனை எப்படி யாயினும் பற்றுவம் என்று முனைத்தன. முதல்வனைத் தொட முந்தின; முதல் முதல் தாமே தொட்டு தனிப்புகழ் பெறவேண்டும் என்று தருக்கின. இதனால் கூடிய ஒற்றுமை குலைந்து, தனித்தனிப் பிரிந்தன. பரனே! சிவனே! அரனே! வரனே என்று, குரல் கொடுத்து ஒவ்வொன்றும் தனிநின்று கூவின. அவைகளின் பன்மையும் முனைப்பும் பரனை மறைத்தன. எங்குமுள சிவத்தை, கோயிலில் உளது; தலத்தில் உளது; விக்ரகத்தில் உளது, மலையில் உளது; கலையில் உளது என்று மயங்கின. உக்கிர வேகம் கொண்டு அங்கெல்லாம் ஓடின. ஓடிய இடமெல்லாம் பாடின. அயர்வுதான் கண்ட பலன்; அமல சொருபமே அகப்படவில்லை.

வாளா இருக்க முடியவில்லை; தொய்வு பிறந்தும் மேலும் தொடர்ந்தன. அவைகளின் அலறல் கண்டு அயர்வு கண்டு, இயற்கை ஜோதி எழுந்தது. கண்டேம்! கண்டேம் என்று மறைகள் களித்தன. அவாவுதல் பெருகி அணுகின. எட்டிப் பிடிக்கலாம்படி அணுக்கம் ஆம்பொழுது அகப்படாமல் எங்குமான ஞான விண்ணில் தூர தூர தூரமாகி, மறைந்து மறைந்து விளங்குகின்ற மாணிக்கமே எனும் பகுதி, பன்மையும் முனைப்புமான பாச ஞானத்தால் அணுக முடியாதது பரம் என்று, அறியுமாறு நமக்கு அறிவிக்கின்றது அல்லவா!

அன்பென்னும் பண்பு அமைந்தார்க்கு எங்கும் இன்ப வெள்ளமாக இருப்பவனே என்பார், 'எங்கும் தேங்கு பரமாநந்த வெள்ளமே' என்றார். (பரம ஆநந்தம்-பரமாநந்தம்; பரம்-மேதகு ஞானம்.)

அந்தப் பரம், சொருபத்தில் சச்சிதாநந்த அருட்சிவம்; தடத்தத் திருவுருவில் தேவதேவன் என்னும் செய்திகள் இங்கு எண்ணத் தக்கவை, இப்பாசுரச் செய்தியை, மகாதேவ மாலையின் 47, 49, 51, 54, 55 முதலிய பாசுரங்கள் பலவற்றோடு ஒப்பு நோக்கி அறிவது நலம்.

"அண்ணலைச் சென்றனு காபசு பாசமே" என்னும் திருமந்திரம் இங்கு எண்ணத் தகும். கல்வி எனும் கடலில் ஆழ்ந்து இறுமாந்த மனம், இப்பகுதியை ஊன்றிச் சிறிது உணர்ந்தால், அன்பாலன்றி வெறும் அறிவால் அமலனை அறிய இயலா எனும் அமைதி நிலை உதயம் ஆகும். அமைதியினர்க்கே அந்த சச்சிதாநந்த அருட்சிவம் அகப்படும். கலையறிவு பொய்யறிவு; இறையறிவு மெய்யறிவு. மெய்யறிவு அன்பு வழியில் மேவும்; இவர்கள் பெறும் இன்பமே மெய்யின்பம்; சத்சித் ஆநந்தம் அவர்களைச் சார்கிறது.

அதற்குக் காரணம் அருள் ஆதலின், 'அருட்சிவமே' என்று விநயமுகமாகி விளித்தபடி. வேதங்கள் தேடி இணைக்கும் செய்திகள், பல இடத்தில் கூறியது கூறலாக வருகிறதே என்று ஏமாற வேண்டா. ஒவ்வொரு இடத்தும் ஒவ்வொரு நுட்பம்; அனைத்தையும் ஒத்திட்டு நோக்கினால் அவ்வுண்மை புலனாகும். (58)

**எழுத்தறிந்து தமையுணர்ந்த யோகர் உள்ளத்**
**தியலறிவாம் தருவினில்அன் பெனுமோர் உச்சி**
**பழுத்தளிந்து மவுனநறுஞ் சுவைமேற் பொங்கிப்**

**பதம்பொருந்த அநுபவிக்கும் பழமே மாயைக்**
**கழுத்தறிந்து கருமமலத் தலையை வீசும்**
**கடுந்தொழிலோர் தமக்கேநற் கருணை காட்டி**
**விழுத்துணையாய் அமர்ந்தருளும் பொருளே மோன**
**வெளியினிறை ஆநந்த விளைவாந் தேவே.**

(ப-ரை.) எழுத்து அறிந்து தமை உணர்ந்த யோகர் உள்ளத்து-(அரிய சிகார) எழுத்தை யறிந்து, (உயிரான) தம்மை உணர்ந்த யோகிகளின் உள்ளமாகிய நிலத்தில் (உருவான) இயல் அறிவாம் தருவினில்-இயற்கை ஞானமான (கற்பகத்) தருவில்; அன்பு எனும் ஓர் உச்சி பழுத்து அளிந்து-(உயர்ந்த) அன்பு எனப்பெறும் உச்சிக் கிளையில் மிகக் கனிந்து; மவுன நறும் சுவை மேல் பொங்க-மவுனமாகிய இனித்த சுவை ஏராளமாகத் ததும்பி, பதம் பொருந்த அநுபவிக்கும் பழமே-பரிபாகம் பலிக்க அனுபவிக்கப் பெறும் திருவருட் கனியே; மாயை கழுத்து அரிந்து-(அறிவால்) மாயையின் கழுத்தை அறுத்து; கரும மலத் தலையை வீசும் கடும் தொழிலோர் தமக்கே நல் கருணை காட்டி-(தடுக்கி விழச்) செய்யும் கன்ம மலத்தின் தலையை வெட்டித் தள்ளும் உக்கிரமான தொழிலை உடையவர்களான ஞானிகட்கே கனிவுறுத்தும் கருணையைக் (காணுமாறு) காண்பித்து;; விழுத் துணையாய் அமர்ந்தருளும் பொருளே அரிய துணையாகி (அவர்களில்) அமர்ந்து அருள் பாலிக்கும் மெய்ப் பொருளே; மோன வெளியில் நிறை ஆநந்த விளைவாம் தேவே-மவுனமான(ஞான) வெளியில் பரிபூரண இன்பப் பயிராக விளையும் பரமனே,(எ-று.)

(வி-ரை.) பழமை மறைகளில் ஐந்தெழுத்து பழுத்துளது. சிறந்த அவைகளுள் ஒன்று சிகாரம்; விமலன் அதனுள் நிறைவாகி விளங்குகின்றான். அந்த எழுத்து, நாயோட்டும் மந்திரம், ஊமை எழுத்து, முத்தி பஞ்சாக்கரம், பேசா எழுத்து என்றெல்லாம் பெயர் பெறும். ஊன்றி அதனை உணர்ந்து விழித்து உறங்கும் வீரரான மேலோர், தலை எழுத்தான சிகாரத்தைத் தழுவி, தம் தலை எழுத்தைத் தவிர்த்து, கரை சேரும் மரக்கலம்போல் தம் ஆன்மாவைக் காப்பர். அந்த எழுத்தை அறிபவர், தம்மை உணரும் தகுதியர் ஆவர். இவர்கள், ‘எழுத்தறிந்து தமையுணர்ந்த யோகர்’ எனப் பெறுவர்.

செயற்கை யறிவு சிதைந்து அழிய, இயற்கை ஞானம் அவர்கள் தம் இதயத்தில் எழும். அந்த ஞானம். கருதியதைத் தரும் கற்பகம் போல்வது ஆகலின்; ‘உள்ளத்து இயல் அறிவாம் தரு’ என்றார்.

அத்தருவின் உச்சியில் கனிந்தது ஒரு கனி. அதன் பெயர் அன்பு. அந்த அன்புக் கனியை அனுபவித்தவர், அளவிறந்த மவுனச் சுவைமயம் ஆகின்றனர். அனுபவிக்கும் பக்குவம் மிகமிக அதிகரிக்க அன்புக் கனி சிவப்பழம் எனும் பெயர் கொண்டு சிறக்கும். இதை, ‘அன்பு எனும் ஓர் உச்சி பழுத்தளிந்து, மவுனநறும் சுவை மேல் பொங்கி, பதம் பொருந்த அனுபவிக்கும் பழமே’ என உருவகித்த அருமையை உணர்பொழு தெல்லாம் உளம் நெகிழும்.

**“களக்கமறப் பொதுநடம்நான் கண்டுகொண்ட தருணம்**
**கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான்**
**விளக்கலுறப் பழுத்திடுமோ வெம்பியுதிர்ந்திடுமோ**
**வெம்பாது பழுக்கினுமென் கரத்திலகப் படுமோ**

**கொளக்கருது மலமாயைக் குரங்குகவர்ந் திடுமோ**
**குரங்குகவ ராதெனது குறிப்பிலகப் படினும்**
**துளக்கமற உண்ணாவனோ தொண்டைவிக்கிக் கொளுமோ**
**ஜோதிதிரு வுளமெதுவோ ஏதுமறிந் திலனே"**

எனும் திருவருட்பாவின் ஆறாவது திருமுறைப் பாடல், வாய்த்த சாதனையின் வளர்ச்சியையும், இடையில் விளையும் தடைகளையும் எண்ணி மனம் இடிதலையும், அருட்ஜோதித் தெய்வம் இடைப் புகுந்து அருளவேண்டும் என்று பிரார்த்தித்தலையும் இங்கு அறிந்து கொள்ளல் நலம்.

**"பூட்டொத்து மெய்யில் பொறியப்பட்ட வாயுவைத்**
**தேட்டற்ற அந்நிலம் சேரும் படிவைத்து**
**நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்**
**தோட்டத்து மாம்பழம் தொங்கலு மாமே"**

ஆம். கனியினும் இனிய சிவத்தை, 'தோட்டத்து மாம்பழம்" என்கிறது திருமந்திரம்.

அக் கனியை அனுபவிக்கும் பொழுது, வாய் மவுனம் மன மவுனம் தானே வரும். அந்த மவுனத்தில் விளையும் சுவை, வரையறை யின்றி வளர்கிறது. 'மவுன நறுஞ்சுவை மேல் பொங்கி' என ஓதும் போதே நாவில் நீர் ஊறுகிறதே! அன்புக் கனியைச் சுவைக்கச் சுவைக்க, அதை அனுபவிக்கும் பரிபாகம் அதிகரிக்கும். 'பதம் பொருந்த அனுபவிக்கும்' அப்பொழுது, அன்புக் கனி சிவப்பழம் என்று சிறக்கும்.

இந் நிலையரையும், மாயை மேலும் மயக்க முயலும்; கன்மம் ஒருபுறம் கால் தட்டும். அதை யறியும் ஞான சாதகர், அவைகளையும் அவைகளின் சேட்டைகளையும் அசட்டை செய்வர். அச் செயலே அவைகளை விரட்டியடித்தபடி.

**"மாயையெனும் படுதிருட்டுச் சிறுக்கியிது கேளுன்**
**மாயையெலாம் சுமைசுமையா வரிந்துகட்டிக் கொண்டுன்**
**சாயையெனும் பெண்ணினத்தார் தலைமேலும் உனது**
**தலைமேலும் சுமந்துகொண்டோர் சந்துவழி பார்த்தே**
**பேயெனக்காட் டிடையோடிப் பிழைத்திடுநீ! யிலையேல்**
**பேசுமுன்னே மாய்த்திடுவேன், பின்னுமுன்னும் பாரேன்;**
**ஆயெனைநீ அறியாயோ? எல்லாம்செய் வல்லார்**
**அருளமுதுண் டருணிலைமே லமர்ந்தபிள்ளை நானே"**

என மாயையினையும்,

**"கன்மமெனும் பெருஞ்சிலுகுக் கடுங்கலகப் பயலே!**
**கங்குகரை காணாத கடல்போலே வினைகள்**
**நன்மையொடு தீமையெனப் பலவிகற்பங் காட்டி**
**நடத்தினை;நின் னடத்தையெலாம் சிறிதும் நடவாது**
**என்முனிருந் தனையெனில்நீ அழிந்திடுவாய்; அதனால்**

**இக்கணத்தே நின் இனத்தோ டேகுகநீ! இலையேல்**
**இன்மையுற மாய்த்திடுவேன் என்னையறி யாயோ**
**எல்லாம்செய் வல்லவனுக் கினியபிள்ளை நானே"**

எனக் கன்மத்தினையும் வள்ளலார் கடிதலை, ஆறாவது திருமுறையானும் அறியலாம். இப்படியே அப்பர் பெருமான்,

**"பொய்ம்மாயப் பெருங்கடலில் புலம்பா நின்ற**
**புண்ணியங்காள்! தீவினைகாள்! திருவே! நீங்கள்**
**இம்மாலைப் பெருங்கடலை அரித்துத் தின்பீர்க்கு**
**இல்லையே கிடந்துதான்; யானேல் வானோர்**

**தம்மானைத், தலைமகனைத், தண்ணலா ரூர்த்**
**தடங்கடலைத், தொடர்ந்தோரை அடங்கச் செய்யும்**
**எம்மான்றன் அடித்தொடர்யான் உழிதர்கின்றேன்**
**இடையிலேன் கெடுவீர்கள் இடரேன்மின்னே"**

அருளுதலும் இங்கு எண்ணத் தகும்.

மாயையை, கன்மத்தை இப்படி மருட்டி விரட்டும் வைராக்கிய சீலர்களைக் 'கடுந்தொழிலோர்' என்பது கருதற்குரிய செய்தி.

பொதுவாக எவர்க்கும் அருள்புரியும் பொருளாளன், இந்த ஞான சீலர்கட்கே பேரருளைப் பெருக வழங்கலும், அருந்துணையாக அவர்கள் இடத்தில் அமர்தலும் உடையான் ஆதலின், 'கடும் தொழிலோர் தமக்கே நல் கருணை காட்டி, விழுத்துணையாய் அமர்ந்தருளும் பொருளே" என்றார்.

எழுத்தறிதல் ஆதியன அறம்; அந்நெறி வழுவாதார்க்கு சிறக்க வருகிறது சிவக்கனி. அது அருளும் பொருளாக ஆகிறது. அதன்பின் அவர்கள் உறவு கொளும் மோன வெளியில், இன்ப விளைவாகி எழுகிறது; இதை, 'மோன வெளியில் ஆநந்த விளைவாம் தேவே' என்பது அருமையினும் அருமை,

**"மோனம்கை வந்தோர்க்கு முத்தியும் சித்திக்கும்**
**மோனம்கை வந்தோர்க்கு சித்தியும் முன்னிற்கும்**
**மோனம்கை (வந்(து) ஊமை யாமொழி முற்றுங்காண்**
**மோனம்கை வந்தைங் கருமமும் முன்னுமே"**

(ஊமையாம் மொழி முற்றும் -பேசாத மந்திரம் (அஜபா காயத்திரி) சித்திக்கும். ஐங்கருமமும் முன்னும்-பஞ்ச கிருத்தியங்களும் கைவல்யம் ஆகும்.)

இந்தத் திருமந்திரம், மோனத்தால் வரும் பேற்றினை அழகாக விவரிக்கின்றது அல்லவா! (59)

**உருத்திரர்நா ரணர்பிரமர் விண்ணோர் வேந்தர்**
**உறுகருடர் காந்தருவர் இயக்கர் பூதர்**

**மருத்துவர்யோ கியர்சித்தர் முனிவர் மற்றை**
**வானவர்கள் முதலோர்தம் மனத்தால் தேடிக்**
**கருத்தழிந்து தனித்தனியே சென்று வேதங்**
**களைவினவ மற்றவையும் காணேம் என்று**
**வருத்தமுற்றாங் கவரோடு புலம்ப நின்ற**
**வஞ்சவெளி யேயின்ப மயமாம் தேவே.**

(ப-ரை.) உருத்திரர்-(ஒழிக்கும் பெரியவரான) உருத்திரர், நாரணர்-(காக்கும் பெரியவரான) கடல்நிற வண்ணத்திருமால்; பிரமர்-(படைக்கும் பெரியவரான) பிரமதேவர்; விண்ணோர் வேந்தர்-விண்ணுலகர் தலைவரான தேவேந்திரர்; உறுகருடர்-கனம் மிகுந்த கருடர்; காந்தருவர்-, இயக்கர்-, பூதர்-, மருத்துவர் - அஸ்வினி தேவர்கள்; யோகியர்-, சித்தர்-, முனிவர்-, மற்றை வானவர்கள் முதலோர்-மற்றும் அந்தர வாசிகள் முதலிய அனைவரும்; தம் மனத்தால் தேடி-(அரிய) தங்கள் மனத்தால் (பலகாலம்) சிந்தித்து ஆயந்து;கருத்து அழிந்து-(பரம்பொருள் தரிசனம் பலிக்காமையால்) சிந்தை நைந்து; தனித் தனியே சென்று வேதங்களை வினவ-(ஒவ்வொருவரும்) தனித் தனியே வந்து, (விமல மெய்ப்பொருள் எங்குளது என்று) வேதங்களை வினவுதலும்; மற்று அவையும் காணேம் என்று-அவைகளும் (நாங்கள்) அறிந்திலேம் என்று; வருத்தம் உற்று ஆங்கு அவரோடும் புலம்ப நின்ற வஞ்ச வெளியே-துன்பம் கொண்டு, அதே இடத்தில் (வினவிய) அவர்களுடன் ஒப்பாரியிட இருந்த வஞ்சமுள ஞானாகாய வடிவனே; இன்ப மயம் ஆம் தேவே-பேரின்ப சொருபமான பெருமானே, (எ-று.)

(வி-ரை.) சொருப சிவத்தை மறைகள் பல இடங்களில் சொல்லித் துதித்தன; அவைகளை ஓதி உணர்ந்த மேலோர், அதைத் தாமும் அறிய ஆவலித்தனர். காயத்தாலும், கண்ணாலும் கருத்தாலும் அரிது முயன்றும் பரம்பொருள் அகப்படவில்லை. விளம்பிப மறைகளையே வினவும் என்னும் எண்ணம் எழுந்தது. அதை முதலில் அறிந்தவர் யாம் என்னும் பிரசித்தி எய்த வேண்டும் என்கின்ற முனைப்பு எவர்க்கும் எழுந்தது. அதனால், சால்புடைய மறைகளைத் தனித்தனியே சந்தித்தனர். எங்கே உளது பரம்? எப்படியுளது சிவம்? அதை எந்த வழியில் அடைவது என்று விநயம் காட்டி விண்ணப்பித்தனர். சொற்பிரபஞ்சமான வேதங்கள், அது குறித்த தங்கள் தோல்வியை எண்ணித் தொய்ந்தன. இந்நிலையில் ஒவ்வொருவராக வந்து வினவிய பொழுது, அவைகளின் துன்பம் அதிகரித்தது. யாமும் கண்டிலேம் எனும் ஒரே பதிலை எவர்க்கும் சொல்லிக் கதறத் தொடங்கின. வினவிய எவரும் அவைகளுடன் விம்மலாயினர்.

அவர்கட்கும் அவைகட்கும் அகப்படாத பரம், வளர்ந்து பெருகும் வாக்கிலுளது. நுட்பம் ஆன நோக்கிலுளது சிந்தனையிலும் எழுந்த செயலிலும் உளது. புலம்பும் அவர்களது ஒலியிலும் இருந்து புன்னகை செய்கின்றது. ஆம். அது 'வஞ்சவெளி' "வஞ்சமிலார் நாம் வருந்திடில் அப்போதே, அஞ்சல் என்பார் இதோ அம்பலத் திருக்கின்றார்-அஞ்சாதே நெஞ்சே! அஞ்சாதே" என்பது இயற்கைக் குரல்.

அதையறியாமல் அவர்களது பொருபொருத்த முனைப்பும், புறம்போன புந்தியும், மாபெரும் வியாபக பரத்தை மறைத்துளது. அதனை எவரும் அறிந்திலர். பாச ஞானத்தால் விளைந்த பரிபவம் இது.

பதிஞானப் பண்பினர், அகமுகமாகி, தன் முனைப்பின்றி, அப்பரத்தின் வியாப்பியம் ஆகி ஆநந்தம் எய்தினர். 'இன்ப மயமாம் தேவே' என்று ஏத்திப் போற்றி இறைஞ்சுகின்றனர். இந்த அருமையான செய்திகளை, நுட்பமாக அறிவித்த பா இது.

**"வரும்போம் என்பனவும் இன்றிஎன்றும் ஒருபடித்தாய்,**
**வானாதி தத்துவத்தை வளைந்தருந்தி வெளியாம்;**
**இரும்போகல் லோமரமோ எனும்நெஞ்சைக் கனன்மேல்**
**இட்டெழு காஉருக்கும் இன்பவெள்ளம் ஆகிக்,**
**கரும்போகண் டோசீனிச் சருக்கரையோ தேனோ**
**கனியமிர்தோ எனருசிக்கும் கருத்தவிழ்தோ ருணர்வார்;**
**அரும்போநன் மணம்காட்டும்? காமரசம் கன்னி**
**அறிவாளோ அபக்குவர்க்கோ அந்நலந்தான் விளங்கும்"**

எனும் தாயுமானார் பாடல், இன்பமயமானது இறைநிலை எனலை, அருமையாக எவர்க்கும் அறிவிக்கின்றது அல்லவா!

**பாயிரமா மறைஅநந்தம் அநந்தம் இன்னும்**
**பார்த்தளந்து காண்டுமெனப் பல்கால் மேவி**
**ஆயிரமா யிரமுகங்க ளாலும் பன்னான்**
**அளந்தளந்தோர் அணுத்துணையும் அளவு காணா**
**தேயிரங்கி அழுதுசிவ சிவவென் றேங்கித்**
**திரும்பஅருட் பரவெளிவாழ் சிவமே ஈன்ற**
**தாயிரங்கி வளர்ப்பதுபோல் எம்போல் வாரைத்**
**தண்ணருளால் வளர்த்தென்றும் தாங்கும் தேவே.**

(ப-ரை.) பாயிரம் மா மறை அநந்தம்-வரலாற்று முகமான மகிமை யுடைய அளவிறந்த மறைகள்; இன்னும் பார்த்து அளந்து காண்டும் எனப் பல்கால் மேவி-இனியும் அளவை இலக்கணத்தால் ஆய்ந்து அறிவம் என்று பலதரம் முயன்று; பல் நாள் ஆயிரம் ஆயிரம் முகங்களாலும் அளந்து அளந்து-பல காலமாகப் பலப்பல வழிகளாலும் அறிவால் இடையறாது அளந்து; அந்தோ ஓர் அணுத் துணையும் காணாதே இரங்கி அழுது-ஐயோ ஒரு அணு அளவும் அறியாமலே அயர்ந்த நிலையில் அழுதன ஆகிப்; சிவசிவ என்று-ஏங்கித் திரும்ப-பொருமிப் புறம் கண்டு போக; அருள் பரவெளி வாழ் சிவமே-(சிறந்த) அருளை யுடைய பர ஆகாயத்தில் வாழ்கின்ற சிவமே; ஈன்ற தாய் இரங்கி வளர்ப்பது போல்-பெற்ற அன்னை மனம் கனிந்து (வயிற்றுப் பிள்ளையைக் கண்காணித்து) வளர்ப்பது போல்; எம்போல்வாரை' தண் அருளால் வளர்த்து என்றும் தாங்கும் தேவே-எம்போலும் அகதிகளை, தண்மைக் கருணையால் எந்த நாளிலும் தாங்கிக் காக்கும் தெய்வமே, (எ-று.)

(வி-ரை.) பாயிரம்-வரலாற்றுச் சுருக்கம். தொகுத்துக் கூறும் இது, வகையாகிப் பின் விரிதலுறும். அருள் நூற்கள், ஆதிமுதல் இம் மரபை எவர்க்கும் அறிவித்துள. அளவிறந்து மேலும் அறிவம் என்று, முறையே மறைகள் மேலும் முயன்றன. எவ்வளவுதான் ஆய்ந்தாலும், அணு அளவும் பரத்தை அறிய இயலவில்லை. இந்த ஆய்வு, அளவிறந்த சமயங்களாகி ஆரவாரித்ததுதான் கண்ட பலன். ஏதமான தம் முயற்சியால் விளைந்த விபரீதங்களை எண்ணி, அழுது

மறைகள் அலமந்தன. தேவா! அருளிரக்கம் கொண்டு நீ அறிவித்தாலன்றி, எவரும் நின்னை அறிதல் இயலா என்று பெருந்துயர் கொண்டு பின்வாங்கின. முன்னேற வேண்டும் என்று குரல் கொடுப்பார் எவரும், பலரைப் பின் தள்ளும் பாவப் பருமையைப் பரப்பியது அன்றி, அருமை அமைதியை அறிந்தது இல்லையே! அறிவோம் எனும் அகங்காரம் அகன்று, "காவாய் என்று கைதொழு வார்க்கெலாம் ஆவா என்றிடும் ஆனைக்கா அண்ணலே!" என்று உண்மைத் தமிழ்மறை, உரியானைத் தரிசிக்கும் உளவுரைக்கின்றது.

சிறந்த அருளுடையது சிவம். அது, வித்தக ஞானத்தில் விளங்குவது. வளர்விக்கும் சொருப வாழ்வானது, 'அருள் பரவெளிவாழ் சிவமே!' என்று, வியன்மிகு குரல் கொடுத்து விளிக்க உரியது. பத்துத் திங்கள் சுமந்து பெற்ற பிள்ளையை, நீராட்டிச் சீராட்டிப் பாலூட்டி அன்பொடு வளர்க்கின்றாள் அன்னை. அவளைப்போல்,

**"காரிட்ட ஆணவக் கருவறையில், அறிவற்ற**
**கண்ணிலாக் குழவியைப் போல்**
**கட்டுண் டிருந்தஎமை வெளியிட்டு, அல்லலாம்**
**காப்பிட்(டு) அதற்கிசைந்த**
**பேரிட்டு, மெய் என்று பேசும்பாழ்ம் பொய்யுடல்**
**பெலக்கவிளை அமுதம் ஊட்டிப்,**
**பெரியபுவ னத்திடை போக்குவர வுறுகின்ற**
**பெரியவிளை யாட்(டு) அமைத்திட்டு,**
**ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பின், நமனைவிட்டு**
**இடருற உறுக்கி, இடர்தீர்த்து,**
**இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்,**
**இசைந்துதுயில் கொள்மின் என்று**
**சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே!**
**சித்தாந்த முத்தி முதலே!**
**சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே**
**சின்மயா நந்த குருவே"**

எனும் தாயுமானார் அறிந்து கூறும் அனுபவம்போல், எம் போல்வாரை, தண் அருளால் வளர்த்து என்றும் தாங்கும் தேவே' என்றார். (61)

**அந்தரமிங் கறிவோமற் றதனில் அண்டம்**
**அடுக்கடுக்காய் அமைந்தஉள வறிவோம் ஆங்கே**
**உந்தறும்பல் பிண்டநிலை அறிவோம் சீவன்**
**உற்றநிலை அறிவோமற் றனைத்து நாட்டும்**
**எந்தைநினை தருள்விளையாட் டந்தோ அந்தோ**
**எள்ளளவும் அறிந்திலோம் என்னே என்று**
**முந்தனந்த மறைகளெலாம் வழுத்த நின்ற**
**முழுமுதலே அன்பர்குறை முடிக்கும் தேவே.**

(ப-ரை.) அந்தரம் இங்கு அறிவோம்-இருந்த இடத்தில் இருந்தபடியே ஆகாயம் முழுமையையும் அறிவோம்; மற்று அதனில் அண்டம் அடுக்கு அடுக்காய் அமைந்த உளவு அறிவோம்-அந்த விண்ணில் பல அண்டங்கள் ஒன்றன் மேல்

ஒன்றாய் அடுக்கி வைத்துள்ள அதிநுட்பங்களை அறிவோம்; ஆங்கே உந்துறும் பல் பிண்ட நிலை அறிவோம்-அந்த இடந்தோறும் இயக்கப் பெறும் பலவான ஆக்கைகளின் தத்துவத்தை அறிவோம்; சீவன் உற்ற நிலை அறிவோம் -(பொங்கும் அவ்வுடல்களுக்குள் புகுந்திருக்கும்) ஆன்மாக்களின் வேறுபாடுகளை அறிவோம்; மற்று அனைத்தும் நாட்டும் எந்தை-இவ்வாறே (நீளும்) அனைத்தையும் நிலை பெறச் செய்கின்ற எமது பரம தந்தையே; நினது அருள் விளையாட்டு -உமது அருள்மயமான திருவிளையாடல்களை! அந்தோ அந்தோ எள் அளவும் அறிந்திலோம் என்னே என்று-ஐயையோ ஐயோ! எள் அத்தனையும் அறிந்து கொண்லோம் என்ன வியப்பு இது என்று; முந்து அநந்த மறைகள் எல்லாம் வழுத்த நின்ற முழுமுதலே-முதன்மை பொருந்திய அளவிறந்த வேதங்கள் யாவும் (முன்னித்) துதிக்க இருந்த முழுமையை யுடைய முதல்வனே; அன்பர் குறை முடிக்கும் தேவே-அன்பர்களின் (மனத்திலுள) குறைகள் அனைத்தையும் தீர்க்கும் ஆண்டவனே,(எ-று.)

(வி-ரை.) மண் நீரில் ஒடுங்கும். நீர் நெருப்பில் அடங்கும். நெருப்பு காற்றில் ஒடுங்கும். காற்றும் விண்ணில் கலக்கும். எண்பத்து நான்கு லட்ச சீவபேதங்களது உரிய நினைவுகளின் உயிர்ப்பு, உயர்ந்த அவ் விண்ணில் ஒடுங்கும். தூய மறைநாதம், துதி ஓசை, மந்திர ஒலி, அபர நாதம், பரநாதம், அருள்நாதம் யாவும் அந்த அந்தரத்தில் ஒடுங்கும். புத்திகட்கும் புறக்கண்கட்கும் புலனாகாத அருவமான விண்ணில், இங்ஙனம் ஆயிரம் ஆயிரமான ரகசியங்கள் அடங்கியுள. அவைகளை எவரும் அறியார். யாம் ‘அந்தரம் இங்கு அறிவோம்.

அண்டங்கள் ஒன்றன்மேல் ஒன்றாய் விண்ணில் சுழன்று விளையாடுகின்றன. அவைகள் கீழ் விழாமல் எப்படி அந்தரத்தில் இயங்குகின்றன? இந்நுட்பம் எவரும் அறியார்; யாம் அந்த ‘உளவு அறிவோம்.’

அண்டத்தில் பல பிண்டங்கள் அனுப்பப் பெறுகின்றன. அவைகளை அனுப்புபவர் யார்? ஆஹா! பிண்டங்களில்தான் எத்தனை பேதம்! ஏன் அப்படி! இவைகளின் ரகசியங்களை எவரும் அறியார்; யாம் ‘பிண்டநிலை அறிவோம்’.

நுட்பமான உயிர்கள், அப்பிண்டங்களுள் எப்படி நுழைந்தன? அவைகளின் வினையளவான குணங்கள் எப்படி விளைகின்றன? இந்நுட்பம் எவரும் அறிந்திலர். யாம் ‘சீவன் உற்ற நிலை அறிவோம்’. இங்ஙனம் உரைப்பது கொண்டு, மறைகளின் அருமை பெருமைகளை அறிந்து கொள்கிறோம். எனினும் அவைகளை ஆக்கி அளித்து அடக்கும் உமது அருளாடல் நுட்பங்களைச் சிறிதும் அறிய முடியவில்லையே என மறைகள் அலறுகின்றன எனில், எண்ணிறந்து கற்றேம் என்னும் புலமை இறுமாப்புப் பொடியாய் இடிந்து போகிறதே! அறிவித்தால் அன்றி அறியா ஆன்மாக்கள், எத்தனைதான் கற்றாலும், ஏட்டளவு செய்திதானே! அரிய முதலாளிகளான பிரமனாதியரும் அணுபட்சர்; முழுமுதலான சம்புபட்சர் அல்லரே; கடலில் ஒரு துளி நீர் என்பதுபோல், எத்துணைப் பெரியவரும் வியாபக விலாசத்தின் முன் ஒரு அணு ஆகின்றார் எனின், பராகாய சிவத்தின் ஒரு சிற்றெல்லையையும் அவர்கள் அறிந்து கொண்டது இல்லையே! இவைகளை எண்ணும் போதெல்லாம், ஆணவம் அடங்கும். மாயை மடங்கும். கன்மம் நுடங்கும். சிவசிவ என்று தேம்பி, ஆவியே நிறைய வந்த அமுதமே என்று, அலறிக் கதறுகிறது ஆன்மா. அந்த நிலையில் அதன் பெயர் அன்பன் என்று ஆகும்.

புற்கலன் -அறியாய மும்மல சம்பந்தி எனும் அற்பமான பாத்திரம். பசு- ஒருபடி உயர்ந்த தெனினும், மும்மலத்தொடு முறை மறந்து முனைப்பது. ஜீவன் - இருமலம் உடையது. ஆன்மா - ஒரு மலம் உடையது. உயிர் - (உடம்பில்) உயிர்த்துக்கொண்டு இருப்பது. அன்பர் - சிவத்தின் நிழலாகிச் சிறப்புறுவது.

வேதத்தின் தோல்வி விளங்கிய பின்னர், தன் முனைப்பு அடங்கி, அகதியான தன்னிலையறிந்து, கதியான இறையின் அடிமலரில் தன்னை அர்ப்பணிக்கும் போது அன்பர் என்னும் பெயரை அடைகிறது ஆன்மா. அந்நிலையில் பரம், அதன் குறைதவிர்த்து ஆளும் செய்தியை அருமையான இப்பாசுரத்தால் அறிந்து கொள்கிறோம்.

“எண்ணிய நம் எண்ணமெலாம் முடிப்பான் மன்றும் எம்பெருமான்” எனவரும் மகாதேவ மாலை 97-ஆம் பாசுரமும் 11-ஆம் பாசுரமும் இங்கு ஒத்திட்டு உணர்தல் நலம்.

அறிவோம் எனும் முனைப்பே, திருவருள் நுட்பத்தை அறியாதபடி திரையிட்டு விடுகின்றது. இந்த சம்பவத்தை எண்ணும் போதெல்லாம், கலங்குகிறது மனம். கலுழ்கிறது கண்ணீர். (சிவசிவ சிவசிவ.) (62)

**தோன்றுபர சாக்கிரமும் கண்டோம் அந்தச்**
**சொப்பனமும் கண்டோம்மேல் சுழுத்தி கண்டோம்**
**ஆன்றபர துரியநிலை கண்டோம் அப்பால்**
**அதுகண்டோம் அப்பாலாம் அதுவும் கண்டோம்**
**ஏன்றஉப சாந்தநிலை கண்டோம் அப்பால்**
**இருந்தநினைக் காண்கிலோம் என்னே என்று**
**சான்றேஉப நிடங்களெலாம் வழுத்த நின்ற**
**தன்மயமே சின்மயமே சகசத் தேவே.**

(ப-ரை.) தோன்று பர சாக்கிரமும் கண்டோம்-நிகழ்கின்ற நின்மல சாக்கிர நிலையையும் அறிந்தோம்; அந்த சொப்பனமும் கண்டோம்-அப் பர சொப்பன நிலைகளையும் பார்த்தோம்; மேல் சுழுத்தி கண்டோம்-(அதன்) மேல் அமைந்த (தனிப்பெரும்) சுழுத்தியையும் தரிசித்தோம்; ஆன்ற பர துரிய நிலை கண்டோம்-பரவிய பரதுரிய நிலைகளையும் பார்த்து விட்டோம்; அப்பால் அது கண்டோம் அதற்கும் மேற்பட்ட அந் நின்மல துரியாதீத நிலைமையும் அறிந்தோம்; அப்பால் ஆம் அதுவும் கண்டோம்-அதற்கும் மேற்பட்ட சிவசாக்கிர சிவசொப்பன சிவசுழுத்தி நிலைகளாகிய அவைகளையும் சேவித்தோம்; ஏன்ற உபசாந்த நிலை கண்டோம் இயல்வதான சிவ துரிய நிலையைச் சேவித்தோம்; அப்பால் இருந்த நினை கண்கிலோம் என்னே என்று-(அதற்கு) அப்பால் ஆன உம்மை அறிந்திலேம் என்ன வியப்பு இது என்று; சான்ற உபநிடதங்கள் எல்லாம் வழுத்த நின்ற தன் மயமே-சாட்சி மாத்திரமான உபநிடதங்கள் யாவும் துதித்து முறையிட உள்ள தன்மயமான தற்பரனே; சின்மயமே-ஞான சொருபமே; சக சத் தேவே-அந்த ஞானத்தின் உடனான மெய்ப் பொருளே, (எ-று.)

(வி-ரை.) ஆன்ற-அகன்ற; நிறைவுடைய எனினுமாம். ஏன்ற-(மேல்) ஏற்றம் பெற்றுள. உபநிடதங்கள் எனற்பாலது, ஓசை நயம் கருதி உபநிடதங்கள் எனச் சிதைந்தது. தன் மயம்-தற்சொருபம். சக சத் தேவே என்பதில், சகம்-சமம்; சத்-மெய்ம்மை.

ஆணவத் தொடர்பால் ஆன்மா எதையும், தனித்து அறியாது. காயம் என்பது மாயையின் காரியம். அந்தத் தேகம், ஆன்மா எதையும் அறிதற்குக் கருவியாக அமைந்திருக்கின்றது. ஆக்கையில் உள்ள தத்துவங்கள் யாவும், உயிர்கட்கு எப்பொழுதும் உபயோகப்படுவது இல்லை.

(1) நனவு எனும் விழிப்பில், புருடன் எனும் ஆன்மாவிற்கு, முப்பத்தைந்து தத்துவங்களும் கை கொடுக்க முந்துகின்றன.

(2) கனவில், இருபத்தைந்து தத்துவங்கள் துணையாக இருக்கின்றன.

(3) சுழுத்தி எனும் உறக்கத்தில், இரண்டு தத்துவங்கள், ஊன்றும் துணையாக உதவுகின்றன.

(4) துரியத்தில், ஆன்மாவும் பிராண வாயுவும் ஆன இரண்டு மட்டும் இருக்கின்றன.

(5) துரிய அதீதத்தில், ஆன்மா தனித்து இருக்கின்றது.

இங்ஙனம் தத்துவங்கள் கூடுதல் குறைதல் காரணமாக, ஆன்மாவிற்கு ஐந்து நிலை வேறுபாடுகள் உள. நிலைகள் வேறுபடும் பொழுது, இயல்பான அறிவு முகுந்தும் குறைந்தும் இருப்பது இயற்கை.

இந்த அவஸ்தைகள், கேவலம் சகலம் சுத்தம் என மூன்று வகைப்படும். கருவி கரணங்களில் கலவாமல், ஆணவமும் தானுமாய் ஆன்மா இருந்த நிலை கேவலம்.

கருவி கரணங்களொடு கலந்து, இறப்பு பிறப்பில் இருக்கும் நிலை சகலநிலை.

கருவி கரணங்களொடு கலவாமல், அருளொடு கலந்துள நிலை சுத்தநிலை.

## கேவலத்தில் ஐந்து

(1) புருவ நடுவில் இருந்தும், நீளும் தத்துவங்கள் நீங்குதலால், கண்டும் காணாமல், கேட்டும் கேளாமல் மயங்கி யிருக்கும் நிலை, கேவல சாக்கிரம்.

(2) சாக்கிரத்தில் அனுபவித்தவைகளை, நினைவில் நிறுத்தி யிருப்பது கேவல சொப்பனம்

(3) உயிர் இதயத்தில் சென்று உறங்கும் நிலை, கேவல சுழுத்தி.

(4) அத் துயிலில் அழுந்திய நிலை, கேவல துரியம்.

(5) உயிர்ப்பும் அடங்கி, எந்த அறிவும் இன்றி இருப்பது, கேவல துரிய அதீதம்;

இவைகள் கீழாலவத்தை எனப்பெறும்.

## சகலத்தில் ஐந்து

(1) சிறந்த உயிர் புருவ நடுவில் செயல்படும் பொழுது அதிர்ச்சிக் குரியவை ஏதேனும் நிகழுமேல், உணர்வற்று அப்பொழுதே உயிர்ப்பும் அற்று ஒடுங்கும் நிலை, சகல துரிய அதீதம்.

(2) அதன்பின் மெல்ல உயிர்ப்பு உறுதல், சகல துரியம்.

(3) அத் துன்பங்களை அறிதல், சகல சுழுத்தி.

(4) துன்பத்திற்குக் காரணத்தை, அறிந்து அனுபவிப்பது சகல சொப்பனம்

(5) அதன் பின் பழையபடியே புருவ நடுவில் இருந்து, அனைத்தையும் அறிந்து அனுபவிப்பது, சகல நிலையில் சாக்கிரம்.

தியா லவஸ்தை எனப்பெறும்.

## சுத்தத்தில் ஐந்து

(1) சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் எனும் தன் மாத்திரைகள், சிவமயம்; அவைகளால் விளையும் இன்பமே முழுமை என்று, சிறப்பாக உணர்ந்து அனுபவித்தல் சிவாநந்தம். “கண்டு கேட்டு உண்டு உயிர்ந்து உற்றறியும் ஐம்புலனும், ஒண்தொடி கண்ணே உள என்னும் -பண்டையோர், கட்டுரையை மேம்படுத்தாள்” என வரும் திருக்கயிலாய ஞானவுலா. இங்குச் சிந்திக்கத் தகும். இது, நின்மல சாக்கிரம்.

(2) சிவோகம் பாவனையை சிறக்கச் செய்தும் உள்முகமாகத் தியானித்து இருத்தல், நின்மல சொப்பனம்.

(3) வளதும் அந்தத் தியான வழியில் காண்பானும், காட்சியும், காணப்படு பொருளும் சிவமே என அறிந்து அனுபவிப்பது, நின்மல சுழுத்தி;

(4) உடல், கருவி, கரண நினைவு முழுதும் நீங்கி, நெகிழும் ஞான மயமாக நிற்பது, நின்மல துரியம்.

(5) பிரம ரந்திரத்தில், சிவாந்த போகம் எய்தி அசைவற்று இருப்பது, நின்மல துரிய அதீதம் எனப்பெறும். நினைவில் எழும் இவைகளை விவரித்தால், மேலும் பெரிதும் நீளும்.

இவைகளைத் திருமந்திரத்தில் திருமூலர், எட்டாந் தந்திரத்தில் விரிவாகப் பெரிதும் விளக்கியுளர். ஆங்கு அவைகளை ஓதியறிதல் நலம்.

பரசாக்கிர, பரசொப்பன, பரசுழுத்தி முதலியவைகளைப் பார்த்து, அவைகட்கும் அப்பாற்பட்டு விளங்கும் சுத்த அறிவு, பரசொருபத்தில் பதியும். எழுத்தளவில் இவைகளை இவ்வளவுதான் எழுத இயலும்; சாதனா சம்பந்திகளை சார்ந்து, அனுட்டான அனுபவத்தில் உண்மை நுண்மைகளை உணர்தல் முறை. உபநிஷத்துகள், வேதசாரமாக விளங்குபவை; அவைகளின் நிலையே தோல்வியெனில், குணங் குறியற்று இன்ப நிலை கூடாமல், இவைகளைக் குறித்து மேலும் வாய்திறத்தல் வழியன்று, முறையன்று; அது வம்புநடை.

**"அன்னம் ஆதி ஐங்கோசம்,**
**அவத்தை, கரணம், அகம் புறமாம்**
**பின்னம் ஆகிச் சுழல்வர் நின்**
**பெருமை யறியார் பிறரன்றோ"**

என்பது பாசவதைப் பரணி. (63)

**பரிக்கிரக நிலைமுழுதும் தொடர்ந்தோம் மேலைப்**
**பரவிந்து நிலையனைத்தும் பார்த்தோம் பாசம்**
**எரிக்கும்இயல் பரநாத நிலைக்கண் மெல்ல**
**எய்தினோம் அப்பாலும் எட்டிப் போனோம்**
**தெரிக்கரிய வெளுமூன்றும் தெரிந்தோம் எங்கும்**
**சிவமேநின் சின்மயம்ஓர் சிறிதும் தேறோம்**
**தரிக்கரிதென் றாகமங்க ளெல்லாம் போற்றத்**
**தனிநின்ற பரம்பொருளே சாந்தத் தேவே.**

(ப-ரை.) பரிக்கிர நிலை முழுதும் தொடர்ந்தோம்-தூய மாயையின் சொருபம் தோன்றிய இடம் முழுதும் தொடர்ந்து சொன்றோம்; மேலே பரவிந்து நிலை அனைத்தும் பார்த்தோம்-மேன்மையை யுடைய பரவிந்து விலாசம் முழுமையையும் பார்த்தோம்; பாசம் எரிக்கும் இயல் பரநாத நிலைக்கண் மெல்ல எய்தினோம்-பந்தத்தைக் கொளுத்தும் இயல்புடைய பரநாதம் பலிக்கும் இடத்தில் அணு அணுவாக அணுகினோம்; அப்பாலும் எட்டிப் போனோம்-(சிறந்த அதற்கு) அப்பாலும் மேலேறிச் சென்றோம்; தெரிக்க அரிய வெளி மூன்றும் தெரிந்தோம்-(சொல்லால்) சொல்லமுடியாத (பரம், பரம்பரம், பராபரம் எனும் தெளிவான) மூன்று வெளிகளையும் தெரிந்து கொண்டோம்; சிவமே-,நின் சித்மயம்-உனது ஞான சொருபத்தை; எங்கும் ஓர் சிறிதும் தேறோம்-எந்த இடத்திலும் ஒரு சிறிதும்

தெளிந்தோம் இல்லை; தரிக்க அரிது என்று-(இது) தாங்க முடியாத வேதனை என்று; ஆகமங்கள் எல்லாம் போற்ற தனிநின்ற பரம்பொருளே-ஆகமங்கள் அனைத்தும் வழுத்த, (எதனொடும் ஒட்டாதும் ஒட்டியும்) தனித்து இருக்கின்ற மெய்ப்பொருளே; சாந்தத் தேவே-அமைதி மயமான ஆண்டவனே, (எ-று.)

(வி-ரை.) சித்சத்தி-ஜடசத்தி இறைவன் எண்ணிறந்த சக்திகளை யுடையவன்; அவர்களுள் இங்கு எண்ணற்கு உரியவர் இருவர். அவர்களுள் ஒருவர், சிவத்தை நீங்காத் சிற்சத்தி; இந்தச் சக்தியின் சொரூபம் மெய்ஞ்ஞானம்.

மற்றொரு சக்தியின் பெயர் மாயை; இவர்க்குப் பரிக்கிரக சக்தி யென்பது பழம் பெயர். அதனொடு, வைப்புச் சக்தி எனவும் ஒரு பெயர் வழங்குகிறது. (பரிக்கிரகம்-தாங்கப் படுவது பரி-பரித்தல்; கிரகம்-மாளிகை; சக்தி-துணைவி. வைப்பு சக்தி-விமலன் வேண்டும் பொழுது விளைவித்துக் கொள்ளும் ஒரு தோற்றம்.)

பரனால் தாங்கப் படுவதும், பரனைத் தவிர பிற ஆதாரம் இல்லாததும் ஆன அம் மாயைக்கு ஜடசக்தி எனவும் ஒரு பெயருளது. இச் சக்தியின் சொருபம், அதி மயக்கம் விளைவிக்கும் அஞ்ஞானம். மேல் சொன்ன மெய்ஞ்ஞான சக்தியும், இங்குரைத்த அஞ்ஞான சக்தியும், ஒளியும் இருளும் போல்வர். பரிக்கிரக சக்திக்கு சுத்த மாயை, அபரவிந்து எனப் பரியாயப் பெயர்களும் பலவுள. அந்த அபர சக்தியின் ஆட்சி, விரிந்த இடமெல்லாம் விளங்க அறிந்தோம் என்பார், ‘பரிக்கிரக நிலை முழுதும் தொடர்ந்தோம்’ என்றார். அதற்கு மேற்படுவது, பரவிந்து, பர நாதங்கள்.

தேவரும் மக்களும், அபர விந்து, அபர நாத வடிவமான மாயையின் சொரூபங்கள்; பரமன், பரவிந்து பரநாத சொருபன் ஆதலின், ‘பரவிந்து நிலையனைத்தும் பார்த்தோம்’ என்றவர், கேட்டதும் பந்தம் யாவும் பறந்து போம்படிச் செய்யும் ‘பாசம் எரிக்கும் இயல் பரநாத நிலைக்கண் மெல்ல எய்தினோம்’ என்றார். மெல்ல என்பதனால் அந்த நாதம் அனுபவம் விளைய நாள் பல ஆகும் என்பது குறிப்பு. ஆக்ஞா சக்கரத்தில் ஆன்மாவில் விளங்கி, பரவிந்து பரநாதங்களைக் காண்பிக்கும் கேட்பிக்கும் பரன்.

**“கண்ணாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துள்,**
**பண்ணாக்கி நின்ற பழம்பொருள் ஒன்றுண்டு**
**அண்ணாக்கின் உள்ளே அகண்ட ஒளிகாட்டிப்**
**புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே”**

என்பது திருமந்திரம்.

அறிகருவிகளின் கூட்டமான ஆக்கையுள், பண்டை நாதத்தைப் பரப்பும் பரம்பொருள் உளது; அது, அண்ணாக்கினுள் அளவற்ற பேரொளியைத் தரிசிக்க அருளும் என்று அரிய செய்திகளை இம்மந்திரம் குறிப்பிடுகின்றது.

அபர விந்து, அபர நாதம், பரவிந்து பரநாதம் எனும் அவைகளைத் தரிசித்தபின் வீணாத் தண்டுள் உணர்வு விறுவிறுத்தி மேலேறும்; அப்போதைய அனுபவத்தை,

**"கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்காட்டி**
**வீணாத் தண்டூடே வெளியுறத் தானோக்கி**
**காணாக்கண் கேளாச் செவியென்றிருப்பார்க்கு**
**வாணாள் அடைக்கும் வழியது ஆமே"**

என அறிவிக்கின்றார் திருமூலர். இங்கே கூறும் வெளி பரவெளி. இது துவாத சாந்தத்திற்கு மேல் உள்ள தூயவெளி.

இதன்மேல் பர அம்பர வெளி. (அம்பரம்-ஆகாயம்.) இதன்மேல் உளது பராபர வெளி; இதை, 'தெரிக்கரிய வெளி மூன்று' என்று தெரிவித்த அருமையே அருமை.

"இணக்கிற் பராபரத்து எல்லை" என்று திருமந்திரத்தின் ஆறாம் தந்திரம்.

எல்லாம் அறிந்தும் என்ன பயன்?

தன்முனைப்பு அழிந்தது இல்லை. அதனால், நீக்கமின்றி எங்கும் நிறைந்த அரிய நின் ஞான சொரூபத்தைச் சிறிதும் அறிய முடியவில்லையே! அதை அறியும் காலம் வரும் வரை, தொல்லைதான் பெரிதும் தொடருமே! இதை எண்ணும் போதெல்லாம் உள்ளம் நோகிறதே! பொறுக்க முடியவில்லையே என்று ஆகமங்கள் அலறுகின்றன. (ஆகமம்-மலத்தை விலக்கி வீடளிப்பது எனும் பொருட்பெயர்.)

அதே நேரத்தில் ஒட்டாது எதனிலும் ஒதுங்கியுளது மெய்ப்பொருள் என்பர், 'தனி நின்ற பரம் பொருளே' என்றார்.

"தன்னந் தனிநின் றதுதான் அறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப்பதுவோ"

என்பது கந்தரனுபூதி. (64)

**மணக்குமலர்த் தேனுண்ட வண்டே போல**
**வளர்பரமா னந்தமுண்டு மகிழ்ந்தோர் எல்லாம்**
**இணக்கமுறக் கலந்துகலந் ததீத மாதற்**
**கியற்கைநிலை யாததுதான் எம்மாற் கூறும்**

**கணக்குவழக் கனைத்தினையும் கடந்த தந்தோ**
**காண்பரிதிங் கெவர்க்குமெனக் கலைகள் எல்லாம்**
**பிணக்கறநின் றோலமிடத் தனித்து நின்ற**
**பெரும்பதமே மதாதீதப் பெரிய தேவே.**

(ப-ரை.) மணக்கு மலர் தேன் உண்ட வண்டே போல வளர் பரம ஆநந்தம் உண்டு மகிழ்ந்தோர் எல்லாம்-மனம் கமழ்கின்ற மலர்களில் உள்ள (வளமான) தேனைப் பருகுகின்ற வண்டுகளைப் போல், வளர்கின்ற பரம சிவாநந்தத்தைப் பருகி

மகிழ்ந்த பலரும்; இணக்கம் உற கலந்து கலந்து அதீதம் ஆதற்கு இயற்கை நிலை யாது அது ‘ஒன்று சேர்ந்து அழுத்தமான உறவு கொண்டு, (அதற்கு அப்பாலான துரிய) அதீதத்தில் தோய்தற்கு இயற்கையான நிலை எதுவோ அது; எம்மால் கூறும் கணக்கு வழக்கு அனைத்தினையும் கடந்தது-எங்களால் இயம்பப் பெறும் கணிதநிலை, (உலகில்) வழக்கமாக வழங்கும் நிலை அனைத்திற்கும் அப்பாற் பட்டது. அந்தோ-ஐயோ; இங்கு எவர்க்கும் காண்பு அரிது என இவ்வுலகில் எத்தகையோர்க்கும் காண இயலாதது என்று; கலைகள் எல்லாம் பிணக்கு அற நின்று ஓலம் இட (வித்தகக்) கலைகள் யாவும் வேறுபாடுகள் விலகி (ஒன்றுபட்டு) இருந்து அபயக் குரல் கொடுத்து அலற; தனித்து நின்ற பெரும் பதமே-(தரிசனம் ஆகாமல்) தனித்து இருக்கின்ற பெருமையை யுடைய சொரூப சிவமே; மத அதீத பெரிய தேவே-(அளவிறந்த) சமயங்கட்கும் அப்பாற்பட்ட பெரிய பொருள் எனப்பெறும் பொருமானே, (எ-று.)

(வி-ரை.) நறுமணம் மிகுந்த மலர்களை வண்டுகள் நாடும்; பயனான தேனைப் பருகி மகிழும்; இது, நாள்தோறும் எங்கும் நடைபெறுகின்ற செய்தி. அந்த வண்டுகள் போன்றவர்கள் ஞானிகள். மலரும் சாதனைகள் மலர்கள் போன்றவை. உள்ளம் ஆகிய கமலத்தில் ஊறும் தேனைப் போல்வது சிவாநுபவம். சிறந்த இந்தச் சாதகர்கள், சீவன் முத்தர்கள் எனப் பெறுவர்.

**“பூமாந்தும் வண்டெனநின் பொன்னடியைப் புண்ணியர்கள்**
**தாமாந்தி நின்னடிக்கீழ்ச் சார்கின்றார்”**

என்பது, திருவொற்றியூர் திருப்பதிகம்.

மலரில் உள்ள அற்பமான தேன், உலரும்வரை உருவாவது; அதிகம் உண்டால் தெவிட்டுவது; போதையை ஏற்றிப் பொன்றச் செய்வது; அதுபோன்ற உலகியல் இன்பம், பருவ காலத்தில் படர உரியது; தகுதி யுடைய உடலைத் தளரச் செய்வது; வரவர மரண நாளை வருவிப்பது. அங்ஙனம் இன்றி என்றும் பெருகி யிருப்பது; உண்ண உண்ணத் தெவிட்டாதது; ஆநந்த லகரியை அருள்வது; ஆயுள் பெருக்கம் அருள்வது; இனிப் பிறவி இல்லாமை செய்தது; நாவளவு அன்றி ஆன்மா இன்புற அருள்வது ஆகலின், ‘வளர்பரமா நந்தம் உண்டு மகிழ்ந்தோர்’ என்றார்.

**“தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே**
**நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்**
**அனைத்தெலும்(பு) உள்நெக ஆநந்தத் தேன்சொரியும்**
**குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ!”**

எனும் திருவாசகம் இங்கு எண்ணத் தகும். இதைப் பருகுபவர், ஆதிக்கம் செய்த மும்மல வாசனைகளை அகல்பவர். உலகை மறந்து, உடலைத் துறந்து, அநியாய முனைப்பு அழிந்து, தூய திருவருளின் துணையால் அதீதமான இயற்கை அத்துவிதம் ஆவர். இது, ‘இணக்கமுறக் கலந்து கலந்து அதீதம் ஆதற்கு இயற்கை நிலை.

அது யாது என, ஆரம்பத்தில் இடையறாது எண்ணின; காண்டற்கு அரியது எனக் கருதின, வாக்கும் மனமும் கடந்த மனோலயம் என மதித்தன. அதை மேலும் அடைய முயன்று, தூய வேத தேவதைகள் தோல்வி எய்தின. ஆகமங்கள் யாவும் அயர்ந்தன; தனிப்பெரும் உபநிடதங்கள் தளர்ந்தன. ஓத எளியன, உணர அரியன மறைகள்; உணர எளியன, ஓத அரியன கலைகள். அக் கலைகள், மெய்ப்பொருளை அவாவின. அது கருதி, கணக்கான பல வழிகளைக் கடைப் பிடித்தன; வழக்காமாகப் பிறர் கையாளும் வழிகளிலும் முயன்றன. முயன்று முயன்று, முடிசாய்ந்து போயின.

'அதுதான், எம்மால் கூறும் கணக்கு வழக்கு அனைத்தினையும் கடந்தது அந்தோ; இங்கு எவர்க்கும் காண்பரிது என' வேறுபட்ட அவைகள் ஒன்று கூடி ஓலம் இடலாயின என்றார். 'கணக்கு' என்பது, "கலையுரைத்த கற்பனைகள்" வேறு ஒரு இடத்தில்,

**"கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்**
**கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக"**

எனும் பகுதி இங்கு எண்ணத் தகும்.

வாக்காலும் மனத்தாலும் ஆய்வார் வரலாறு இது. தத்துவங்கள் அல்ல தாம் என்று அறிந்து, மனனம் செய்த (கைகாட்டி மரம் போன்ற) நூற்களை மறந்து, எதனிலும் ஒட்டாது பற்றாது சீவன் ஒதுங்குகின்ற போது, தனிநின்ற சிவம் தரிசனம் ஆகும். அணுகுகின்ற ஆன்மாவை அது, வா என்று வரவேற்கும். அவ்வமயம், 'தனிநின்ற பெரும் பதமே' என்று, கூப்பிக் கைகள் கும்பிடுகின்றன. தனி நிற்றல்-அந்தரங்கம் ஆன நிலை. "அந்தரங்க சேவை செய்ய-வெண்ணிலாவே-எங்கள் ஐயர்வரு வாரோ சொல்லாய்-வெண்ணிலாவே!" எனும் பகுதி இங்கு எண்ணத் தகும்.

**'பெரும்' என்பது-வியாபக விலாசம்.**

சொருப நிலையில் (சிவ) பதம்; அதையே பக்தர்கள், தடத்தத்தில் பாதம் என்று பகர்வர். மறைகள், அவைகளின் சிரமான உபநிடதங்கள், ஆராதனையைக் கற்பித்த ஆகமங்கள், கற்பனையைப் பெருக்கிய கலைகள் யாவும் கலகலத்த போது, அவைகள் உருவாக்கிய தொன்மைச் சமயங்கள் யாவும், தோல்வி நிலை எய்தித் தொய்ந்துவிடும். அவைகட்கு எல்லாம் அப்பாற்பட்டது இறைநிலை யாதலின், 'மதாதீதம்' என்றார். பெரிய தேவே என்றது, பிரம சைதன்யமே என்று, அப் பெரியபொருளை விநயமுகம் கொண்டு விளித்தபடி. (65)

**பொதுவென்றும் பொதுவில்நடம் புரியா நின்ற**
**பூரணசிற் சிவமென்றும் போதா னந்த**
**மதுவென்றும் பிரமமென்றும் பரம மென்றும்**
**வகுக்கின்றோர் வகுத்திடுக அதுதான் என்றும்**
**இதுஎன்றும் சுட்டவொணா ததனால் சும்மா**
**இருப்பதுவே துணிவெனக்கொண் டிருக்கின்றோரை**
**விதுவென்ற தண்ணளியால் கலந்து கொண்டு**
**விளங்குகின்ற பெருவெளியே விமலத் தேவே.**

(ப-ரை.) பொது என்றும் (எவர்க்கும்) பொதுவான அம்பலம் என்றும்; பொதுவில் நடம்புரியா நின்ற பூரண சித் சிவம் என்றும் -அம்பலத்தில் (புனித) தாண்டவம் புரிகின்ற (எங்கும்) நிறைந்த சித்தான சிவம் என்றும்; போத ஆநந்த மது என்றும்-தெளிந்த இன்பத் தேன் என்றும்; பிரமம் என்றும்-(எதற்கும்) பெரிய பொருள் என்றும்; பரமம் என்றும் வகுக்கின்றோர் வகுத்திடுக அதிநுட்பம் ஆனது என்றும் வகைப்படுத்தி உரைப்பவர்கள் உரைப்பார்களாக; தான் அது என்றும் இது என்றும் சுட்ட ஓணாது-அப்பொருள், அது என்றும் இது என்றும் சுட்டி யறிய இயலாதது; அதனால் சும்மா இருப்பதுவே துணிவு எனக் கொண்டு இருக்கின்றோரை-அந்த உண்மையினால், (மௌனமாக எதையும்) கூறாமல் வாளா (மன) மவுனம் கொண்டு இருக்கின்றவர்களை; விது வென்ற தண் அளியால் கலந்து கொண்டு விளங்குகின்ற பெருவெளியே-சந்திரனை வென்ற தண்மை யருளால் தழுவித் தம்மில் இயைவித்துப் பிரகாசித்திருக்கின்ற அகண்ட ஆகாயம் ஆனவனே; விமலத்தேவே-களங்கம் அற்ற கடவுளே, (எ-று.)

(வி-ரை.) "நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி, உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம், பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம், சிற்றம் பலமென்று தேர்ந்து கொண்டேனே" என்பது திருமந்திரம். எனவே 'பொது' என்பது புருவ நடுஇடம்; "எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற" சிவம், ஆரம்பத்தின் அங்குத் தரிசனம் ஆகும். வியாபகம் ஆகிப், பிறகு எங்கும் விளங்கும் ஆதலின், அது 'பூரணம்' என்றும் புகலப் பெறும். மாபெரும் அது சித் மயமாகும்; சிறந்த சத்தான அதுவே 'சிவம்'. அதுவே ஆநந்தத் தேன். "அந்த இடை மருதில் ஆநந்தத் தேனிருந்த, பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ" என்பது திருவாசகம். அதை பூரண சிற்சிவம் என்றும், போதாநந்த மது என்றும் புகல்வம்.

அதைப் பிரமம் என்றும் அறிவிப்பர்; பெரியது என்பது அப் பெயர்ப் பொருள். அது நுண்மை ஆன அது, 'பரமம்' என்றும் பகரப் பெறும். இப்படி யெல்லாம் வகை வகையாக வகுத்தும் விரித்தும் வாயாடுவார்க்கு வரையறை யில்லை. அப் பொருளை, அது என்றும் இது என்றும் விளங்கச் சுட்டுவது விபரீதமான விவகாரம்.

"அது ஆனால் அது ஆவர், அதுவே சொல்லும்" என்றும்,

"அது என்று உன்னும் அதுவும் அறநின்ற முதிய ஞானிகள் மோனப் பொருளது எது என்று எண்ணி இறைஞ்சுவன் ஏழையேன் மதியுள் நின்று இன்ப வாரி வழங்குமே" என்றும்.

"அது என்றால், எது என ஒன்று அடுக்கும் சங்கை ஆதலினால், அது எனலும் அறவே விட்டு, மதுவுண்ட வண்டெனவும் சனகன் ஆதி மன்னவர்கள், சுகர் முதலோர் வாழ்ந்தார்" என்றும் தாயுமானார் அறிவிப்பதை ஆழமாக ஊன்றி அறியும் பொழுது அது என்று சேய்மையிலும், இது என்று அண்மையிலும் சுட்டிச் சுட்டி அலை மோதாமல், சும்மா இருப்பதுவே சுகம்.

**"சும்மா இருக்கச் சுகம்சுகம் என்று சுருதி எல்லாம்**
**அம்மா நிரந்தரம் சொல்லவும்; கேட்டும் அறிவின்றியே,**
**பெம்மான் மௌனிமொழியையும் தப்பி, என் பேதைமையால்**
**வெம்மாயக் காட்டில் அலைந்தேன் அந்தோ என்விதிவசமே"**

"சும்மா இருக்கச் சுகமுதயம் ஆகுமே; இம்மாய யோகமினி ஏனடா-தம் அறிவின் சுட்டாலே ஆகுமோ?"

**"சும்மா இருப்பதுவே சுட்டற்ற பூரணமென்(று)**
**எம்மால் அறிதற்(கு) எளிதோ பராபரமே:**

எனவரும் திருவாக்குகளின் நிச்சய புத்தியில் ஞானிகள் நிலைத்திருப்பர்.

அவர்களது பரிபாகம் அறிந்து, தண்மை மதியினும் குளிர்ந்த தண்ணருளால் அவர்களைத் தழுவி விளங்குகிறது, பராகாயப் பரம் பொருள்.

களங்கமற்ற அப்பொருளை, களங்கம் அற்றவர்களே காண முடியும் ஆதலின், 'விமலத் தேவே' என்று வித்தக உணர்வொடு விளித்தபடி. (66)

**அருமறையா கமங்கள்முதல் நடுவீ றெல்லாம்**
**அமைந்தமைந்து மற்றவைக்கும் அப்பா லாகிக்**
**கருமறைந்த உயிர்கடொறும் கலந்து மேவிக்**
**கலவாமல் பன்னெறியும் கடந்து ஞானத்**
**திருமணிமன் றகத்தின்ப உருவாய் என்றும்**
**திகழ்கருணை நடம்புரியும் சிவமே மோனப்**
**பெருமலையே பரமஇன்ப நிலையே முக்கண்**
**பெருமானே எத்திறத்தும் பெரிய தேவே.**

(ப-ரை.) அருமறை ஆகமங்கள் முதல் நடு ஈறு எல்லாம் அமைந்து அமைந்து-அருமையான வேதங்களின் ஆகமங்களின் ஆரம்பத்தும் நடுவிலும் அந்தம் முழுதினும் இயல்பாக அமைந்து இருப்பதாகி; மற்று அவைக்கும் அப்பால் ஆகி-மேற்சொன்ன அவைகட்கு எல்லாம் அப்பாற்பட்டது ஆகி; கரு மறைந்த உயிர்கள் தொறும் கலந்து மேவி-கருக்குழிகளில் மறைந்து இருக்கின்ற ஒவ்வொரு உயிர்களிலும் கலந்து இருந்து; கலவாமல் பல் நெறியும் கடந்து-பல சமயங்களிலும் ஒட்டாது பற்றாது ஒதுங்கியிருந்து; ஞானத் திருமணி மன்று அகத்து உரு ஆய்-ஞானச் செல்வமான(திருவாலங்காட்டு) இரத்தின சபையுள் (கம்பீரத்) திருவுருவம் காட்டி; என்றும் திகழ்கருணை நடம் புரியும் சிவமே-எந்த நாளிலும் பிரகாசமாக மாபெரும் அருள் கூத்து இயற்றும் மன்னவரே; மோனப் பெரு மலையே-மவுனமாகிய (சலனமற்ற) பெரிய மலை போன்றவனே; எத் திறத்தும் பெரிய தேவே-(பேசிய) எல்லா வகையாலும் பெரிய தெய்வமே, (எ-று.)

(வி-ரை.) நாதப் பிரமம் குடிலை. அதனில் இருந்து அகர உகர மகரங்கள் ஆகிய பிரணவங்கள், விந்து நாதங்களாக வெளிப்பட்டன. விளங்கும் இவைகள் மந்திரங்களாக விளங்கின. உத்தம காயத்திரி, அவைகளில் இருந்து உருவெடுத்தது. உரிய அதனில் இருந்து மறைகள் உதித்தன.

மறைகள் பல; அவைகளின் பெயர்களும் பல. அனைத்து நூற்கட்கும் முதலான ஆதிநூல்; ஆரண்ய முனிவர் சம்பந்தமுடைய ஆரணம்; என்றும் சொல்வழக்கான எழுதாக்கிளவி; ஓதப் பெறுகின்ற ஓத்து; சால்பான நுட்பங்களை

விளக்கும் சாகை; சுத்த நாதமாக வந்த சுருதி; நியமம் நிறைந்த நிகமம்; மாபெரும் பொருள்கள் மறைந்துள மறை; முத்திவழி காட்டும் முதல் நூல்; பெருகிய மறைகட்கு இப்படியெல்லாம் பெயர்களுள.

அவைகள் கரும காண்டம், ஞான காண்டம் என இருவகை; இவைகளோடு உபாசனா காண்டமும் ஒன்று.

மற்று, ஆக்கையின் நோய்தீர்க்க ஆயுர்வேதம்; தனிப்பெரும் படைக்கல நுட்பம் காட்டும் தனுர்வேதம்; கனிவிக்கும் இசைகளைக் கற்பிக்கும் காந்தர்வ வேதம், இம்மை மறுமைக்கு ஆனவழி காட்டும் அர்த்தவேதம் எனும் இவைகள், உபவேதங்கள் என்று உணரப் பெறும்.

**"நன்றாக நால்வருக்கு நான்மறையின் உட்பொருளை**
**அன்றாலின் கீழிருந்தாங்கு அறமுரைத்தான் காணேடி".**

எனும் திருவாசகம், அருமறையின் நுட்பங்களை அமலன்தான் அறிவிக்க இயலும் எனும் அருமையை உணர வைக்கின்றது அல்லவா.

**இருக்கு மறையில், பிரஞ்ஞானம் பிரஹ்மம்**
**யசுர் மறையில், அஹம் பிரஹ்மாஸ்மி**
**சாம மறையில், தத்துவமசி**
**அதர்வண மறையில், அயம் ஆத்மா பிரஹ்மம்**

இம் மகா வாக்கியங்கள் நான்கும், "ஏகம் இரண்டு என்னாமல், சும்மா இரு" எனும் குறிப்பின.

ஆகமம் என்பது, வந்தது எனும் பொருளது. மற்று, ஆ-பாசம்; க-பசு;ம-பதி, மேலும், ஆ-ஞானம்; க-முத்தி; ம-மல நாசம். பாசத்தை அகற்றிப்; பசுவை நுட்பமான வீடு பேற்றில் நுழைப்பது எனும் பொருளுடைய திருப்பெயர்.

அருமறை என்பதில் உள்ள அரு, ஆகமங்கட்கும் அடை. சரியை கிரியை யோகம் ஞானம் நான்கையும், ஆகமங்கள் பெரிதும் அறிவிக்கின்றன. இரண்டும் ஒன்றை ஒன்று முரணுவபோல் தோன்றி, உறவுமுறை கொண்டு ஒன்றாகும் அற்புதமே அற்புதம். முதல்வன் இவைகளின் முதலில் உளன்; இடையில் இருக்கும் அந்த இறை, கடையிலும் பெரிதும் கலந்துளன்; இப்படி ஒருநிலை. மற்றொரு வகையில் சொற்பதம் கடந்தது அந்தச் சோதி சொருபம்.

வாய்த்த கருவில் உயிர்கள் வளர்கின்றன; புழு பூச்சி கடித்தல், உதர சலம் பூரித்தல், உதரக்கனல் தகித்தல், பிரசூத வாயு முறித்துத் தள்ளல், யோனித் துவாரக்கடி முதலியவைகளால் இடையூறு அடையாதபடி, கருணையொடு அண்மையில் இருந்து காக்கிறது திருவருள். "கருஎலாம் இன்றியே கருஎலாம் ஆயவன்; உரு எலாம் இன்றியே உரு எலாம் ஆயவன்" என்கிறது தமிழ் மறை. இது ஒரு வகை.

எந்தக் கருவிலும் கலவாமல், எந்தச் சமயத்தும் ஒன்றாமல் இருக்கும் நிலை ஒரு வகை. இப்படி உடன்பாடும் எதிர்மறையுமாக இருப்பதுதான் திருவருள் ரகசியம். இதுவரை சொருப நிலை.

மும்மல சகலவரை உய்விக்க, இரத்தின அம்பலத்தில் இரத்தின சபாபதியாகி, முனைப்படக்கும் ஊர்த்துவ தாண்டவம் உஞற்றுகின்றது சிவம்.

பூதமவுனம், பொறிமனம், புலமவுனம், குணமவுனம் கரணமவுனம் கொண்டாரைக் கொண்டாடும். மவுன நிலையே அந்த மாதேவன். மலைபோல்வது அத் தோற்றத்தின் மாண்பு. பரம இன்ப நிலையே அதன் பண்பு. முக்கனல் சூழ் வேள்வியைக் கண்காணிக்கும் அம் முதலாளியை, 'முக்கண் பெருமானே' என்றார். மேற் கூறிய எந்தத் திறத்தை எண்ணினாலும் தன்னிலம் மேலோர் இலரென இருத்தலின், 'பெரிய தேவே' எனும் விளி, பெருகி இன்பம் பிறப்பிக்கும் விளி, ஆ! என்ன அருமை! (67)

**என்னுயிர்நீ என்னுயிர்க்கோர் உயிரும் நீயென்**
**இன்னுயிர்க்குத் துணைவனீ என்னை யின்ற**
**அன்னைநீ என்னுடைய அப்ப னீஎன்**
**அரும்பொருள்நீ என்னிதயத் தன்பு நீயென்**
**நன்னெறிநீ எனக்குரிய உறவு நீயென்**
**நற்குருநீ எனைக்கலந்த நட்பு நீயென்**
**தன்னுடைய வாழ்வுநீ என்னைக் காக்கும்**
**தலைவன்நீ கண்மூன்று தழைத்த தேவே.**

(ப-ரை.) என் உயிர் நீ-, என் உயிர்க்கு ஓர் உயிரும் நீ-என் உயிர்க்கு ஓர் உயிராக இருப்பதும் நீ; என் இன் உயிர்க்கு துணைவன் நீ-எனது இனிய உயிர்க்குத் துணையாக இருப்பவன் நீ; என்னை ஈன்ற அன்னை நீ-என்னைப் பெற்ற தாய் நீ; என்னுடைய அப்பன் நீ-எனது தந்தை நீ; என் அரும் பொருள் நீ-(பிறர் பெறற்கு)அரிய என் செல்வம் நீ; என் இதயத்து அன்பு நீ-என் உள்ளத்தின் (பண்பென்னும்) அன்பு நீ; என் நல் நெறி நீ-எனது நல் ஒழுக்கத்தில் இருப்பவன் நீ; எனக்கு உரிய உறவு நீ-எனக்கே உரிமை பூண்ட உறவினன் நீ; என் நல் குரு நீ-எனது நலம் சார்ந்த பரம ஆசாரியன் நீ; எனை கலந்த நட்பு நீ-என்னில் இரண்டற இருந்த நண்பன் நீ; என்தன் உடைய வாழ்வு நீ-எனது வாழ்வாக உள்ளவன் நீ; என்னைக் காக்கும் தலைவன் நீ-என்னைக் காப்பாற்றும் இறைவன் நீ; கண் மூன்று தழைத்த தேவே-(கருணை) வளமான கண் மூன்றுடைய கடவுளே, (எ-று.)

(வி-ரை.) அறிவிக்க அறியும் அறிவான பொருள் ஆன்மா, உடல் ஒரு ஜடம். அதனால், அதி நுட்ப சத்தான சித்தை அறிவிக்க முடியாது. கருத்தில் ஆன்ம சொருபம் கலப்பதை, அதனால் விளையும் நிகழ்வுகளை அரிய விஞ்ஞானிகளும் அறிந்திலர். உள்முகமாகவே இருக்குமாறு உள்ளத்தைப் பயில்வித்தால் ஆங்குள்ள ஆன்மீக உண்மையையும் தெய்வ இயலையும் அறிய இயலும்.

இறந்து பிறந்து, இப்படியே பல உடல்களில் புகுந்த பயில்வினது ஆன்மா. அது ஒரு காலத்தில் மனித உடலுள் நுழையும். புனித அதனில் விளைவித்த

புண்ணியத்தால், மரித்த பின்னும் மானிடத்தில் உதிக்கும். ஒவ்வொன்றினும் உத்தம அறத்தை உறுவித்த பயனாக, மனித மனத்தில் மறைந்திருந்த மிருக சுபாவம் மாறும். அதன்பின், இயல்பான மனிதத் தன்மை எய்தும். அருள் நூற்களைக் கற்றும் கேட்டும், வாலறிவன் நற்றாளை வழிபட்டும், சிவனடியவரைச் சிவமாகப் பாவித்தும், எளிதாகத் தெய்வத் தன்மை எய்தும். உள் பொருளை அதன்வழி உணரும்.

**"துறக்கப் படாத உடலைத் துறந்து, வெம்தூதுவரோடு
இறப்பன்; இறந்தால் இருவிசும் பேறுவன; ஏறி வந்து
பிறப்பன்; பிறந்தால், பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன் பேர்
மறப்பன் கொலோ என்று என் உள்ளம் கிடந்து மறுகிடுமே"**

என்று அமலன் திருவருளை எண்ணி அழும். இடையறாத இத்தொடர்பால் தாய் தந்தை வைத்த பேரும், பிறந்த ஊரும் மறக்கும். வித்தக ஞானம் அதன்வழி விளையும். அதன் வழியே அத்தன் சொருபத்தை, ஓரளவு அறியும்.

"ஏக ஏவ ருத்ரோ நத்விதீயாய தஸ்தே" என்பது, சாமமறை.

"ஏகோஹி ருத்ரோ நத்விதீ யாய தஸ்தே" என்பது, சுவேதாசுவதரம்.

"ஏகம் ஏவ அத்விதீயம்" என்பது சாந்தோக்யம்.

"சாந்தம் சிவம் அத்வைதம் சதுர்த்தம்" என்பது மாண்டூக்ய உபநிடதம்.

சிவாதிக்யத்தை இவைகள் சிறப்பிக்கின்றன.

இறையும் உயிரும் வேறு வேறு தான்; இதை உணர்ந்த யஜுர் மறை, அஹம் பிரஹ்மம் என்னாமல், 'அஹம் பிரஹ்மாஸ்மி' என்கிறது. (அஹம்-நான்; அஸ்மி-ஆகிறேன் என்பது பொருள்.)

அது நீ ஆகிறாய் எனும் பொருளில் சாம மறை, 'தத்துவமசி' என்னும்; அறிவுள் அறிவாய் அமைதலின், இருக்கு மறை 'பிரஞ்ஞானம் பிரஹ்ம' என்னும் ஆன்மா சிவசத்தி ஆத்மகமாக இருத்தலின், அதர்வண மறை, 'அயம் ஆத்மா பிரஹ்மம்' என்கிறது.

இம் மகா வாக்கியங்களால், சிவனும் சீவனும் ஒன்றல்ல, இரண்டல்ல, ஒன்றும் இரண்டும் அன்றியிருக்கும் எனலை, அதி நுட்பமாக மேலோர் அறிவர். பெருமானை, என் உயிர் நீ என்று வியந்து விளிப்பர். அவ்வளவு தானா!

ஆன்மா அரங்கம்; அமலன் அங்கி, எனலை யறிந்து, 'என் உயிருக்கு ஓர் உயிரும் நீ' என்பர். உயிர்க்கும் உயிருள் உயிராய் இருந்து உய்தி தருபவன் அவன் என்று அறிந்து விளித்த அருமையிது.

தொந்த பந்தத்திலும் துணை; விடுதலை நிலையினும் துணையாய் விளங்கலின், 'என் இன் உயிர்க்குத் துணைவன் நீ என்பர். உயிர்க்கு விளக்காக உடலை உதவி, அருளமுது ஊட்டி வளர்த்தலின், 'என்னை யீன்ற அன்னை நீ'

என்பர். (அன்+ஐ-அன்னை; ஐ-பதி; எனவே, ஐயனைத் தன் அகம் கொண்டவள் என்பது, இப்பெயர்ப் பொருள்.)

வாழ்வில் அருள்நெறிக்கு வழிகாட்டுதலால், ‘என்னுடைய அப்பன்நீ’ என்பர்.

சத்திய நித்திய அறிவுத் திருவாய் அணுகுதலால், “என் அரும் பொருள்நீ” என்பர். ஏன்ற அன்பில் சிவமாக இருத்தலின், ‘என் இதயத்து அன்பு நீ’ என்பர்.

வாழ்வு என்பது, பல வழிகளில் விளைவது; அவைகளுள் ஒன்று ஞான வழியாதலின், ‘என் நல்நெறி நீ’ என்பர்.

புறத்தில் கூடிப் பொய்ப்பார் போலின்றி, அகத்தும் புறத்துமான ஆத்ம பந்து ஆதலின், ‘எனக்கு உரிய உறவு நீ’ என்பர்.

பக்குவ காலம் பார்த்து, தயவுறு திருமேனி தாங்கி வந்து, “உன்னைநீ உணர்வா யாகில், உனக்கு ஒரு கேடும் இல்லை” என்பது முதலிய புனித உபதேசம் புரிதலின், ‘என் நற்குரு நீ’ என்றார்.

சிறுமை நிலைகளைத் திருவுளம் கொளாமல், தகவொடு தாங்கும் தண்மையா னாதலின், ‘எனைக் கலந்த நட்பு நீ’ என்பர்.

பேரின்ப வாழ்வாய்ப் பெருகி வருதலின், ‘என் தன்னுடைய வாழ்வு நீ’ என்பர்.

எப் பிறவியிலும், எந்த இடத்தினும் தனிநின்று அருளும் தலைவன் ஆதலின், ‘எனைக் காக்கும் தலைவன் நீ’ என்பர்.

மதியும், பரிதியும், ஞானக் கனலும் திருவிழிகளாகத் திகழ்பவன் ஆதலின், ‘கண் மூன்று தழைத்த தேவே’ என்பர்.

இங்ஙனம் வாழையடி வாழையாக உணர்ந்தவர்கள் வழியில் வந்த வள்ளலார், கருத்து நெகிழ்ந்து கடவுட் பெருமாற்குக் கண்ணீரைக் காணிக்கை யாக்கி இயம்பிய பா இது; எல்லா வகையாலும் ஆன்மாவில் ஒன்றி உறவு கொளும் பெருமானே, இப்படியே உணர்ந்து,

**“ஒன்றே என்னின் ஒன்றேயாம்;**
**உளதே என்னின் உளதேயாம்**
**அன்றே என்னின் அன்றேயாம்;**
**ஆமே என்னின் ஆமேயாம்**
**இன்றே என்னின் இன்றேயாம்;**
**இலதே என்னில் இலதேயாம்**
**நன்றே நம்பி குடிவாழ்க்கை,**
**நமக்கிங்கு என்னே பிழைப்பம்மா”**

எனும் கம்பர் இங்குக் கருத உரியவர். எல்லாம் சிவமயம் என்பது குறிப்பு.

“அப்பன்நீ அம்மைநீ” எனும் அப்பர் திருத்தாண்டக முழுதின் விளக்கம் இதனிலுளது. (68)

**தானாத் தானல்ல தொன்று மில்லாத்**
**தன்மையனாய் எவ்வெவைக்கும் தலைவனாகி**
**வானாகி வளியனலாய் நீரு மாகி**
**மலர்தலைய உலகாகி மற்று மாகித்**
**தேனாகித் தேனினறுஞ் சுவைய தாகித்**
**தீஞ்சுவையின் பயனாகித் தேடு கின்ற**
**நானாகி என்னிறையாய் நின்றோய் நின்னை**
**நாயடியேன் எவ்வாறு நவிற்று மாறே.**

(ப-ரை.) தான் ஆகி-(அனைத்தும்) தானாகி; தான் அல்லது ஒன்றும் இல்லா தன்மையன் ஆய்-தன்னை அல்லாமல் எப்பொருளும் இல்லாத இயல்பினன் ஆகி; எவ் எவைக்கும் தலைவன் ஆகி-எந்த எந்தப் பொருளிற்கும் இறைவன் ஆகி; வான் ஆகி-விண்ணாகி; வளி-காற்றாகி; அனலாகி-நெருப்பாகி; நீரும் ஆகி-தண்ணீரும் ஆகி; மலர்தலைய உலகு ஆகி-அகன்ற இடமான நிலம் ஆகி; மற்றும் ஆகி-பிற அனைத்தும் ஆகி; தேன் ஆகி-தேனின் நறும் சுவை ஆகி-தேனினும் மணம் மிகுந்த இனிக்கும் ருசியாகி; தீம் சுவையின் பயன் ஆகி-(அந்த) இனிய சுவையின் பயனான இன்பமாகி; தேடுகின்ற நான் ஆகி-(அந்நிலையை) உணர்வால் ஆய்கின்ற நான் ஆகி; என் இறை ஆய் நின்றோய்-என் ஆண்டானாக இருந்தவனே; நின்னை நாய் அடியேனே எவ்வாறு நவிற்றும் ஆறே-உம்மை நாயின் இயல்பமைந்த அடியேன் எவ்வாறு அறிந்து துதிக்க இயலும், (எ-று.)

(வி-ரை.) சிறந்து விளங்குவது சிவசைதன்யம்; அது சுத்தப் பிரமம் எனப் பெறும்; நெருப்பில் வெப்பம் போல், நீரில் தட்பம்போல் மலரில் மணம்போல், மனத்தில் நினைப்புப் போல், கண்ணாடியில் பிம்பம்போல், வித்துள் முணைபோல், முணையில் உயிர்போல் வேறுபடாதது ஓர் சத்தி; அந்தச் சத்தி எச்செயலும் இன்றி சர்வ சாட்சியில் அடங்கியுள பொழுது, சுத்தப் பிரமம் என்று சொல்லப்பெறும் அந்தச் சத்தி விரிந்து பிரமத்தைச் சூழ்ந்து வியாபிக்கும் காலத்தில், அதன் வியாபகத்திற்குள் அடங்குதலால் அப்பொழுது சுத்தம் எனும் அடைகொடாமல் பிரமம் என்று சொல்லப் பெறும் வண்டிற்கு மலரில் இன்பம் வாய்ப்பது போல் விகிர்தசூன்ய அச் சத்திக்குப் பிரம சந்நிதியில் சுத்த சத்துவம், ராஜசம். தாமசம் எனும் உரிய மூன்று குணங்கள் உதிக்கும். அந்த சுத்த சத்துவத்திற்குப் பெயர் ஆநந்த உருவ சத்தி. சுத்தராஜ சத்திற்குப் பெயர் சித்ரூப சத்தி. சுத்த தாமசத்திற்குப் பெயர் சத்ரூப சத்தி.

அம்மூன்று சத்திகளுள் முதலதான ஆநந்த உருவ சத்தியை அப்பிரமம் கலந்து ஆநந்த சுழுத்தியை யடையும் பொழுது, பரமாநந்தன் எனப் பெறும். பரமாநந்தன் சித்துருவ சத்தியைக் கலந்து பேரொளி மயமான கனவில் பிரவேசிக்கும் பொழுது பரிபூரணன் எனப் பெறுவன். அந்தப் பரிபூரணன், சத்ரூப சத்தியைச் சார்ந்து சர்வ வியாபக விழிப்பு நிலையில் விளங்கும் பொழுது பரன் எனும் பெயர் பெறும். மேற்சொன்ன வேறுபாடுகளால் பிரமம் வேறு வேறு பெயர் பெறும்; பிரமமே பரமாத்மா; சத்தியே சரீரம். இவ்வளவும் உபநிடதங்கள் உரைப்பன. இவைகளால், அனைத்தும் ஆனவன் அவன் ஆதலின், ‘தானாகி’ என்றார்.

சேதம் அடைவதைச் சேதனம் என்பர். சேதம் ஆகும் எப்பொருளும் ஏதோ ஒன்றில் இருந்து உதித்து இருந்து ஒழிந்து போவன. அசேதனமாகும் ஜடப்பொருள்களில் இருந்து பரவி எழுந்துள கோபுரம் ஆகியவைகளைப் பார்க்கும்பொழுது, அவைகளை உருவாக்கியவன் ஒருவன் உளன் என்று உணர்வம். அதுபோல் பல தோற்றங்கள் பரவிய அளவிறந்த விசித்திரங்கள் அமைந்த இந்த அகன்ற உலகமும், ஒருவன் உதிப்பிக்க உருவாயது என்பதை உணர்வது இயல்பாயுளது; ஆட்டுவான் ஆட்ட பதுமை ஆடுதல்போல், எப்பொருளிலும் தான் இருந்து அசைவிக்க அசைதலின், 'தான் அல்லது ஒன்றும் இல்லாத் தன்மையனாய்' என்றார்.

உலகம் பருமை உருவாய், நுண்மை வடிவாய் உளது; உருவத்திலும் அருவத்திலும் ஒன்றியும் ஒன்றாமலும் உள்ள இறைவனால் அது ஆக்கப் பெறுகிறது; நிலைத்தும் உளது; மற்றொரு காலத்தில், ஆக்கியவனாலேயே அழிக்கவும் படும். அறிவுள உலகம் அவனுக்கு அடிமை; அறிவிலா உலகம் அவனது உடமை. இந்த நியாயத்தால், அவன் 'எவ் எவைக்கும் தலைவன்.

வானில் கலப்பாய், காற்றில் ஊக்கமாய், கனவில் வெப்பாய், நீரில் தண்மையாய், நிலத்தில் திண்மையாய் நிலைத்தவன் ஆதலின், 'வானாகி............உலகாகி' என்றார்.

உடல் நோய் தீர்க்கத் தேன் உதவும்; உயிர் நோய் ஒழியத் தேனாயுளது சிவம். "அந்த இடைமருதில் ஆநந்தத் தேனிருந்த பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ" என்பது திருவாசகம். தேன் நா அளவான சுவை. சிவத் தேன், ஆக்கை முழுமையும் இனிமையதாக்கி, ஆன்மாவைச் சிவமாக்கும் அருமையது ஆதலின், 'தேனின் நறுஞ்சுவையது ஆகி தீஞ்சுவையின் பயனாகி' என்றார்.

"ஈசன் என்போன் எவ்வணன்? ஆங்கவன் எங்குளான்? ஆலயத்து உள்ளான்; ஆலயம் புகினும் அவனைக் காணேம், என் செய்வேமே;"

கரியோ செய்யோ? கைகால் உண்டோ? உண்பதும் உடையும் உறக்கமும் உண்டோ? கண்டவர் உண்டோ? கழறுமின் நீரே!" என்று தேடுவாரில் அவன் திகழ்ந்துளன் ஆதலின், 'தேடுகின்ற நானாகி' என்றார்.

இங்ஙனம் எம்மை எண்ண வைத்தான்; ஏத்தச் செய்தான்; தேட வைத்தான்; அதன் வழியே தெளிவு தந்தான் ஆதலின், என் இறையாய் நின்றோய்' என்றார்.

நானானான் தானான்; இருக்கும் பொருள்களில், சொற்களில் இருப்பவன் அவன் எனின், 'எவ்வாறு நவிற்றும் ஆறே' என்றார்; இது வரை விநயமாகி எம்மானை விளித்த நடை. இனிவரும் பாசுரங்கள், வித்தகப் பெருமான் முன் செய்யும் விண்ணப்பங்கள். சொருப லட்சணத்தை, விரிவாக எவ்வளவிற்கு விளக்க இயலுமோ அந்த அளவிற்கு மேலும் விஞ்சிய இந்த 69 பாசுரங்களையும் ஊன்றி உணர்ந்து ஓதுனர் எவரும் உயர்ந்த ஞானிகள் ஆவர் திண்ணம். பயனான செய்திகள் பலவற்றை இப்படி வாரி வழங்கிய காரணத்தால், அடிகளாரை உலகம் வள்ளலார் என்று மகிழ்ந்து வாழ்த்துகிறது. இனி வரும் சிறந்த முறையீட்டை

அவர்களது அடிமலர்கட்கே அடைக்கலம் ஆகிச் சிந்திப்பம். (ஓம். ஓம். ஓம்.ஓம்.)(69)

**ஆனேறும் பெருமானே அரசே என்றன்**
**ஆருயிருக் கொருதுணையே அமுதே கொன்றைத்**
**தேனேறும் மலர்ச்சடைஎஞ் சிவனே தில்லைச்**
**செழுஞ்சுடரே ஆநந்தத் தெய்வ மேஎன்**
**ஊனேறும் உயிர்க்குள்நிறை ஒவியே எல்லாம்**
**உடையானே நின்னடிச்சீர் உன்னி அன்பர்**
**வானேறு கின்றார்நான் ஒருவன் பாவி**
**மண்ணேறி மயக்கேறி வருந்துற் றேனே.**

(ப-ரை.) ஆன் ஏறும் பெருமானே-(பெருகிய) தரும விடையில் ஏறி வருகின்ற பெருமையனே; அரசே-(மாபெரும் உலகங்களைப் புரக்கும்) மன்னவனே; என்றன் ஆர் உயிர்க்கு ஒரு துணையே-(கலங்கும்) எனது அரிய உயிர்க்கு ஒப்பற்ற காப்பாளர்; அமுதே-, தேன் ஏறும் கொன்றை மலர் சடை எம் சிவனே-தேன் மிகுந்த கொன்றை மலர் திகழும் சடையுடைய (சிறந்த) எமது சிவபெருமானே; தில்லை செழும் சுடரே-தில்லையில் விளங்கும் (ஞான) தீபமே; ஆநந்த தெய்வமே-இன்ப மயமேயான இறைவனே; என் ஊன் ஏறும் உயிர்க்குள் நிறைஒளியே-எனது ஊன் மயமான உடலுள் குடிபுக்கு இருக்கும் உயிர்க்குள் நிறைந்த ஒளி மயனே; எல்லாம் உடையானே-(உலகம்) அனைத்தையும் உடைமையாகக் கொண்டவனே; அன்பர் நின் அடி சீர் உன்னி வான் ஏறுகின்றார்-அடியவர்கள் உமது திருவடிப் பெருமையைத் தியானித்து, (செவ்விய) முத்தியுலகில் சேர்கின்றார்; நான் ஒரு பாவி-, மண் ஏறி-(பேதை) நிலவுலகிற் பிறந்து; மயக்கு ஏறி வருந்துற்றேனே-(அறிவில்) மயக்கம் அதிகரித்து அலமருகின்றேனே, (எ-று.)

(வி-ரை.) ஆன் - பசு இனமான விடையைக் குறித்த திருப்பெயர். இது, அறக்கடவுள் கொண்ட அருமைத் திருவுருவம். இதன்மேல் இறைவன் அமர்வது, தான் ஒரு தரும முதல்வன் எனும் குறிப்பு. “வெள்ளிக் குன்றந்தன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மால்விடை” என்பது பதினோராந் திருமுறை. “விண்ணிடை நின்ற வெள்ளை விடையவர்” என்பது பெரிய புராணம். “ஆனேறும் பெருமானே” அகில உலகிற்கும் அரசாகி, கனிவொடு ஆன்மக் குடிகளைக் காக்கின்றார் என்பது இங்குக் கருதவுள செய்தி.

தூண்போல் தாங்குபவர்க்குத் துணைவர் என்று பெயர். கன்மம் காரணமாக, பெருகிய ஆன்மாக்கள் எங்கெங்கோ பிறக்கின்றன. உளதான உடல்களுள், உயிர்கள் என்றும் உயிர்க்கின்றன. கால தேவதை ஒரு புறம், கர்ம தேவதை ஒரு புறம், சிலிர்த்துக் கல கலப்பைச் செய்கின்றன. வீணான கலக்கம் இவைகளால் விளையாதபடி, உயிருள் உயிராய்ப் பரமன் உயிர்க்கின்றான். இம்மை மறுமை வீடு எனும் மும்மையினும் தோன்றாத் துணையாய் இங்ஙனம் தொடர்வானை, ‘என்றன் ஆருயிருக்கு ஒரு துணையே’ என்றார்.

ஆரவாரத்தைப் பெருக்கி அல்லலையே விளைவிக்கும் அமரரது அமுதம்போல் ஆகாமல், இறவியொடு பிறவியற அறிவுள் அமுதம் ஆவானை, ‘அமுதே’ என்று அழைத்தார்.

மின்னும் பொன்னான மேனியும், ஐந்தெழுத்தின் நாமமுமான அத்தர்க்கு, மாபெரும் பிரணவம் போன்ற மகரந்தமும், ஐந்து இதழ்களுமான பொன்னிறக் கொன்றை அடையாள மலர்மாலை யாதலின், 'கொன்றைத் தேன் ஏறும் மலர்ச்சடை எம் சிவனே' என்று குரல் கொடுத்தார்.

விடையும், கொன்றைச் சடையும், உத்தமத் தெய்வம் சிவம் எனலை உணர்த்தும், தில்வம் எனும் வடசொல், தில்லை யென்று திரிந்தது. இது ஒரு மரத்தின் பெயர்; இப் பெயர், அம் மரங்கள் நிறைந்த வனத்திற்கு ஆகி, பிற் காலத்தில் தலத்திற்கு ஆயது. அத் தில்லையிற் பெருமகன், செழும் ஜோதி மயமாய்த் திகழ்கின்றான். "ஒரு செழுஞ்சுடர் எழுந்தது தொழுந் தகைய தாகும் அளவோ?" என்பது பாரதம். "ஜோதியே சுடரே" என்பது திருவாசகம்.

திருமேனியும், கரசரணாதி அவயங்களும் ஆநந்த சொருபம் ஆதலின், 'ஆநந்தத் தெய்வமே' என்றார்.

"ஆநந்தத்து அழுத்துவித்த திருவடிகள்" என்றார் மாணிக்க வாசகர்.

ஊன் மயமான தேகத்தை, 'ஊன்' என்றது ஆகுபெயர். ஊனுள் உயிர்க்கும் உயிருள், மல இருள் கடியும் பேரொளி மயமாய்ப் பிரகாசித்தலின்; 'ஊனேறும் உயிர்க்குள் நிறை ஒளியே' என்றார்.

ஆன்மாக்கள் யாவும் அடிமைகள்; பிற அனைத்தும் உடைமைகள் என ஆதலின், 'எல்லாம் உடையானே' என்றார்.

ஊன்றி இவைகளை உணரும் அன்பர்கள், திருவடிகளை இடையறாது தியானித்து, புனித முத்தியுள் புகுகின்றார் என்பார், 'நின் அடிச்சீர் உன்னி அன்பர் வானேறுகின்றார்' என்றார். (வான் -முதன்மை ஞான ஆகாய முத்தி நிலம்.)

மண்ணிற் பிறந்து, வறளும் அறிவொடு வளர்ந்து, கண்டதை யெல்லாம் மயங்கிக் காமித்து, பவவினை பழுத்தேன். அதன் பயனாக, வாழ்நாள் முழுதும் வருந்துவதே தொழிலானேன் என்பார், ' நான்.....................வருந்துற்றேனே' என்றபடி.

**"மெய்யி லங்குவெண் ணீற்று மெனியாய்**
**மெய்ம்மை யன்பருன் மெய்யை மேவினார்**
**பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ**
**போவ தோசொலாய்ப் பொருந்த மாவதே"**

**"பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்**
**பழைய அடியாரோடும் கூடாது**
**என்னா யகமே பிற்பட்டிங்**
**கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே"**

எனும் திருவாசகப் பாசுரங்கள் இங்கு எண்ணத் தகும். (70)

**செஞ்சடையெம் பெருமானே சிறுமானேற்ற**
**செழுங்கமலக் காத்தவனே சிவனே சூழ்ந்து**
**மஞ்சடையும் மதிற்றில்லை மணியே ஒற்றி**
**வளர்மருந்தே என்னுடைய வாழ்வே வேட்கை**
**அஞ்சடைய வஞ்சியர்மால் அடைய வஞ்சம்**
**அடையநெடுந் துயரடைய அகன்ற பாவி**
**செஞ்சடைய நினைதியோ நிணைதி யேல்மெய்ந்**
**நெறியுடையார் நெஞ்சமர்ந்த நீத னன்றே.**

(ப-ரை.) செம் சடை எம்பெருமானே-சிவந்த சடையுடைய பெருமையில் உயர்ந்த எம்மானே; சிறுமான் ஏற்ற செழும் கமல கரத்தவனே-(எழும்பிய) மான்கன்றை (விரல் நுனியில்) ஏந்திய திகழும் தாமரை மலர்போன்ற திருக்கரத்தை யுடையவனே; சிவனே-, சூழ்ந்து மஞ்சு அடையும் மதில்தில்லை மணியே-மேகங்கள் நெருங்கிச் சூழ்ந்துள மதில்களை யுடைய (மாபெரும்) தில்லையுள் எழுந்தருளிய மாணிக்கமே; ஒற்றி வளர் மருந்தே-திருவொற்றியூரில் அமர்ந்துள அமுதம் ஆனவனே; என்னுடைய வாழ்வே-எனது வாழ்க்கையில் இணங்கி இருப்பவனே; வேட்கை அஞ்சு அடைய-ஐம்புல ஆசைகள் அடர்ந்து பெருக; வஞ்சியர் மால் அடைய-வஞ்சிக் கொடி போலும் (துவளும்) இடையுடைய வனிதையர்பால் மோகம் வளர; வஞ்சம் அடைய-(பொருளாதிய கருதிப் பிறரை) வஞ்சிக்கும் சூழ்நிலைகள் அடர்தலுற; நெடும் துயர் அடைய நினைதியோ-(நேர்மையில் இருந்து) ஒதுங்கிய தகவிலேன் மனத்தில் தங்கத் திருவுளம் கொள்வாயோ; நினைதியேல் (அங்ஙனம்) எண்ணுவையேல்; மெய் நெறி யுடையார் நெஞ்சு அமர்ந்த நீதன் அன்றே-மெய் ஒழுக்கம் உடையோர் உள்ளத்தில் அமைதியொடு எழுந்தருளியுள்ள நீதிமான் ஆதியே, (எ-று.)

(வி-ரை.) ஆறாக வந்த கங்கையை அடக்கி, சாந்தியான தவநிலையின் சால்பு காட்டும் சடையொடு, சிறுமையேனை உய்விக்கும் பெருமையனே என்பார், ‘செஞ்சடையெம் பெருமானே’ என்றார். வளமான தாரு வனத்தவரின் ஏதமான வேள்வியில் எழுந்து, உருவிற் சிறிதெனினும் அகில உலகையும் அழிக்கும் மாபெரும் குரலுடைய மானை, எடுத்த கைவிரல் நுனியில் ஏந்தி, சீறும் அதன் பேரொலியைத் திருச்செவியில் ஏற்று, தரணியைக் காத்த தற்பரனே என்பார், ‘சிறுமான் ஏந்தும் செழுங்கமலக் கரத்தவனே’ என்றார்.

**“அண்ணல்மா புகழ்மூ வரும்புனை யரும்பா**
**அன்றிஎன் கவியுநின் றனக்காம்;**
**பண்ணுலாம் இருவர் இடைகொள்நின் செவியிற்**
**பரணிமான் ஒலியும்ஏற் றிலையோ?”**

என்பது சோண சைல மாலை.

மேலே மொய்த்துவரும் மேகங்கள் இளைப்பாறத் தங்கும் இயல்பினை யுடைய மதில்கள் சூழ்ந்த தில்லையில் உள்ள மாணிக்கமே! அங்கே வருவார்தம் அயர்வு தவிர்க்கும் அமுதமே! வாழ்கிறேன் அடியேன் எனில், அது நீ தந்த பிட்சை.

ஐம்புல வேட்கை அதிகரிக்கின்றதே! வனிதையர் மோகம் வளர்கிறதே! அது கருதிப் பெரும் பொருள் தேடும் பேதையின் வஞ்சச் சூழ்நிலை பெருகுகிறதே! அவைகளால் துயரம் அதிகரிக்கிறதே! பாவமே பெரிதும் பயில்கின்றேன். இந்நிலையனான தீமையேன் மனத்தில் தங்கத் திருவுள்ளம் கொள்வாயோ? கொள்வாயேல், நித்திய ஒழுக்கம் உடையோர் உள்ளத்தில் உறையும் நீதிமான் ஆவாயோ என்று உணர்வு நைந்து உரைத்தபடி.

மேலோர் யாவரும் மெய்ந்நெறியர்; தவறு பல உடையவன் எனினும், அடியேன் குடியிருப்பதும் மெய்யில்தான்; மெய்யர் உளத்தில் மேவும் நீ, இம் மெய்யன் மனத்தில் தங்குவதும் நீதி நெறிமுறை அல்லவா எனும் உள்ளுரைப் பொருளும் இறுதி வரியில் உருவாகின்றது; ஊன்றி இவ்வாதத்தை உணர்பவர் உள்ளம் உருகலுறும். சிவனே! மணியே! மருந்தே! வாழ்வே எனும் விளிகள், கண்டதை எல்லாம் கண்கள் காமிக்க, அழகிய ஒலிகளைச் செவிகள் ஆவலிக்க, மூக்கு மணத்தில் மோகம் கொள்ள, அறுவகைச் சுவைகளை வாய் ஆவலிக்க, பரிசத்தை விரும்பி உடல் படபடக்க இவைகளால் அடியேன் இளைக்கின்றேன். அரிவையர் மோகத்தால் அலமருகின்றேன். வாஞ்சித்த பொருள்களைக் கவர, வஞ்சகப் பண்பு கொஞ்சி என்னிடம் குலாவுகின்றது. இவைகளால் உருவாகும் நெடுந்துயர் என்னை நெருக்குகின்றதே!

பரம நின் நினைவில் இருந்து விலகிய பாவ விளைவினன் ஆயினன்; என் மனத்தில் நீ யிருந்தால், வேதனைகள் எவையும் விளையாதே! நீ நீதன்; இவைகளை நினைத்தருள் பெரும் என்று நெகிழ்ந்து விண்ணப்பித்தபடி. (71)

**அன்னையினும் பெரிதினிய கருணை யூட்டும்**
**ஆரமுதே என்னுறவே அரசே இந்த**
**மன்னுலகில் அடியேனை என்னே துன்ப**
**வலையிலகப் படஇயற்றி மறைந்தாய் அந்தோ**
**பொன்னைமதித் திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து**
**போனகமும் பொய்யுறவும் பொருந்தல் ஆற்றேன்**
**என்னைஉளம் கொள்ளுதியோ கொள்கி லாயோ**
**என்செய்வேன் என்செய்வேன் என்செய் வேனே.**

(ப-ரை.) அன்னையினும் பெரிது இனிய கருணை ஊட்டும் ஆர் அமுதே- தாயினும் மிக்க இன்பத் தண்ணருளை (அன்பொடு) அருந்துவிக்கும் அரிய அமுதம் ஆனவனே; என் உறவே. எனது உறவினனாக இருப்பவனே; அரசே-(முத்தியுலக) முதல்வனே; இந்த மன் உலகில் அடியேனை-நிலைபேறான இந்த நிலவுலகில் (உமது) அடியவனான என்னை; என்னே-என்ன வியப்பு; துன்ப வலையில் அகப்பட இயற்றி அந்தோ மறைந்தாய்-துன்ப வலையில் தோயும்படி சிக்கலை விளைவித்து, ஐயோ ஒளித்து இருக்கின்றீரே; பொன்னை மதித்திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து- செல்வத்தையே சிந்தித்துச் செருக்கி இருக்கின்றவர்களுடைய பக்கத்திலே சேர்ந்து; போனகமும் பொய் உறவும் பொருந்தல் ஆற்றேன் - உணவும் பொய்ம்மை உறவும் சார்தலை இனிச் சகிக்க மாட்டேன்; என்னை உளம் கொள்ளுதியோ கொள்கிலாயோ-எளியேனைத் திருவுளத்தில் ஏற்பாயோ ஏற்க மாட்டாயோ; என் செய்வேன் என் செய்வேன் என் செய்வேனே, (எ-று.)

(வி-ரை.) பத்துத் திங்கள் பாரம் சுமந்தாள். பெரும் சிரமப் பட்டுப் பெற்றாள். உடலின் சத்துவத்தைப் பாலாக ஊட்டினாள். உரிய காலத்தில் அன்னத்தை உண்ணச் செய்தாள். கண்ணின் மணிபோல் ஈ எறும்பு மொய்க்காதபடி காப்பாற்றினாள். காலம் வந்தது இறந்தாள், “எனக்குத் தாய் ஆகியாள், என்னையிங் கிட்டுத் தனக்குத் தாய் நாடியே சென்றாள்”. அவள்மேல் பிழையில்லை. விதி செய்யும் விபரீதங்களுள் இஃது ஒன்று.

உடலில் மூன்று நோய்; அதுபோல் உயிருள் மூன்று நோய்கள். வாதநோய், பித்த நலி, சிலேத்துமம் எனும் பிணிகள் உடலை என்றும் உபத்ரவிப்பவை. ஆணவ கன்ம மாயை நோய்கள், ஆன்மாவை என்றும் அடர்ப்பவை. நோயால் சேய் உடல் நுடங்கும். அது கண்டு வருந்தும் அன்னை மணம். சேயின் பசுங்குடல் பொறாதென, உரிய மருந்தைத் தான் உண்பள்; பத்தியம் இருப்பள். ஊட்டும் பாலின் வழி நோயை ஓட்டுவள். அது அழுதால் தான் அழுவள், சிரித்தால் சிரிப்பள். உடல் மயமான உறவு; உடல் சாய்ந்தால் உறவும் பறந்து போம். அவள் போல் அன்றி, உயிர் நோய் தீர்க்கும் சிவத்தை, உத்தமத் தாய் என்று உலகம் உணர்கிறது. கனல் மூங்கினுள் கரந்துளது; அதுபோல் உடலுள் சிவம்; உயிருள் பரம். புனித முறைகளில் மலம் போக்கி, இறவாப் பிறவா நிலை யளித்து, சீவனை இன்பமயமாக்க என்றும் தொடரும் எம்மானை, ‘அன்னையினும் பெரிதினிய கருணையூட்டும் ஆரமுதே’ என்றார். அன்னையினும் என்ற இடத்து உம்மை, உறழ்வுப் பொருளது. “தாயினும் மும்மலம் மாற்றி, தயா எனும் தோயம் தாயெழும் சூரியன் ஆமே” என்றார் திருமூலர். “தாயாய் முலையைத் தருவானே! தாரா தொழிந்தால் சவலையாய், நாயேன் ஒழிந்து போவேனோ? நம்பி! இனித்தான் நல்காயே!” எனவும், “பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்துநீ பாவியேனுடைய ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆநந்தம் ஆய தேனினைச் சொரிந்து, புறம்புறம் திரிந்த செல்வமே! சிவபெருமானே! நானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன், எங்கெழுந்தருளுவது இனியே” எனவும் வரும் திருவாசகங்கள் இங்குக் கருதத் தகும்.

உடலுடனும், உடலில் உள்ள கருவிகளுடனும், உயிருடனும் அத்துவிதப் பெயரில் பிரிவின்றிய ‘என் உறவே’ ஆகி இருப்பவனே! என்னும் விளியை எண்ணும்போதே, அப்பன்நீ, அம்மைநீ ஐயனும்நீ, அன்புடைய மாமனும் மாமியும்நீ, ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ, ஒரு குலமும் சுற்றமும் ஓர் ஊரும்நீ, எனும் தமிழ்மறை நினைவில் எழுந்து நிழலிடுகின்றதே! திருவருட் செங்கோல் செலுத்தி, குடையாம் அருள் நிழலில் எம்மைக் குளிர்விக்கும் ‘அரசே!’ பாழும் வினையளவாகப் பந்தப் படித்தினை. நின்னையும் இடையிடை நினைக்க வைத்தனை. வியன் மிகும் நின் சொரூபம் விளங்கவில்லையே. இது நிலைபேறான நிலவுலகம். இதனில் உள அடியேன் நினது அடிமை. அதை உனது திருவுளம் அறியுமே! சீரழிக்கும் துன்ப வலையில் சிக்கச் செய்தனே! மயங்கும் என்முன் மறைத்துனை! என்ன வியப்பு இது! ஐயோ! எண்ணினாலும் மனம் இடிகிறதே!

ஓடும் பொன்னும் ஒக்க நோக்கும் அருளாளர் உறவும், ஆன்மப் பசி தவிர்க்கும் அருளமுதும் இல்லாமல், ‘பொன்னை மதித்திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து, போனகமும் பொய்யுறவும் பொருந்தல்’ என்னால் பொறுக்க முடியவில்லையே! கருதுகிறேன்; கதறுகிறேன். எளிய என்னை நின் திருவுளத்தில் எண்ணுதியோ, எண்ணாயோ? என்று வீரிட்டு விம்மி யழுது விண்ணப்பித்தலை, ‘என்செய்வேன்’ என்று மூன்றுதரம் கூறுதல் கொண்டு அறியத் தகும்.

**"உண்டியே உடையே உகந்து ஓடும்இம்**
**மண்டலத் தாரொடும் கூடுவது இல்லைநான்"**

என்ற ஆழ்வார் பாசுரம், இங்கு நினைவிற்கு வருகிறது அல்லவா. (72)

**படித்தேன்பொய் உலகியனூல் எந்தாய் நீயே**
**படிப்பித்தாய் அன்றியுமப் படிப்பில் இச்சை**
**ஒடித்தேன்நான் ஒடித்தேனோ ஒடிப்பித் தாய்பின்**
**உன்னடியே துணையெனநான் உறுதி யாகப்**
**பிடித்தேன்மற் றதுவும்நீ பிடிப்பித் தாய்இப்**
**பேதையேன் நின்னருளைப் பெற்றோர் போல**
**நடித்தேன்எம் பெருமான்ஈ தொன்றும் நானே**
**நடித்தேனோ அல்லதுநீ நடிப்பித் தாயோ.**

(ப-ரை.) எந்தாய்-எமது பரம தந்தையே; பொய் உலக இயல் நூல் படித்தேன்-உள்ளீடு இல்லாத உலக இயல்பான நூற்களை ஓதினேன்; நீயே படிப்பித்தாய்-(அதுவும்) நீயே படிக்கச் செய்தனை; அன்றியும் -அஃது அல்லாமலும்; நான் அப் படிப்பில் இச்சை ஒடித்தேன் -அடியேன் அக் கல்வியில் (இருந்த) மோகத்தை முறித்துக் கொண்டேன்; ஒடித்தேனோ ஒடிப்பித்தாய்-நானா வெறுத்தேன், (அந்த ஆசையை) அடியொடி அகலச் செய்தது நீதானே; பின் உன் அடியே துணை என நான் உறுதியாகப் பிடித்தேந்(அதன்) பிறகு உனது திருவடிகளே கதி என்று, நான் (அவைகளைப் பலத்த) உறுதியாகப் பற்றிக் கொண்டேன்; மற்று அதுவும் நீ பிடிப்பித்தாய்- அத் திருவடிகளையும் (பரிவொடு) நீயே பற்றச் செய்தனை; நின் அருளைப் பெற்றார் போல இப்பேதையேன் நடித்தேன் -(மேலான) உனது திருவடிகளை எய்திய மெய்ஞ் ஞானிகளைப் போல் அறிவிலியான அடியேன் நாடகம் ஆடினேன்; எம்பெருமான் ஈது ஒன்றும் நானே நடித்தேனோ-பெருமையில் உயர்ந்த எமது இறைவனே! இந்த ஒரு நாடகமும் நானேயோ நடித்தேன்; அல்லது நீ நடிப்பித்தாயோ-அல்லது நீயேதான் (என்னில் இருந்து நீளும்) நடிப்பை நிகழ்வித்தனையோ, (எ-று.)

(வி-ரை. ) பொய், புரை, புழை, பொந்து என்பவை, உள் தொளையினை உணர்த்தும் ஒரு பொருள் சொற்கள். எனினும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறிப்பில் உளது. இங்கே பொய் என்றது, உள்ளே இருப்பு இல்லாதது; யானையுண்ட விளாங்கனி, தேரை மோந்த காய் என்பவை போன்று, உள்ளே சரக்கு இல்லாத சொல். உலகியல் நூல்-தருக்கம், வியாகரணம், முதலியன.

**"அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது**
**உலகநூல் ஓதுவது எல்லாம்-கலகல**
**கூஉந் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்**
**போஒந் துணையறிவார் இல்"**

**"தொலைவில்லாச், சத்தமும் சோதிடமும் என்றாங்**
**கிவைபிதற்றும், பித்தரிற் பேதையார் இல்"**

எனும் நாலடியார், அறிவியல் தொகுதியான கடவுள் நூற்களைக் கல்லாமல், உலகியல் நூல் ஓதுவதால் ஆன்ம லாபம் இல்லை என அறிவித்தலை அறிந்துளம். நாலடியார் காலத்தில் துறவிகள் இசை நூற்கள், தருக்க நூற்கள், சோதிட நூற்களையே உலகியல் நூற்கள் என்றனர். இன்றைய உலகில், இச்சை மயமாக்கி உயிர்களை இடர்ப்படுத்தும் ஏராளமான புத்தகத் தொகுதிகள் புற்றீசல்போல் உலகைப் போர்த்துள. என்ன செய்யலாம். ஓயாது அவைகளை ஓதினேன்; நானா ஓதினேன், என் கன்ம அறிவிற்குத் தக்கபடி அந்நூற்களைக் கற்பித்தவர் நீர்.

வரவர அவைகளில் வெறுப்பு வளர்ந்தது; அவ் வளர்ச்சியும் என்னால் ஆனது இல்லை; தேறுமாறு அறிவில் நின்று தெளிவித்தவர் நீர். எனவே அவ்வெறுப்பும் உம்மால் விளைந்தவை எனலை உணர்கின்றேன்.

அதன்பின் பேறுதரும் உன் திருவடிகளையே துணை என்று பிடித்தேன்; நானா பிடித்தேன்; "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" என்பதுபோல், பற்றுமாறு அடிமலரைப் பற்ற வைத்தவர் நீர். நினது அருளெய்திய ஞானியர் ஆடும் திருக் கூத்தோடு, நானும் நடிக்கல் ஆயினேன்; அதுவும் நீர் கற்பித்த பாலர் பாடமோ என்னவேயோ என்னால் அறிய இயலுமா என்பது கருத்து.

**"கரையில் இன்பக் கடலமு தேஇது**
**வரையில் நானுனை வந்து கலந்திலேன்**
**உரையி லாஇன்பம் உள்ளவர் போலேஇத்**
**தரையி லேநடித் தேன் என்ன தன்மையே"**

என்பது தாயுமானார் பாடல்.

படித்தேன்; ஒடித்தேன், பிடித்தேன், நடித்தேன் என்பது தன்வினை; இது சீவச்செயல்கள்; படிப்பித்தாய், ஒடிப்பித்தாய், பிடிப்பித்தாய், நடிப்பித்தாய் என்பது பிறவினை; இது சிவச் செயல்கள்,

ஓதியதும், ஒடித்ததும், பிடித்ததும், நடித்ததும் சிற்றறிவின் சிறு செயல்கள்; ஓதுவித்ததும், ஒடிப்பித்ததும், பிடிப்பித்தது, நடிப்பித்ததும் பேரறிவின் பெருஞ்செயல்கள்.

உன் அடியே துணை என்றது, திருவடியே கதி எனும் குறிப்பு; அஃது ஒன்றே நித்தியமானது.

**"திருவடி யேசிவம் ஆவது தேரில்**
**திருவடி யேசிவ லோகம் சிந்திக்கில்**
**திருவடி யேசெல் கதியது செப்பில்**
**திருவடியே தஞ்சம் உள்தெளி வார்க்கே"**

எனும் திருமந்திரம் இங்கு எண்ணற்கு உரியது.

இதனால் பெத்த நிலையில் உதவும் பெருமான், முத்த நிலையினும் முன்னிற்கின்றான் என்பதை எண்ண வைத்த பா இது.

**“வேண்டி நீயாதருள்செய்தாய், யானும்**
**அதுவே வேண்டின அல்லால்**
**வேண்டும் பரிசொன் றுண்டென்னில்,**
**அதுவும் உன்றன் விருப்பன்றே”**

எனும் திருவாசகம் இங்கு எண்ணத்தகும். (73)

**மத்தேறி அலைதயிர்போல் வஞ்ச வாழ்க்கை**
**மயலேறி விருப்பேறி மதத்தி னோடு**
**பீத்தேறி உழல்கின்ற மனத்தால் அந்தோ**
**பேயேறி நலிகின்ற பேதை ஆனேன்**
**வித்தேறி விளைவேறி மகிழ்கின் றோர்போல்**
**மேலேறி அன்பரெலாம் விளங்குகின்றார்**
**ஒத்தேறி உயிர்க்குயிராய் நிறைந்த எங்கள்**
**உடையானே இதுதகுமோ உணர்கிலேனே.**

(ப-ரை.) மத்து ஏறி அலை தயிர்போல் வஞ்ச வாழ்க்கை மயல் ஏறி-(கடையும் பொழுது) மத்தானது (இறங்கி மேல்) ஏறுதலால் (கலகலத்து) அலைமோதுகின்ற தயிர்போல், வஞ்சகமான (உலகியல்) வாழ்க்கையில் மையல் வளர்ந்து; விருப்பு ஏறி-பெருங் காமம் பெருகி; மதத்தினோடு பித்து ஏறி உழல்கின்ற மனத்தால்-இறுமாப்புடன் பித்துக் கொள்ளித் தனம் பெருகி அலைமோதித் தவிக்கும் மனத்தால்; அந்தோ பேய் ஏறி நலிகின்ற பேதை ஆனேன். ஐயோ! பேய் (தலைமேல்) ஏறி, (அதனால்) மெலிகின்ற அறிவிலி ஆயினேன்; வித்து ஏறி விளைவு ஏறி மகிழ்கின்றறோர்போல்-விதை மிகுந்து விளைவு பெருகி இன்புறுகின்ற விவசாயிகள் போல்; மேல் ஏறி அன்பர் எலாம் விளங்குகின்றார்-மேலான முத்தி நிலத்தில் ஏற்றம் எய்தி அன்பர்கள் யாவரும் ஒளிமயமாக உள்ளனர்; ஒத்து ஏறி உயிர்க்கு உயிராய் நிறைந்த எங்கள் உடையானே-உடன்பட்டுத் தொடர்ந்து உயிர்க்குள் உயிராய் நிறைந்திருக்கின்ற எங்கள் இறைவனே; இது தகுமோ உணர்கிலேனே-(அவர்கள் வேறு, இவன் வேறு எனும்) இவ்வேற்றுமை, (தண்ணருள் மிக்க உம் திருவுளத்திற்குத்) தக்கது ஆகுமோ? என்னால் உணர முடியவில்லையே, (எ-று.)

(வி-ரை.) மத்து என்பது தயிர் கடையும் கருவி, மதர்த்த தோற்றத்தால் வந்த பெயர் இது. தளதள என்று தளரும் சொரூபம் ஆனது தயிர்.

மதர்த்த மத்து, தளர்ந்த தயிரைக் கடையும் பொழுது, அலைமோதி அது அவதி யடையும். மத்துப் போல்வது வினை. அதனால் குடையப் பெறும் தயிரைப் போல்வது ஆன்மா. தயிரின் அலையே போல்வது வாழ்க்கை. அலை அதிகரிப்பது போல். வறள்விக்கும் மையல் வளர்கிறது. விளையும் மயலில் மென்மேலும் விருப்பம் விளைகிறது. இறுமாப்பும் இதனொடு இணைகிறது. பித்துக் கொள்ளித் தனமான பேச்சுக்கள் அதனொடு பெருகுகின்றன. இவ்வளவு சுமையும் ஏறிய பொழுது, பலவாகி உழல்கிறது பாழும் மனம்.

மாயையின் மகன் மனம், அது, தூய அறிவின் துணை கொள்வது நலம். அந்த மனம் அது செய்தது இல்லை.

மட்ட ரகமான மதிக்கு, பேதைமை என்பது ஒரு பெயர். அறிவாசாரம் உடையாரைப் படபடத்துப் பேய்கள் பற்றுவது இல்லை. பேதைகளைத்தான் அவைகள் பீடிக்கும். இப்போது மனம் ஒரு பேதை. பேதையை அது பிடித்துக் கொள்ளுமேல், ஆடிப்பாடி அயர்ந்து சாய்வதுதான் அனுபவம். இவ்வளவுதானா வாழ்க்கை என்பது? அடபாவமே!

மயலேறி, விருப்பேறி, மதமேறி, பித்தேறி உழலுகின்ற மனத்தால், பேயேறி நலிகின்ற பேதை ஆனேன் என்று, தன் இழிவு நடை எண்ணி யிரங்கியது முற்பகுதி. சுதந்தரம் இல்லா இவ்வளவும் சிதையும் ஆன்மப் பெத்த நிலைச் செய்திகள்.

ஏற்றமான விதையை ஏராளமாக விதைத்தனர்; அதன் பயனாக, விளைவு பெருகி விளங்கியது எனில், காணும் விவசாயிகள் களிப்பெய்துவர். இது கண்கண்ட உலகக் காட்சி.

அதுபோல் அடியார்கள், அன்பு வித்திட்டு அருள்தீர் பாய்ச்சினர். அதன்வழி ஞானப் பயிர் செழித்து விளைந்தது. சிவபோகப் பயிர் சித்தித்தது. அதனால் அவர்கள் ஆநந்தர் ஆகின்றனர். இப்படி மேலேறி அன்பரெலாம் விளங்குகின்றார். இது, முத்தநிலைச் செய்தி.

வன்பன் அடியேன் கீழ்நிலை எய்த அன்பர்கள் மேலேறி விளங்குகின்றனர். “நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடு” ஆன உமது பேரருள் திறத்திற்கு, இவ் வேறு பாட்டு நிலை தகுவது ஆகுமோ என்பார், எவரிலும் பொதுவாக, ஒத்தேறி உயிர்க்குயிராய் நிறைந்த எங்கள் உடையானே! இது தகுமோ?’ என்றார். தகுவதுதானா இந்நிலை எனப் பல கோணத்தில் எண்ணிணேன்; என்னால் இது குறித்து உணர்ந்து ஒரு முடிவிற்கு வர இயலவில்லையே என்பார், ‘உணர்கிலேனே’ என்றார்.

**“கூடிக் கூடி, உன் அடியார் குனிப்பார்**
**சிரிப்பார் களிப்பாராய்;**
**வாடி வாடி வழியற்றேன், வற்றல்**
**மரம்போல் நிற்பேனோ?”**

எனும் திருவாசகம் இங்கு எண்ணத்தகும்.

இதனொடு மகாதேவமாலை 70-ஆம் பாசுரமும் ஒத்த கருத்தால் உரு ஆதல் கண்டுளம் அல்லவா. (74)

**மதியணிந்த முடிக்கனியே மணியே எல்லாம்**
**வல்லஅருட் குருவேநின் மலர்த்தாள் வாழ்த்திக்**
**கதியணிந்தார் அன்பரெலாம் அடியேன் ஒன்றும்**
**கண்டறியேன் கருமத்தால் கலங்கி அந்தோ**
**பொதியணிந்து திரிந்துழலும் ஏறு போலப்**
**பொய்யுலகில் பொய்சுமந்து புலம்பா நின்றேன்**
**துதியணிந்த நின்னருளென் றனக்கு முண்டோ**
**இன்றெனிலிப் பாவியேன் சொல்வ தென்னே.**

(ப-ரை.) மதியணிந்த முடி கனியே-திங்களைச் சூடிய திருமுடி யுடைய (தெய்வப்) பழமே; மணியே-(சிந்தா) மணியே; எல்லாம் வல்ல அருள் குருவே-யாவும் சாதிக்கும் வல்லாண்மை மயமான அருள் மேனிக் குருநாதனே; நின் மலர்த்தாள் வாழ்த்தி அன்பர் எல்லாம் கதி அணிந்தார்-உமது மலரடிகளை வந்தித்து அன்பர் ஆயினார் அனைவரும் அருட்பேற்றிற்கு அனுக்கர் ஆயினர்; அடியேன் ஒன்றும் கண்டு அறியேன் -அடியேன் (சிறந்த) ஒரு சாதனையையும் செய்தறியேன்; கருமத்தால் கலங்கி-(ஆகாமிய) வினைகளால் அலமந்து; அந்தோ-, பொதி அணிந்து திரிந்து உழலும் ஏறு போல-(வெறும்) பொதியைச் சுமந்து (கண்ட இடத்தில்) சுற்றித் திரியும் காளை மாடுபோல்; பொய் உலகில் பொய் சுமந்து புலம்பா நின்றேன் - உண்மை யில்லாத உலகத்தில் பொய்ப்பாரம் தாங்கி ஒப்பாரி வாழ்க்கை உருவாக இருந்தேன்; துதி அணிந்த நின் அருள் என்றனக்கும் உண்டோ-(அதன்பின்) போற்றுதலை அணிகலனாக ஏற்ற உமது திருவருள், (ஒன்றும் போதா) எளிய எனக்கும் உளதாமோ; இன்று எனில் இப் பாவியேன் சொல்வது என்னே-(அப்பேறு) இல்லையென்றால், இத் தீவினையாளன் சொல்லத் தகுவது யாதுளது. (எ-று.)

(வி-ரை.) அருளும் பரையும் ஆனது ஞான ஆகாயம். பரம அமுத கிரணங்களைப் பரப்பும் இன்பத் திங்கள் அங்கே இருக்கிறது. முதல்வன் அதனை முடியில் அணிந்துளன்; அதன் பெயர் ஞானகலாமதி. அதை அணியும் பரமன் ஞானப் பழம் ஆனான். அந்த அருமையை, ‘மதியணிந்த முடிக்கனியே’ எனும் பேறான விளியில் பெறவைத்தார். பிராக்ருத சந்திரன் தட்சன் மருமகன்; சூரியனான அக்கினி கோளத் துண்டம் சந்திரன் என்பது ககோள நூலின் கருத்து. இங்கு இறைவர் அணிவது, அந்த இரண்டும் அன்று; அது அப்ராக்ருத திங்கள் என்று அறியப் பெறும்.

**“ஒன்று கண்டீர் உலகுக்கு ஒருதெய்வம்**
**ஒன்று கண்டீர் உலகுக்கு உயிர் ஆவது**
**நன்று கண்டீர் இனி நமசிவாயப்பழம்**
**தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே”**

எனும் திருமந்திரமும்,

**“புனிதன் பொற்கழல் ஈசன் எனும்கனி**
**இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே”**

எனும் அப்பர் தேவாரமும், இறைவன் கனியாதலை எண்பிக்கின்றன.

**“ஊழிமுதல் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்**
**தாழைப் பறித்தவா தோணோக்கம் ஆடாமோ”**

எனும் திருவாசகமும்,

**“சிந்தாமணியே சிறியேற் கிரங்காயோ”**

எனும் பரஞ்சோதியார் திருவிளையாடலும், நினைவார் நினைவுகளை நிறைவேற்றும் சிந்தாமணியே சிவம் எனலை மெய்ப்பிக்கின்றன.

துன்பத்தை இன்பம்போல் தோற்றுவித்து, ஆன்மாக்கட்கு ஆசையை உண்டாக்குவது ஆணவம். அழகிய முட்டைகளைச் சிறகுகளால் அணைத்துக் குஞ்சுகளை உருவாக்கி விடுவிக்கும் பறவைபோல், பணிவு காட்டுவானைத் தம் கரசரணாதிகளால் பரிசித்தும், முதலில் கரையில் இட்ட முட்டையை அகத்தால் பாவித்து உருவாக்கும் ஆமைபோல், பண்புடையானை மனத்தால் பாவித்தும், பயந்த தன் சினைகளைப் பார்த்து உயிர்க்குமாறு அவைகளை உருவாக்கும் மீன்போல்; சிறக்க அருள்நோக்கம் செய்யும் காரண ஞான குரவனை 'எல்லாம் வல்ல அருட் குருவே' என்றார்.

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மன நின்பால் தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மை எல்லாம் தொழ வேண்டி' என்று எட்டாம் திருமுறை இயம்பல் போல், அன்பர்கள் வாழ்த்திக் கதி பெறுவர். (கதி-அடைக்கல நிலயம்) "இருந்திட்டுப் பெறவே மதியாயினும், இறந்திட்டுப் பெறவே கதியாயினும், இரண்டில் தக்கதொர் ஊதியம் நீதர இசைவாயே" என்பது திருப்புகழ். (அணிதல்-பொலிவு மிகப் புகுதல்.)

அகத்தால் தத்துவங்களை ஆய்வுசெய்து பொழுதை வறிது போக்குதலால், "அடியேன் ஒன்றும் கண்டறியேன்" கன்ம மலம் வாழ்க்கையில் கலங்க வைக்கின்றதே! ஐயோ! பொதி சுமக்கும்; ஏறியுள சுமையை எண்ணாது; மனம் போன போக்கில் திரியும் மாடு. அதுபோல், "பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்து, பொய்யிலே புழுத்தேன்" "யானே பொய், என்னெஞ்சும் பொய், என் அன்பும் பொய்" காண்பதெல்லாம் பொய். கருதுவது எல்லாம் பொய்யாக, சொலற்கரிய இப்பாரங்களைச் சுமந்து கொண்டு, இதய அழுகையில் இருக்கின்றேன்.

**"பாடி ஆடி நின்று இரங்கி, நின்பதமலர் முடிமேல்**
**சூடி வாழ்ந்தனர் அமலநின் அடியர்; யான் தொழும்பன்**
**நாடியே இந்த உலகத்தை மெய்யென நம்பித்**
**தேடி னேன்வெறும் தீமையே, என்னிச் செய்வேன்"**

என்றார் தாயுமானார். அதுபோல் பாடிப் பரவிய நின் அடியர், அருட் பயனை எய்தினர். எளியேற்கு அப்பேறு எய்துமதோ? பயன் எய்தாதார் பாவியர்; பேறான மானிடப் பிறவியைப் பெற்றும் இழிந்த என் செய்தியை எவரிடம் சொல்லி ஆறுவது என்பது குறிப்பு.

இறைவன் முடியது மதி. தூய முறையில் உறுவது துதி; அதன் வழி அடியர் பெறுவது கதி. யான்சுமப்பது பொய்ப் பொதி. எதுகையிலேயே இந்நுட்பம்; ஆ! என்ன அருமையான பாசுரம் இது! (75)

**என்னரசே என்னுயிரே என்னை யின்ற**
**என்தாயே என்குருவே எளியேன் இங்கே**
**தன்னரசே செலுத்தியெங்கும் உழலா நின்ற**
**சஞ்சலநெஞ் சகத்தாலே தயங்கி அந்தோ**

**மின்னரசே பெண்ணமுதே என்று மாதர்**
**வெய்யசிறு நீர்குழிக்கண் விழவே எண்ணி**
**கொன்னரைசேர் கிழக்குருடன் கோல்போல் வீணே**
**குப்புறுகின் றேன்மயலில் கொடிய னேனே.**

(ப-ரை.) என் அரசே-(மாபெரும்) எனது மன்னவனே; என் உயிரே-(உயிரான) என்னுள் உயிர்ப்பவனே; என்னை யீன்ற என் தாயே-(தயையுடன்) என்னைப் பெற்ற என் தாயே ஆனவனே; என் குருவே-(அகத்திலிருந்து வெளிப்படும்) என் ஆசாரியன் ஆனவனே; எளியேன் இங்கே தன் அரசே செலுத்தி எங்கும் உழலா நின்ற சஞ்சல நெஞ்சகத்தாலே தயங்கி-இவ்வுலகில் தன் செங்கோல் ஒன்றையே செலுத்தி எந்த இடத்திலும் உழல்கின்ற சஞ்சலமான மனத்தின் சார்பால் (எதனிலும்) தாமதப் பட்டு; அந்தோ-, மின் அரசே-மின்னல் போலும் ஒளியுடைய மங்கையர்க்கு அரசே; பெண் அமுதே என்று-பூவையர்க்கு அமுதம் போன்றவளே என்று விளித்து; மாதர் வெய்ய சிறுநீர்க் குழிக்கண் விழவே எண்ணி-வனிதையரின் வெப்பமான சிறுநீர் வெளிப்படும் அல்குலின் விழுதலை விரும்பி; கொன் நரை சேர் கிழக்குருடன் கோல்போல் பயன் இல்லா நரை பழுத்த குருட்டுக் கிழவன் தடிபோல்; மயலில் கொடியனேனே குப்புறுகின்றேன் - கொடியமையல் காரணமாகக் கவிழ்கின்றேனே, (எ-று.)

(வி-ரை.) "திருவுடை மன்னரைக் காணில் திருமலைக் கண்டேன் என்னும்" என்றார் ஒரு ஆழ்வார். இந்த நியாயப்படி, இம்மையின் மன்னன் இறைவன்; மறுமையுலகினும் அம் மாதேவன் ஆட்சி; அருளார் முத்தியில் அவனே அரசன். செங்கோலை அங்கங்கே செலுத்தி, கம்பீரமாக ஆன்மக் குடிகளைக் காத்தலின், 'என் அரசே' என்றார். ஆன்மாக்கட்கு எந்த இடத்தினும் ஆதாரன்; ஆன்மாவிற் சாட்சியா யிருந்து எதையும் அறிவிப்பவன் ஆதலின், 'என் உயிரே' என்றார்.

கேவல நிலையில் இருந்த உயிர்கட்கு, தனு கரணம் ஆதிய அளித்து சகல நிலையிற் கொணர்தலும் ஒளி மேனியாக்கிச் சுத்த நிலையில் உயர்த்தலும் செய்தலின், 'என்னையீன்ற என்தாயே' என்றார். அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞ்ஞானம் மேவச் செய்தலின், 'என் குருவே' என்றார்.

**"பொய்போகப் போகப் பொருந்திப், பொருள்தானாம்**
**சையோக போக தரத்தில்-நையும்**
**பரிபாகம் கண்டு, பதையாமல் பார்க்கும்**
**குருவேகாண் ஞானக் குரு"**

எனும் கண்ணுடை வள்ளலார் இங்குக் கருத உரியவர்.

அருளறிவின் வழியை அணுகாமல், ஆன்ம அறிவைத் தன்வயப் படுத்தி, ஐம்புல இன்பத்தை அவாவி, சீரற்ற தன் ஆட்சியை எங்கும் செலுத்திக், கண்ட இடமெல்லாம் கடை கெட்டு அலையும் சஞ்சல மனத்தால் என்றும் தயக்கம் எய்துகின்றேனே என்பார், 'இங்கே தன்னரசு................................ நின்ற .................நெஞ்சகத்தாலே தயங்கி' என்றார்.

'மின் அரசே' பெண் அமுதே! என விளங்கிழையாரை விளிப்ப தெல்லாம் சுயநலம். "காமம் இல்லையெனில், கடும் கேடெனும் நாமம் இல்லை நரகமும்

இல்லையே". இத்தகைய இடங்களை எண்ணி, பெண்ணுலகை இழித்தனர்; அவர்களை அடிமைகள் ஆக்கிய ஆடவர்களின் அக்கிரமம் இது என்று நாதந்தன பேசுவது நலமன்று. "இல்லறம் அல்லது நல்லறம் அன்று". "மாதரார்கற்பின் நின்றன கால மாரியே" என்றும், கல்வி தருபவள் கலைமகள்; செல்வம் தருபவள் திருமகள்; ஞானம் அருள்பவள் உமாதேவி; நீர் மயமாகிக் கங்கை நிற்கின்றாள். மண்மயம் ஆயினள் நிலமகள்; அசரீரி ஆயினள் ஆகாயவாணி என்றெல்லாம் பெண்மக்கட்கு அதிகம் பெருமை தந்தவர்கள் நம் பெரியோர்கள். வெறும் உடல் இன்பம் விழைந்து, போக நினைவு ஒன்றிலேயே பொருமிப் பொன்றும் ஆணுலகிற்கும் பெண்ணுலகிற்கும் சாட்டையடி தருவதுபோல் வார்த்தைகள் பல வளர்த்தநன்றி, இயல்பில் "ஆணெல்லாம் சிவம் பெண்ணெல்லாம் தேவி" என்று திறத்தரையும் ஆராதித்த அவர்களைக் குறை கூறுவது, ஆகாமிய வினைக்கு வழிகோலுவது ஆகும்.

**"பிறந்திடத்தை நாடுவதே பேதைமட நெஞ்சம்**
**கறந்திடத்தை நாடுதே கண்"**

என்று பட்டினத்தடிகள் போன்றவர்கள், பிறர் போக்கெண்ணிக் கண்கலுழ்ந்த இடம் பல. ஆகமெலாம் நரைத்தவன்; முழுக் கிழவன்; அவனுக்குத் தடியே ஆதாரம். கை உதறல் எடுக்கிறது. பாதுகாப்பிற்கு அத் தடியைப் பற்ற முடியவில்லை; அறிவற்ற தடி, நெடுஞ்சாண் கிடையாக நிலத்தில் விழுகிறது. அது போல் சஞ்சரித்த மனம், தன் தருமத்தை அனுட்டிக்கத் தயங்குகிறது. காரிகையர் எவரைக் கண்டாலும் கொடிய காமக் காழ்ப்பு கொள்கிறது. அதற்கான முயல்வுகள் அதிகரிக்கின்றன. குருடன் பிடித்தது தடி; தேகத்திற்கும் தடி என்று பெயருளது. குரூரமான மையலுடையவன் கொடியவன், கர்மம் கால்தட்டக் கால் சாயும், காலம் வருமுன், காமம் மதியைக் குழப்ப, இணைவிழைச்சு எனும் பெயரால் வியன்மிகு தேகத்தை வீழ்த்துவது முறைதானோ என்று வருந்தி, மதர் வெய்யசிறு நீர்க்குழிக்கண் விழவே எண்ணி, ....................குப்புறுகின்றேன் மயலில் கொடியனேனே' என்றார். அறிவற்ற தடி விழுவது இயற்கையாகலாம்; அறிவுடைய தடியன் யோசிக்க வேண்டாவா என்று பிறர் குறைகளைத் தம் குறையாக ஏற்றுப் படபடத்து வருந்தி யுரைத்த பா இது. இச்செய்திகள் வரும் இடந்தோறும் இக் கருத்தை எண்ணிக் கொள்ளல் நலம்.(76)

**அல்விலங்கு செழுஞ்சுடராய் அடியார் உள்ளத்**
**தமர்ந்தருளும் சிவகுருவே அடியேன் இங்கே**
**இல்விலங்கு மடந்தையென்றே எந்தாய் அந்த**
**இருப்புவிலங் கினையொழித்தும் என்னே பின்னும்**

**மல்விலங்கு பரத்தையர்தம் ஆசை என்னும்**
**வல்விலங்கு பூண்டந்தோ மயங்கி நின்றேன்**
**புல்விலங்கும் இதுசெய்யா ஓகோ இந்தப்**
**புலைநாயேன் பிழைபொறுக்கில் புதிதே அன்றோ.**

(ப-ரை.) அல் விலங்கு செழும் சுடராய் அடியார் உள்ளத்து அமர்ந்து அருளும் சிவ குருவே-(ஆணவ) இருள் விலகும் அளவு சிறந்த ஞான சூரியனாகி, அடியவர்களின் உள்ளத்தில் அமைதி தோன்ற இருந்து, (பரம) திருவருளைப்

பாலிக்கின்ற சிவமான குரு முதல்வனே; எந்தாய்-எமது பரமபிதாவே; இங்கே இல்விலங்கு மடந்தை என்றே அடியேன் அந்த இருப்பு விலங்கினை ஒழித்தும் இந் நிலவுலகில் இல்லாள் என்பவள் இல்லற விலங்கு என்றே எண்ணி, அந்த இரும்பு விலங்குக்கு ஒத்த பந்தம் என்பதைப் பற்றற விட்டும்; என்னே-என்ன வியப்பு! பின்னும்-(அதன்) பிறகும்; மல் விலங்கு பரத்தையர்தம் ஆசை என்னும் வல்விலங்கு பூண்டு அந்தோ மயங்கி நின்றேன் - மல்லடிக்கும் விலங்குகளான கணிகை மாதர்களுடைய இச்சை எனப்பெறும் மாபெரும் விலங்கை (வலிய) மாட்டிக் கொண்டு ஐயோ! அறிவு மயங்கி அவதிப்படுகிறேன்; புல் விலங்கும் இது செய்யா-(கட்டித் தழுவும்) அற்ப விலங்கான கரடியும் இந்த அநியாயத்தைச் செய்யாதே; இந்தப் புலை நாயேன் பிழை பொறுக்கில்-இந்த அற்ப நாயான (மாபெரும்) என் பிழைகளை மன்னித்தால்; ஓகோ புதிதே அன்றோ - ஓகோ (அது) நூதனம் ஆன செயல் அல்லவோ, (எ-று.)

(வி-ரை.) இருளிற்குப் பல பெயர்கள் இருக்கின்றன; அவைகளுள் ஒன்று அல். இன்மையன்று, உண்மை யன்று, அன்மையெனும் பொருளில் உளது அல். அது இங்கு ஆணவ இருட்குப் பெயராய் அமைந்தது. அந்த அல்லை அகற்ற ஒரு எல் உளது; அந்த எல்லே செழும் சுடர் என்று சிறப்பிக்கப் பெறும். அச் செழுஞ்சுடரே சிவம். அடியவர் உளத்தில் அநாதி நித்தியமாக உளது அல்; செழுஞ்சுடரான எல்லை, உத்தம அடியவர்கள் உணர்கிறார்கள்; அதனால் அமைதி மயமான எல், அவர்கள் உளத்தில் அமர்கிறது. அதன் பயனாக, அகன்று அடங்குகிறது அல். செழும் சுடரின் சிறந்த திருப்பெயர் சிவம்; அதுவே பிறகு குருவடிவம் கொள்ளும். விசித்திரமான இந்த விலாசத்தை, ‘அல் விலங்கு செழுஞ்சுடராய் அடியார் உள்ளத்து அமர்ந்தருளும் சிவகுருவே’ என்று, வித்தகச் சொற்களைக் கொண்டு விவரித்தார்.

**“இன்றெனக்கு அருளி, இருள்கடிந்து உள்ளத்து**
**எழுகிற ஞாயிறே போன்று,**
**நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்...........**
**யார்உனை அறியகிற் பாரே”**

எனும் திருவாசகம் இங்கு எண்ணத் தகும்.

வாய்மை நெறியுணர்ந்தால் இல்லறம், வாழ்வாங்கு வாழ்கின்ற வைபவமாகி விளங்கும். வெறும் தேக தொந்த பந்தத் தொடர்பெனில், துணைவி, ‘இல்விலங்கு மடந்தை’ என்று எண்ணப் பெறுவள். சீலத்தை மறந்து சதா கோலம் புனைந்து, கண்டார் மயங்க நடைநொடி கண்டாரை ‘இல் விலங்கு’ என்னாது வேறு என் என்று இயம்புவது? பதியான் அறிவைப் பாசப் படுத்திப் பந்தத்தில் அழுத்துதலால் வந்த பெயர் இந்தப் பெயர்.

ஊன்றி இதனை உணர்ந்து, இரும்பு விலங்கு இது என்று ஆரம்பத்திலேயே தூய உணர்விருந்து துறந்தேன் என்பார், ‘விலங்கினை’ ஒழித்தேன் என்றார்.

காண இனியது எட்டிக் கனி; ஆயினும் அது நஞ்சு மயம். பொது மகளிர் அதைப் போல்பவர். சுனை நீர்போல் எவரையும் சுழிப்படுத்துவது அவர்கள் செயல். கைப்பொருள் உள்ள பொழுது கருப்பஞ் சாறுபோல் இனிமை காட்டுவர்; பொருள் பெருக்கொடு பிறர் போதரும் பொழுது, வேப்பஞ் சாறு என விலக்கி விடுவர்.

பரத்தையர் மோகம் பழுத்தவர்க்கு எந்த உபதேசமும் செவியில் ஏறுவது இல்லை. இல் விலங்கிற்குத் தப்பி இந்த வல் விலங்கை வலிந்து மாட்டிக் கொள்வது பரிதாபமான செய்திதான். ‘பின்னும் மல்விலங்கு பரத்தையர்தம் ஆசை என்னும் வல் விலங்கு பூண்டு அந்தோ மயங்கி நின்றேன்’.

இறுக்கி நெருக்கும் கரடிக்கும் ‘புல்விலங்கு’ என்று ஒரு பெயர் உளது. அக்கரடியும் என்போல் கண்டவரைத் தழுவக் கருதாதே! அற்ப நாய்க்குணம் கொண்ட மாபெரும் என் பிழையையும் மன்னித்தாய் எனில், என்னே-என்ன வியப்பான செய்தி யிது! ஓஹோ! இரக்கம் மிக்க உமது திருவுளப் பாங்கிற்கு, இது ஒன்றும் புதியது அல்ல; பழைய செய்திதானே என்பார், ‘புதிதே அன்றோ’ என்றபடி. புதிதே என்பதில் ஏகாரம், வினாப் பொருளது. என்னே என்பதும், ஓகோ என்பதும் வியப்பிடைத் கிளவிகள். அன்றோ என்பது ஆசை; தேற்றப் பொருட்டுமாம்.

**“ஒழிந்தேன் பிறவி உறவு என்னும் பாசம்**
**கழிந்தேன் கடவுளும் நானும் ஒன்றானேன்”**

எனும் திருமூலரும்,

**“குரங்கின் துனிச்சி குடும்பக் குழாமும்**
**பெருங்குப்பை யிற்கரடிப் பெண்டும்-பொருந்துவரோ;**
**காலனும் தீயும் கடலுமிருங் கல்லுமாய்**
**மேலும் நரகாய் விடும்”**

என்னும் கண்ணுடை வள்ளலாரும் இங்குக் கருத உரியவர்கள். (துனிச்சி-சேட்டைச் சேர்க்கை. இரங்கல்-பெரிய மலை. (77)

**வன்கொடுமை மலநீக்கி அடியார் தம்மை**
**வாழ்விக்கும் குருவேநின் மலர்த்தாள் எண்ண**
**முன்கொடுசென் றிடுமடியேன் தன்னை யிந்த**
**மூடமனம் இவ்வுலக முயிற்சி நாடிப்**
**பின்கொடுசென் றலைத்திழுக்கு தந்தோ நாயேன்**
**பேய்பிடித்த பித்தனைப்போல் பிதற்றா நின்றேன்**
**என்கொடுமை என்பாவம் எந்தாய் எந்தாய்**
**என்னுரைப்பேன் எங்குறுவேன் என்செய்வேனே.**

(ப-ரை.) வன் கொடுமை மலம் நீக்கி அடியார் தம்மை வாழ்விக்கும் குருவே-மாபெரும் கொடுமையுடைய (ஐந்து) மலங்களை அகற்றி, (சிறப்பாக) அடியவர்கள் வாழ வழி வகுக்கும் (முதன்மைக்) குரு மூர்த்தியே; நின் மலர்த்தாள் எண்ண முன்கொடு சென்றிடும் அடியேன் தன்னை-உமது திருவடிகளைத் தியானிக்க (அன்பொடு) முன்னேறிச் செயல்படும் அடியேனை; இந்த மூட மனம் இவ்வுலக முயற்சி நாடி பின்கொடு சென்று அலைத்து இழுக்குது. மதியற்ற இந்த மனமானது, இந்தப் பிரகிருதி உலகின் சார்பான முயற்சிகளை விரும்பிப் பின் தொடர்ந்து பிடித்து, இழுத்து, (அப்படியும் இப்படியுமாக) அலைமோதச் செய்கிறதே; அந்தோ-ஐயோ, நாயேன் பேய் பிடித்த பித்தனைப் போல் பிதற்றா நின்றேன் -(இதனால்) அடியேன் பேய்க் கோட் பட்ட பைத்தியக்காரனைப் போல் பிதற்று மொழி பல

பேசிக் கொண்டு இருக்கின்றேன். எந்தாய் எந்தாய்-, (கோது விண்ட சிந்தையே கோயில் கொண்ட) எந்தை பெருமானே! என் கொடுமை என் பாவம் என் உரைப்பேன் - எனது கொடிய செயல்களை, என்னுடைய பாவத் தன்மைகளை என்னென்று கூறுவேன்; எங்கு உறுவேன் - எங்கே போவேன்; என் செய்வேனே- என்ன செய்வது என்றே அறிந்திலனே, (எ-று.)

(வி-ரை.) மாபெரும் ஆணவ மலமானது, காணும் உயிரொடு கலக்கும். கூடிய உயிரின் குணம்போல் தோன்றும்; பதியை, பசுவாகிய தன்னை, பாசத்தை, சிந்திக்க ஓட்டாமல், தழுவி உயிரின் உணர்வைத் தடுக்கும்.

ஆணவ இருள் அடங்க, தத்துவங்கள் என்னும் விளக்கை மாயை விரைவில் அளிக்கும். அந்த மாயையும் ஆணவமும், ஒளியும் இருளும் போல் மாபெரும் செயல்களில் மாறுபட்டு இருக்கும்.

விருப்பு வெறுப்பு விமலனுக்கு இல்லை. உயிர்கள் இடத்தில் அவைகள் உள. இவைகள் இருவாதனைகள் எனப்பெறும்.

**“இருவாதனை யற்று இறந்தான் பெருமை**
**என்சொல்லு வேன்கச்சி யேகம்பனே”**

என்றார் பட்டினத்தடிகள். அவ் விருப்பு வெறுப்புகளில் இருந்து வினைகள் விளைந்தன. அவைகள் சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் எனும் மூன்று பெயர்கள் கொண்டு முறுவலிக்கின்றன. இவைகள் ஒன்றன்பின் ஒன்றாய் வெள்ளம் போல் விரைந்து வருவன. அழிந்தும், உரு ஆகியும் தொன்றுதொட்டுத் தொடர்வன. ஆணவச் செயலான மோகம் முதலிய குணங்களொடும், மாயையின் மலர்வான தனு கரண புவன போகங்களைத் தழுவி, பிறப்பு இறப்புகளில் களைப் பெய்துமாறு உயிர்களைக் கட்டுப் படுத்தி விறுவிறுக்கும் தன் செயலான இன்ப துன்ப வேறுபாட்டிற்கு ஏற்பப் பல்வேறு உடல்களைப் பாலித்து, பிரமன் ஆணைப்படி தூய உயிர்கட்குத் தோன்றாமல் சூக்குமமாய் நின்று செயல்படுவன.

இங்ஙனம் ஆணவ மலமும், மாயா மலமும், கன்ம மலமும், உயிரின் உண்மை வடிவை மறைக்கும்.

மாயையின் காரியமான தனுகரணம் முதலியவைகளை மாயேய மலம் என்றும், மலங்களைத் தம்தம் செயல்செய்ய ஏவும் சிவசக்தியை, மறைத்தலைச் செய்யும் திரோதான மலம் என்றும் கூறுவது வழக்கம். மாயேயத்தை மாயையிலும், திரோதானத்தை ஆணவ மலத்தினும் அடக்கி, மலங்கள் மூன்று என்று உரைப்பது மரபு.

தாழ்விக்கும் மலங்களைத் தவிர்த்து, வாழ்விக்கும் குருவாகும் வள்ளல் பெருமானை, ‘வன்கொடுமை மலம் நீக்கி அடியார் தம்மை வாழ்விக்கும் குருவே;’ என்று விளித்தார்.

உணவை உண்ணும் பொழுது, அமலன் இதனை அருளினன் என்று உணர்வது முதல்நிலை. தன்னையே சிவத்திற்கு நிவேதித்தல் அடுத்த நிலை. அருளால் எதுவும் நிகழ்கின்றன என்று அறிதல் மூன்றாவது நிலை. அறிகின்றோம்

என்ற உணர்வும் அழிந்த நிலை நான்காவது நிலை. ஐந்தாவது நிலையே ஆநந்தமான அருமை நிலை. பாவனையான இச்செயல்களால், பஞ்சமலக் கட்டறும். ஆநந்தமான இந்நிலையும் அருளால் ஆயது என்று அறிந்து, அதையும் அருட்கே ஆளாக்குவது தான், ஆஸ்திக உலகத்தின் அனுபவம்.

இச்சாதனையின் ஆரம்பம், சிவாயநம என்று இடையறாது சிந்தித்தல். அதன் பயனாக, ஐந்தெழுத்தின் சொருபம் தரிசனம் ஆகும். "அஞ்செழுத்தால் அர்ச்சித் தடியார்க் கடிமை செயின்; "பஞ்சமலக் கொத்தறுமப் பா" என்பது ஒழிவி லொடுக்கும்.

இத்தகைய முதன்மைச் சாதனைகளின் வழியே முன்னேற முயல்கின்ற போது, பாழும் தொல்லை தர என்னைத் தொடர்கிறதே; அதைப் பார்! இதைச் செய் என்று, உலகியலில் இழுத்துப் பறித்துப் பல இடர் விளைவிக்கிறதே என்பார், 'மனம்...............இழுக்கது அந்தோ' என்றார். இழுக்குது என்பது மரூஉ வழக்கு. முன்னிலையில் பித்தன்; பின்னிலையில் அவனைப் பிடித்த பேய். அவன் வாயில் வருவன யாவும் பிதற்றுரை. இந்நிலையினன் ஆயினன் அடியேன். "பித்தனும் ஆக, அன்றிப் பேயனும் ஆக" என்று, நம்பிகளை நோக்கி நம்பன் அருளினன் என்று பேசுகின்றது பெரிய புராணம். புனித அதன் பொருள் நுட்பம் இப்போதுதான் புரிகிறது. இக் கொடுமையை, இப் பாவத்தை, எப்படி வாய்திறந்து இயம்புவேன்! என்ன செய்வது! எங்கே செல்வது? தெரிய வில்லையே என்று தேம்பியபடி. (78)

**உய்குவித்து மெய்யடியார் தம்மை யெல்லாம்**
**உண்மைநிலை பெறஅருளும் உடையாய் இங்கே**
**மைகுவித்த நெடுங்கண்ணார் மயக்கில் ஆழ்ந்து**
**வருந்துகின்றேன் அல்லாலுன் மலர்த்தாள் எண்ணிக்**
**கைகுவித்துக் கண்களில்நீர் பொழிந்து நானோர்**
**கணமேனும் கருதிநினைக் கலந்த துண்டோ**
**செய்குவித்துக் கொள்ளுதியோ கொள்கி லாயோ**
**திருவுளத்தை அறியேன்என் செய்கு வேனே.**

(ப-ரை.) மெய் அடியார் தம்மை எல்லாம் உய்குவித்து-உண்மை அடியவர்கள் அனைவரையும் உய்தி பெறுமாறு உதவி; உண்மை நிலை பெற அருளும் உடையாய். (அவர்கள்) உள்ளீடான சொருபத்தை உணருமாறு அருள்பாலிக்கும் பரம ஆசாரியனே; இங்கே-இந்நில வுலகில்; மை குவித்த நெடும் கண்ணார் மயக்கில் ஆழ்ந்து வருந்துகின்றேன்-அஞ்சனம் தீட்டிய (காதளவு காணும்) நெடும் கண் பரத்தையர் காம மயக்கத்தில் காலாழ்ந்து (அளவிறந்த) துன்பம் அடைகின்றேன்; அல்லால்-அஃது அல்லாமல்; உன் மலர்த்தாள் எண்ணி கைகுவித்து கண்களில் நீர் பொழிந்து நான் ஓர் கணமேனும் கருதி நினை கலந்தது உண்டோ-(அடியேன் திகழும்) உமது திருவடிகளைத் தியானித்து, இருகரம் கூப்பி, இன்பக் கண்ணீரை இறைத்து, ஒரு கணப் பொழுதாயினும் உணர்ந்து உம்மொடு உறவுகொளும் செயல் உண்டானது இல்லையே; செய்குவித்துக் கொள்ளுதியோ கொள்கிலாயோ-(அங்ஙனம்) இணங்க அருள் செய்வாயோ, (ஏற்றுக் கொள்ளாமல் வீணே) கைவிட்டு விடுவாயோ; திருவுளத்தை அறியேன் -(உமது) திருவுளக் கருத்தை அறிந்திலேன்; என் செய்குவேனே-என்ன செய்வேனோ (ஒன்றுமே) தெரியவில்லையே.

(வி-ரை.) வாயில் வாய்மையை வளர்ப்பவர். உள்ளத்தில் உண்மையை உருவாக்குவர். மெய் எனும் உடலை மெய்ப்பொருளின் கோயிலாகப் பாவிப்பர்; காணப்படு பொருள் அனைத்தையும் சிவமாக் காண்பர். கேட்பது அனைத்தையும் அருள்நாதம் கேட்பர்.

சிந்தனைக்கு எட்டாதது சிவம். அது அகில உலகிற்கும் தன்னை அறிவிக்க, தன் வடிவை அன்பர்க்குத் தரும். அவர்களொடு அளவளாவி, அறிவைத் தூய்மை யாக்கும். இதயத்தில் சாந்நித்தியமாக இருந்து, சிவோகம் பாவனை சிந்திக்கச் செய்யும், குறியைக் குறியாது குறித்து, குறியும், குறிக்கும் தாமும் இரண்டற்று இருக்க புனித உபதேசம் புரியும்; இந்த அருமையை 'உய்குவித்து...............அருளும் உடையாய்' என்றார். (உய்குவித்து, செய்குவித்து என்பதில் உள'கு' சாரியை).

கண்கட்கு மைதீட்டல் மங்கலம்; அதை ஆடவரை மயக்கத் தீட்டல் அமங்கலம். "கண்ணால் மயக்கி முலையால் வெருட்டிக் கடிதடமாம், புண்ணாம் குழியிடை தள்ளி என் போதப் பொருள் பறிக்க, எண்ணாதுனை மறந்தேன் இறைவா" என்றார் திருவெண்காடர். அம்மயக்கில் அறிவிழந்து சதா அவர்களை எண்ணி யிணங்குதல் என்னே பாவம் என்பார், 'மைகுவித்த நெடுங்கண்...............' வருந்துகின்றேன்' என்றார்.

தரித்திரமான அந்நினைவைத் தவிர்த்து, கணநேரம் ஆயினும் கருதுதலும் கருதும் போதெல்லாம் கைகுவித்தலும், இன்பக் கண்ணீர் இறைதலும் ஆகி, நின்னில் இரண்டறக் கலந்தது இல்லையே என்பார், "மலர்த்தாள்.................கலந்தது உண்டோ" என்றார். (உண்டோ என்பதன் ஈற்று ஓகாரம், வினாப்பொருட்டு.) "சரண கமலாலயத்தை அரைநிமிட நேர மட்டும், தவமுறை தியானம் வைக்க அறியாத சடன்" என்றார் அருணை முனிவர். 'கலத்தல்; என்பது, "நீயும் நானுமாய் ஏக போகமாய், இறுகும்வகை பரம சுகம் எனப்பெறும். திருவாசகத்தில் உள்ள புணர்ச்சிப் பத்தும் இங்கு எண்ணத் தகும்.

குறையே நிறைதரும் எளியேனை, திருத்தி யாட் கொள்ளத் திருவுளம் இலதோ உளதோ தெரியவில்லையே என்பது, இறுதி யடியில் உள்ள செய்தி. தெரிந்தால் அதனை உணர்ந்து அமைவன் என்பது கருத்து. "திருவுளத்தின் கருத்து எதுவோ அது எனக்கும் கருத்தென்றான் தெய்வம் அன்னான்" என்றான் பாரத உலக சகதேவன். 'என் செய்குவேனே' என்றது. தன் சுதந்தரம் இன்மையை எண்ணித் தவித்தபடி. (79)

**அருள்வெளியில் ஆநந்த வடிவி னால்நின்**
**றாடுகின்ற பெருவாழ்வே அரசே இந்த**
**மருள்வலையில் அகப்பட்ட மனத்தால் அந்தோ**
**மதிகலங்கி மெய்நிலைக்கோர் வழிகா ணாதே**
**இருள்நெறியில் கோலிழந்த குருட்டு மன்போல்**
**எண்ணாதெல் லாம்எண்ணி ஏங்கி ஏங்கி**

**உருள்சகடக் கால்போலும் சுழலா நின்றேன்**
**உய்யும்வகை அறியேனிவ் வொதிய னேனே.**

(ப-ரை.) அருள் வெளியில் ஆநந்த வடிவினால் நின்று ஆடுகின்ற பெரு வாழ்வே-சிதாகாசப் பேரம்பலத்தில் இன்பத் திருமேனியாக இருந்து உயிர்க் கூத்து உஞற்றுகின்ற பெருவாழ்வான பெருமானே; அரசே-(அண்டங்கள் அனைத்திற்கும்) அரசனே; இந்த மருள் வலையில் அகப்பட்ட மனத்தால்-இந்த மையல் வலையில் சிக்குண்ட மனத்தால்; அந்தோ-, மதி கலங்கி-அறிவு குழம்பி; மெய் நிலைக்கு ஓர் வழி காணாது-சன்மார்க்க நிலை சார்தற்கு ஒரு வழியும் தோன்றாமல்; இருள் நெறியில் கோல் இழந்த குருட்டு, ஊமன்போல்-இருட்டு வழியில் ஊன்று கோலைத் தொலைத்து விட்ட கண்ணில்லாத, வார்த்தை சொல்ல வாயும் இல்லாத ஒருவனைப்போல்; எண்ணாது எல்லாம் எண்ணி ஏங்கி ஏங்கி-(இதுவரை) எண்ணாமல் இருந்த செய்திகளை எல்லாம் எண்ணி ஏங்கி உளம் வருந்தி; உருள் சகடக் கால்போலும் உழலா நின்றேன் - உருள்கின்ற வண்டிச் சக்கரத்தைப் போல் (வாழ்க்கையில்) உழல்கின்றேன்; இவ் ஓதியனேன் - இந்த ஒதிய மரம்போன்ற பயனிலாத யான்; உய்யும் வகை அறியேன் - கடைத்தேறும் மார்க்கம் (இதுவரை) கண்டிலேனே (எ-று.)

(வி-ரை.) நீலாகாயம், தூமாகாயம், அழலாகாயம், மின்னாகாயம், செவ்வாகாயம், வெள்ளாகாயம், தெள்ளாகாயம் எனப்பெறும் எட்டு ஆகாயங்கட்கும், 'அருள்வெளி' எனும் சிதாகாயம் ஒன்றே ஆதாரம்.

பிண்டம் என்பது தேகம். இதனில் நாசி இருக்கிறது. நாசியில் சுவாசம் நடமாடும். அண்டத்தில் உள்ள காற்று, இந்தச் சுவாசத்திற்கு ஆதாரம். ஆக்கையுள் ஆகாயம் போல் இருக்கின்ற ஆன்ம அறிவிற்கு, அண்டத்தும் பிண்டத்தும் உள்ள பரமான்ம ஞானம் ஆதாரம். இங்ஙனம் ஆதார ஆதேயமான சிவம், அருள் வெளியில் ஆநந்தமே திருமேனியாகி, நிரந்தரமான திருக்கூத்து நிகழ்த்துகின்றது.

**"எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே நட்டம்"**

என்பது உண்மை விளக்கம். (எட்டும் இரண்டும் பத்து; அது தமிழ்க் கணிதத்தில் 'ய' என்று எழுதப் பெறும். அந்த யகரமே ஆன்மா. அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், சிவலிங்கம் எனும் பலவற்றுள், எட்டும் இரண்டும் ஆன 'ய' ஆன்ம லிங்கம் என்று அறியப் பெறும்.

அருள்வெளி எனும் சிதாகாயம், ஆன்ம இதயம் என்று அறிந்துளம். அந்த வெளியில் ஆடுபவன் ஆநந்த மேனியன். வளமான பெருவாழ்வு, அத்திருக்கூத்தில் இருந்து வளர்கிறது. ஆஹா! என்ன அருமையான செய்தி யிது!

**"கொடைஅளி செங்கோல் குடி ஓம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க்கு ஒளி"**

என்பது போது மறை; சிறப்பான ஆகமங்களும் இச் செய்தியை யேன்று, 'அரசே' என்று சிவத்தை அழைக்கின்றன; கணிக்கத் தக்க அவ்விளி, இங்கேயும் கருதப் பெற்றுள்ளது.

**"அருளது என்ற அகலிடம் ஒன்றும்
பொருளது என்ற புகலிடம் ஒன்றும்
மருளது நீங்க மனம்புகுந் தானைத்
தெருளுறும் பின்னைச் சிவகதி தானே"**

[அகலிடம் ஒன்று-ஒப்பற்ற வியாபகத் தானம். பொருள்-சிவம். புகல் இடம் ஒன்று-ஒப்பற்ற அடைக்கல நிலயம். மருள் - விபரீத உணர்வு. தெருளுறும்-தெளிமின்.]

இத்திருமந்திரம் இங்கு நினைவிற்கு வருகிறது.

அருள்வெளியில் ஆநந்த வாழ்வாக ஆடுகின்றீர் நீர். மருள் வலையில் மதிகலங்கித் தாழ்கின்றேன் அடியேன்.

பொய் நிலை என்பது, தாழ்விக்கும் இருள்நெறி. மெய்ந்நிலை என்பது வாழ்விக்கும் ஒளிநெறி. அம் மெய்ந்நிலைக்குச் செல்லும் வழி தெரியவில்லையே.

நள்ளிரவு நேரம். எவரும் நடமாடாத வழி. கண்ணும் குருடு. வாயும் ஊமை. அவ்வழியில் அவன் அகப்பட்டுக் கொண்டான். ஊன்றுகோலே அவனுக்கு உற்ற துணை. அதையும் தவறி விட்டுவிட்டான். தடவிப் பார்க்கிறான், தடி அகப்பட்டிலது. என்ன செய்வான் அந்த ஏழை! எண்ணாத எண்ணமெலாம் எண்ணுகிறான். எண்ணி எண்ணி ஏங்குகிறான். அதுபோல் அடியேன் ஆணவ இருளில் அகப்பட்டேன்; தடி என்னும் ஆக்கையை நம்பினன். அதுவும் வரவரத் தளர்கிறது. மற்று, திருவருளே ஊன்று கோல். அதையும் அகப்படுத்த அறியேன். சகடக்கால் போல் உருண்டு வருகிறது பல பிறவி. உவகை யிழந்து இதனில் உருள்கின்றேனே! உண்டதே உண்டேன், உடுத்ததே உடுத்தினேன். கண்டதே கண்டேன்; கடவ நாள் கழித்தேன். சுழிபட்டுத் தடுமாறும் ஆதமிலி ஆயினன். உய்யும் வகையை உணர்ந்திலனே! ஓதிய மரம் தூணாகாது என்பர். அதுபோல் வளர்ந்தேன். எவர்க்கும் பயனில்லை; எனக்கேயும் நலமில்லை. நான் வெறும் பூமிக்குப் பாரம். அருள்க பிரபோ என்று அலறியபடி. (80)

**கற்றவளை தனக்கும்உண வளிக்கும் உன்றன்
கருணைநிலை தனையறியேன் கடையேன் இங்கே
எற்றவளை எறும்பேபோல் திரிந்து நாளும்
இளைத்துநின தருள்காணா தெந்தாய் அந்தோ
பெற்றவளைக் காணாத பிள்ளை போலப்
பேதுறுகின் றேன்செய்யும் பிழையை நோக்கி
இற்றவளைக் கேள்விடல்போல் விடுதி யேல்யான்
என்செய்வேன் எங்குறுவேன் என்சொல் வேனே.**

(ப-ரை.) கல் தவளை தனக்கும் உணவு அளிக்கும் உன்றன் கருணை நிலைதனை கடையேன் அறியேன்-கல்லிற்குள் இருக்கும் தேரைக்கும் உணவை உதவும் உம்முடைய அருள் நிலையை, (அறிவாற்) கீழ்மையேன் ஒரு சிறிதும் அறிந்திலேன்; இங்கே எற்று வளை எறும்பேபோல் நாளும் திரிந்து இளைத்து-இவ்வுலகில் (நிலத்தை அரித்துப்) புற்று உண்டாக்கும் அந்த எறும்பினம் போல ஒவ்வொரு நாளும் அலைமோதி மெலிந்து; நினது அருள் காணாது-(தமியேன்)

உமது திருவருளைத் தரிசிக்காமல்; எந்தாய்-எந்தையே; அந்தோ-ஐயோ; பெற்றவளைக் காணாத பிள்ளைபோல பேதுறுகின்றேன் - தாயைக் காணாத சேய்போல் மதிமயங்குகின்றேன்; செய்யும் பிழையை நோக்கி இல்தவளைக் கேள்விடல்போல்-செய்யும் குற்றங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, (விளங்கிழை) மனைவியைக் கணவன் (வெறுத்து) விலக்குதல்போல் (என்னைக்) கைவிடுவாயானால்; யான் என் செய்வேன்-(அகதியான) அடியேன் யாது புரிவேன்; எங்கு உறுவேன் - (புகலிடமாக) எங்குப் போவேன்; என் சொல்வேனே-யாது கூறுவேன் (தெரியவில்லையே), (எ-று.)

(வி-ரை.) செடிகளும், கொடிகளும், புல்பூண்டுகளும், மரங்களும் செறிந்து, கன இருள் நிறைந்தது காடு. அக் காட்டில் ஒரு கருங்கல், அதனுள் இருந்து வெளி வரவோ உள் புகவோ ஒரு சிறு துவாரமும் இல்லை. இயற்கை செய்த விளையாட்டால், கல்லினுள் ஒரு தவளை. அது இருக்கும் இடத்தில் ஒரு பள்ளம், சுத்தமான நீர், அப்பள்ளத்தில் சுரக்கிறது. வசதி குறைவு இன்றி, தவளை அங்கு வாழ்கிறது. இந்த விசித்திரத்தை என் என்பது! ஊன்றியிதை உணர்ந்து,

**"கண்ணுழையாக் காட்டில் கருங்கல் தவளைக்கு**
**உண்ணும் படியறிந் தூட்டுமவன் - நண்ணும்**
**நமக்கும் படியளப்பான்; நாரியோர் பாகர்**
**தமக்குத் தொழிலென்ன தான்"**

என்றார் ஒரு பெரியார்.

அத்தனது பேரருளை இச்செய்தி அறிவிக்கிறது அல்லவா! இதை, 'கல் தவளைக்கு உணவளிக்கும் உன்றன் கருணைநிலை தனையறியேன்' என்றார்.

எனக்கு மேலோர் தலையாயார்; அவர்கட்குக் கீழிருப்பவர் இடையாயார்; அவர்கட்குக் கீழிருப்பவன் 'கடையேன்', எனவே எவர்க்கும் கீழ்த்தரமாக எளியேன் இருக்கின்றேன். ஆதலின், கனிவுள இயற்கையைக் கண்ணிருந்தும் காணேன், கருதேன் ஆயினேன்.

எறும்புகள் எதிர்கால நலத்தை எண்ணும்; அவைகள், உருவால் குறியன; அதற்குரிய சிறுவாய்; வாயில் சிறிய நாக்கு; அந்நாக்கில் சுரக்கும் சிறுநீர்; அந்நீர் கொண்டு அணு அணுவாக மண்ணை எடுக்கும். ஒருபுறமாக அம்மண் அணுக்களை ஒருபுறமாக ஒன்றச் சேர்க்கும். அம்முயற்சியால் உயர்ந்த புற்று ஒன்று உருவாகும். "சிதலது நீர் வாய்ச் சிறுதுகளால், பெரும் புற்றுரு அமைந்த பெற்றி" என்றார் நன்னூற்கு உரைகண்ட சங்கர நமச்சிவாயர்.

பொருபொருத்து உருவான புற்றுள், சிறிது சிறிதாகத் தானியங்களைக் கொண்டு போய்க் குவிக்கும். மழைக் காலத்தில் நிம்மதியாக இருப்பம் என்பது, அவைகளது எண்ணம். அதன்பின் பாம்பு ஒன்று அவ்வழியே படரும். பயனான புற்றைப் பார்க்கும். உரிமையுடன் அதன் உள் நுழையும். சேகரித்த பொருள்களையும், சேகரித்த எறும்புகளையும் இரையாக்கிக் கொள்ளும். இப்புற்று இனி என்னதே என்று, அதனுள் இறுமாந்து வாழும். இதுதான் உலகம். எறும்புகட்கு ஓய்வு ஏது! எவ்வளவு முயற்சிகள்! எப்படி யெல்லாம் தானியங்களை யீட்டின. இறுதியில் கொள்ளை கொடுத்து இறந்து விடுகின்றன. எறும்புகளின்

வரலாறுகளை மக்கள் எண்ணினால், கோடி கோடியான தீமைகள் குறைந்து போகுமே; ஏன் இது எவர்க்கும் தெரியவில்லை. மாயையின் விலாசம் கண்ணை மறைக்க, சிந்திக்கவும் இடமின்றி உலகம் சீரழிகின்றதே!

எறும்புபோல் ஓயாது முயன்றேன்; அதன் பயனாக இளைத்தேன். மனம் அயர்ந்தேன். வீணான முயற்சிகளால் விரையமானது அல்லாமல், உமது கருணை விலாசத்தைக் காண அவாவிலன்.

அருள்சமயம் ஆனவள் ஒரு அன்னை. அவள் பிள்ளை ஒன்றைப் பெற்றாள். பாலூட்டினாள். காலத்தில் சோறூட்டினாள். இளைஞனுக்கு வயது இரண்டு, விளையாட்டுப் போக்காக, சிறுவன் வீதி வழிச் சென்றான். நெடுந்தூரம் நடந்தான். தாய் நினைவு வந்தது. திரும்பினான். வழி தெரியவில்லை. எண்ணினான் எங்கும் தாய் முகம் காணாது ஏங்கினான். மனம் இருண்டது. நா வறண்டது. அம்மா என்று அலறவும் தோன்றவில்லை. அந்த நிலையில் அடியேன் உளன். என் உமைத் தரிசிப்பேனோ தெரியவில்லையே!

ஒருவன் ஒருத்தியை மணந்தான். இன்பமாக இருந்தான். ஒருநாள், மனைவி போக்கில் மாறுதல் கண்டான். ஆரம்பத்தில் கண்டித்தான். வரவர குறைகள் வளர்ந்தன. மன்னிக்க முடியாத பிழைகள் மலிந்தன. கண்டான். கனன்றான். கழுத்தில் கைவைத்து, வீட்டிலிருந்து அவளை வெளியேற்றினான். இல்லற அனுட்டானம், இயல்பான தவம். அதை யேன்றவட்கு ‘இற்றவள்’ என்று பெயர். (இல்+தவள்-இற்றவள் என்று புணர்ந்தது; இதற்கு விதி புறநடை சூத்திரத்தில் இருக்கிறது.) இயல்பான தர்மத்தை அடியோடு இழந்தவள் ஆதலின், அவள் ‘இற்றவள்’ எனப் பெற்றாள் எனினுமாம்.

இன்ப துன்ப அனுபவங்களை, கேட்டு அறிபவர் ‘கேளிர்’ எனப் பெறுவர். இங்கு அப் பெயர், கணவன் எனும் பொருளில் இருக்கிறது. இற்றவளைக் கேள்விடல் இயற்கை.

நீர் பதி. அடியேன் உமது நாயகி. பொல்லா ஒழுக்கப் போர்வை கண்டபின், விமலா! எளியேனை நீர் விலக்கலாம். கணவனால் கைவிடப்பட்டவளை, எவரும் உலகில் ஏற்பது இல்லை அதுபோல் கடியவன் கொடியவன் என்று நீர் அடியேனைக் கைவிட்டால், என்னால் என்செய இயலும்? பொல்லா எனக்கு ஏது புகலிடம்? வாய் திறக்கவே வழியில்லையே என்று அலறி விம்மி அழுதபடி. (81)

**அடிமைசெயப் புகுந்திடும்எம் போல்வார் குற்றம்**
**ஆயிரமும் பொறுத்தருளும் அரசே நாயேன்**
**கொடுமைசெயும் மனத்தாலே வருந்தி அந்தோ**
**குரங்கின்கை மாலையெனக் குலையா நின்றேன்**
**கடுமைசெயப் பிறர்துணிந்தால் அடிமை தன்னைக்**
**கண்டிருத்தல் அழகன்றே கருணைக் கெந்தாய்**
**செடிமையுளப் பாதகனேன் என்செய் வேன்நின்**
**திருவுளத்தை அறிந்திலேன் திகைக்கின் றேனே.**

(ப-ரை.) அடிமை செயப் புகுந்திடும் எம்போல்வார் குற்றம் ஆயிரமும் பொறுத்தருளும் அரசே (புனித) அடிமைத் திருப்பணி புரியத் தொடங்கும் எம்போன்ற எளியவர்கள் இயற்றும் ஆயிரக்கணக்கான பிழைகளையும் மன்னித்தருளும் மன்னவனே; நாயேன் கொடுமை செயும் மனத்தாலே வருந்தி-நாய்போலும் கீழ்மையேன் மாபெரும் பொல்லாங்கை விளைவிக்கும் (தொல்லை) மனத்தால் துன்பம் அடைந்து; அந்தோ குரங்கின் கை மாலை என குலையா நின்றேன் - குரங்கின் கைப்பட்ட (பூ) மாலை போல் நிலை குலைந்து நிற்கின்றேன்; கடுமை செயப் பிறர் துணிந்தால்-நீளும் கடுமை விளைவிக்கப் பிறர் நிச்சயித்தால்; எந்தாய்-எமது பரம தந்தையே; அடிமை தன்னைக் கண்டு இருத்தல் கருணைக்கு அழகு அன்றே-(உமது) அடிமையான அடியேன் படும் துன்பத்தை (வாளா) பார்த்துக்கொண்டு இருத்தல் (அரிய உமது) திருவருளுக்கு அழகு ஆகுமா? செடிமை உளப் பாதகனேன் என் செய்வேன் - மாபெரும் தீமையும் அறியாமையும் விரவிய மனத்தை யுடைய (ஏதமான) பாவியேன் யாது புரிவேன்; திருவுளத்தை அறிந்திலேன் - (உமது) திருவுளக் கருத்தை (ஒரு சிறிதும்) தெளிந்திலன்; திகைக்கின்றேனே-இங்கு திகைப்படைந்து இருக்கின்றேனே,(எ-று.)

(வி-ரை.) “நலமது ஒன்று அடைதற்கு உறும் இடையூறு, நாதனே பலவுள அன்றே” தொண்டு செய்வது ஒன்றுதான், நுட்பப் பிறவியின் நோக்கம் இதனில் ஆகாமியம் இல்லை; சிவ புண்ணியம் சேரும். அடியரேம் இவைகளை அருள் அறிவிக்க அறிந்தேம்; இனிய அப் பணிகளில் இறங்கினேம். அபுத்தி பூர்வமான பிழைகள், அதனிலும் எழுந்து அதிர்த்தன. பொறுமையே, சொரூபமாக உள்ள நீர், அப் பிழைகள் அனைத்தையும் பொறுத்தீர் என்பார், ‘அடிமை செயப் புகுந்திடும் எம்போல்வார் குற்றம் ஆயிரமும் பொறுத்தருளும் அரசே!’ என்றார்.

**“குற்றம் புரிதல் எமக்கியல்பே**
**குணமாக் கொள்ளல் உமக்கியல்பே”**

என, வேறு ஒரு இடத்தில் இது குறித்து விண்ணப்பித்தலையறிந்துளம்.

**“பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்**
**பிழைத்தனகள் அத்தனையும் பொருத்தா யன்றே”**

என்று அப்பரும்,

**“வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை**
**நின் பெருமையினால் பொறுப்பவனே”**

என்று மாணிக்க வாசகரும்,

**“பிழையே பொறுத்துன் இருதாளி லுற்ற**
**பெரு வாழ்வு பற்ற அருள்வாயே”**

என்று அருணை முனிவரும், பிழைகளை மன்னிக்கும் பெருமானது பேரருட் சீலத்தைப் பிரார்த்திப்பதை உணர்ந்துளம்.

பழுது நாயிடம் பலவுள. அகத்தாலும் புறத்தாலும் ஒழுக்கமற்ற அடியேன் ஒரு அடி நாய்.

எண்ணத்தை ஒன்றில் எழுப்பும். எழுப்பிய நினைவுகளை இடைமுறியச் செய்யும் பொல்லாத வாசனைகளில் புகுந்து புகுந்து, நிச்சயித்த அவைகளை நிலையென்று நம்பி, கோர தாண்டவம் செய்து கொக்கரிக்கும். புறத்திலேயே போய்ப் போய்ப் பழகும். இரும்பினும் கல்லினும் இறுகி யிருக்கும். நலமற்றன செய்து நரகத்தில் ஆழ்த்தும், படித்ததையும் கேட்டதையும், கண்களால் பார்த்ததாகப் பறைகொட்டும் “எல்லாமும் வலதிந்த மனமாயை என்னால் அடக்க வசமோ?” என்று, ஆகாத மனச்சேட்டையை எண்ணி அலறுகிறார் தாயுமானார். “காடும் கரையும் மனக்குரங்கு கால்விட்டோட அதன் பிறகே, ஓடும் தொழிலாற் பயனுளதோ” என்று ஓராமல், பொல்லாத மனம் போனவழி யெல்லாம் போக நேர்கிறதே!

அரிய பூமாலை அகப்பட்டால், சின்னா பின்னமாகக் குரங்கு அதைச் சிதைத்துவிடும். ஆகாத மனமான வானரம், ஐயோ! என்னை அந்தக் கதி யாக்குகிறதே! “கொடுமை செயும் மனத்தாலே வருந்தி, அந்தோ! குரங்கின் கை மாலையெனக் குலையா நின்றேன்” என்று குமுறுகிறது வள்ளலார் திருவுள்ளம். கொலை, கோரம், பட்சபாதம். வன்குணம், கல்லாமை, அகந்தை, கள்ளத்தனம், சத்தறியாமை, உணர்வு நெறியில் உறவு கொளாமை, துர்ச்சங்க சகவாசம், வீண் முயல்வு, சலன நிலை, வெறுந்தேக அபிமானம் முதலிய பாழும் இவைகளில் பயிலுமாறு, தத்துவக் கூட்டங்கள் தள்ளுகின்றனவே! இவைகளால் என்றும் கலங்கி யிருக்கின்றேனே! ஆண்டான் நீ. அடிமை நான். தட்டுக் கெட்டு அடியேன் தடுமாறுவது கண்டுள நீர், அச்சேட்டைகளைத் தடுக்காமல் வாளா இருப்பது உமது அருளுக்கு அழகாகுமா? ‘கடுமை செயப் பிறர் துணிந்தால், அடிமை தன்னைக் கண்டிருத்தல் அழகன்றே கருணைக்கு எந்தாய்.”

அடியேன் உளத்தில், தீமைகள் எனும் முள்செடிகள் ஏராளமாக முளைத்தன. அதன் வழி, கருமை மையும் அளவிறந்து கலந்தன. (செடி-தீங்கு. மை-அறியாமை இருள்.)

இவைகளால் பாதக காரியம் பல செய்து, அப்பெயரையே பெறும் பாத்திரன் ஆயினேன்.

**“சாதகமோ தீவினையின் சாதனையோ நானறியேன்**
**பாதகமென் றாலெனக்குப் பால்சோறு.”**

சீர்குலைந்தேன்; செய்வது அறியேன், உமது திருவுளம் யாது எண்ணியுளதோ அதுவும் அறிந்திலன். திகைப்பூண்டு மிதித்தவர்போல் மயங்கியுளன். அருள்க பிரபோ! என்று அலறும் இப்பாசுரத்தை, ஓதும் போதே கல்லாம் மனமும் கரைகிறதே! கண்கள் குளமாய்க் கலுழ்கின்றனவே! (ஓம் ஓம் ஓம்.) (82)

**கூம்பாத மெய்ந்நெறியோர் உளத்தே என்றும்**
**குறையாத இன்பளிக்கும் குருவே ஆசைத்**
**தாம்பாலே யாப்புண்டு வருந்தி நாயேன்**
**தையலார் மையலெனும் சலதி ஆழ்ந்து**

**ஓம்பாமல் உவர்நீருண் டுயங்கு கின்றேன்**
**உன்னடியர் அக்கரைமேல் உவந்து நின்றே**
**தீம்பாலும் சருக்கரையும் தேனும் நெய்யும்**
**தேக்குகின்றார் இதுதகுமோ தேவ தேவே.**

(ப-ரை.) கூம்பாத மெய் நெறியோர் உளத்தே என்றும் குறையாத இன்பு அளிக்கும் குருவே-சுருங்காது பெருகுகின்ற (உத்தம) சன்மார்க்கிகளின் திருவுளத்தில் எந்நாளும் குறையாத பேரின்பம் வழங்கும் குருமூர்த்தியே; தேவதேவே-தேவர்கள் அனைவர்க்கும் தெய்வமே; நாயேன் ஆசைத் தாம்பாலே யாப்புண்டு வருந்தி (கலகலத்த) ஆசைகளாம் கயிறுகளால் கட்டுண்டு பல துன்பங்களை அனுபவித்து; தையலார் மையல் எனும் சலதி ஆழ்ந்து - கோதையர்களது மோகக் கடலில் மூழ்கி; ஓம்பாமல் உவர் நீர் உண்டு உயங்குகின்றேன் - (மனத்தைக் கட்டுப்படுத்தி உப்பு நீரைப் பருகிக் கருத்து நைந்து கவல்கின்றேன்; உன் அடியார் அக்கரை மேல் உவந்து நின்றே-உனது அடியார்கள் அம்முத்திக் கரைமேல் உவகையுடன் இருந்து; தீம்பாலும் சருக்கரையும் தேனும் நெய்யும் தேக்குகின்றார்-இனிய பாலும் சர்க்கரையும் தேனும் நெய்யும் (கலந்தது) ஒத்த (பயனான பேரின்பம் நிரம்ப அனுபவிக்கின்றனர்; இது தகுமோ-இந்த வேறுபட்ட நிலை தக்கது ஆகுமோ? (எ-று.)

(வி-ரை.) ஆரவாரித்துத் தேய்ந்து அழிவது பொய்ந்நெறி. அமைதியொடு மலர்ந்து மணப்பது மெய்ந்நெறி. இது, சமரச சுத்த சத்திய சன்மார்க்கம் எனப்பெறும். இதன் வழியே இயங்குபவர், ‘கூம்பாத மெய்ந் நெறியோர்’ எனப் பெறுவர். (கூம்புதல்-குவிந்து உலர்ந்து குலைதல்.)

இதற்கு மாறாகப் பொய் வழியில் சுருங்கிப் போவார் மனத்தில், கால தேவதை சிற்றின்பத்தையே காட்டும். உள்கும் மெய்ந்நெறியர் உள்ளத்தில், குறையாத இன்பத்தைக் கூட்டும் ‘குருவே’ என்று கூவி விளித்தார். “பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி, மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே”; “அற்புதமான அமுத தாரைகள், ஏற்புத் துளைதொறும் ஏற்றினேன்”.

“அருபரத்து ஒருவன் அவனியில் வந்து குருபரனாகி அருளி” எனும் திருவாசகங்கள் இங்கு எண்ணத் தகும்.

ஆசைக்குப் ‘பாசம்’ எனும் பெயருண்டு. (பாசம்-பந்திக்கும் கயிறு.)

“ஆசைக்கோர் அளவு இல்லை” ஒவ்வொரு ஆசையும் ஒவ்வொரு கயிறு. ‘ஆசையெனும் தாம்பாலே யாப்புண்டு’ எனும் செய்தி, இறுக்கி நெருக்கி ஒவ்வொன்றும் ஏகமாகப் பின்னியுளது. ஒன்று அறுந்தால் மற்றொன்று அறுதல் இல்லை. இப்படி எல்லையற்ற தாம்பால் எண்ணிறந்த வேதனை.

நாளுக்கொரு கோலம் செய்வர் நங்கையர்; அவர்கள் பெயரே தையலர். (தைத்தல்-தம்மைச் செயற்கைப் புனைவு செய்யத் தாமே அறிந்திருத்தல்.)

இது தவறு இல்லை; அவர்கட்கு இயற்கை. புனித தேவியின் சொரூபதைப் புலனாக்குபவர் பூவையர் என்பதைப் புரிந்து கொள்ளாமல், ஊன் பொதி தேக

உறவொன்றே எண்ணி, அந்நினைவின் அலைகளால் சதா முகரும் மோக சாகரத்தில் அடியேன் மூழ்கினேன்; காயம் எனும் பெயர்க் கேற்ப, தேகத்தை வச்சிர காயம் ஆக்காமல், கட்டுக் கோப்புக் குலையுமாறுளன்;

புலத்தல் விலக்கிப் பூவையர் தொடர்பில் புகுந்த பொழுது, விளங்கிழையர் உடல் வியர்க்கும்; அந்நீர் உப்புக் கரிக்கும். அதைப் பருக கடுங்காமி ஆவலிப்பன். ஐம்புலன்களும் ஆரத் துய்க்கும் காம இன்பம், உப்புச் சுவை யென்றே கருதப் பெறும்.

“ஊடிப் பெறுகுவங் கொல்லோ? நுதல் வியர்ப்பக் கூடலில் தோன்றிய உப்பு” என்பது, திருக்குறள்.

**“கோடும் இளம்பிறையில் குறுவிய முத்துதிரக்,**
**கொங்கை வடம்புரளச், செங்கழுநீர் அளகக்**
**காடு குலைந்தலையக், கைவளை பூசலிடக்,**
**கலவி விடாமடவீர்! கடைதிறமின் திறமின்”**

என்பது கலிங்கத்துப் பரணி.

மண்ணாசை பொன்னாசைகள் மல்லடிக்கின்றன; அதனுடன், நீர் சிந்தச் சிந்த நாக்கைத் தொங்கவிடும் நாய் போல், அணங்கினர்தம் காமக் கடலில் அழுந்தி, இதனால் அநியாய மரணம் அணுகும் என அறியாமல், புலத்தல் விலக்கிய கலத்தலில், ஊறிச் சுரக்கும் உப்புக் கரிக்கும் வியர்வையைச் சுவைத்து, கண்சிவக்க உடல் இளைத்துக் களைப்படைகின்றேன் என்பார், ‘நாயேன், தையலார் மையல் எனும் சலதி ஆழ்ந்து, ஓம்பாமல் உவர்நீர் உண்டு உயங்குகின்றேன்’ என்றார்.

**“புண்ணைக் கட்டிக்கொண் டேயதன் மேலொரு**
**புடவை கட்டிப் புதுமைகள் காட்டிடும்**
**பெண்ணைக் கட்டிக்கொள் வாரிவர் கொள்ளிவாய்ப்**
**பேயைக் கட்டிக்கொண் டாலும்பி ழைப்பர்காண்**
**மண்ணைக் கட்டிக்கொண் டேயழு கின்றஇம்**
**மடையப் பிள்ளைகள் வாழ்வினை நோக்குங்கால்**
**கண்ணைக் கட்டிக்கொண் டீர்வழி போங்கிழக்**
**கழுதை வாழ்விற் கடையென லாகுமே”**

எனவரும் திருவருட்பா இங்கு எண்ணவரும்.

திருஞான சம்பந்தர், பிரமபுரம் பொய்கைத் துறைவழி கரையேறி யின்பம் கண்டார். திருநாவுக்கரசர், திருஐயாற்றுத் துறைவழி இன்பக் கரையில் ஏறினார். சுந்தரர், திருவருள் துறையில் இறங்கிக் கரை யேறினார். மாணிக்க வாசகர் இறங்கிய திருப்பெருந்துறை வழியே கரையேறினார் அவர்கள் பெற்ற பேரின்ப வெள்ளம், எண்சாண் உடலினர்தம் கன்மங் கழுவும் எட்டுத் திருமுறைகள் ஆயின. இப்படியெல்லாம் அவர்கள் அக்கரையேறினர். (அக்கரை-அந்த முத்திக்கரை)

**“இக்கரை கடந்திடில் அக்கரையே**
**இருப்பது சிதம்பர சர்க்கரையே”**

என்பது, திருவருட்பாக் கீர்த்தனைப் பகுதி.

பாலான சரியை, சர்க்கரையான கிரியை, தேனான யோகம், நெய்யான ஞான இன்பத்தில் நீந்துகின்றோர் அம் மேலோர். உப்பு நீர் உண்டு அடியேன் உலர்கின்றேனே என்று கலங்கிய மனத்தொடு கதறிய பா இது.

**"கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்**
**சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று**
**பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்"**

எனவும்,

**"அறவே பெற்றார்நின் அன்பர் அந்த மின்றி அகநெகவும்**
**புறமே கிடந்து புலைநாயேன் புலம்பு கின்றேன் உடையானே**
**பெறவே வேண்டும் மெய்யன்பு பேரா ஒழியாப் பிரிவில்லா**
**மறவா நினையா அளவிலா மாளா இன்ப மாகடலே"**

எனவும்,

**"கூடிக் கூடி உன்அடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா**
**வாடி வாடி வழியற்றேன் வற்றல் மரம்போல் நிற்பேனோ**
**ஊடி ஊடி உடையாயொடு கலந்(து) உள் உருகிப் பெருகி நெக்(கு)**
**ஆடி ஆடி ஆநந்தம் அதுவே ஆக அருள்கலந்தே"**

எனவும் வரும் திருவாசகங்கள், இங்கு நம் நினைவில் எழுகின்றன அல்லவா! (83)

**வெள்ளமணி சடைக்கனியே மூவ ராகி**
**விரிந்தருளும் ஒருதனியே விழல னேனைக்**
**கள்ளமனக் குரங்காட்டும் ஆட்ட மெல்லாம்**
**கண்டிருந்தும் இரங்கிலையேல் கவலை யாலே**
**உள்ளமெலிந் துழல்கின்ற சிறியேன் பின்னர்**
**உய்யும்வகை எவ்வகையீ துன்னுந் தோறும்**
**பொள்ளெனமெய் வியர்க்கஉளம் பதைக்கச் சோபம்**
**பொங்கிவழி கின்றதுநான் பொறுக்கி லேனே.**

(ப-ரை.) வெள்ளம் அணி சடைக் கனியே அழகிய கங்கையை அணிந்த சடையுடைய (பழுத்த) திருவருட்பழமே; மூவர் ஆகி விரிந்தருளும் ஒரு தனியே- (உருத்திரன், திருமால், பிரமன், எனும்) மும்மூர்த்திகளாகிப் பெருகி (உயிர்கட்குப்) பேரருள் புரியும் ஒப்பற்ற அந்தரங்கத் தெய்வமே; விழலனேனை கள்ள மனக்குரங்கு ஆட்டும் ஆட்டம் எல்லாம் கண்டு இருந்தும் இரங்கிலையேல்-விழல்போல் எப்பயனும் இல்லாத வீணனான என்னை (வாதிக்கும்) திருட்டு மனமாகிய வானரம் ஆட்டிப் படைக்கும் கூத்து அனைத்தையும் பிரத்தியட்சமாகப் பார்த்திருந்தும் (என்று கொளத்திருவுளத்தில்) இரக்கம் கொண்டிலை யெனில்; கவலையாலே உள்ளம் மெலிந்து உழல்கின்ற சிறியேன் - கவலைகளால் மனம் இளைத்துக் கதிகெட்டுத் திரிகின்ற கடையேன்; பின்னர் உய்யும் வகை எவ்வகை-இனிமேல்

கடைத்தேறும் வகை எந்த வகை; ஈது உன்னுந்தோறும் பொள் என மெய் வியர்க்க உளம் பதைக்க-இவைகளை எண்ணும் போதெல்லாம் விரைந்து உடலம் வியர்ப்ப, நெஞ்சம் துடிக்க; சோபம் பொங்கி வழிகின்றது, நான் பொறுக்கிலேனே-அளவிறந்து சோர்வு மிகுவதை என்னால் தாங்க முடியவில்லையே, (எ-று.)

(வி-ரை.) விண்ணில் இருப்பது மந்தாகினி; நிலவுலகில் இருப்பது கங்கை; பாதலத்தில் இருப்பது போகவதி இறைவன் திருமுடியில் என்றும் இருப்பது சிவகங்கை. சிவ கங்கையின் ஒரு துளி சிதறி, அது பெருகிய ஆறாய்ப் பெருகியது என்று, புனித நதிகளின் பெருமைகளைப் புராணங்கள் புகல்கின்றன. இவைகளின் மூலம், அப்ராக்ருத கங்கையின் ஆக்கம் அறியப் பெறும்.

"சிவத்தைப் பேணல் தவத்திற்கு அழகு" என்றார் ஔவை மூதாட்டியார். மாதவ வடிவன் மாதேவன். அதை மின்வண்ணமான சடையே மெய்ப்பிக்கின்றது. உபநிடத உச்சியில் பழுத்துக் காணப்பெறும் பழம் சிவம். அரிய இந்தக் கோலத்தை, 'வெள்ளமணி சடைக்கனியே' என்று விளம்பும் நாவூற விளித்தார்.

தனித்தவர் தரிசிக்கும் தன்னந் தனியான அப்பரன், உயிர்களின் உய்தியைத் திருவுளம் கொண்டு, விரிந்து மூவராகி விளங்குகின்றான் ஆதலின், 'மூவராகி விரிந்தருளும் ஒரு தனியே' என்றார்.

விழல் என்பது, ஒரு வகையான புல்; இது எதற்கும் பயன்படாதது. அதுபோல் என்னால் எனக்கும் நலமில்லை; பிறர்க்கும் சிறிதும் பயனில்லை. 'விழலெனேன்' எனும் வெறுப்பிற்கு உரிய பெயரினனாய் உளன்.

இந்நிலையில், உடன்பட்டு எதனிலும் உறவு. மறுகணமே அதனிலிருந்து மாறுபடல். தன் தீர்ப்பே தகுதியென்று தவறுபடல். இங்ஙனம் குதிக்கும் முனைப்புக் குரங்கு மனம். "நல்ல செய்து நரரை உயர்த்தவும், அல்ல செய்து அளற்றிடை ஆழ்த்தவும், வல்ல(து)" இந்த கள்ள மனம். ஆட்டிப் படைக்கும் இந்த மனத்தொடு கூடி, போடத் தகாத வேடமெலாம் போடுகிறேன். பாடத் தகாத பாட்டையெல்லாம் பாடுகிறேன். ஆடத் தகாத ஆட்டமெல்லாம் ஆடுகின்றேன் அடியேன்.

அகத்தும் புறத்தும் உமது அருள் விலாசம் காண வேண்டும் எனும் நினைவு இல்லாமல், சாட்சி மாத்திரமாக எதையும் காணும் இயல்புள நீர், அடியேன் படும் அவதிகளை அறிந்துளீர். இவனை உய்விக்க வேண்டும் எனும் இரக்கம் சிறிதும் கொண்டிலீர். அதனால் மேலும் மேலும் வேதனையில் ஆழ்கின்றேன். மென்மை உள்ளம் மெலிகிறதே! நலிந்து மேலும் நைகின்றேனே! சூரைக் காற்றில் அகப்பட்ட துரும்பாகி விவகாரத்தில் சுழல்கின்றேன்.

சிற்றறிவும், சிறுமைத் தொழிலும் என்னில் சிலிர்த்தலின், கீழ்மையன் எனும் பொருளில் 'சிறியேன்' என்று எவரும் சிரிக்க இருக்கின்றேன்.

உய்திக்கு உரியது உயிர் என்பர். (உய்-பகுதி.) வகை பலவாக வாழ்கின்றார் மேலோர். அடியேன் உய்யும் வகை எந்த வகை? அறிய இயலவில்லையே! ஊன்றி இவைகளை உணருந்தொறும், அச்சத்தால் உடல் வியர்க்கிறதே! பதைக்கிறதே இந்தப் பாழும் உளம்! சோர்வு வளர்ந்து பொங்கி வழிகிறதே! இந்தச்

சங்கடங்களை, எத்தனைக் காலம் சகிப்பது? எளியேனால் தாங்க முடியவில்லையே என்று தளர்ந்தபடி.

**“இரங்கும் நமக்(கு) அம் பலக்கூத்தன்**
**என்(று)என்(று) ஏமாந்(து) இருப்பேனை,**
**அருங்கற் பனைகற் பித்(து) ஆண்டாய்;**
**ஆள்வார் இலிமா(டு) ஆவேனோ?**
**நெருங்கும் அடியார் களும்நீயும்**
**நின்று நிலாவி விளையாடும்**
**மருங்கே சார்ந்து வரஎங்கள்**
**வாழ்வே வாஎன்(று) அருளாயே”**

எனும் திருவாசகம் இங்கு எண்ணத் தகும். (84)

**எனையறியாப் பருவத்தே ஆண்டு கொண்ட**
**என்னரசே என்குருவே இறையே இன்று**
**முனையறியாப் பிழைகருது மகிழ்நன் போல**
**மதியறியேன் செய்பிழையை மனத்துட் கொண்டே**
**தனையறியா முகத்தவர்போல் இருந்தாய் எந்தாய்**
**தடங்கருணைப் பெருங்கடற்குத் தகுமோ கண்டாய்**
**அனையறியாச் சிறுகுழவி யாகி யிங்கே**
**அடிநாயேன் அரற்றுகின்றேன் அந்தோ அந்தோ.**

(ப-ரை.) எனை அறியாப் பருவத்தே ஆண்டு கொண்ட என் அரசே-(ஆன்மா நான் என்று) என்னை அறிந்து கொள்ளாத பருவத்திலேயே (அடியேனை) ஆளாக்கிக் கொண்ட (மாபெரும்) எனது மன்னவனே; என் குருவே-அதன்பின் நீ ஒரு ஆன்மா என்று அறிவித்த) எனது பரம ஆசாரியனே; இறையே-வியாபக விலாசனே; இன்று மனை அறியாப் பிழை கருதும் மகிழ்நன் போல மதி அறியேன் செய் பிழையை மனத்துள் கொண்டே-இந்நாளில் மனைவி மதியின்றிச் செய் பிழைகளை மனத்துள் வைக்கும் மணாளன்போல் அறிவிலா அடியேன் செய்த தவறுகளைத் திருவுளத்துள் கொண்டு; தனை அறியா முகத்தவர்போல் இருந்தாய்-முன்பின் அறிமுகம் இல்லாதவர்கள் போல் பராமுகமாக இருந்தாய்; எந்தாய் தடம் கருணைப் பெருங்கடற்குத் தகுமோ கண்டாய்-எந்தையே! பெருங்கடல்போல் பெருகிய (உமது) பேரருட்கு (இது) தக்கது ஆகுமோ; அனை அறியா சிறு குழவி ஆகி-தாய் முகம் காணா இளஞ்சேய் போல் ஆகி; இங்கே அடி நாயேன் அரற்றுகின்றேன் அந்தோ அந்தோ-இவ்வுலகில் அடிபட்ட நாய்போலும் அடியேன் ஐயோ ஐயோ என்று வாய் விட்டு அழுகின்றேனே, (எ-று.)

(வி-ரை.) ஆக்கை வேறு, ஆன்மா வேறு. அரிய இந்நுட்பத்தை அறிந்தவர், ஆக்கையைப் போற்றுதல் போல் ஆன்ம வாழ்வையும் அளந்து வளர்ப்பர். அடியேன் ஆன்ம கோடிகளுள் ஒருவன்; அதைப் பலகாலமாக அறிந்திலன். தேகமே நான் என்று நம்பி யிருந்தேன். இந்த நிலையில் எதிர் வந்தாய்! எனை அடிமை கொண்டாய்! இங்ஙனம் ‘எனையறியாப் பருவத்தே ஆண்டு கொண்ட என் அரசே!

அதன்பின், உலகைப் பார்! உன்னைப் பார்! உன்னில் உள்ள என்னைப் பார் என்று உபதேசித்து, ஒன்றும் அறியா என்னை உருப்படுத்திய ‘என் குருவே!

அந்நெறியை ஓர்ந்து அடியேன் உணர்ந்த நிலையில், கம்பீர நின்னிறைவைக் காட்டினை என்பார், 'இறையே' என்றார். (இறைக்கும் பகுதி-இது; இறுத்தல்- எங்கும் செறிந்து இருத்தல்.)

மனைவி தன் அறியாமையால், சிறு பிழைகள் பல செய்கின்றாள். புனித அவள் தவறுகளைக் கணவன் பொருட்படுத்துவது இல்லை. இது பெரும்பாலோர்க்கு இயல்பு. சேயிழையர் செய்யும் சிற்றளவு தவறுகளை, பெரிது படுத்தும் ஆடவரும் சிலருளர். கோதையர் புரியும் குற்றங்களை, "பேதைமை யென்பது மாதர்க்கு அணிகலம்' என்று நகைமுகமாகி நவிலுனரும் ஆயினர் சிலர். இம் மூவரினும் உயர்ந்த முதல்வர் நீர். மாபெரும் உயிரின் மகிழ்நர் நீர். (மகிழ்நர் மனைவியின் செயல்களை மகிழும் கணவர்.)

அறிவின் சொரூபம் அடியேன் அறியேன். மும்மல வசத்தால் முறை துறை மறப்பேன். ஆதலின், காண்பதெல்லாம் குறையே! கருதுவ யாவும் தவறே! பேசுவ அனைத்தும் பிழை மயமே! குறித்த இவைகளைத் திருவுளங் கொண்டு, எளியேனை ஏறெடுத்துப் பாராமல் இருப்பது முறையோ என்பார், "மனையறியாப் பிழை கருதும் மகிழ்நன் போல, மதியறியேன் செய்பிழையை மனத்துட் கொண்டே, தனை யறியா முகத்தவர்போல் இருந்தாய்" என்றார்.

ஏறிட்டுப் பார்ப்பவர், ஏனென்று கேட்பவர், எடுத்து வளர்ப்பவர் ஆன பரம பிதா நீர் என்பார், 'எந்தாய்' என்றார்.

நீர் பராமுகமாக இருப்பது, உமது தனிப் பெருங்கருணைக்குத் தகுதியாகுமா என்பார், 'தடம்கருணைப் பெருங்கடற்குத் தகுமோ' என்றார். 'கண்டாய்' என்பது முன்னிலை.

தயைமயம் ஆனவள் தாய். அவள் முகம் சேய்க்கு ஆநந்தத்தை விளைவிக்கும். தாயைக் காணாத சேய், எத்திசையும் நோக்கி ஏங்கும். நீர் உயிர்க்குத் தாய்; அடியேன் இயற்கைச் சேய். எம்முகம் நோக்கினும் உம்முகம் புலனாகவில்லையே என்பார், 'அனையறியாச் சிறுகுழவியாகி என்றார். 'தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற உமையெண்ணி, பிரிவு தாங்காமல், அடிபட்ட நாய்போல் ஐயோ ஐயோ என்று அடியேன் அழுது கதறுகின்றேனே என்றபடி.(எ-று.)

**'பேரா ஒழியாப் பிரிவில்லா**
**மறவா நினையா அளவிலா மாளா இன்ப மாகடலே**

எனும் திருவாசகமும்,

**"போதுதான் விரைந்து போகின்றது அருள்நீ**
**புரிந்திடத் தாழ்த்தியேல் ஐயோ**
**யாதுதான் புரிவேன் யாரிடம் புகுவேன்**
**யார்க்கெடுத் தென்குறை யிசைப்பேன்**
**தீதுதான் புரிந்தேன் எனினுநீ அதனைத்**
**திருவுளத் தடைத்திடு வாயேல்**

**ஈதுதான் தந்தை மரபினுக் கழகோ**
**என்னுயிர்த் தந்தைநீ யலையோ."**

எனும் திருவருட்பாவும் இங்கு நம் நினைவில் எழுகின்றன அல்லவா? (85)

**தீவினைநல் வினைஎனும்வன் கயிற்றால் இந்தச்**
**சீவர்களை ஆட்டுகின்ற தேவே, நாயேன்**
**ஏவினைநேர் கண்மடவார் மையல் பேயால்**
**இடர்உழந்தும் சலிப்பின்றி என்னே பின்னும்**
**நாவினைஎன் பால்வருந்திக் கறண்டு கின்ற**
**நாய்க்குநகை தோன்றநின்று நயக்கின் றேன்நான்**
**ஆவினைவிட் டெருதுகறந் திடுவான் செல்லும்**
**அறிவிலிக்கும் அறிவிலியேன் ஆன வாறே.**

(ப-ரை.) தீவினை-பாவம், நல்வினை-புண்ணியம், எனும்-என்று சொல்லப்படுகின்ற, வன்கயிற்றால்-உறுதியான கயிற்றினால், இந்த-இந்த, சீவர்களை-உயிர்கலை, ஆட்டுகின்ற-(அவ்வவ் உயிர்களின் வினைகட்கு ஏற்ப உலகில்) அசைக்கின்ற, தேவே-மகாதேவனே, நாயேன் - நாயைப் போன்றவனாகிய நான், ஏவினை-அம்பை, நேர்-ஒக்கும், கண்-கண்களையுடைய, மடவார்-இளமையான பெண்களிடம் கொண்ட, மையல்-காம மயக்கமாகிய-பேயால்-பிசாசினால், இடர்-துன்பம் உற்று, உழந்தும்-வருந்தியும், சலிப்பு-வெறுப்பு, இன்றி-இல்லாமல், பின்னும்-மேலும், நாவினை-(நாய்தன்) நாக்கைக் கொண்டு, என்பால்-எலும்பினை, வருந்தி-வருத்தத்துடன், கறண்டுகின்ற-பற்களால் கடிக்கின்ற, நாய்க்கு-நாய்க்குக்கூட, நகை-(என் போக்கைக் கண்டு) சிரிப்பு, தோன்ற-வரும்படி, நின்று-(பெண்களைப் பார்த்து) நின்று கொண்டு, நயக்கின்றேன் - (பெண்களை) விரும்புகின்றேன், என்னே-(என் அறியாமை இருந்தவாறு) என்னே, நான் - (இத்தகைய தீய ஒழுக்கத்தில் ஈடுபட்டுள்ள) நான், ஆவினை-(நல்ல பால் தரும்) பசுவை, விட்டு-விட்டுவிட்டு, எருது-(பால் கொடாத) எருதினிடம், கறந்திடுவான் - பாலைக் கறக்க, செல்லும்-போகின்ற, அறிவிலிக்கும்-அறிவிலா தவனைக் காட்டிலும், அறிவிலியேன் - அறிவில்லாதவன், ஆனவாறு-(இப்படிப்பட்ட ஒழுக்கம் கெட்ட நிலை எனக்கு) ஆயின விதம், என்னே-என்னே! (எ-று.)

(வி-ரை.) தீவினையைப் போகு ஊழ் என்றும், நல்வினையை ஆகு ஊழ் என்றும் வள்ளுவர் கூறுவர். ஈண்டுத் தீவினையும் நல்வினையும் கயிறாக உருவகம் செய்யப்பட்டுள்ளன. "அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி" என்று திருவாசகம் கூறுவது ஈண்டுச் சிந்தித்தற்கு உரியது. தீவினை, நல்வினையாகிய கயிறு ஏனைய கயிறுகளைப் போல இடையே அறுந்து விடாமல், பிறவிதோறு உயிர்களைப் பிணித்துத் தொடர்ந்து வருதலின், அவை வன்கயிறு எனப்பட்டன. உயிர்களை ஆட்டுவிக்கின்றவன் இறைவனே. இந்த உண்மையினை அப்பரும் "ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே" என்று கூறி இருத்தலையும் உணர்வோமாக. உண்மை ஞானிகள் தம்மை நாய்க்கு ஒப்பாகக் கூறிக்கொள்வர். இதனை மணிமொழியார் வாக்கில் பரக்கக் காணலாம்.

ஏ+வ்+இன்+ஐ எனப் பிரிக்க. இன், சாரியை. மாதர்களின் பார்வை ஆடார்களை வருத்தும் தன்மையில் இருத்தலின் ஏ(அம்பு) பெண்களின்

கண்களுக்கு உவமை ஆயிற்று. மடவார் மையலைப் 'பேய்' என்றனர் வள்ளலார். பட்டினத்தடிகள் 'மாயப் பிசாசு' என்பர். என்னே என்பது வியப்புச் சொல்லாக அமைந்துளது. மாதர்களின் மையல் துன்பம் தருதலை உணர்ந்தும், அதனை மேன்மேலும் மக்கள் இச்சித்தலின் "சலிப்பு இன்றி" என்று கூறி அவர்களின் அறியாமையைத் தம்மேல் ஏற்றிக் கூறிக்கொண்டனர் வள்ளலார். நாவினை, ஆவினை, என்பனவற்றை ஏவினை என்பதைப் பிரித்தாங்கு பிரித்துக் காண்க. நாவினை என்பதையும் என்பால் என்பதையும் வேற்றுமை மயக்கமாகக் கொள்க.

ஆண் நாய் ஒரு பெண் நாயைத் தொடர்ந்து போவதை நாம் காண்கின்றோம். மக்களும் அதைப் போலவே பெண் மையலால் பெண்களைத் தொடர்ந்து போதலை நாய்கள் காண்கின்றபோது, "நாம்தாம் பெண் நாயை நோக்கிச் செல்கின்றோம் என்றால் மக்களுமா? இவ்வாறு செல்லவேண்டும் என்று நகைப்பதாக எண்ணிய வள்ளலார், "நாய்க்கும் நகை தோன்ற" என்றனர். "நாம்தாம் பசையற்ற பொருளாம் எலும்பைக் கறண்டுகின்றோம் என்றால், மக்களும் கூடவாப் பசையற்ற பெண் போகத்தை விரும்பித் துன்புறுதல் வேண்டும்" என்று நகைக்கின்றன என்று கூறினும் அமையும். நாய்க்கும் என்பதில் உள்ள 'உம்' செய்யுள் விகாரத்தால் தொக்கது. அவ்வும்மை இழிவு சிறப்பு உம்மை; பாலைக் கறக்கவேண்டிய இடம் பசு. அதனை விட்டு எருதைக் கறத்தல் எத்தனை அறியாமை! ஆகவேதான், "அறிவிகிக்கும் அறிவிலியேன்" என்றனர். பேரின்பம் தரவல்ல மகாதேவனை விட்டுச் சிற்றின்பம் தரவல்ல மாதரை இச்சித்தேனே என்பதை அறிவிக்கும் முறையில்தான், "ஆவினை விட்டு எருது கறந்திடுவான்" என்னும் உவமையைக் கூறினார். அப்பர் "இருட்டறையில் மலடு கறந்து எய்த்தவாறே" என்று கூறி இருப்பதையும் ஈண்டு நினைவுக்குக் கொண்டு வரலாம். "கறந்திடுவான்" என்பது வான் ஈற்று எதிர்கால வினை எச்சம். "அறிவிலிக்கும்" என்பதில் உள்ள "உம்" இழிவு சிறப்பு உம்மை.

ஈண்டு நம் ஐயா அவர்கள் உலக மக்களின் தீய போக்கினைத் தம் மேல் ஏற்றிச் சொல்லினரே அன்றித் தாம் அப்படி இருந்தனர் என எவரும் கருதுதல் கூடாது; "யானே பொய் என் நெஞ்சம் பொய் என் அன்பும் பொய்" என்று மணிமொழியார் கூறிக் கொண்டதும், "பனிமலர்க் கோதை மார்தம் மேலனாய்க் கழிந்த நாளும்" என்று அப்பர் பெருமான் கூறியதும் உலகோர் நிலையினை உட்கொண்டு கூறியனவாகும். அவர்களைப் போலவே நம் வள்ளலாரும் இவ்வாறு கூறினார் எனக் கொள்க' ஏகாரம் ஈற்றசை. (86)

**எம்பெருமான், நின்விளையாட் டென்சொல் கேன்நான்**
**ஏதும்அறி யாச்சிறியேன் எனைத்தான் இங்கே**
**செம்புனலால் குழைத்தபுலால் சுவர்சூழ் பொத்தைச்**
**சிறுவீட்டில் இருட்டறையில் சிறைசெய் தந்தோ!**
**கம்பம்உறப் பசித்தழலும் கொளுந்த அந்தக்**
**கரணம்முதல் பொறிபுலப்பேய் கவர்ந்து சூழ்ந்து**
**வம்பியற்றக் காமாதி அரட்டர் எல்லாம்**
**மடிபிடித்து வருத்தஎன்றோ வளர்த்தாய் எந்தாய்.**

(ப-ரை.) எந்தாய்-என் தந்தையே, எம்-எங்களுடைய, பெருமான் - பெருமைக்கு உரியவனே, நின் - உன்னுடைய, விளையாட்டு-திருவிளையாட்டை, என் - என்ன என்று, சொல்கேன் - சொல்வேன், நான் -அடியேன், ஏதும்-(அறியத் தக்க பொருள்) எதையும், அறியா-உணராத, சிறியேன் - சிறியவனாகிய எனைத்தான். (இப்படிப் பட்ட) என்னை, இங்கே-இம்மண்ணுலகில், செம்புனலால்-செந்நீராகிய இரத்தத்தினால், குழைத்த-(ஒன்று படும்படி) கலந்த புலால்-தசையாகிய, சுவர்-சுவரால், சூழ்-சூழ்ந்த, பொத்தை, (ஒன்பது) துளைகளையுடைய, சிறுவீட்டில்-சிறிய (உடம்பாகிய) வீட்டில், இருட்டு-இருள் (சூழ்ந்த) அறையில் - (ஆணவமாகிய) அறையில். சிறைசெய்து-அடைத்து, அந்தோ-ஐயோ! கம்பம்-நடுக்கம், உற-கொள்ள. பசி-பசியாகிய, தழலும்-நெருப்பும், கொளுந்த-சுட, அந்தக் கரணம் -நான்கு அகக் கருவிகள், முதல் - முதலாக, பொறி-ஐம்பொறிகளும், புலன் - ஐம்புலன்களும் (ஆகிய) பேய் - பேய்கள், கவர்ந்து - (என் அறிவை வௌவி, சூழ்ந்து - சூழ்ந்துகொண்டு, வம்பு-தீச் செயல்களை, இயற்ற-செய்ய, காமம்-காமம். ஆதி - முதலான, அரட்டர்-குறும்புக்காரர்கள்,எல்லாம்-யாவரும், மடி-(என்) ஆடையை, பிடித்து-பற்றி வருத்த-துன்புறுத்த (வேண்டும்) என்றோ-என்று (கருதியோ) வளர்த்தாய்-வளர்த்தனை, (தேவரீர், சொல்வீராக) (எ-று.)

(வி-ரை.) அடியவர்களுக்கு இறைவனிடம் தம் துயரை எடுத்துக் கூறி உரிமையோடு வினாவும் பெருமிதம், உண்டு. இதனைச் சுந்தரர் வாக்கைக் கொண்டும் நிறுவலாம். அவர் திருவாரூர்த் தியாகேசனை நோக்கி "எற்றுக்கு என் கண் கொண்டீர்?" என்று வினாவுதல் காண்க. அது போன்ற உரிமை உணர்ச்சியினால்தான் ஈண்டும், வள்ளலார் மகாதேவனை நோக்கி, "வருத்த என்றோ வளர்த்தாய்?" என்று வினவுவார் ஆயினார். இறைவன் தந்தையாகவும், தாயாகவும் இருக்கின்றான். ஆதலின் இவ்விருபொருளும் தரும் சொல்லாகிய "எந்தாய்" என்னும் சொல்லை நம் ஐயா ஆண்டுள்ளனர். இவ்விருபொருள் உண்மையினைக் குமர குருபரர் வாக்காம்,

**செவ்வாய்க் கருங்கண்பைந் தோகைக்கும் வெண்மதிச்சென்னியற்கும்**
**ஒவ்வாத் திருஉரு ஒன்றே உளதவ் உருவினைமற்**
**றெவ்வாச் சியம்என் றெடுத்திசைப் பேம்இன் அருள் புலியூர்ப்**
**பைவாயப் பொறிஅர வல்குல்எந் தாய்என்று பாடுதுமே.**

என்னும் பாடலில் காணலாம்.

இறைவன் "ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதி மாண்பும் கேட்பான் புகில் அளவில்லை" ஆதலின் அவன் செயலை ஆன்மாக்களாகிய நம்மால் அறிய இயலாது. இதனை வியந்தே வள்ளலார், "நின் விளையாட்டு என்சொல் கேன்" என்றனர். சொல்கேன் என்பது எதிர்கால வினைமுற்று. ப்,வ் என்பவைதாம் எதிர்காலம் காட்டும் இடைநிலைகள். ஈண்டு க் எதிர்கால இடைநிலையாக அமைந்துள்ளது. வள்ளலாரின் அடக்கப் பண்பினை "ஏதும் அறியாச் சிறியேன்" என்னும் தொடர் அறிவித்து நிற்கிறது. "பணியுமாம் என்றும் பெருமை" என்பது திருவள்ளுவர் வாக்கு அன்றோ! தான், என்னும் இடைச்சொல் ஈண்டு அசையாக அமைந்துள்ளது. பொத்தை என்பது ஈண்டு உடலில் அமைந்த பெருந்துளைகளாகிய ஒன்பது துளைகளை உணர்த்தி நிற்கிறது. ஒன்பது பெருந்துளைகள் ஆவன; இருகண் துளைகள், இரு காது துளைகள், இரு மூக்குத் துளைகள், ஒரு வாய்த்

துளை, ஒரு மலங்கழி துளை, ஒன்று சிறுநீர்கழி துளை என்பன. மலங்கழி துளையை எருவாய் என்றும், சிறுநீர் கழி துளையைக் கருவாய் என்றும் கூறுவர்.

சிறு வீடு என்பது ஈண்டு உடலையாகும். உடம்பாகிய வீடு, இரத்தமாகிய நீரைச் சேர்த்து, தசையாகிய சுவர் எழுப்பி, ஒன்பது துளைகளாகிய சன்னல்கள் வைக்கப்பட்டு உள்ளது என்பதை வள்ளலார் நன்கு உணர்த்தியுள்ளனர். இந்தக் கருத்து இன்னமும் விளக்கமாக,

**கால்கொடுத்து இருகை ஏற்றிக்**
**கழிநிரைத் திறைச்சி மேய்ந்து**
**தோல்படுத்து உதிர நீரால்**
**சுவர்எடுத்து இரண்டு வாசல்**
**ஏல்உடைத் தாஅ மைத்தங்கு**
**ஏழுசா லேகம் பண்ணி**
**மால்கொடுத்து ஆவி வைத்தார்**
**மாமறைக் காட னாரே"**

என்று திருநாவுக்கரசு நாயனார் கூறியிருப்பதைக் காணவும். "அந்தோ" என்பது இரக்கக் குறிப்புச்சொல், இருட்டறை, ஈண்டு ஆணவமாம் இருட்டறையாம். "காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போல் கட்டுண்டிருந்த எமை' என்று தவராச சிங்கமாம் தாயுமான சுவாமிகன் கூறி இருப்பதையும் ஈண்டு அறிவோமாக. பசி வந்தபோது உடலில் ஓர் அசைவு தோன்றுதலின் 'கம்பம் உற' என்றும், பசி வயிற்றில் எரிச்சலை உண்டு பண்ணுதலின் அதனைப் "பசித் தழல்" என்று கூறினார். 'கனல் வாதை வந்து எய்தின்' என்று தாயுமானார் கூறிய கூற்றையும் காண்க. "கொளுத்த" என்று இருக்க வேண்டியது "கொளுந்த" என்று ஆயது மெலித்தல் விகாரம் பற்றி என்க.

அந்தக்கரணம் நான்கு. அவையே, மனம், அறிவு, நினைவு, முனைப்பு என்பன. இவற்றை வட நூலார், மனஸ், புத்தி, சித்தம், அகங்காரம் என்பர். மனம் ஒன்றை மனனம் செய்யும். புத்தி எண்ணியதை நன்கு சிந்திக்கும். சித்தம் நினைத்ததை உறுதிப்படுத்தும் 'அகங்காரம், காலம் கொண்டு செயலில் தொழில்படும். ஐம்பொறிகளாவன மெய் (உடம்பு), வாய், கண், மூக்கு, செவி என்பன. இவை கருவிகளாக இருக்கும் நிலையில் ஐம்பொறிகள் எனப்படும். அவைகள் சுவை, (வாய்) ஒளி, (கண்) ஊறு, (மெய்) ஓசை, (காது) நாற்றம் (மூக்கு) ஆகிய உணர்வுகளை ஊட்டும்போது ஐம்புலன்கள் என்று பெயர் பெறுகின்றன. காமம் ஆதி ஆவன; இன்பம், உள்பகை, ஈயாக்குணம், அவா, செருக்கு, பொறாமை என்பன. இவற்றை வடமொழியில் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சரியம் என்பர். இவையே அறுவகை உட்பகைகள், அந்தக்கரணம், பொறி, புலன்கள் சீவான்மாவைப் பல்லாற்றாலும் நல்வழிப்படுத்தாமல் தீங்கு செய்தலின் வள்ளலார், "எனைக் கவர்ந்து, சூழ்ந்து, மடி பிடித்து வருத்த" என்று அவற்றின் செயலைத், துயருற்றுக் கூறுகின்றார். "இவ்வாறு நான் வருந்த என்னை வளர்க்காமல், நான் இன்புறும் வகையில் வளர்க்கவேண்டும் ஆயினார். அரட்டர் என்பதே இக்காலத்தில் அரட்டல் என்றாயது. இது மொழி ஈற்றுப் போலியாகும். (87)

**அம்பரத்தே ஆனந்த வடிவால் என்றும்**
**ஆடுகின்ற மாமணியே, அரசே, நாயேன்**

**இம்பரத்தம் எனும்உலக நடையில் அந்தோ!**
**இடர்உழந்தேன் பல்நெறியில் எனைஇ முத்தே**
**பம்பரத்தின் ஆடியலைப் படுத்தும் இந்தப்**
**பாவிமனம் எனக்குவயப் படுவ தில்லை**
**கொம்பர்அற்ற இளங்கொடிபோல் தளர்ந்தேன் என்னைக்**
**குறிக்கொள்ளக் கருதுதியோ குறித்தி டாயோ.**

(ப-ரை.) அம்பரத்தே-சிதாகாசமாகிய தில்லைப் பொற்சபையில், ஆனந்த-இன்பமான, வடிவால்-வடிவோடு, என்றும்-எக்காலத்தும், ஆடுகின்ற-நடனம் செய்கின்ற, மா-உயர்ந்த, மணியே-இரத்தினமே, அரசே-தலைவனே, நாயேன் -நாய் போன்றவனாகிய அடியேன், இம்பர்-இங்கு, அத்தம்-நல்வழி, எனும்-என்று கூறும், உலக நடையில்-உலக ஒழுக்கத்தில், அந்தோ-ஐயோ, இடர்-துன்பத்தால், உழந்தேன் - வருந்தினேன், (இந்த அளவிலும் என்னை நிறுத்தாமல்) பாவி-பாவியாகிய மனம்-என் மனம், எனை-என்னை, பல்-பலவிதமான, நெறியில்-(தீய) வழிகளில், இழுத்தே-இழுத்துக்கொண்டு, பம்பரத்தின்-பம்பரத்தைப் போல ஆடு-ஆடுகின்ற, இயலை-இயல்பில், படுத்தும்-செலுத்தும். எனக்கு-எனக்கு, வயப்படுவது-(அம்மனம் நான் சொல்கிறபடி) வசமாவது, இல்லை-கிடையாது, (ஆகவே நான்) கொம்பர்-கழியினின்று, அற்ற-அறுந்து வீழ்ந்த, இளங்கொடிபோல்-இளமையான பூங்கொடிபோல, தளர்ந்தேன்-சோர்வு அடைந்தேன். என்னை-(இவ்வாறு மனத்தின் விருப்பப்படி ஆடுகின்ற) என்னை, குறிக்கொள்ள-உன் நினைவில் (என்னை) வைக்க, கருதுதியோ-எண்ணுவாயோ, குறித்திடாயோ-(உன் நாள் குறிப்பேட்டில் என்னை ஈடேற்ற வேண்டுமென்று) குறித்து வைக்கமாட்டாயோ, (எ-று.)

(வி-ரை.) அம்பரம், ஈண்டுச் சிதாகாசமாம் சிதம்பரப் பொற்சபை ஆகும்; சிதம்பரம் ஆகாயத்தலம் அன்றோ? ஆகவே, அம்பரத்தே (வானவெளியில்) ‘ஆடுகின்ற அரசே’ எனப்பட்டது. இறைவன் வடிவம் இன்ப உருவம் ஆதலானும், அவ்வின்ப வடிவில் அவன் ஆடுதலின், அஃது ஆனந்த நடனம் ஆகவும் இருத்தலினாலும் “ஆனந்த வடிவால் என்றும் ஆடுகின்ற” என்றனர்.

**தானந்தம் இல்லாச் சதானந்தச் சத்திமேல்**
**தேனுந்தும் ஆணந்த மாநடம் கண்டீர்**
**ஞானம் கடந்துநடம் செய்யும் நம்பிக்கங்கு**
**ஆனந்தக் கூத்தாட ஆடரங் கானதே**

**ஆனந்தம் ஆடரங் கானந்தம் பாடல்கள்**
**ஆனந்தம் பல்லியம் ஆனந்த வாச்சியம்**
**ஆனந்தம் ஆக அகில சராசரம்**
**ஆனந்தம் ஆனந்தக் கூத்துகத் தானுக்கே.**

என்னும் திருமந்திரப் பாக்களாலும் திருமந்திர நூலில் வரும் சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து, பொற்பதிக் கூத்து, பொன் தில்லைக் கூத்து, அற்புதக் கூத்து

ஆகிய தலைப்பின் கீழ் உள்ள மந்திரங்களாலும் ஆனந்த வடிவால் ஆடுகின்ற கூத்தின் மாண்பை நன்கு உணரலாம்.

இறைவன் நடனத்துக்கு ஓய்வு கிடையாது. இது குறித்தே அவனது நடனம் ‘அனவரதத் தாண்டவம்’ எனப்படுகிறது. அவனது நனம் ஓய்ந்திடில் உலகம் இயங்காது. இது குறித்தே திருவிளையாடல் புராணம், “வாராரும் கடல் புடை சூழ் வையமெலாம் ஈடேற, ஏராரும் மணி மன்றுள் எடுத்த திருவடி போற்றி” என்று நடனம் புரியும் திருவடியைப் போற்றுகின்றது. “இறைவன் பகல்போதில் தாண்டவம் புரிகின்றான் போலும்! இரவில் நடனம் புரியாது ஓய்வு கொள்வான் போலும்’ என்று எண்ண வேண்டா. அவன் இரவிலும் நடனம் புரிந்துகொண்டுதான் இருக்கிறான். இந்த உண்மையினை அறிவிக்கவே மணி மொழியார், “நள் இருளில் நட்டம் பயின்றாடும் நாதனே” என்று பாடியுள்ளனர். மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும், எஞ்ஞான்றும் நின்று தாண்டவம் நவிற்றி உலகுய்யச் செய்யும் பரம சற்குரவன்”, என்பர். இவற்றை எல்லாம் உட்கொண்டே வள்ளலார், “என்றும் ஆடுகின்ற மாமணியே” என்றனர். மனம் போனபடி சீவாத்துமா ஆடுகின்றமைக்கு ஆடும் பம்பரம் எடுத்துக் காட்டாகக் காட்டப்பட்டது. “ஆசைக் கயிற்றால், ஆடும் பம்பரம், என்பர் பட்டினத்தடிகள். மனம் பஞ்சேந்திரிய வயப்பட்டுப் பலவழியில் இழுத்துச் செல்வதை “காடும் கரையும் மனக் குரங்கு கால்விட்டு ஓட” என்று தாயுமானார் கூறுமாற்றால் தெளியலாம்.

வள்ளலார் இரக்கமான உள்ளம் படைத்தவர். அங்ஙனம் இருந்தும், மனத்தைப் பாவிமனம் என்றனர். இப்படிக் கூறுதற்கு வழி வகுத்துத் தந்தவர் திருவள்ளுவர். அவர் அழுக்காற்றை (பொறாமைப் பண்பை) “அழக்காறு என ஒரு பாவி” என்று கூறியுள்ளதைக் காண்க. மனம் வயப்படுவது அரிது என்னும் உண்மை “சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது” என்று தாயுமானார் கூறும் உரையாலும் உணரவும்.

பூங்கொடி நன்கு படர்தற்குக் கழி மிகமிக இன்றி அமையாதது. அதன் பொருட்டுக் கழியினைக் கொடியின் அருகு நட்டு அதன்மீது கொடியை ஏற்றி நன்கு படர்ந்து வளரச் செய்வர். அதுவே கொழுக்கொம்பு எனப்படும். அவ்வாறு கொடிக்குத் துணையாக இருக்கும் கழியிலிருந்து அற்றுவீழ்ந்த கொடி வளர்ச்சி குன்றித் தளர்ந்து போகும். அதுபோல இறைவனாகிய கழியினின்று சீவான்மா நீங்கித் துயர் உறுகின்றது ஆதலின், “கொம்பர் அற்ற இளங்கொடிபோல் தளர்ந்தேன்” என்றனர். இந்த உவமையினை வள்ளலார் திருவாசகத்தின் கண்டே இவ்வாறு மொழிந்தார். திருவாசகத்தில் “கொம்பர் இல்லாக் கொடி போல் அலமந்தனன் கோமளமே வெம்புகின்றேன்” என்று கூறியிருத்தல் காண்க.

இறைவன் நாம் செய்கின்ற நற்செயல் தீச்செயல்களைப் பார்த்து அவற்றைத் தன் நாட்குறிப்பேட்டில் எழுதி வைக்கின்றான். இந்த உண்மை வாகீசப் பெருமானார் கூறும்,

**“தொழுது தூமலர் தூவித்து தித்துநின்று**
**அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்**
**பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்**
**எழுதும் கீழ்க்கணக் கின்னம்பர் ஈசனே”**

என்னும் திருக்குறுந்தொகைப் பாடலால் புலனாகிறது. இதனை உட்கொண்டே வள்ளலார் "என்னைக் குறிக்கொள்ளக் கருதுதியோ, குறித்திடாயோ" என்று விநயமாக இறைவனை வேண்டுவாராயினார். இப் பாடலின் ஈற்று இரண்டு வரிகளைப் படிக்கும்போது,

**"கடையவ னேனைக் கருணையி னால்கலந் தாண்டுகொண்ட**
**விடையவ னே,விட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்**
**உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே,**
**சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரான்என்னைத் தாங்கிக்கொள்ளே"**

என்னும் திருவாசகப் பாடலையும்,

**"கண்டியில் பட்ட கழுத்துடை யீர்கரி காட்டில்இட்ட**
**பண்டியில் பட்ட பரிகலத் தீர்பதி வீழிகொண்டீர்**
**உண்டியில் பட்டினி நோயில் உறக்கத்தில் உம்மைஐவர்**
**கொண்டியில் பட்டும் மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே"**

என்னும் அப்பர் பெருமானாரின் வாக்கையும் நினைவுக்குக் கொண்டுவராமல் இருக்க இயலாது.

மா-உரிச்சொல். கொம்பு என்பது கொம்பர் என்று ஆயது ஈற்றுப் போலியாகும். (88)

**கண்ணுடைய நுதல்கரும்பே, மன்றில் ஆடும்**
**காரணகா ரியம்கடந்த கடவு ளே,நின்**
**தண்ணுடைய மலர்அடிக்கோர் சிறிதும் அன்பு**
**சார்ந்தேனோ செம்மரம்போல் தணிந்த நெஞ்சேன்**
**பெண்ணுடைய மயலாலே சுழல்கின் றேன்என்**
**பேதைமையை என்புகல்வேன் பேய னேனைப்**
**புண்ணுடைய புழுவிரும்பும் புள்என் கேனோ**
**புலைவிழைந்து நிலைவெறுத்தேன் புலைய னேனே.**

(ப-ரை.) நுதல்-நெற்றியில், கண்ணுடைய-கண்ணைப்பெற்ற, கரும்பே-கரும்பே, மன்றில்-பொற்சபையில், ஆடும்-திருநடம் செய்கின்ற, காரணம்-காரணங்களையும், காரியம்-காரியங்களையும், கடந்த-நீத்த, கடவுளே-இறைவனே, நின் - உன்னுடைய, தண் உடைய-குளிர்ச்சி பொருந்திய, மலர்-தாமரை மலர்போன்ற, அடிக்கு-திருவடிகளில், ஓர் சிறிதும்-கொஞ்சமேனும், அன்பு-அன்பு (கொண்டு), சார்ந்தேனோ-அடைந்தேனோ(அடையவில்லையே), செம்மரம்போல் - செம்மரத்தைப் போல, தணிந்த-தடித்துள்ள, நெஞ்சேன் - உள்ளம் படைத்தவன் நான், பெண்ணுடைய-பெண்ணின், மயலாலே-காம மயக்கத்தாலே, சுழல்கின்றேன் - திரிகின்றேன், என் புகல்வேன் - (இத்தகைய தீய ஒழுக்கம் உள்ள என் நடத்தைகளை) என்ன என்று எடுத்துக் கூறுவேன். பேயனேனை-பேய் போன்றவனாகிய என்னை, புண்ணுடைய-புண்ணையுடைய, புழு-புழுவை, விரும்பும்-விரும்புகின்ற, புள்-பறவை-என்கேனோ-என்று சொல்லிக் கொள்வேனோ, புலையனேன், கீழ் மகனாகிய நான், புலை-இழிவானவற்றை, விழைந்து-விரும்பி,

நிலை-நிலையான நல்வழிகளை, வெறுத்தேன் - வெறுத்து ஒதுக்கினேன் (என்னே! என் அறியாமை இருந்தவாறு.) (எ-று.)

(வி-ரை.) இறைவனை நினைக்குந்தொறும், காணுந்தொறும், பேசுந்தொறும், இனிமை தருதலின் அவனைக் கரும்பே என்றனர். நுதல்கண் உலகில் ஒளிக்குறைவு ஏற்படும் காலத்துப் பயன்படுவது. இதனைச் சுந்தரர், “வல் இருளாய் எல்லாம் உலகுடன் தான் மூட, இருள் ஓடும் வகை நெற்றி ஒற்றைக்கண் படைத்துகந்த உத்தமன்” என்று புகழ்ந்து பாடியுள்ளனர். மன்று என்பது ஈண்டுச் சிற்சபை மட்டும் அன்று. அன்பால் நினைவாரது உள்ளமாகிய மன்றும் ஆகும். இங்கு Dr. G. U. Pope கூறியுள்ள “He sports in the World. He sports in the Soul” என்று கூறி யிருப்பதையும் ஊன்றிச் சிந்திப்போமாக. சீவான்மாக்கள் காரண காரியங்கட்கு உள்பட்டவை. இறைவனோ அவற்றிற்கு அப்பாற்பட்டவன். எனவேதான் “காரண காரியம் கடந்த கடவுளே” என்றனர். அனைத்தையும் இறைவனே இருந்து செலுத்துதலின் அவனைக் கடவுள் என்று கூறுவர். இயவுள் என்பதும் இப்பொருளது. அவன் உள்ளும் புறமும் இருந்து காத்தலின் கடவுள் என்று கூறப்பட்டான் எனினும் ஆம். பிறவி வெப்பத்தால் அலையும் ஆன்மாக்களுக்கு நிழல் தந்து அவர்தம் வெப்பத்தைப் போக்கலின், “தண்ணுடைய மலர் அடி” எனப்பட்டது. “கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே” என்று நம் ஐயா மற்றோர் இடத்தில் கூறியிருப்பதையும் நினைவு கொள்வோமாக. “மிகச் சிறிய அளவேனும்” என்னும் பொருள் தோன்றவே ‘ஓர் சிறிதும்’ என்றனர். செம்மரம் ஈண்டு ஒருவகை மரம். அதன் கட்டையையே ஈண்டுச் செம்மரம் என்றனர். அது சடப்பொருள். தனக்கென ஓர் அறிவு இல்லாதது. எடுப்பின் எடுபடும்; இடின் இட்ட இடத்தில் கிடக்கும். அதுபோல நாமும் அசித்துப் பொருளாக இருக்கிறோமே என்று ஏக்கத்தால் தம்மை வள்ளலார் ‘செம்மனம்போல் தணிந்த நெஞ்சினேன்’ என்று கூறிக்கொள்கின்றார். தணிந்த என்பது செயலற்றுக் கிடந்த நிலையே ஆகும். பருத்த என்று பொருள் கோடலும் ஒன்றும். செயலற்ற நிலைக்கு மரத்தை உவமை கூறல் மரபு. இவ்வாறு இடைக்காடர் கூறியதைத் திருவிளையாடல் புராணத்துள் காணலாம்.

பறவைகளுள் சில, நல்ல கனி இருக்க அவற்றை விரும்பாமல், புழுக்களையும், புலாலையுமே விரும்பும். அப் புழுக்கள் புண்ணுடைய புழுக்களாயினும், அது குறித்துக் கவலை கொள்ளாமல், அப் புண்ணுடைய புழுக்களையே பறவைகள் உண்ணும். அதுபோல் மக்களும் மாதர்களின் இன்ப உறுப்பு, புண் என்று உணராமல் அதனை இச்சித்து இடர் உறுகின்றனர். ஆதலின், அவர்களின் செயலைத் தம் மேல் ஏற்றி அவர்கலை நல்வழிப்படுத்தவே “புண்ணுடை புழு விரும்பும் புள் என்பேனோ” என்றனர். புழு ஈண்டு மாதர்களின் இன்ப உறுப்பையும், புள் மக்களையும் உணர்த்தி நிற்கின்றன. மாதர்களின் இன்ப உறுப்பினைப் புண்ணெனப் பட்டினத்தடிகள் கூறியுள்ள

**புண்இது என்று புடைவையை மூடி**
**உள்நீர் பாயும் ஓசைச் செழுப்புண்**
**மால்கொண் டறியா மாந்தர்**

எனும் வரிகளைக் காண்க.

உடம்பு ஈண்டுப் புலை எனப்பட்டது. அது தூய்மை இன்மைக்குக் காரணமாதலாலும், புலாலால் ஆக்கப்பட்டிருத்தலாலும் அச்சொல்லால் குறிக்கப்படுவதாயிற்று. இவ்வுடலின் அசுத்த நிலையினைத் திருவெண்காடர்,

**பீளையும் நீரும் புறப்படும் ஒருபொறி**
**மீளும் குறும்பி வெளிப்படும் ஒருபொறி**
**சளியும் நீரும் தவழும் ஒருபொறி**
**உமிழ்நீர் கோழை ஒழுகும் ஒருபொறி**
**வளியும் மலமும் வழங்கும் ஒருவழி**
**உள்ளூறத் தொடங்கி வெளிப்பட நாறும்.**

என்று கூறியுள்ளதையும், மணிமேகலை, "புனைவன நீங்கில் புலால்புறத் திடுவது" என்று கூறி யிருப்பதையும் காண்க. நிலை, ஈண்டு மெய்ஞ்ஞான நிலையாகும். சார்ந்தேனோ என்பதில் உள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்துளது. காரண காரியம் உம்மைத் தொகை. புலை, ஈண்டு ஆகுபெயர்.

**பொன்னுடையார் இடம்புகவோ அவாகட் கேற்கப்**
**பொய்மொழிகள் புகன்றிடவோ பொதிபோல் இந்தக்**
**கொன்னுடையா உடல்பருக்கப் பசிக்குச் சோறு**
**கொடுக்கவோ குளிர்க்காடை கொளவோ வஞ்ச**
**மின்னிடையார் முடைச்சிறுநிர்க் குழிக்கண் அந்தோ**
**வீழ்ந்திடவோ தாழ்ந்திளைத்து விழிக்க வோதான்**
**என்னுடையாய், என்னுடையாய், என்னை இங்கே**
**எடுத்துவளர்த் தனைஅறியேன் என்சொல் வேனே**

(ப-ரை.) என்னுடையாய என்னுடையாய்-என்னை அடிமையாக உடைய இறையவனே, என்னை-என்னை, பொன் உடையார்-பொன்னும் பொருளும் இருப்பவர்களின், இடம்-இடத்தை, புகவோ-அடையவோ (அல்லது பொருள் கேட்கவோ) அவர்கட்கு-பொருள்படைத்தவர்களுக்கு, ஏற்க-ஏற்றபடி, பொய்மொழிகள்-பொய்யான வார்த்தைகளை, புகன்றிடவோ-சொல்லவோ? (அல்லது) பொதிபோல்-மூட்டைபோல், கொன் - காலம் வருகின்ற வரையில், உடையா-நீங்காத, உடல் -உடம்பு, பருக்க-பருமன் அடைய, பசிக்கு - பசி வேளைக்கு, சோறு-சோற்றை, கொடுக்கவோ-அளிக்கவோ, குளிர்க்கு-குளிர்க்கு, ஆடை-போர்வையாகிய ஆடையை, கொளவோ-பெறவோ, வஞ்ச-கபடமான (நெஞ்சுடைய) மின் - மின்னல் ஒளியைப் போன்ற, இடையார் -இடுப்பினையுடைய பெண்களின், முடை-தீய நாற்றமுடைய, சிறுநீர்-மூத்திரம் வருகின்ற, குழிக்கண்-குழியில் (இன்பத்தில்) அந்தோ-ஐயோ! வீழ்ந்திடவோ-விரும்பிவிழவோ, தாழ்ந்து-(பெண்களை) பணிந்து, இளைத்து-உடல் சோர்ந்து, விழிக்கவோ-(செய்த தீமைக்காகச் சுற்றுமுற்றும் பார்த்து விழிக்கவோ, இங்கு -இவ்வுலகில், எடுத்து -(ஆணவக் கரு அறையிலிருந்து) எடுத்து, வளர்த்தனை-வளர்த்தாய், அறியேன் -(உன் திரு உள்ளக் கருத்தில், ஒன்றையும் நான் அறியாதவனாய் இருக்கின்றேன். என் சொல்வேனே-(நான் என் அறியாமையாகிய நிலையையோ, உன் திருவிளையாட்டுச் செயலையோ) என்ன என்று எடுத்துச் சொல்வேன், (எ-று.)

(வி-ரை.) வள்ளலார் மகாதேவனிடம் தமக்கு வேண்டியதைக் கேட்டுப் பெறும் இயல்புடையரே அன்றிப் பிறரிடம் சென்று எதையும் வேண்டாதவர். இந்த உண்மையை,

**ஏட்டாலும் கேள்அயல் என்பாரை**
**நான்சிரித் தென்னைவெட்டிப்**
**போட்டாலும் வேறிடம் கேளேன்என்**
**ஆணைப் புறம்விடுத்துக்**
**கேட்டாலும் என்னை உடையான்**
**இடம்சென்று கேட்பன்என்றே**
**நீட்டாலும் வாய்உரைப் பாட்டாலும்**
**சொல்லி நிறுத்துவனே**

என்று அவரே பாடி இருப்பதால் உணர்ந்து கொள்ளலாம். அப்படி இருந்தும் இங்கு வள்ளலார், "பொன்னுடையார் இடம் புகவோ அவர்கட் கேர்கப் பொய் மொழிகள் புகன்றிடவோ" என்று இறைவனிடம் முறையிடுவதன் கருத்து, புலவர்களுள் பலர் இவ்வாறு பொருளுடையாரை அடைந்து அவர்களிடம் இல்லாத குணங்களைப் பாடி வெறுங்கையுடன் வருபவதை உளத்தில் கொண்டே ஆகும். இவ்வாறு பொன்னுடையாரை அடைந்து பொய் புகன்று பொருள் பெறாது திரும்பின புலவர்களுள் ஒருவர் இராமச்சந்திரக் கவிராயர் ஆவர். அவர்,

**கல்லாத ஒருவனைநான் கற்றாய் என்றேன்**
**காடெறியும் அவனைநா டாள்வாய் என்றேன்**
**பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன்**
**போர்முகத்தை அறியானைப் புலியே றென்றேன்**
**மல்லாரும் புயம்என்றேன் சூம்பல் தோளை**
**வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன்**
**இல்லாது சொன்னேனுக் கில்லை என்றான்**
**யானும்என்தன் குற்றத்தால் ஏகின் றேனே.**

என்று மனம் வருந்திப் பாடிய பாடலைக் காண்க.

மூட்டைகள் ஏதேனும் ஒரு பொருளால் அடைக்கப் பட்டுப் பருத்துக் காணப்படும். உடலும் சோற்றின் அடைப்பால் பருத்து மூட்டைபோல் இருக்கும், ஆகவே, பருத்த உடலுக்குப் பொதி உவமையாகக் கூறப்பட்டது. சோற்றால் உடல் பருத்தலின் இதற்கு "அன்னமயகோசம்" என்ற பெயரும் உண்டு.

உடல்கள் அவ்வவற்றின் காலம் வந்தால் அன்றி அழியமாட்டா. சிலர் தம்மை மாய்த்துக் கொள்ளப் பல வகையில் முயன்றாலும், அவர்கள் அழியாமைக்குக் காரணம் அந்த உடலுக்கு அழிவு உறும் காலம் வராமையே ஆகும். இந்த உண்மை சங்ககால நூலாம் புறநானூற்றுப் பாடலாகிய

**"வாழும் நாளோடு யாண்டுபல உண்மையின்**
**தீர்தல்செல் லாதுஎன் உயிர்எனப் பலபுலந்து**
**கோல்கால் ஆகக் குறும்பல ஒதுங்கி**

**நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்துயின்று**
**முன்றில் போகா முதிர்வினள் யாவும்”**

என்பதை ஈண்டு உணரவும். இதன் திரண்ட பொருள் “முடி முழுதும் வெளுத்து, கண் பார்வை மங்கித் தடி கொண்டு நடந்து வருந்திய மிக முதிர்ந்த கிழவி, ‘எனக்குப் பல ஆண்டுகள் ஆகியும் இன்னமும் என் உயிர் நீங்கவில்லையே’ என்று வருந்தினாள்” என்பது. இதனால் அறிவது யாதெனில், உடல் காலம் வந்தால் அன்றி அழியாது என்பதாம். இது குறித்தே ஈண்டு வள்ளலார், “கொான் உடையா உடல்” என்றனர். மக்கள் உண்ண உணவுக்கும், உடுக்க உடைக்கும், புணரப் பெண்ணுக்குமே படாதபாடு படுகின்றனர். இந்த உண்மையினைப் பட்டினத்தடிகளும்,

**“அன்ன விசாரம் அதுவே விசாரம் அதுஒழிந்தால்**
**சொன்ன விசாரம் தொலையா விசாரம்நல் தோகையரைப்**
**பன்ன விசாரம் பலகால் விசாரம்இப் பாவிநெஞ்சுக்கு**
**என்ன விசாரம்வைத் தாய்இறை வாகச்சி ஏகம்பனே”**

என்று பாடியுள்ளனர். இந்த முறைக்கேற்பவே நம் ஐயா “பசிக்குச் சோறு, குளிர்க்கு ஆடை, சிறுநீர்க் குழிக்கண் வீழ்ந்திடல்” ஆகிய இவற்றை எடுத்து மொழிந்தனர்.

மேலும், நம் ஐயா, உணர்த்த வந்த கருத்து, ஞான அமுதமாம் உணவையும், நித்தியானந்தமாகிய ஆடையையும், முத்தியாகிய திருவையும் விழைந்து இன்புறவேண்டி இருக்க, இவ்வுலக இன்பதைத் துய்க்க உணவையும், ஆடையையும், பெண்ணையும் விழைதல் அடாது என்பதாம். முத்தி இன்பத்தைப் பெண்ணாக உருவகப்படுத்தப்பட்டதைச் சீவக சிந்தாமணியில் வரும்,

**“கேவல மடந்தை என்னும் கேழ்கிளர் நெடிய வாள்கண்**
**பூவலர் முல்லைக் கண்ணிப் பொன்ஒரு பாகம் ஆகக்**
**காவலன் தான்ஓர் கூறாக் கண்இமை யாது புல்லி**
**மூவுல குச்சி இன்பக் கடலினுள் மூழ்கி னானே”**

என்னும் பாடலால் உணரலாம்.

இத்துடன் இன்றி, மெய்ஞ்ஞான செல்வத்தை வழங்க இறைவன் இருக்க, அவனை விடுத்து ஏனையோரை நாடக் கூடாது என்பதையும் இப் பாட்டு உணர்த்தியுள்ளது.

“வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதும் தருவோய் நீ” என்னும் மணிமொழியையும்,

“வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்” என்னும் அப்பரின் அருள்மொழியினையும்,

“இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம்” என்னும் நம்பி ஆரூராரின் அன்பு மொழிகளையும் ஈண்டு நினைவு கொள்க.

மாதர்களின் உள்ளத்தை அறிதல் கடனம். ஆதலின், "வஞ்சமின் இடையார்" என்றனர். "சித்திர விழியார் நெஞ்சைத் தெளிந்தவர் இல்லை" என்பது ஆன்றோர் கருத்து. மாதர்களின் இடை நுணுகிச் சிறுத்துக் காணப்படல் வேண்டும் என்பது சாமுத்திரிகா லட்சணத்தின் விதி. அப்படி நுணுகிச் சிறுத்து இருப்பின் அது கண்ணுக்குத் தோன்றுவது போன்று இருந்தாலும் தோன்றாத் தன்மையது. மின்னலும் தோன்றி மறைகின்றதன்றோ? ஆகவே, புலவர்கள் தோன்றாத நுண்ணிடைக்கு மின்னலை உவமை கூறுவது மரபு. இதனை உட்கொண்டே இங்கு "மின் இடையார்" எனப்பட்டது. வீழ்ந்திடல் என்பது ஈண்டு விரும்புதல் என்னும் பொருளதாம். இந்தப் பொருள் தருதலைச் சிலப்பதிகாரத்தில் வரும் 'திருவீழ் மார்பன்' என்னும் தொடரில் காணலாம்.

கணவன் மனைவிக்குச் சிற்சில வேளைகளில் சிறு பிணக்கம் வருதல் உண்டு. இதனை இலக்கியம், 'ஊடல்' என்று கூறும். அவ்வூடலைத் தீர்க்கக் கணவன் மனைவியைத் தாழ்ந்து வணங்குதலும் உண்டு. இந்த உண்மை ஒல்காப்பெருமை வாய்ந்த தொல்காப்பியத்தில் வரும்,

**"மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்**
**நினையும் காலைப் புலவியுள் உரிய"**

என்னும் நூற்பாவால் உணரலாம். இதனை உணர்ந்தே இங்கு 'தாழ்ந்து இளைத்து" என்றனர். இறைவரும் ஊடலைத் தீர்க்க உமை அம்மையின் கால்களில் விழுந்ததைச் சிவப்பிரகாச சுவாமிகள், "ஆதிபகவன் தனது ஊடல் தணிப்பான் பாதம் இறைஞ்சுதற்கு" என்று பாடி உணர்த்தியுள்ளனர்.

இறைவன் ஆண்டவன்; உயிர்கள் அடிமைகள். ஆகவே, சீவான்மாக்கள் அவனுடைய உடைமைகள் ஆகும். மணிமொழியார் "தேசுடையாய் என்னை ஆளுடையாய்" என்று கூறுமாற்றைக் காண்க. இந்த உண்மையினை வற்புறுத்தவே, வள்ளலார் அடுக்குத் தொடரால் இருமுறை "என் உடையாய் என் உடையாய்" என்றனர்.

கொன்னுடையா என்பதில் உள்ளே உடையா என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயர் எச்சம். கொள்ளவோ என்பது கொளவோ என்றாயது தொகுத்தல் விகாரம் பற்றி என்க. மின் இடையார் என்பது உவமத் தொகை. (90)

**வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ இந்த**
**மலக்கூடென் றறிஞர்எலாம் வருந்தக் கேட்டும்**
**அருகணைத்துக் கொளப்பெண்பேய் எங்கே மேட்டுக்**
**கடைத்திடவெண் சோறெங்கே ஆடை எங்கே**

**இருகணுக்கு வியப்பெங்கே வசதி ஆன**
**இடம்எங்கே என்றுதிரிந் திளைத்தேன் அல்லால்**
**ஒருகணத்தும் உனைநினைந்த துண்டோ என்னை**
**உடையானே, எவ்வகைநான் உய்யும் ஆறே.**

(ப-ரை.) என்னை-(அடிமையாகிய) என்னை, உடையானே-(அடிமையாக) உடையவனே, இந்த-இந்த, மலக் கூடு - மும்மலங்களுக்கு இருப்பிடமான உடம்பு, வருகணத்து-வருகின்ற சிறிதுநேரத்திற்குள், வாழ்ந்திடுமோ-வாழ்ந்திருக்குமோ? (அல்லது) விழுமோ - அழியுமோ, என்று-என்று (எண்ணி எண்ணி) அறிஞர் - (உடம்பின் நிலையாமையை உணர்ந்த) மெய்ஞ்ஞானிகள், எலாம் - யாவரும், வருந்த-துயர் உற, கேட்டும் -கேட்டறிந்தும், அருகு-பக்கத்தில், அணைத்துக்கொள - தழுவிக்கொள்ள, பெண் - பெண்ணாகிய, பேய்-பிசாசு, எங்கே-எங்கே? மேட்டுக்கு - வயிற்றிற்கு, அடைத்திட-அடைக்க, வெண் சோறு-வெண் நிறமான சோறு, எங்கே-எங்கே? ஆடை-துணி, எங்கே-எங்கே? இரு-இரண்டு, கணுக்கு-கண்களுக்கு, வியப்பு-ஆச்சரியத்தைத் தரவல்ல காட்சிப் பொருள்கள், எங்கே-எங்கே? வசதி ஆன-எல்லாச் சௌகரியங்களும் நிறைந்த, இடம்-வீடு, எங்கே-எங்கே? என்று-என்று (இவ்வாறான பொருள்களைத் தேடும்பொருட்டு) திரிந்து-அலைந்து, இளைத்தேன்-சோர்ந்தேன். அல்லால்-அல்லாமல், ஒரு கணத்தும்-ஒரு க்ஷண நேரமாகிலும், உனை-(எல்லாம் கொடுக்க வல்ல) உன்னை, நினைந்தது-சிந்தித்தது (துதித்தது) உண்டோ-உண்டா? நான் (உன்னை நினைக்காத) நான், எவ்வகை-எந்த விதத்தில், உய்யும் - ஈடேறும் ஆறு-வழி (உண்டாகப் போகிறது) (எ-று.)

(வி-ரை.) உடல் நிலையற்றது. அஃது எந்த நேரத்திலும், அழிவுறுதற்கு உரியது, "எப்போதாகிலும் கூற்றுவன் வருவான்" என்பர் கபிலர். "நெறுநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து இவ் உலகு" என்பர் வள்ளுவர் "விட்டுவிடப் போகுது உயிர்விட்ட உடனே உடலைச் சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார்" என்பர் திருவெண்காடர். ஆகவேதான் நம் ஐயா, "வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ இந்த மலக் 'கூடு' என்றனர். இறப்பைப் பிறப்பைக் குறித்து அறிஞர்கள் வருந்தியது உண்டு என்பது,

**இறப்பொடு பிறப்பை உள்ளே**
**எண்ணினால் நெஞ்சது பகீர்எனும் துயில்உறாது**
**இருவிழியும் இரவு பகலாய்ச்**
**செந்தழலின் மெழுகானது அங்கம்"**

என்றும்,

**வஞ்சதமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும்**
**அஞ்சி உனைஅடைந்தேன் ஐயா பராபரமே**

என்றும் தாயுமானவர் கூறும் கூற்றால் உணர்ந்து கொள்ளலாம்.

இந்த உடம்பின் நிலையைக் கூறவந்த பட்டினத்தடிகள்,

**"சலம்மலப் பேழை இருவினைப் பெட்டகம்**
**வாதபித்தம் கோழை குடிபுகும் சீறூர்**
**ஊத்தைப் புன்தோல் உதிரக் கட்டளை**
**நாற்றப் பிண்டம்"**

என்றும்,

**"மலஉடல் குடத்தைப் புலஉடல் புட்டிலைத்**
**தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியை"**

என்றும் இழித்துப் பேசி இருத்தலின், ஈண்டு வள்ளலாரும் இதனை "மலக்கூடு" என்றனர்.

மாதர்களை மாயைப் பிசாசு என்பர் பட்டினத்தார். அந்தப் பிசாசினால் துன்புற்று இறைவனை மறந்த நிலையைப் பற்றி அவர் குறிப்பிடுகையில்,

**"பெண்ணாகி வந்தொரு மாயப் பிசாசம் பிடித்திட்டென்னைக்**
**கண்ணால் வெருட்டி முலையால் மயக்கிக் கடிதடத்துப்**
**புண்ணாங் குழிஇடைத் தள்ளிஎன் போதப் பொருள்பறிக்க**
**எண்ணாது உனைமறந் தேன்இறை வாகச்சி ஏகம்பனே"**

என்றனர். ஆகவேதான் நம் ஐய "பெண் பேய்" என்றனர்.

அப்பர் பெருமானாரும், மக்கள் உடல் வளர்க்க உணவு தேடி அலைவதை,

**"பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்**
**நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்**
**ஆக்கைக் கேஇரைதேடி அலமந்து**
**காக்கைக் கேஇரை ஆகிக் கழிவரே"**

என்று உணர்த்தியுள்ளனர். இப் பெரியோர்களின் அருங் கருத்துக்களை உளத்தில் கொண்டே, "பெண் எங்கே சோறு எங்கே, ஆடை எங்கே, இடம் எங்கே என்று திரிந்தேன்" என்று கூறி முறையிட்டுக் கொள்கின்றனர் வள்ளலார்.

கண்ணுக்கு என்பது கணுக்கு என்றாயது தொகுத்தல் விகாரப் பற்றி என்க. வாழ்ந்திடுமோ? அழியுமோ என்பனவற்றில் உள்ள ஓகாரங்கள் ஐயப் பொருளில் வந்துள்ளன. எலாம் என்பதும் தொகுத்தல் விகாரமே. மேடு என்பது மேட்டு என மெய் இரட்டித்துள்ளது. வியப்பு, தொழில் ஆகுபெயர். ஏகாரம் ஈற்றசை. (91)

**பொன்மலையோ சிறிதெனப்பேர் ஆசை பொங்கிப்**
**புவிநடையில் பற்பலகால் போந்து போந்து**
**நென்மலையோ நிதிமலையோ என்று தேடி**
**நிலைகுலைந்த தன்றிஉனை நினைந்து நேடி**

**மன்மலையோ, மாமணியோ, மருந்தோ என்று**
**வழுத்தியதே இல்லைஇந்த வஞ்ச நெஞ்சம்**
**கன்மலையோ இரும்போசெம் மரமோ பாறைக்**
**கருங்கல்லோ பராய்முருட்டுக் கட்டை யேயோ.**

(ப-ரை.) (இறைவனே!) பொன்மலையோ-பொன் மலையும் கூட, சிறிது-(என் ஆசையின் அளவை நோக்க!) சிறியது, என-என்று (சொல்லக் கூடிய அளவுக்கு) பேராசை-(என்) பெரிய ஆசை, பொங்கி-மிகுந்து, புவி-உலகில், நடையில்-நடையால், பற்பலகால்-பலமுறை, போந்து போந்து-சென்று சென்று, நெல்மலையோ-நெல்மலைதானோ, நிதிமலையோ-செல்வமலைதானோ, என்று-என்று (பிறர் வியக்கும்படி) தேடி-(பொன்னையும் நெல்லையும்) தேடி, நிலை-என் நிலைமையிலிருந்து, குலைந்தது-அழிந்ததே, அன்றி-அல்லாமல், உனை-(பரம்பொருளாகிய) உன்னை, நினைந்து-எண்ணி, நேடி-தேடி, மன் - நிலைத்த, மலையோ-மலையோ, மா-சிறந்த, மணியோ-இரத்தினமோ, மருந்தோ-ஔடதமோ, என்று-என்றெல்லாம் (உன்னைப் புகழ்ந்து) வழுத்தியதே-துதித்ததே, இல்லை-கிடையாது, (ஆகவே நான்) இந்த-இந்த, வஞ்ச-வஞ்சகமான, நெஞ்சம்-மனம், கல்மலையோ-கல்லாகிய மலையோ? இரும்போ-இரும்போ? செம்மரமோ-செந்நிற மரமோ? பாறை-பாறைகளாக உள்ள, கருங்கல்லோ-கருநிறக்கல்லோ, முருடு-கரடுமுரடான, கட்டையோ-கட்டைதானோ? (இந்த மனத்தை இவற்றுள் எதுவாக இருக்கும் என்று கூறுவேன், பராய்-பார்த்துக் கூறுக, (எ-று.)

(வி-ரை.) ஆசைக்கு ஓர் அளவு இல்லை என்பது தாயுமானார் பொன்மொழி. அவ்வாசையின் பெருக்கு, மேரு மலையையும் தோற்றத்திலும் அளவிலும் சிறிதாக்கிவிடும். இதனால்தான் "பொன்மலையோ சிறிது எனப் பேராசை பொங்கி" என்றனர். மக்கள் பேராசையினால் இறைவன் நினைவு இன்றித் தமக்குத் தேவையான இன்பப் பொருளை நாடி அழிவதைப் பற்றித் தாயுமானவர் கூறுகையில்,

**ஆசைக்கோர் அளவில்லை அகிலம்எல் லாம்கட்டி**
**ஆளினும் கடல்மீ திலே**
**ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகராக**
**அம்பொன்மிக வைத்த பேரும்**
**நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்**
**நெடுநாள் இருந்த பேரும்**
**நிலையாக வேஇனும் காயகற் பம்தேடி**
**நெஞ்சுபுண் ஆவர் எல்லாம்**
**யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்**
**உறங்குவதும் ஆக முடியும்**
**உள்ளதே போதும்நான் நான்எனக் குளறியே**
**ஒன்றைவிட் டொன்று பற்றிப்**
**பாசக் கடற்குளே விழாமல் மனதற்ந**
**பரிசுத்த நிலையை அருள்வாய்**
**பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற**
**பரிபூர ணானந் தமே.**

என்று கூறியுள்ளார்.

இம்மை இன்பத்திற்கு அலையாமல் அம்மை இன்பத்திற்குப் பாடுபட வேண்டும் என்பதே இப்பாட்டின் மூலம் மக்களுக்கு அறிவுறுத்த வந்த கருத்தாகும். இறைவன் தீராத நோயைத் தீர்க்க வல்லவனாகவும், பிறவிப் பிணிக்குச் சிறந்த மருந்தாகவும் இருத்தலின், அவனை மருந்து என்றே போற்றி வழுபடுவர் உண்மை ஞானம் தெளிந்தவர். 'மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித் தீராநோய் தீர்த்தருள

வல்லான் தன்னை', என்றும், "மருந்தானை மந்திரிப்பார் மனத்துளானை" என்றும் அப்பரும், "மருந்தவன் வானவர் தானவர்க்கு" என்றும், "மருந்தவை மந்திரம் மறுமை நன்னெறி அவை மற்றும் எல்லாம், அருந்துயர் கெடும் அவர் நாமமே சிந்தைசெய் நல்நெஞ்சமே" என்றும்,

**"மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை**
**புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்இவை**
**திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய**
**அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே"**

என்றும், திருஞான சம்பந்தரும் இறைவனை மருந்தெனவே கூறி வழிபட்டமை காண்க.

பேராசை என்பதைப் பெருமை+ஆசை எனப் பிரித்தல் வேண்டும். போந்து போந்து, அடுக்குத்தொடர். வருந்தியதே என்பதில் உள்ள ஏகாரம் தேற்றப் பொருளில் அமைந்துள்ளது. பொன் மலையோ, நெல் மலையோ, நிதி மலையோ என்பனவற்றில் உள்ள ஓகாரம் வியப்புப் பொருள் தரும் இடைச் சொல். மன்மலையோ, மாமணியோ, மருந்தோ என்பதில் உள்ள ஓகாரங்கள், அசையாக வந்த ஓகாரங்கள். கல்மலையோ, இரும்போ, செம்மரமோ என்பனவற்றில் உள்ள ஓகாரங்கள் வினாப்பொருளில் வந்தன. பாராய் என்பது குறுக்கல் விகாரம் பற்றிப் பராய் என்று ஆயது. (92)

**தம்மைமறந் தருள்அமுதம் கண்டு தேக்கும்**
**தகைஉடையார் திருக்கூட்டம் சார்ந்து நாயேன்**
**வெம்மைஎலாம் தவிர்ந்துமனம் குளிரக் கேள்வி**
**விருந்தருந்தி மெய்அறிவாம் வீட்டில் என்றும்**
**செம்மைஎலாம் தரும்மௌன அணைமேல் கொண்டு**
**செறிஇரவு பகல்ஒன்றும் தெரியா வண்ணம்**
**இம்மையிலே எம்மையினும் காணாச் சுத்த**
**இன்பநிலை அடைவேனோ ஏழை யேனே.**

(ப-ரை.) (இறைவனே!) தம்மை-தம்மையே, மறந்து-மறந்து, அருள் திருவருளாகிய, அமுதம்-அமுதத்தை, உண்டு - பருகி, தேக்கும்-மன நிறைவுள்ள, தகை உடையார்-பெருந்தன்மை யுடையவர்களாகிய மெய் அடியார்களின், திரு-கண்டாரால் விரும்பப்படும், கூட்டம்-இனத்தை, சார்ந்து-அடைந்து, நாயேன் - நாயின் தன்மை வாய்ந்த நான், வெம்மைஎலாம்-(கோபம், தாபம் ஆகிய) வெப்பங்களை எல்லாம், தவிர்ந்து - ஒழித்து, மனம்-உள்ளம், குளிர-குளிர (மன அமைதி உற) கேள்வி-அறநூல்களைக் கேட்டலாகிய, விருந்து-விருந்தினை, அருந்தி-உண்டு, மெய்-உண்மையாகிய, அறிவாம்-உணர்வாம், வீட்டில்-மோட்ச உலகில், என்றும்-எக்காலத்தும், செம்மை எலாம்-நேர்மையானவற்றை எல்லாம், தரும்-தருகின்ற, மௌன-மோனமாகிய, அணைமேல்-படுக்கையின்மேல், அமைந்து-கிடந்து, செறி-அடர்ந்த, இரவு-இஃது இரவு, பகல்-இது பகல், என்றும்-என்றும், தெரியா வண்ணம்-தெரியாதபடி, இம்மையிலே-இந்த உலகிலேயே, எம்மையிலும்-எந்த உலகிலும், காணா-காணாத, சுத்த-தூய்மையான, இன்பநிலை-பேரின்ப

நிலையினை, ஏழையேன் - அறிவு குறைந்தவனாகிய நான், அடைவேனோ-பெறுவேனோ, (எ-று.)

(வி-ரை.) தம்மை என்பது தம் நினைவு. இந் நினைவை மறந்தபோது உலகப்பற்று ஒழிந்து இறைவன் பற்று உண்டாகும். இறைவனோடு ஒன்றி நினைக்கும்போது கிடைக்கும் அமுதமே அருள் அமுதமாகும். இது குறித்தே அப்பர், "ஒன்றி இருந்து நினைமின்கள் உம் தமக்கு ஊனம் இல்லை" என்றருளியுள்ளார். இந்த அருள் அமுதம் எல்லோர்க்கும் கிடைப்பது இல்லை. தம்மை மறந்தவர்கட்கும், தகவு உடையவர்கட்குமே கிடைக்கவல்லது. இத்தகையவர்கள் நிறைந்த இடமே திருக்கூட்டம் ஆகும். ஏனையவர்களின் கூட்டம் தெருக் கூட்டம். நல் கூட்டத்தினர் நிலைகளைப் பற்றி மணிமொழியார் குறிப்பிடுகையில்,

**"சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்**
**திரண்டு திரண்டுன் திருவார்த்தை**
**விரிப்பார் கேட்பார் மெச்சுவார்**
**வெவ்வே றிருந்துன் திருநாமம்**
**தரிப்பார் பொன்அம் பலத்தாடும்**
**தலைவா என்பார் அவர்முன்னே**
**நரிப்பாய் நாயேன் இருப்பேனோ**
**நம்பீ இனித்தான் நல்காயே"**

என்று குறித்துள்ளார். தேனிப்பார் என்பதன் பொருள், தியானம் செய்து கொண்டிருப்பார் என்பது. இத்தகையவர் கூட்டத்தில் இருக்கவே திருவாதவூரர் விரும்பினார். இந்த விருப்பத்தையும் இறைவனிடத்தில் முறையிடும்போது,

**"உடையாள் உன்தன் நடுஇருக்கும்**
**உடையாள் நடுவுள் நீஇருத்தி**
**அடியேன் நடுவுள் இருவீரும்**
**இருப்ப தானால் அடியேன்உன்**
**அடியார் நடுவுள் இருக்கும்அரு**
**ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்**
**முடியா முதலே, என்கருத்து**
**முடியும் வண்ணம் முன்நின்றே"**

என்று முறையிட்டுள்ளார்.

இந்த முறைகளுக்கு இணங்கவேதான் நம் ஐயாவும் "தம்மை மறந்து அருள் அமுதம் உண்டு தேக்கும் தகையுடையார் திருக்கூட்டம் சார்ந்து" என்று பாடினார். கோபமும், காமமும் வெம்மையானவை. இது குறித்தே நாயனாரும்,

**"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்**
**ஏமப் புணையைச் சுடும்"**

என்று கோப வெம்மையின் தீமையைப் பற்றிக் கூறினார். இவ்வாறே காமமும் வெம்மையானது என்பதை நாலடியார் குறிப்பிடும்போது,

**"அம்பும் அழலும் அவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறம்சுடும்-வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலால் காமம்
அவற்றினும் அஞ்சப் படும்"**

என்றும்,

**"ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு
நீருள் குளித்து முயல்ஆகும்-நீருள்
குளிப்பினும் காமம் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினும் காமம் சுடும்"**

என்றும்,

இவ்வாறு குறிப்பிடுகிறது. இவ்விரு வெம்மைகளைத் தவிர்தல் வேண்டும் என்பதை வற்புறுத்தவே "வெம்மை எலாம் தவிர்ந்து" என்றனர். இறப்பு, பிறப்புக்களாகிய வெம்மை என்று கூறுவாரும் உளர்.

கேள்வி விருந்து என்பது ஈண்டு மெய்ஞ்ஞான நூல்களைக் கேட்டலாகிய விருந்து. அத்தகைய அறிவு விளக்க செய்திகளைக் கேட்கும்போதுதான் மெய்குளிரும். கேட்டலின் பயனைக் கூறவந்த திருமந்திரம்,

**"அறம்கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறம்கேட்டும் வானவர் மந்திரம் கேட்டும்
புறம்கேட்டும் பொன்னுரை மேனிஎம் ஈசன்
திறம்கேட்டும் பெற்ற சிவகதி தானே"**

**"ஓதுமின் கேண்மின் உணர்மின் உணர்ந்தபின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கி நின்றாரே"**

**உறுதுணை ஆவது உயிரும் உடம்பும்
உறுதுணை ஆவது உலகுறு கேள்வி
செறிதுணை ஆவது சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்கில் பிறப்பில்லை தானே**

என்று கூறுகிறது. இந்த மெய்ஞ்ஞானக் கேள்வியை, ஞான பூசை என்று மெய்ந் நூல்கள் புகலும். இந்த உண்மை,

**ஞான நூல்தனை ஓதல் ஓதுவித்தல்
நல்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா
ஈனமிலாப் பொருள்அதனைச் சிந்தித்தல் ஐந்தும்**

**இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை**

என்னும் சிவஞான சித்தியார் திருவிருத்தத்தால் விளங்குகிறது.

"மௌன அணை" ஈண்டு மோன சமாதியே ஆகும். இந்த மௌன நிலை ஞான நிலைக்கு வழிகோலுவதாகும். இது குறித்தே 'மோனம் என்பது ஞானவரம்பு' என்னும் சீரிய மொழியும் நாட்டில் உலவுகிறது. இறைவனுடன் மனத்தை ஒன்றிநிற்றலே மோனம் ஆகும். இதனால் அடையும் பயனைத் திருமூலர்,

**"ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன் பராபரம்**
**ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன் சிவகதி**
**ஒன்றிநின் றுள்ளே உணர்ந்தேன் உணர்வினை**
**ஒன்றிநின் றேபல ஊழிகண் டேனே"**

என்றனர். இதனால்தான் "செம்மை எலாம் தரும் மௌன அணை" என்றனர் நம் ஐயா.

தியானம் செய்கின்ற போது மறைப்பு நிலையாகிய இரவும் (கேவலநிலை) அறிவு நிலையாகிய பகலும் (சகலநிலை) தெரியா இடமாக இருத்தல் வேண்டும். இத்தகைய நிலையில் இருந்தே தியானிக்க வேண்டும் என்னும் உண்மையினைத் திருமந்திரமும்,

**"இரவும் பகலும் இலாத இடத்தே**
**குரவம் செய்கின்ற குழலியை உன்னி**
**அரவம்செய் யாமல் அவளுடன் சேரப்**
**பரிவொன்றி வாழும் பராபரை தானே"**

என்று கூறுகிறது. இந்த நிலை தமக்குக் கிடைக்குமோ என்ற ஏக்கத்தால் தான் வள்ளலார் "செம்மை எலாம் தரும் மௌன அணைமேல் கொண்டு செறி இரவு பகல் தெரியாவண்ணம், இம்மையிலே எம்மையினும் காணாச் சுத்த இன்பநிலை அடைவேனோ" என்று பாடினார்.

சுத்த இன்பநிலை என்றது சமரச சுத்த சன்மார்க்க நிலையை ஆகும். ஏழை என்பது இங்குப் பணம் இன்மை என்னும் பொருளில் அமைந்தது அன்று. அறிவு இன்மை என்னும் பொருளில் ஆகும். இங்ஙனம் நம் ஐயா கூறிக் கொண்டது அவர் அடக்கமும் பண்பும் உடைமையினால் என்க. அருள் அமுதம், கேள்வி விருந்து, அறிவாம் வீடு, மௌன அனை ஆகியவை உருவகமாகும். செறி இரவு, வினைத்தொகை. இரவு பகல் உம்மைத் தொகை, இம்மையிலே, ஏகாரம் பிரிநிலை. அடைவேனோ என்பதில் உள்ள ஓகாரம் ஐயம். (93)

**அடியனேன் பிழைஅனைத்தும் பொறுத்தாட் கொண்ட**
**அருட்கடலே, மன்றோங்கும் அரசே, இந்நாள்**
**கொடியனேன் செய்பிழையைத் திருஉள் ளத்தே**
**கொள்ளுதியோ? கொண்டுகுலம் குறிப்ப துண்டோ?**

**நெடியனே முதல்கடவுள் சமுகத் தோர்தம்**
**நெடும்பிழைகள் ஆயிரமும் பொறுத்து மாயை**
**ஓடியநேர் நின்றபெருங் கருணை வள்ளல்**
**எனமறைகள் ஓதுவதிங் குனைத்தான் அன்றே.**

(ப-ரை.) அடியயேன் - அடிமையாகிய என்னுடைய, பிழை அனைத்தும்-குற்றங்கள் எல்லாவற்றையும், பொறுத்து-பொறுத்து, ஆட்கொண்ட-என்னை அடிமையாகக் கொண்டு காத்த, அருள் கடலே-அருளாகிய கடலே, மன்று-சித்சபையில், ஓங்கு-சிறந்து விளங்கும், அரசே-நடராசப் பெருமானே, இந்நாள்-இந்த நாள்களில், கொடியனேன் - கொடுமைக் குணமுடையவனாகிய நான், செய்-செய்கின்ற, பிழையை-குற்றங்களை, திரு-சிறந்த, உளத்து-உள்மனத்தில், கொள்ளுதியோ-(மறவாமல் வைத்துக்) கொள்வாயோ, கொண்டு-ஒருத்தியை மணந்து ஏற்றுக் கொண்டு(அதன் பிறகு) குலம் - இவள் குலம் தாழ்ந்த குலம் (என்று), குறிப்பது-குறித்துப் பேசுவது, உண்டோ-(உலகில்) உண்டா, நெடியனே-திருமால், முதல்-முதலான, கடவுள்-தெய்வங்களின், சமுகத்தோர்தம்-கூட்டத்தவர்களுடைய, நெடும் பிழைகள்- பெருந் தவறுகள், ஆயிரமும் - ஆயிரக் கணக்கான பலவற்றையும், பொறுத்து - பொறுத்து, மாயை-மாயா மலத்தின் வன்மை, ஒடிய-நீங்கிப்போக, நேர்-அன்பர்களின் முன்னிலையில் நின்ற, பெருங்கருணை-பேரிரக்கம் கொண்ட, வள்ளல்-வள்ளல், என-என்று, இங்கு - இவ்வுலகில், மறைகள்-வேதங்கள், ஓதுவது-சொல்வது உனை அன்றோ-உன்னை அன்றோ! (எ-று.)

(வி-ரை.) அருள் இருந்தால் அன்றிப் பிறர் குற்றங்களை மன்னிக்கவோ, பொறுக்கலோ இயலாது. இறைவன் அருட்கடலானதால் பிழைகளைப் பொறுக்கின்றனன். இறைவன் அன்பர்களின் குற்றங்களைப் பொறுப்பவன் என்பதை விளக்கமுறச் சுந்தரர்.

**நற்ற மிழ்வல்ல ஞானசம் பந்தன்**
**நாவினுக் கரையன் நாலைப்போ வானும்**
**கற்ற சூதன்நல் சாக்கியன் சிலந்தி**
**கண்ணப் பன்கணம் புல்லன்என் றிவர்கள்**
**குற்றம் செய்யினும் குணம்எனக் கருதும்**
**கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்**
**பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்**
**பொய்கை சூழ்திருப் புன்கூர்உ ளானே.**

என்று பாடுகின்றார். இதனால்தான் ஈண்டு இறைவன் “அடியேன் பிழை அனைத்தும் பொருத்தாட் கொண்ட அருட்கடலே” என்று விளிக்கப்பட்டனன். இறைவன் அடியார்கள் செய்த குற்றங்களை மட்டும் பொறுத்து மன்னிக்காமல், செய்கின்ற பிழைகளையும் செய்யும் பிழைகளையும் பொறுக்கவேண்டும் என்னும் குறிப்பினாத்தான் “இந்நாள் கொடியனேன் செய் பிழையைத் திருவுளத்தே கொள்ளுதியோ” என்று வினாவப்பட்டது. இது குறித்தே ஈண்டு வள்ளலார் முக்காலக் குற்றங்களையும் குறிக்கவேண்டி வினைத்தொகை இலக்கண முறையில் “சேய்பிழையை” என்றனர். இதன் பொருள் செய்த பிழை, செய்கின்ற பிழை, செய்யும் பிழை என்பதாகும். “குற்றம் செய்வது எனக்கு இயல்பே குணமாக்

கொள்வது உனக்கு இயல்பே" என்று வள்ளலார் பின்னால் கூறி இருப்பதையும் ஈண்டு நினைவு கொள்க. இறைவன் உள்ளம் ஏனையவர்களின் உள்ளம் போலக் கள்ளம் கபடு உடையது அன்று. அஃது, அழகிய தூய உள்ளம் என்னும் குறிப்பை விளக்கவே 'திருஉள்ளம்' எனப்பட்டது.

"ஒருவன் தன் காதல் உணர்ச்சியினால் குலத்தால் தாழ்ந்தவளை மணந்த பிறகு, அவள் குலத்தால் இழிந்தவள் என்று கூறுவது அடாது. "கொண்டு குலம் பேசாதே" என்பது உலகமொழி. அதுபோல, இறைவா, நான் குற்றம் உடையவன், கொடியவன் என்பதை அறிந்தும் என்னை உன் அடியவனாக ஏற்றுக் கொண்ட பிறகு நான் செய்யும் குற்றங்களை நினைவில் கொண்டு என்னைத் தள்ளலாமா?" என்பார் போலாக் "கொண்டு குலம் குறிப்ப துண்டோ" என்றனர்.

திருமால் மாவலிபால் மூவடி மண் வேண்டி உலகை அளக்க எண்ணியபோது கொண்ட உருவம் நீண்ட உருவம். ஆதலின் அவ்வுருவு கொண்ட திருமால் நெடியவன் எனப்பட்டார். திருமால் சலந்தரா சூதன் மனைவியாகிய பிருந்தையை விரும்பியது தவறு. அத்தகைய தவறுக் குரிய திருமாலையும் மன்னித்துப் பல்வேறு சந்தர்ப்பங்களில் திருவருள் புரிந்திருக்கின்றனர் இறைவர். பிரமன் தானே படைத்த திலோத்தமையைக் காம இச்சைக் கொண்டு தழுவலுற்றான் அவள் பயந்து ஓடினாள். அவனும் அவளைப் பின் தொடர்ந்தான். அதுபோது இறைவர் தோன்றி, "திலோத்தமையை நீ படைத்தவ னாகையினால் அவள் உனக்கு மகள் ஆவாள். நீ அவள் தந்தை. அப்படி இருந்தும் அவளிடம் காம இச்சை கொண்டாய். என்றாலும், அண்ணாமலையை நீ அடைந்ததனால் உன் குற்றத்தை மன்னித்தோம்" என்றனர். இதனை

**வெற்பெனும் முலையாள் தன்னை**
**விதித்துநீ விரும்பும் தீமை**
**கற்பகோ டியினும் தீரா**
**தாயினும் கருணை யாம்இத்**
**தற்பர மலைகண் டாயே**
**ஆதலால் தவிர்த்தோம் போஎன்**
**றற்புதன் மொழிந்து மீளப்**
**புகுந்தனன் அருணை வெற்பில்**

என்னும் அருணாசல புராணச் செய்யுளால் உணரலாம். இதனால் திருமால் முதலிய தேவர்களின் குற்றங்களை இறைவர் பொறுக்கும் பேரருள் உடைய பெருமான் என்பது பெறப்படுதலைக் காண்க.

இறைவன் கருணை வள்ளல் என்பது அவன் வியாக்கிரபாத முனிவரின் மகனும் உபமன்யு, பால் வேண்டி அழுத போது, திருப்பாற்கடலையே பருக ஈந்த மாபெரும் கருணையினால் தெரியவருகிறது. "பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்" என்பது திருப்பல்லாண்டு.

அனைத்தும் என்பதில் உள்ள உம்மை, முற்றும்மை. தான், அசைச்சொல். தேற்றப் பொருளைத் தரும் இடைச்சொல் எனினும் ஆம். ஏகாரம் ஈற்றசை. (94)

**கண்மயக்கும் பேர்இருட்டுக் கங்குல் போதில்**

**கருத்தறியாச் சிறுவனை ஓர்கடுங்கா னத்தே**
**உண்மயக்கம் கொளவிடுத்தே ஒருவன் பின்போம்**
**ஒருதாய்போல் மாயைஇருள் ஓங்கும் போதில்**
**மண்மயக்கம் பெறுவிடயக் காட்டில் அந்தோ**
**மதியிலேன் மாழாந்து மயங்க நீதான்**
**வண்மைஉற்ற நியதியின்பின் என்னை விட்டே**
**மறைந்தனையே பரமே, நின் வண்மை என்னே!**

(ப-ரை.) கண்-கண்களை, மயக்கும் - மயங்கச் செய்யும், பேர் இருட்டு - பெரிய இருள்நிறைந்த, கங்குல் போதில் - இரவு நேரத்தில், கருத்து - தாயின் எண்ணம், அறியா - (இன்னது என்பதை) உணராத, சிறுவனை-சிறியவனை, ஓர் - ஒரு, கடுங்கானத்தே-கொடிய காட்டில், உள் - மனத்தில், மயக்கம் - கலக்கம், கொள - கொள்ளும்படி, விடுத்து - (தனியாக) அனுப்பிவிட்டு, ஒருவன் - வேறு ஒருவன் (கள்ளப்புருடன்), பின் -பின்னே, போம்-போகும், ஒரு தாய்போல் - ஒரு தாயைப் போல, மாயை-மாயை ஆகிய, இருள்-இருள், ஓங்கும்போதில் - மேலே எழும் போது, மண் - உலகில், மயக்கம் பெறும் - மயங்குதலை அடையச் செய்யும், விடயம் - உலகப் பாச பந்தங்களாகிய விடயங்கள் நிரம்பிய, காட்டில் - காட்டில், அந்தோ - ஐயோ, மதி - அறிவு, இலேன் - இல்லாதவனாகிய நான், மாழாந்து - திகைத்து மயங்க-கலங்கும்படி, நீதான் - இறைவா நீ, வண்மை-வளமை, உற்ற-பொருந்திய, நியதியின்-ஊழின் பின்னே, என்னை-அடியேனை, விட்டே-அனுப்பிவிட்டு, மறைந்தனையே-மறைந்து விட்டாயே, பரமே-அனைத்திற்கும் மேலான இறைவனே, நின் - உன்னுடைய, வண்மை-வள்ளல் தன்மைதான், என்னே-இருந்தவாறுதான் என்னே! (எ-று.)

(வி-ரை.) வள்ளலார் இறைவனை நோக்கி, "இறைவா! என்னைப் பாசமாகிய இருள் செறிந்த காட்டிலே ஊழின் பின் செல்க என்று விட்டுவிட்டனையே. இஃது உன் அருள் கருணைக்கு ஒத்த செயலோ" என்று உருகிப் பாடிய பாடல் இது. இவ்வாறு தம் கருத்தைக் கூற வந்தவர் அதற்கு ஏற்ற உவமையையும் கூறி உள்ளனர். இறைவர் தம்மை தனியே விட்டது, ஒருதாய் சிறுவனை இருட்டில் காட்டில் விட்டுச் சென்றதுபோலாம் என்பது அவர் கூறியுள்ள உவமை. இவ் வுவமையின் மூலம் காட்டில் விடப்பட்ட சிறுவன் வழியும் தெரியாது, தாயையும் காணாது துயர் உறுவது போல, நானும் சன்மார்க்க நெறியையும் அறியாது, சிற்சக்தியையும் தெரியாது கலங்கும் நிலையில் நீதான் ஆண்டு அருளவேண்டும் என்னும் வேண்டுகோளை விடுக்கின்றார் என்பதை உணரலாம்.

மாயா மல இருளின் கொடுமை இப்பாட்டில் வரும் உவமையைக் கொண்டுதான் புரிந்துகொள்ள இயலும். உவமையில் கண் மயக்கும் பேர் இருட்டுக் கங்குல் கூறப்பட்டது. இதனால் மாயாமல இருள் அறிவுக் கண்ணை மறைக்கும் என்பது புலனாகிறது.

மக்களாகிய தாய், தன் மகனை இருள் நிறைந்த காட்டில் தனியே விட்டுப் பிறன் ஒருவன் பின் சென்றாள். ஆனால் "இறைவனாகிய தாயோ" சீவான்மாவை மாயாமல இருள் நிறைந்த உலக மயக்கம் பெற்ற விடயக் காட்டில் விட்டனன். விட்ட செயலில் மட்டும் இரு தாயரும் ஒத்த குணத்தினர் ஆவர். ஆனால் அருள் செய்வதில் வேறு படுவர். உலகத் தாய் தான் விரும்பிய புருடன் பின் சென்று தன் அருமை மகனை மறப்பள். இறைவனாம் தாய் சீவான்மாக்களை அருளாது

ஒழியான். இறைவன் மாயா மல இருளில் மண் மயக்கம் பெறும் விடயக் காட்டில் சீவான்மாவை விட்டதன் கருத்து, மலம் தீர்ந்து மலர் அடி உறுவதற்கே ஆகும். இந்த உண்மைகளைச் சிவஞான சித்தியார்,

**“அரன்விதி அருள தென்றே அறைந்தனம் அதுவும் முன்னே**
**தரைநர கரும்து றக்கம் தனுகர ணாதி எல்லாம்**
**வருவதும் செய்த னாதி மலங்கள்இம் மருந்தால் தீர்த்துப்**
**பரகதி அதுவும் தந்து பாதபங் கயமும் சூட்டும்”**

**“எழும்உடல் கரணம் ஆதி இவைமலம் மலம லத்தால்**
**கழுவுவன் என்று சொன்ன காரணம் என்னை என்னில்**
**செழுநவ அறுவை சாணி உவர்செறி வித்த முக்கை**
**முழுவதும் கழிப்பன் மாயை கொடுமலம் ஒழிப்பன் முன்னோன்”**

என்று கூறுமாற்றைத் தெளிக.

நியதி என்பதி விதி. அதாவது ஊழ்வினை என்க. அது மிகவும் வளமையுடையது. அஃது, ஊழ்வினைக்கு உரியவனை எப்படியும் பற்றி அந்த வினைகளைத் துய்க்கும்படி செய்யும் ஆற்றல் படைத்தது. இது குறித்தே திருவள்ளுவர்,

**“ஊழின் பெருவலி யாஉள மற்றொன்று**
**சூழினும் தான்முந் துறும்”**

என்றனர் இளங்கோ அடிகளும் “ஊழ்வினை வந்து றுத்தும்” என்று கூறியுள்ளனர். நாலடியாரும் ஊழின் வளப்ப மிகுதியை,

**பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று**
**வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்-தொல்லை**
**பழவினையும் அன்ன தகைத்தேதன் செய்த**
**கிழவனை நாடிக் கொளற்கு**

என்று கூறுகிறது. இன்னோரன்ன காரணங்களால்தான் வள்ளலார் ஊழை “வண்மையுற்ற நியதி” என்றனர்.

போம் என்பது போகும் என்பதன் தொகுத்தல் விகாரம். இது பகுபதம் ஆதலின், தொகுத்தல் விகாரம் ஆயிற்று. பகாப்பதத்தில் ஓர் எழுத்து இடையில் மறையுமேல், அஃது இடைக்குறை எனப்படும். பொழுது என்பது போது என்றாயது மரூஉ வழக்கு. (95)

**நற்றாயும் பிழைகுறிக்கக் கண்டோம் இந்த**
**நால்நிலத்தே மற்றவர்யார் நாடார் வீணே**
**பற்றாயும் அவர்தமைநாம் பற்றோம் பற்றில்**
**பற்றாத பற்றுடையார் பற்றி உள்ளே**

**உற்றாயும் சிவபெருமான் கருணை ஒன்றே**
**உறுபிழைகள் எத்துணையும் பொறுப்ப தென்றுன்**
**பொற்றாளை விரும்பியது மன்றுள் ஆடும்**
**பொருளே, என் பிழைஅனைத்தும் பொறுக்க அன்றே?**

(ப-ரை.) இந்த-இந்த, நால் நிலத்தே-நான்காகப் பகுக்கப்பட்ட உலகில், நல்-நல்ல பண்புடைய, தாயும் - தாய்கூட, பிழை-(தான் பெற்றெடுத்த பிள்ளைகளிடத்தில் காணப்படும்) தவறுகளை, குறிக்க-குறித்துப்பேச, கண்டோம்-பார்த்தோம். (இங்ஙனம் இருக்க) மற்றவர்-அயலார்களுள், யார்-யார்தாம், நாடார்-குற்றங்களை ஆராயாமல் இருப்பர். (ஆகவே) நாம்-நாம், பற்றாயும்-பற்றுக் கோடக் கூட, அவர்தமை-(குற்றங்களை ஆராய்கின்ற) அவர்களை, பற்றோம்-பற்றுக்கோடாகப் பிடிக்கமாட்டோம், பற்றில்-உலக ஆசையில், பற்றாத-பிடிபடாத, பற்றுடையார் - இறைவன் நினைவையே பற்றாக உடையவர்கள், பற்றி-இறைவன் திருவடிகளையே ஆதரவாகக் கொண்டு, உள்ளே -மனத்தில், உற்று-இறைவன் திருவடிகளைப் பதித்து, ஆயும் -ஆராய்கின்ற, சிவபெருமான் - மங்களப் பொருளாய் உள்ள அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெருங்கருணையாக இருக்கும் இறைவனது, கருணை-பேரருள், ஒன்றே-ஒன்றுதான், உறு-பெரிய, பிழைகள்-குற்றங்கள், எத்துணையும்-எல்லாவற்றையும், பொறுப்பது-மன்னித்தருளுவது, என்று-என்று (உறுதிகொண்டு தானே), உன் - உன்னுடைய, பொன் - அழகிய, தானே-திருவடிகளை, விரும்பியது-விரும்புடன் நேசித்தது, (ஆகவே) மன்றுள் - சிற்சபையில், ஆடும் - திருநடனம் புரியும், பொருளே-பெரிய பொருளே, என்-என்னுடைய, பிழை-தவறுகள், அனைத்தும்-எல்லாவற்றையும், பொறுக்க-பொறுப்பாயாக, (எ-று.)

(வி-ரை.) தாய் உள்ளம் கருணை யுள்ளம். இறைவன் கருணைக்குத் தாய் அன்பையே எடுத்துக்காட்டாகக் கூறுவர் பெரியோர். “தாயிற் சிறந்த தயாவான தத்துவனே” என்பது திருவாசகம். அத்தகைய அருள் உள்ளம் படைத்த தாய்கூடச் சிற்சில வேளைகளில் தான் பெற்றெடுத்த பிள்ளைகளின் குற்றங்களைப் பொறுப்பதில்லை. இங்ஙனம் இருக்க, ஏனையவர்கள் பிறர் குற்றங்களைப் பொறுப்பரோ? பொறார்? இதனால்தான் வள்ளலார் “நற்றாயும் பிழை குறிக்கக் கண்டோம் இந்த நானிலத்தே மற்றவர்யார் நாடார்” என்று அறிவிப்பார் ஆனார். நானிலம் என்பதனை நான்கு நிலம் என்று பிரித்தல் வேண்டும். நான்கு நிலங்கள் ஆவன, குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் என்பன.

**“முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே”**

என்பது தொல்காப்பியம்.

பற்றில் பற்றாத பற்றுடையார் மெய்ஞ்ஞானிகள். பற்று (அவா) பிறப்புத்தரும் வித்து ஆதலின், அவர்கள் பற்றில் பற்றாதவர் ஆயினர். மேலும் அது துன்பம் தருவது. ஆகவே தான் அவர்கள் இறைவன் பற்றிலேயே முனைந்து நிற்பர். இந்த உண்மைகளை எல்லாம் திருக்குறள்,

**“அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்**
**தவாஅப் பிறப்பீனும் வித்து”**

**“தூஉய்மை என்பதவாஇன்மை”**

**“அவாஇலார்க்கு இல்லாகும் துன்பம்”**

**“பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு”**

என்றெல்லாம் விதந்து கூறுகின்றது. இந்த அரிய பொருள் செறிவுகளை எல்லாம் தொகுத்தே நம் ஐயா “பற்றில் பற்றாத பற்றுடையார் பற்றி உள்ளே உற்று ஆயும் சிவபெருமான்” என்றனர்.

இறைவன் கருணை ஒன்றே பிழைகளைப் பொறுப்பது என்பது முற்றிலும் உண்மை. வெறும்புகழ்ச்சி அன்று. இந்த உண்மையினை, ஆளுடைய பிள்ளையார்,

**மறந்தான் கருதி வலியை நினைந்து மாறாய் எடுத்தான்தோள்**
**நிறந்தான் முரிய நெரிய ஊன்றி நிறைய அருள்செய்தார்**
**திறந்தான் காட்டி அருளாய் என்று தேவர் அவர்வேண்ட**
**அறந்தான் காட்டி அருளிச் செய்தார் அண்ணா மலையாரே.**

என்றருளிச் செய்தார்.

பட்டினத்தாரும் தம் பிழைகள் யாவற்றையும் பொறுக்கும்படி வேண்டியதை,

**கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி**
**நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் அஞ்செழுத்தைச்**
**சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும்**
**எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி ஏகம்பனே**

எனும் பாடலாம் அறியலாம்.

இறைவன் பெரிய பொருள் என்று தாயுமானாரும் போற்றிப் பணிந்திருப்பதை,

**“பெரிய மௌனத்தின் வைப்பை**
**பேசரும் ஆனந்தபத ஞானஆ னந்தமாம்**
**பெரிய பொருளைப் பணிகுவாம்”**

என்றும்,

**“தெரிவரிதாய்க் கலந்ததெந்தப் பொருள்அந்தப்**
**பொரு ளினையாம் சிந்தை செய்வாம்”**

என்றும்,

**“தீதில்பர மாம்பொருளைத் திருவருளே**
**நினைவாகச் சிந்தை செய்வாம்”**

என்றும்,

**“இருள்தீர விளங்குபொருள் யாதுஅந்தப்**
**பொருளையாம் இறைஞ்சி நிற்பாம்”**

என்றும்,

**“துரியநடு வூடிருந்த பெரியபொருள்**
**யாததனைத் தொழுதல் செய்வாம்”**

என்றும்,

கூறியுள்ளபடி வரிகளில் காணலாம்.

நற்றாயும் என்பதில் உள்ள உம்மை உயர்வு சிறப்பு உம்மை. நானிலம், பண்புத்தொகை. ஒன்றே என்பதில் உள்ள ஏகாரம் பிரிநிலை. உறு உரிச்சொல், உற்ற பிழை, உறுகின்ற பிழை, உறும் பிழை என்று உறுபிழை என்னும் தொடர்க்குப் பொருள் காணின் அத்தொடர் வினைத்தொகை ஆகும். பொறுக்க, வியங்கோள் வினைமுற்று. (96)

**எண்ணியநம் எண்ணம்எலாம் முடிப்பான் மன்றுள்**
**எம்பெருமான் என்றுமகிழ்ந் திருமாந் திங்கே**
**நண்ணியமற் றையர்தம்மை உறாமை பேசி**
**நன்குமதி யாதிருந்த நாயி னேனைத்**
**தண்ணியநல் அருள்கடலே மன்றில் இன்பத்**
**தாண்டவம்செய் கின்றபெருந் தகையே எங்கள்**
**புண்ணியனே பிழைகுறித்து விடுத்தி ஆயின்**
**பொய்யனேன் எங்குற்றென் புரிவேன் அந்தோ.**

(ப-ரை.) தண்ணிய-குளிர்ந்த, நல்-நல்ல, அருள் கடலே-கருணைக் கடலே, மன்றில் - சிதம்பரப் பொற்சபையில், இன்ப-இன்பமாகிய, தாண்டவம்-திருநடனத்தை, செய்கின்ற-செய்திகொண்டிருக்கின்ற, பெருந்தகையே-பெருமைக்கும் தகுதிக்கும் உரிய பெருமானே, எங்கள்-எங்களுடைய, புண்ணியனே-புண்ணியப் பொருளாய் உள்ளவனே, மன்றுள்-பொற்சபையில் நடமாடும், எம்பெருமான் - எங்கள் தலைவன், எண்ணிய-உள்ளத்தில் நினைத்த, நம்-நம்முடைய, எண்ணம்-எண்ணங்கள், எல்லாம்-யாவற்றையும், முடிப்பான் - முடித்து வைப்பான், என்று-என்று நினைத்து, மகிழ்ந்து-உள்ளம் களித்து, இறுமாந்து-பெருமிதங்கொண்டு, இங்கே-இவ்வுலகில், நண்ணிய-பொருந்தி வாழ்கின்ற, மற்றையர் தம்மை-மற்றவர்கள் யாவரையும், உறாமை-இழிவு, பேசி-சொல்லி, நன்கு-சிறப்பு முறையில், மதியாது-சட்டை செய்யாது, இருந்த-வாழ்ந்திருந்த, நாயினேனை-நாயினுக்கு ஒப்பான என்னை, பிழை-என் பிழைகளை, குறித்து - எடுத்துக்காட்டி, விடுத்தி ஆயின் - கைநழுவ விட்டனையானால், அந்தோ -

ஐயோ(நான்) எங்கு-எவ்விடத்தை, உற்று-அடைந்து, என் - என்ன, புரிவேன் - செய்வேன். (என்னால் ஒன்றும் செய்ய இயலாதே என்று வள்ளலார் ஏங்கினார்.) (எ-று.)

(வி-ரை.) சீவான்மாக்கள் பிறப்பு இறப்பு என்னும் வெப்பத்தால் வாடி இளைக்கிறபோது, அவர்களை எடுத்துத் தண்ணருள் நீழலில் வைத்து இறைவன் காத்தலின், "தண்ணிய நம் அருள் கடலே" என்றனர். இறைவன் ஆடும் தாண்டவம் இன்பத் தாண்டவம் என்பதைத் திருமந்திரம்,

**"புளிக்கண் டவர்க்குப் புனல்ஊறு மாபோல்**
**களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்**
**அளிக்கும் அருள்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்**
**ஒளிக்குள்ஆ னந்தத் தமுதூறும் உள்ளத்தே"**

என்று குறிப்பிடுகிறது. கூத்தப் பெருமான் ஒருவனே பெருந்தகை ஆவான். திருப்பாற்கடலில் அரிய பொருள்கள் தோன்றின. அவற்றை எல்லாம் பிற தெய்வங்கள் ஏற்றன. ஆனால், விடம் தோன்றியபோது, அதனை ஏற்க எவரும் முன் வந்திலர். அந்த நிலையில் இறைவனே முன்வந்து, அந்த விடத்தை உண்டு தேவர்களைக் காத்தனன். இச்செயல், எதைக் காட்டுகிறது? இறைவனது பெருந்தகைமையின் அன்றோ காட்டுகிறது? இதனைத் தாண்டக வேந்தர்,

**"பருவரை ஒன்றுசுற்றி அரவம்கை விட்ட**
**இமையோர் இரிந்து பயமாய்த்**
**திருநெடு மால்நிறத்தை அடுவான் விசும்பு**
**சுடுவான் எழுந்து விசைபோய்ப்**
**பெருகிடம் மற்றிதற்கொர் பிதிகாரம் ஒன்றை**
**அருளாய் பிரானே எனலும்**
**அருள்கொடு மாவிடத்தை எரியாமல் உண்ட**
**அவன்அண்டர் அண்டர் அரசே"**

என்று உணர்த்தி அருளினர்.

சிலப்பதிகாரமும் இறைவனது பெருந்தகைப் பண்பினை, "ஒருவரும் உண்ணாத நஞ்சுண்டிருந்தருள் புரிகுவாய்" என்று புகழ்கிறது.

**நம்பா நினக்கோலம் முறையோ எனக்கால**
**நஞ்சுண்டு பித்துண்டு நாம்தேவர் என்பார்**
**தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த தயவாளர்.**

என்று சிதம்பரச் செய்யுட் கோவை நூலும் கூறுகிறது; இறைவனின் பெருந்தகைமையினைப் போற்றுகிறது.

இவ்வுண்மைகளை எல்லாம் உளங்கொண்ட நம் ஐயா இறைவனை "பெருந்தகையே எங்கள் புண்ணியனே" என்று விளித்துப் போற்றினார்.

இறைவன் அன்பர்களின் எண்ணங்களை முடித்து வைப்பதைக் கடனாகக் கொண்டவனே. இதனையும் அப்பர், “வாயானை மனத்தானை மனத்துள்நின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னை” என்று பாடிக் காட்டியுள்ளனர்.

இறுமாந்திருத்தல் ஈண்டு ஆணவ இறுமாப்பு அன்று. இறை அருள் பெற்ற இறுமாப்பாகும். அப்பரும் இறுமாந்திருந்ததை,

**“இறுமாந் திருப்பன் கொலோ-ஈசன்**
**பல்கணத் தெண்ணப் பட்டுச்**
**சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்ச்சென்**
**றங்கிறுமாந் திருப்பன் கொலோ”**

என்று செப்புகின்றார்.

ஒன்றைப் பற்றினால் உறுதியாகப் பற்றவேண்டும். அப்படிப் பற்றுதற்குரிய பொருளாவான் சிவன் ஒருவனே. அவனைப் பற்றிய பிறகு பிறரைச் சட்டைசெய்ய வேண்டியதில்லை. அவனே நமக்கு எல்லாமாய் இருப்பவன் என்று உணர்ந்து விட்டால், உறாமைகள் கூடக் கூறலாம். அப்படி உறாமைகள் பேசி வாழ்ந்தவர் நம் ஆரூரர். அவர்,

**“திருவும்மெய்ப் பொருளும் செல்வமும் எனக்குன்**
**சீருடைக் கழல்கள்என் றெண்ணி**
**ஒருவரை மதியாது உறாமைகள் செய்தும்**
**ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்**
**முருகமர் சோலை சூழ்திரு முல்லை**
**வாயிலாய் வாயினால் உன்னைப்**
**பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்**
**பாசுப தாபரஞ் சுடரே”**

என்றும்,

**“மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார்**
**வள்ளலே கள்ளமே பேசிக்**
**குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும்**
**கொள்கையால் மிகைபல செய்தேன்**
**செற்றமீ தொடும் திரிபுரம் எரித்த**
**திருமுல்லை வாயிலாய் அடியேன்**
**பற்றிலேன் உற்ற படுதுயர் களையாய்**
**பாசுப தாபரஞ் சுடரே”**

என்றும் பாடினர்.

தமக்கு முன்னோடியாக இருந்த சுந்தரரைப் பின்பற்றி நம் வள்ளலார், “உறாமைபேசி நன்கு மதியாதிருந்த நாயினேனை” என்று கூறினாரே அன்றி, மற்றப்படி தம் செருக்குத் தோன்றக் கூறினார் அல்லர். (97)

**அன்பர்திரு உளம்கோயில் ஆகக் கொண்டே**
**அற்புதச்சித் சபைஓங்கும் அரசே இங்கு**
**வன்பர்இடைச் சிறியேனை மயங்க வைத்து**
**மறைந்தனையே ஆனந்த வடிவோய் நின்னைத்**
**துன்பவடி வுடைப்பிறரில் பிரிந்து மேலோர்**
**துரியவடி வினன்என்று சொன்ன எல்லாம்**
**இன்பவடி வடைந்தன்றே எந்தாய் அந்தோ**
**என்அளவென் சொல்கேன்இவ் ஏழை யேனே.**

(ப-ரை.) அன்பர்-உண்மை அடியார்களின், திரு-சிறந்த, உளம்-மனத்தை, கோயில் ஆக-கோவிலாக, கொண்டு-கொண்டு, அற்புத-மிக அதிசயமான, சிற்சபை-ஞானாகாச மன்றில், ஓங்கும்-விளங்கும், அரசே-நடராசப் பெருமானே, ஆனந்த வடிவோய்-இன்ப உருவினனே, எந்தாய்-என் தந்தையே, இங்கு- இவ்வுலகில், வம்பர் இடை-வீண் வம்புமொழிகளைப் பேசும் தீயவர்களிடத்தில், சிறியேனை-சிறியவனாகிய என்னை, மயங்கவைத்து-திகைக்கும்படிவிட்டு, மறைந்தனையே-மறைந்துவிட்டனையே, மேலோர்-உண்மையினை உணர்ந்த பெரியவர்கள், நின்னை-(பேரின்பப் பிழம்பாய் விளங்கும்) உன்னை, துன்ப-துன்பமயாமான, வடிவுடை-வடிவம் கொண்ட, பிறரில்-பிற தெய்வங்களிடத்திலிருந்து தனியே, பிரித்து-நீக்கி, துரிய-தன்மயமாய் நிற்கும் உயர்நிலை, வடிவினன் -உருவினன், என்று-என்று சென்ன எலாம்- சொல்லிய யாவும், இன்ப வடிவு-(உன்னைப்பற்றிய உண்மை நிலையை அறிந்த அப்பெரியவர்கள் தாம்) இன்பவடிவை, அடைந்தன்றே-அடைந்தபிறகு அன்றோ, (நான் மேலோர் போல இன்ப வடிவாம் அனுபவத்தைப் பெறாத போது) ஏழையேன் - அறிவுகுறைந்த நான், அந்தோ-ஐயோ, என் அளவு-என் அளவில், என் சொல்கேன் -என்ன சொல்ல முடியும்? (ஒன்றும் சொல்ல இயலாது), (எ-று.)

(வி-ரை.) வள்ளலார் “மேலோர்கள் உன்னைத் துன்ப வடிவுடைய தேவர்களிலிருந்து பிரித்துத் துரியன் என்று கூறுவர். அவர்கட்கு அப்படிக் கூறும் ஆற்றல் தாம் இன்ப நிலையைத் தம் அனுபவத்தால் பெற்ற பின்பு அன்றோ, வந்துற்றது? நான் இன்னமும் அத்தகைய அனுபவத்தைப் பெறவில்லையே. அதற்குள் என்னைத் துட்டரிடை மயங்க வைத்து மறைந்து விட்டனையே. எனக்கும் மேலோர்களின் அனுபவம் கைகூட அருளவேண்டும்” என்று வேண்டும் முறையில் இப் பாட்டைப் பாடினார்.

இறைவன் கற்கோயிலி லிருப்பது புறத் தோற்றம். அவன் அன்பர்களின் அகக் கோயிலில் குடியிருப்புக் கொள்ளுதலையே விருப்பமாக உடையவன். ‘நஞ்சுடை கண்டர் நெஞ்சு இடமாக நண்ணுவர்” “நிறைபெற்ற அடியார்கள் நெஞ்சுளானே” என்று திருஞான சம்பந்தரும், ‘என் உள்ளம் கோயில் ஆக்கி’ “பணிபவர் நெஞ்சத்துள்ளார், தொண்டர் அக மலால் கோயில் இல்லை, என்மனமே கோயிலாக இருந்தான்” என்று அப்பரும் கூறும் ஆற்றை உணரும்போது, “அன்பர் திருஉளம் கோயிலாக் கொண்டே அற்புதச் சிற்சபை ஓங்கு அரசே” என்று வள்ளலார் கூறியது உண்மை என்பது புலனாகும்.

கண்ணுதல் பரமனே இன்ப வடிவினன். ஏனைய தெய்வங்கள் துன்ப வடிவினரே. இதுதான் உண்மை என்பது,

**யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி ஆங்கே**
**மாதொரு பாக னார்தாம் வருவார்மற் றத்தெய் வங்கள்**
**வேதனைப் படும்இ றக்கம் பிறக்கும்மேல் வினையும் செய்யும்**
**ஆதலால் இவைஇ லாதான் அறிந்தருள் செய்வன் அன்றே**

என்னும் சிவஞான சித்தியார் திருவிருத்தத்தால் தெரிகிறது. இது குறித்தே "துன்ப வடிவுடைப் பிறர்" என்று கூறப்பட்டது. வள்ளலார் தில்லைப் பொற் சபையை அற்புதச் சிற்சபை என்றமைக்குக் காரணம், அதனை எச்சமயத்தவர்களும் வந்து இறைஞ்சுவர் என்பதனாலும், முத்திதரும் தெய்வச் சபையாதலினாலும் என்க. இந்தக் கருத்துக்களுக்கு இணங்கவேதான் வள்ளலார் மற்றோரிடத்தில் 'எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே' என்றனர்.

கொண்டே என்பதில் உள்ள ஏகாரம் அசை. கோயில் என்பது இலக்கணப்போலி. பிறரில் என்பதில் உள்ள இல் ஐந்தாம் வேற்றுமை நீங்கல் பொருளது. (98)

**புற்றோங்கும் அரவம்எல்லாம் பணியாக் கொண்டு**
**பொன்மேனி தனில்அணிந்த பொருளே மாயை**
**உற்றோங்கு வஞ்சமனக் கள்வ னேனை**
**உளம்கொண்டு பணிகொள்வ துனக்கே ஒக்கும்**
**மற்றோங்கும் அவர்எல்லாம் பெருமை வேண்டும்**
**வன்மனத்தர் எனைவேண்டார் வள்ள லேநான்**
**கற்றோங்கும் அறிவறியேன் பலவாச் சொல்லும்**
**கருத்தறியேன் எனக்கருளக் கருது வாயே.**

(ப-ரை.) புற்று-புற்றில், ஓங்கும்-உள்ள, அரவம் எல்லாம்-பாம்புகளை எல்லாம், பணியா-நகைகளாகக் கொண்டு, பொன் - பொன் நிறமான, மேனிதனில்-திருமேனியில், அணிந்த-சூடிய, பொருளே - பெரிய பொருளே, மாயை-மயக்க உணர்வை, உற்று-பெற்று, ஓங்கும்-வளரும், வஞ்ச-கபடம் நிறைந்த, மனம்-உள்ளம் கொண்ட, கள்வனேனை-திருடனாகிய என்னை, உளம்-உன் திருஉள்ளத்தில், கொண்டு-ஏற்று, பணி-என் தொண்டினை, கொள்வது-ஏற்பது, உனக்கு-உனக்குத்தான், ஒக்கும்-பொருத்தமாகும். மற்று-மற்றைப்படி, ஓங்கும்-தம்மை உயர்வாகக் கருதி யிருக்கும், அவர் எல்லாம்-ஏனையதேவர்கள் யாவரும், பெருமை-பெருமையை, வேண்டும் -விரும்பும், வல்மனத்தர்-வன்மை மிக்க (இரத்தம் அற்ற) உள்ளத்தர், (ஆகவே) எனை-என்னை, வேண்டார்-அவர்கள் விரும்ப மாட்டார்கள் (எனவே) வள்ளலே-அருள் குணத்தோய், நான் - (அடிமையாகிய) நான், கற்று-ஞான நூல்களைப் படித்து ஓங்கும்-உயரும், அறிவு-அறிவினை, அறியேன் - சிறிதும் உணர மாட்டேன், பலவா-பலபடி, சொல்லும்-சொல்லுகின்ற, கருத்தும்-உண்மைக் குறிப்புக்களையும், அறியேன் - உணர்ந்தவனும் அல்லேன், (இத்தகைய அறிவீனனாகிய) எனக்கு -அடியேனுக்கு, அருள-திருவருள் புரிய, கருதுவாய்-திருவுள்ளம் கொள்வாயாக.

(வி-ரை.) இறைவனுக்கு இன்னார் இனியார் என்பது இல்லை. எவரையும் ஏற்று அருள் செய்பவன். அதனால் தான் அவன் விடம் கொண்ட பாம்பையும் தனக்கு ஆபரணமாகக் கொண்டனன். இந்த உண்மையினைத் திருவாதவூரர் "பூசுவதும், பேசுவதும், பூண்பதும் கொண்டென்னை, ஈசன் அவன் எவ்வுயிர்க்கும்

இயல்பானான்" என்று கூறிச் சென்றார். பாம்பு நஞ்சுடையது எனத் தெரிந்தும் அதனை ஏற்றருளியது போல யானும் கொடியனாயினும் என்னையும் ஏற்றருள வேண்டும் என்னும் குறிப்பில்தான் "புற்றோங்கும் அரவம் எல்லாம் பணியாக் கொண்டு பொன் மேனிதனில் அணிந்த பொருளே" என்றனர். பாம்பு தன்னிடத்தில் நஞ்சைக் கொண்டுள்ளது. அதுபோலச் சிவான்மாக்களும் வஞ்சத்தை மனத்தில் கொண்டுள்ளது. இந்த குறிப்பையும் இங்கு உணரத்தக்கது.

அடைக்கலம் புகுந்தவர்களை ஆதரிக்கும் வள்ளல் சிவபெருமானே ஆவார். சுந்தரரை வலியவந்து ஆட்கொண்டார் அல்லாரோ? "வித்தகம் பேச வேண்டா பணி செய்ய வேண்டும்" என்றும் கட்டளை பிறப்பித்தார் அல்லரோ? ஆகவேதான் "பணி கொள்வது உனக்கே ஒக்கும்" என்றனர். மணிமொழி யாரும் இறைவனே தம்மை ஏற்று அடிமை கொள்வான் என்னும் உண்மையினை உணர்ந்தே,

**மின்னினும் நிலமை இல்லா**
**விழுப்பொருள் யாவும் வேண்டேன்**
**உன்னடி அடைந்து நாயேன்**
**உறுபவம் ஒழித்தல் வேண்டும்**
**என்னைஇன் றடிமை கொள்வாய்**
**என்உயிர்க் கிறைவா என்று**
**முன்னுற வணங்கி நின்றார்**
**முகமெலாம் கண்ணீர் வார.**

என்று கூறினார் எனக் கடவுள் மாமுனிவர் கூறுகின்றார்.

திருவிசைப்பாவும் அடியார்களைப் பணிகொண்டு இறைவன் ஆட்கொள்வதை.

**கல்நகா உள்ளக் கள்வனேன் நின்கண்**
**கசிவில்லேன் கண்ணில்நீர் சொரியேன்**
**முன்நகா ஒழியேன் ஆயினும் செழுநீர்**
**முகத்தலை அகத்தமர்ந் துறையும்**
**பன்ன காபரணா பவளவாய் மணியே**
**பாவியேன் ஆவியுள் புகுந்தது**
**என்ன காரணம்நீ ஏழைநாய் அடியேற்கு**
**எளிமையோ பெருமைஆ வதுவே.**

என்று கூறுகிறது. இந்தக் கருத்துக்களை ஒட்டியே நம் வள்ளலார் "மாயை உற்றோங்கும் வஞ்சமனக் கள்வனேனை உளங்கொண்டு பணிகொள்வது உனக்கே ஒக்கும்" என்றனர்.

இறைவனது வள்ளல் தன்மையினைத் திருவிசைப்பா,

**அற்புதத் தெய்வம் இதனில் மற்றுண்டோ**
**அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்**
**சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறும்**
**தொண்டருக் கெண்திசைக் கனகம்**

**பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்**
**பவளவா யவர்பணை முலையும்**
**கற்பகப் பொழிலும் முழுதும்ஆம் கங்கை**
**கொண்டசோ ளேச்சரத் தானே**

என்று போற்றுகிறது.

வள்ளலார், தாம் சிற்றறிவினர் என்பதையும், இறைவனே முற்றறிவினன் என்பதையும் உணர்த்தும் முறையில்நான் "கற்றோங்கும் அறிவறியேன் பலவாச் சொல்லும் கருத்தறியேன் எனக்கருளக் கருதுவாயே" என்று கூறி வேண்டினர். இறைவன் அருளினால் அன்றி நாம் அறியும் தரத்தர் அல்லர். ஆகவே 'அருளக் கருதுவாயே' என்றனர்.

**அருளா தொழிந்தால் அடியேனை**
**அஞ்சேல் என்பார் ஆர்இங்குப்**
**பொருளா என்னைப் புகுந்தாண்ட**
**பொன்னே பொன்அம் பலக்கூத்தா**
**மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து**
**வருந்து வேனை வாஎன்றுன்**
**தெருளார் கூட்டம் காட்டாயேல்**
**செத்தே போனால் சிறியாரோ.**

என்னும் திருவாசப் பாடலையும் ஈண்டு நினைவு கூர்தல் தக்கது. ஏகாரம், ஈற்றசை ஆக, என்பது தொகுத்தல் விகாரம் பற்றி ஆ என நின்றது என்க. (99)

**அருளுடைய பரம்பொருளே மன்றில் ஆடும்**
**ஆனந்தப் பெருவாழ்வே அன்பு ளோர்தம்**
**தெருளுடைய உளம்முழுதும் கோயில் கொண்ட**
**சிவமேமெய் அறிவுருவாம் தெய்வ மேஇம்**
**மருளுடைய மனப்பேதை நாயி னேன்செய்**
**வன்பிழையைச் சிறிதேனும் மதித்தி யாயில்,**
**இருளுடைய பவக்கடல்விட் டேறேன் என்னை**
**ஏற்றுவதற் கெண்ணுகஎன் இன்பத் தேவே. (100)**

(ப-ரை.) அருளுடைய-அருள்குணம் கொண்ட, பரம் பொருளே-மேலான பொருளே, மன்றில்-சிதம்பரப் பொன் அம்பலத்தில், ஆடும் -திருநடனம் புரிகின்ற, ஆனந்த-இன்ப மயமான, பெருவாழ்வே-பெருவாழ்வுடைய பெருமானே, அன்புளோர்தம்-அன்பைத்தம் அகத்தேகொண்ட அடியவர்களில். தெருளுடைய-தெளிவுபடைத்த, உளம்-மனம், முழுதும்-முழுமையும், கோயில் கொண்ட-கோயிலாகக் கொண்ட, சிவமே-திவ்விய மங்கள வடிவே, மெய்-சத்து, அறிவு-சித்து, உருவாம்-வடிவாகிய, தெய்வமே-ஒளிப் பிழம்பே, என் - எனது, இன்பத் தேவே-ஆனந்தத்திற்குக் காரணமான மகாதேவனே, இ-இந்த, மருள்-மயக்க அறிவு, உடைய-பெற்ற மனப் பேதை-மனத்தையுடைய அறிவீனனான், நாயினேன் - நாய்க்கு ஒப்பானவனாகிய நான், செய்-செய்த, செய்கின்ற, செய்யும், வன் - கொடிய, பிழையை-குற்றங்களை, சிறிதேனும்-கொஞ்சமேனும், மதித்தி ஆயின் - எண்ணுவையானால், இருளுடைய-அஞ்ஞான இருள் நிறைந்த, பவம்-பிறப்பாகிய,

கடல்விட்டு - கடலைக் கடந்து, ஏறேன் - முத்திக் கரையை அடைய மாட்டேன். (ஆகவே நீ) என்னை-(குற்றமுடையவனாகிய) என்னை, ஏற்றுவதற்கு-மோக்கமாகிய கரையில் ஏற்றுதற்கு எண்ணுக-திரு உள்ளம் கொள்வாயாக, (எ-று.)

(வி-ரை.) மகாதேவனுக்கு மேல் ஒரு தெய்வமும் கிடையாது. இது குறித்தே "சித்தியாக்குமேல் சாத்திரம் இல்லை, சிவத்துக்குமேல் தெய்வம் இல்லை" என்னும் பழமொழியும் எழுந்துள்ளது. அவன் பன்றிக் குட்டிகளுக்கும் தாய்ப் பன்றியாய்ச் சென்று பால் தந்ததை அவன் பேரருள் தன்மைக்கு ஓர் எடுத்துக் காட்டாகக் கூறலாம். இது போன்ற வரலாறுகள் பலவற்றை இறைவனது அருளுக்கு எடுத்துக் காட்டலாம். எனவேதான் "அருளுடைய பரம் பொருளே" என்றார். கூத்தப் பெருமான் வாழ்வே பெருவாழ்வு. ஏனைய தெய்வங்களின் வாழ் வெல்லாம் சிறு வாழ்வே. இந்த உண்மையினை,

**நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்**
**ஆறு கோடி நாராயணர் அங்ஙனே**
**ஏறு கங்கை மணல்எண்ணில் இந்திரர்**
**ஈறி லாதவன் ஈசன் ஒருவனே.**

என்று அப்பர் நன்கு உணர்த்தியுள்ளனர். ஆகவேதான் "ஆனந்தப் பெருவாழ்வே" எனப்பட்டது.

கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன். ஆனால், தெளிவுடையார் உளத்தில் என்றும் நின்று நிலவுவன். அதனால் தான் "தெருளுடைய உளமுழுதும் கோயில் கொண்ட சிவனே" என்றனர். இறைவனுடைய உருவங்களில் சச்சிதானந்த வடிவமும் ஒன்று. சத்து (உண்மை) சித்து (அறிவு) ஆனந்தம் (இன்பம்) இந்த வடிவத்தையே, சோமாஸ்கந்தர் மூர்த்தம் என்பர். இந்தக் குறிப்பே, "மெய் அறிவு உருவாம் தெய்வமே" என்னும் தொடரில் அமைந்துள்ளது. மக்கள் செய்யும் பிழைகள் மன்னிக்க முடியாதன என்பதை உணர்த்தவே "வன் பிழை" என்றனர்.

ஆன்மா மும்மல வயத்தால் பிறந்து இறந்து துன்புற்று வருவதால் அப்பிறப்பு, கடல்போலப் பரப்பு உடையதாக உள்ளது. வள்ளுவரும் பிறவிப் பெருங்கடல் என்றனர். மணிமொழியாரும் "தனியனேன் பெரும் பிறவிப் பௌவத் தெவ்வத்தடம் திரையால் எற்றுண்டு" என்றனர். இத்தகைய பிறவிக் கடலிலிருந்து கரை ஏறுதந்கு இறைவன் திருவருள் இன்றியமையாதது. இந்தக் காரணத்தினால்தான் "இருளுடைய பவக்கடல் விட்டேறேன் என்னை ஏற்றுவதற்கு எண்ணுக" என்று வேண்டுவாராயினர் வள்ளலார்.

மணிமொழியார் இறைவன் திருவருள் பெற்றுக் கரை ஏறி இன்பம் ஆர்ந்தனர். அந்த இன்பத்தை நாமும் பெற வழிவகை காட்டுவார் போல,

**தனியனேன் பெரும்பிறாவிப் பௌவத் தெவ்வத்**
**தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்**
**கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்**
**கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு**

**இனிஎன்னே உய்யுமா றென்றென் றெண்ணி**
**அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை**
**முனைவனே முதல்அந்தம் இல்லா மல்லல்**
**கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே**

என்று பாடி உணர்த்தியுள்ளனர். இந்த நிலை தமக்கும் வேண்டும் ஆதலின், வள்ளலார் இறைவனிடம் “என்னை ஏற்றுவதற்கு எண்ணுக” என்று வேண்டுவார் ஆயினார். “அவன் அருளால் தானே அவன் தாளை வணங்க இயலும்?”

**திருச்சிற்றம்பலம்.**

**மகாதேவ மாலை விரிவுரை திருவருள் துணையால் முடிவுறுகிறது.**

_ _ _ _ _ _